# மின்தமிழ்மேடை

தமிழால் இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...

28




## தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

வெளியிடும் காலாண்டிதழ் காட்சி: 28 ஜனவரி -2022

https://www.tamilheritage.org/

# மின்தமிழ்மேடை

தமிழ் மரபு அறக்கட்டளை

தமிழால் இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...

28




தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

வெளியிடும் காலாண்டிதழ் காட்சி: 28 ஜனவரி -2022

https://www.tamilheritage.org/

## பொறுப்பாசிரியர்: முனைவர் தேமொழி

## தலையங்கம்: தமிழால் இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...

— முனைவர் க.சுபாஷிணி



வணக்கம்

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. (குறள்: உழவு -1036)

அனைவருக்கும் இனிய பொங்கல், தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்.
புதிய ஆண்டில் காலெடுத்து வைக்கின்றோம். இந்த ஆண்டு நம் அனைவருக்குமே வாழ்வில் வளத்தையும் சிறப்பையும் வழங்க வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஆண்டின் தொடக்கம் மகிழ்ச்சியான செய்தியை நமக்கு அளித்தது.

ஆம். மைசூரில் சிறைப்பட்டுக் கிடந்த தமிழ்க்கல்வெட்டுகள் தமிழகம் வரவிருக்கின்றன என்ற செய்திதான் அது. இது செய்தியாக மட்டுமில்லாமல், உடனடியாகக் கல்வெட்டுக்களும் ஆரம்பக்கால நிலையில் எடுக்கப்பட்ட மைப்படிகளும் விரைவில் மின்னாக்கம் செய்யப்படவேண்டும். அவை இணையத்தில் வலையேற்றம் செய்யப்பட வேண்டும்; அச்சு நூல்களாக வெளி

வரவேண்டும். ஆரம்பத்தில் 60,000 கல்வெட்டுகள் எனப் பேசப்பட்டு வந்த நிலையில் தமிழகக் கல்வெட்டு ஆய்வாளர்கள் சிலர் அடங்கிய குழு நேரில் சென்று பார்த்து ஆய்வு செய்து வந்து கொடுத்த தகவலுக்குப் பின்னும், தொடர் ஆய்வுகளுக்குப் பின்னும் இந்த எண்ணிக்கை ஏறக்குறைய பாதியாகக் குறைந்தது என்பதை நீதிபதி அவர்களின் அறிக்கை வெளிப்படுத்தியது. ஆக, இச்சூழலில் உடனடியாகக் கல்வெட்டுகளை மின்னாக்கம் செய்யும் ஒரு தனிக்குழுவைத் தமிழக அரசின் தொல்லியல் துறை தனிப்பணிக்குழுவாக நியமித்து இப்பணியை இவ்வாண்டே முழுமைப்படுத்தி அச்சு வடிவிலும் இணையத்திலும் இவற்றை முதலில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதே எங்களைப் போன்ற வரலாற்று ஆர்வலர்களின் கோரிக்கையாகும்.

இதனை அடுத்து ஜனவரி 12ஆம் தேதியை தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நாள் எனப்பிரகடனப்படுத்தியது. இந்த நாளில் அயலகத் தமிழர்களின் நலன்காக்க நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு அறிவித்திருப்பதைத் தமிழ் மரபு அறக்கட்டளை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். நிகழ்ச்சியில் உலகளாவிய தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்கள் உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள் மற்றும் வெளியீடுகள் குறித்த விரிவான செய்தித் தொகுப்பு இதழின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. 2021 அக்டோபர் மாதம் தொடங்கி நமது செயல்பாடுகளில் சிலவற்றை இங்கு நினைவு கூர்வோம்;



-சங்க கால நாகரீகம் பற்றிய சான்றுகள் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பொற்பனைக்கோட்டை பகுதிக்குச் சென்று அப்பகுதியைப் பற்றிய தகவல்கள் சேகரித்ததோடு அதன் அருகாமை பகுதியில் தொல்பழங்கால ஈமச் சடங்குகள் தொடர்பான இடங்களையும் பார்த்துப் பதிவு செய்து வந்தது தமிழ் மரபு அறக்கட்டளை குழு.

-கீழடி அகழாய்வுக் களத்திற்கு நேரடியாக மாணவர்களையும் அழைத்துச் சென்று ஒருநாள் மரபுப்பயணத்தின் வழி தொல்லியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது நமது குழு.




-அக்டோபர் 30-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தமிழ் மரபு அறக்கட்டளை மதுரை குழுவினர் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சு.வெங்கடேசன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து தமிழ் மரபு அறக்கட்டளை மதுரை கிளையினர் 2022ஆம் ஆண்டு செயல்படுத்தவுள்ள திட்டங்கள் பற்றிய செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். அத்துடன், மதுரை ரயில் நிலையத்திலிருந்து கடந்த காலங்களில் நீக்கப்பட்ட மீன் சின்னத்தை மீண்டும் பொறிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். அதனை உடனடியாகச் செயல்படுத்திய மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் சு.வெங்கடேசன் அவர்களுக்கு எங்கள் நன்றி.






# மதுரை ரயில் நிலையம் முன்பு மீண்டும் 'மீன் சிலை'

மதுரை, நவ. 4: மதுரை ரயில் நிலையம் முன்பு அகற்றப்பட்ட மீன் சிலை நாளை மறுநாள் மீண்டும் திறக்கப்படுகிறது.

பாண்டிய நாட்டு சின்னத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலும், மதுரையின் அடையாளச் சின்னமாகவும் மூன்று மீன்கள் நீரூற்றில் துள்ளி விளையாடுவது போன்று பித்தளை உலோகத்திலான பிரம்மாண்ட மீன் சிலை மதுரை ரயில் நிலையம் முன்பு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் 1999ல் இந்த சிலையை திறந்தது. இது அனைத்து தரப்பு மக்களின் பாராட்டையும் பெற்றதுடன், மதுரை ரயில் நிலையத்திற்கான அழகு அடையாளமாகவும் மாறியது.

இந்நிலையில், ரயில் நிலைய முன்பகுதியை அழகுபடுத்தி, விரிவாக்கம் செய்யும் பணிகளின் போது, அரசுடனும் பலர் கண் உள்ளே வந்து செல்ல வசதியாக இந்த சிலையை அகற்றவும், இதற்குப் பதிலாக வேறொரு பொருத்தமான இடத்தை ரயில் நிலையம் முன்பு ஒதுக்கித் தருவதாகவும் அதிகாரிகள் உறுதியளித்தனர். அதன்பின் இந்த மீன் சிலை அகற்றப்பட்டு, ரயில் நிலையத்தின் ஒரு அறையில் வைக்கப்பட்டது. பணிகள் முடிந்து பல மாதங்களாகியும் இந்த சிலையை இடம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தலைவர் ஜெகதீசன் உள்ளிட்ட நிர்வாகிகள் தொடர் முயற்சி மேற்கொண்டனர். தற்போது மதுரை ரயில்வே கோட்ட மேலாளராக புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் ஆனந்த் மதுரை ரயில் நிலையத்தின் முன்புறம் தேசிய கொடிக் கம்பத்திற்கு அருகில் மதுரையின் அடையாளச் சின்னமான மீன் சிலையை மீண்டும் அமைத்திட இடத்தை தேர்வு செய்து கொடுத்துள்ளார்.

இதுகுறித்து வர்த்தக சங்கத்தலைவர் ஜெகதீசன் கூறும்போது, "மீன் சிலையை மீண்டும் அமைப்பதற்கான பூமி பூஜை நாளை மறுநாள் (நவ.6ம் தேதி) காலை 10.30 மணிக்கு நடக்கிறது. இதில் மதுரை எம்பி சு.வெங்கடேசன், மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஆனந்த், மதுரைக் கோட்ட வர்த்தக மேலாளர் மற்றும் ரயில்வே அதிகாரிகள், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்" என்றார்.

மதுரை ரயில் நிலையம் முன்பு திறக்கப்பட்ட மீன் சிலை (பைல்படம்)

Thu, 04 November 2021
https://epaper.dinakaran.com/c/64147468



-உலக மரபு வார விழா வாரத்தை 2021, நவம்பர் 19 ஆம் தேதியிலிருந்து 25ஆம் தேதி வரை என யுனெஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்தி இருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு 19ஆம் தேதி தொடங்கி 25ஆம் தேதி வரை ஒவ்வொரு நாளும் ஒரு வரலாற்று ஆய்வுரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாள் நிகழ்வும் ஒரு சிறப்பு அம்சத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்ததன் வழி மிக முக்கிய ஆவணங்களாக இந்த ஆய்வுரைகள் உருவாக்கம் கண்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் யூட்யூப் வலைப்பக்கத்திலும் அவை இணைக்கப்பட்டன.

-டிசம்பர் மாதத் தொடக்கம் ஐரோப்பியத் தமிழர் நாள் கொண்டாட்டத்துடன் இனிதே தொடங்கியது. 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் தேதி ஜெர்மனியின் லிண்டன் அருங்காட்சியகத்தில் தமிழ் மரபு அறக்கட்டளை 2 ஐம்பொன் சிலைகள் வைத்து திருவள்ளுவருக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தது. அந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அதே நாளில் ஐரோப்பியத் தமிழர் நாள் விழா தமிழ் மரபு அறக்கட்டளையினால் பிரகடனப்படுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருக்குறளின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் லிண்டன் அருங்காட்சியகத்திலிருந்து நேரலையாக அருங்காட்சியகப் பொறுப்பாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

-இலங்கையின் மூதறிஞர் எழுத்தாளர் எஸ்.பொ அவர்கள் நினைவாக உலகளாவிய வகையில் ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கிக் கொண்டிருக்கும் அக்கினிக்குஞ்சு வார இதழும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பும் இணைந்த வகையில் உலகப் பேரறிஞர்கள் பலரது உரைகளுடன் இருநாள் கருத்தரங்கம் இம்மாதம் நடைபெற்றது.




மூதறிஞர் எஸ்.பொ. அவர்களைப் பற்றிய பல்வேறு பரிமாணங்களைத் தற்கால இளைஞர்களும் அறிந்து கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சி பயனுள்ள வகையில் அமைந்தது.

தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகப் பிரிவின் வெளியீடாக புதிய நூல், `வரலாற்றில் பொய்கள்` வெளியீடு கண்டது. நமது ஆய்வு நூல்கள் வெளியீட்டின் வரிசையில் இந்த நூலும் இணைகின்றது.

**தமிழால் இணைவோம்!**

அன்புடன்
முனைவர்.க.சுபாஷிணி

~*~*~*~*~*~*

‘மின்தமிழ்மேடை’ இதழுக்கு படைப்புக்களை அனுப்ப விரும்புபவர் .....
editorthfjournal@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தாங்கள் உருவாக்கிய படைப்புகளை அனுப்பலாம்.

தமிழ் மரபு, இலக்கியம், வரலாறு, தொன்மை, வாழ்வியல் என தமிழ் மற்றும் தமிழர் தொடர்பான படைப்புகள் மின்தமிழ்மேடை காலாண்டிதழுக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

காலாண்டிதழாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் 3ஆம் வாரத்தில் மின்தமிழ்மேடை வெளியாகும்.

தமிழில் ஒருங்குறி(unicode) வடிவில்; வர்ட் டாகுமெண்ட்டாக அனுப்புக - பக்கம், சொற்கள் கட்டுப்பாடு இல்லை; பொருண்மை தமிழர் - தமிழ் தொடர்பானவை மட்டுமே.

~*~*~*~*~*~*

**குறிப்பு:**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

~*~*~*~*~*~*

கூகுள் புக்ஸ் தளத்தில் மின்தமிழ்மேடை இதழ்கள் கிடைக்கும்

~*~*~*~*~*~*

இந்த இதழில் ...

**மின்தமிழ்மேடை - காட்சி: 28; ஜனவரி – 2022**

# “தமிழால் இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...”

(மின்தமிழில் அக்டோபர் 16, 2021 – ஜனவரி 15, 2022 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு)

***மின்தமிழ்மேடை - காட்சி: 28; ஜனவரி – 2022***

***இந்த இதழில் ...***


*தலையங்கம்: தமிழால் இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...*

*— முனைவர்.க.சுபாஷிணி* *i*

*1. அயலகத் தமிழர் நாள் அறிவிப்பில் மகிழ்ச்சி அடைகிறோம்*

*— முனைவர்.க.சுபாஷிணி* *1*

*2. தாய்வீடு திரும்பும் தமிழ்க் கல்வெட்டுகள்*

*— முனைவர் எஸ்.சாந்தினிபீ* *5*

*3. புதுக்கோட்டைக் குடைவரைகள்*

*— முனைவர். ப. தேவி அறிவு செல்வம்* *9*

*4. அகழாய்வினால் அறியப்படும் தமிழகத்தில் சிறந்திருந்த நகர நாகரீகம்*

*— கி. ஸ்ரீதரன்* *18*

*5. இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைத் தரும் கல்வெட்டு*

*— பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்* *21*

*6. தொ.பரமசிவனின் அழகர் கோயில்*

*— அ.முத்து சிவகாமி* *33*

*7. தமிழகத்தின் சிற்பக்கலையும் ஆடற்கலையும்*

*— கி. ஸ்ரீதரன்* *50*

*8. வீரமாமுனிவரின் பாடல்களும் வரலாற்றுத் தரவுகளும்*

*— முனைவர் ஆனந்த் அமலதாஸ்* *55*

*9. தமிழ்த் தொண்டு செய்த மேலைநாட்டு நல்லறிஞர் வீரமாமுனிவர்*

*— ஆலடி எழில்வாணன்* *75*

10. கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் - ரேனியஸ் ஐயர்
— முனைவர் த.ஜான்சி பால்ராஜ் 80
11. மெக்காலே மகாத்மாவா?
— முனைவர் சிவ. இளங்கோ 84
12. எஸ்.பொ.: இரண்டெழுத்தில் ஓர் ஆளுமை
— அ.பாலமனோகரன் 98
13. எஸ்.பொ. இன்றி நவீன ஈழத்தமிழ் இலக்கியம் இல்லை
— க. நவம் 103
14. எஸ்.பொ. வுடனான எனது அனுபவங்கள்
— தியாகலிங்கம் 112
15. இனி வரும் உலகம்: பெரியார் ஈ.வெ.ரா.
— பெரியார் ஈ.வெ.ரா. 118
16. சாக்கிய வேதந் தேக்கிய பாதம்: வடலூர் வள்ளலார்
— ஆ.சிவசுப்பிரமணியன் 135
17. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி
— தமிழறிஞர் ஔவை நடராசன் 148
18. கலைஞர்: மிக உயர்ந்தவர்
— ஆலடி எழில்வாணன் 153
19. செவிமடல் பாகங்கள்
— இராம.கி. 159
20. ஓசைக்கும் ஒலிக்கும் என்ன வேறுபாடு?
— முனைவர் தேமொழி 163
21. மயங்கா மரபின் எழுத்துமுறை!
— முனைவர். ப.பாண்டியராஜா 169
22. சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே !
— முனைவர் ஔவை. அருள் 172
23. மொழிபெயர்ப்பாளர் பண்பாடுகளிடையே பாலம் கட்டுபவர்
— முனைவர் ஆனந்த் அமலதாஸ் 176
24. தமிழில் கடன் சொற்களுக்கு என விதிமுறைகள் உண்டு
— முனைவர் செ. இராஜேஸ்வரி 188
25. கட்டுரை எழுதுகையில் பிறமொழிச் சொற்களைக் கையாளலாமா?
— அ. குமரேசன் 194

26. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் திருவள்ளுவர் திருவுருவம்
— முனைவர். ப. தேவி அறிவு செல்வம் 196
27. "இந்திரனே சாலுங் கரி"
— முனைவர் சிவ. இளங்கோ 205
28. தபுதாரத்து ஆழ்ந்த தனிநிலைமை
— முனைவர் தேமொழி 212
29. நம் ஊர் நம் பெருமை!
— முனைவர் க.சுபாஷிணி 215
30. மாட்டுப் பொங்கலும், கரகாட்டப் பாடல்களும்...
— ச.சுப்பாராவ் 220
31. ஆநிரைகள் ஆரோக்கியம் காக்கும் திருவிழா
— இரா. முத்துநாகு 230
32. ரேக்ளா: தொடரும் தமிழர் பாரம்பரியம்
— முனைவர் த.ஜான்சி பால்ராஜ் 233
33. சிறு வீட்டுப் பொங்கல் தமிழர் பண்பாட்டின் அடையாளமா ?
— முனைவர் வே.கட்டளை கைலாசம் 238
34. தமிழ் முஸ்லிம்களின் பொங்கல் கொண்டாட்டம்
— கோம்பை அன்வர் 243
35. பொங்கலோ பொங்கல்!!!
— முனைவர் செங்கை. பொதுவன் 250
36. பொங்கலுக்கு சிறப்பான தனித்துவம் உண்டு
— தொ. பரமசிவன் 253
37. மகிழ்வின் நாட்கள்
— முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய் 257
38. வாழ்க்கைக் கணக்கு
— கவிஞர் அமீர் 260
39. மாதங்களில் நான் மார்கழி!
— ருத்ரா இ.பரமசிவன் 261
40. மாறாத விடியலின் அழகும் வீசும் காற்றும்...
— வித்யாசாகர் 263
41. வடலூர் வள்ளலார் !
— தமிழறிஞர் ஔவை நடராசன் 265

*42. அறம் காத்த அண்ணல்!*
— முனைவர் சிவ. இளங்கோ *266*
*43. புத்தகம்*
— கி.ரமேஷ் *267*
*44. சிந்துபூந்துறை*
— ருத்ரா இ.பரமசிவன் *268*
*45. புலம்பெயர் மலேசியத் தமிழர்களின் நிலை !?*
— மணிக்கவிஞர் பாதாசன் *270*
தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள், வெளியீடுகள் — செய்திகள் தொகுப்பு
— முனைவர் தேமொழி *273*

# 1. அயலகத் தமிழர் நாள் அறிவிப்பில் மகிழ்ச்சி அடைகிறோம்

— முனைவர் க.சுபாஷிணி




தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், வெளிநாடு வாழ் துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அயலகத் தமிழர் வரலாறு அமர்வுக்குத் தலைமையேற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு தோழர் திருச்சி சிவா அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் உலகத் தமிழர்களுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் சார்பில் எனது இனிய வணக்கம்.

இது உண்மையிலேயே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சிதான். பொங்கல் தமிழர் திருநாள் வாரத்தில் அயலகத் தமிழர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அயலகத் தமிழர் நாளாக ஜனவரி 12ம் தேதியைப் பிரகடனப்படுத்திய தமிழ்நாட்டு முதல்வர் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்திலிருந்து வணிகத்துக்காகப் புலம்பெயர்ந்து சீனா, கொரியா, ஜப்பான், இந்தோனீசியா, மலாயா, தாய்லாந்து எனப் புலம்பெயர்ந்த தமிழர்கள் மிக நீண்டகாலமாக இந்நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். அதே காலகட்டத்திலும், பிறகும் ஐரோப்பாவிற்குப் பயணமானோர் அங்கேயே தங்கி விட்டனர்.

தொடர்ச்சியாக வணிகத்திற்காகச் சென்றவர்கள் என்ற நிலை மாறி கடந்த 300 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டபோது நாட்டை விட்டு வெளியேறி, மொரிஷியஸ், பிஜீ, மார்ட்டினிக், சுரினாம், குவாதலப், மலாயா, இலங்கை மலையகம் எனப் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை மிக அதிகம். அடுத்து, கடந்த நூற்றாண்டில் உயர் கல்விக்காகவும், புதிய வாழ்வுக்காகவும் ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா எனப் புலம்பெயர்ந்தோர் இன்று கணிசமான அளவில் உலகத் தமிழ் மக்களாக, ஆனால் தமிழ்நாட்டை எங்களது பண்பாட்டு வேராகக் கொண்டு வாழ்கின்றோம்.

எங்களது தமிழ் மரபு அறக்கட்டளை 2001ஆம் ஆண்டு தொடங்கி உலகளாவிய தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். தமிழகத்துக்கு வெளியே உதாரணமாக, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து போன்ற நாடுகளில் பாதுகாக்கப்படும் வரலாற்று ஆவணங்களை ஆய்வு செய்து, பதிவாக்கி அவை பற்றிய செய்திகளை ஆய்வறிக்கைகளாக வெளியிட்டு வருகின்றோம். 4.12.2019இல் ஜெர்மனியில் திருவள்ளுவருக்கு 2 ஐம்பொன் திருவள்ளுவர் சிலைகளை நிறுவினோம். இதுவே ஐரோப்பாவில் திருவள்ளுவருக்கு நிறுவப்பட்ட முதல் உருவச்சிலைகள் என்பதும் உலகளாவிய வகையில் திருவள்ளுவருக்கு வைக்கப்பட்ட முதல் ஐம்பொன் சிலைகள் என்ற சிறப்பையும் பெறுகின்றது. இதே நாளை ஐரோப்பியத் தமிழர் நாளாகப் பிரகடனப்படுத்தி ஐரோப்பியத் தமிழர்களை ஒன்றிணைத்துச் செயல்பட்டு வருகின்றது எங்கள் தமிழ் மரபு அறக்கட்டளை.

அந்த வகையில் எங்களை தாய்நிலத்தோடு ஒன்றிணைக்கும் தமிழக அரசின் இந்த முயற்சியை நாங்கள் மனதார வரவேற்கிறோம். தமிழக அரசைப் பாராட்டுகின்றோம்.

முதலமைச்சர் அவர்கள் இன்று தமது உரையில் அறிவித்த வெளிநாடு வாழ் தமிழர் அவசரக்கால உதவிக்கான தளம், உலகத் தமிழர்களுக்கான தமிழர் களஞ்சியம் ஆகிய திட்டங்களை நெஞ்சார வரவேற்கின்றேன். இவை எங்களது நீண்டகால தேவையாக இருக்கின்றது.

இவ்வேளையில் எங்களது கோரிக்கையாக சிலவற்றை முன்வைக்க விரும்புகின்றோம்.

1. புலம்பெயர்ந்த தமிழக மக்களின் நீண்டகால வரலாறு - எத்தகைய பயணம், புதிய நாடுகளில் ஆரம்பக்கால துன்பகரமான சூழல், அதைப்பற்றிய ஆவணங்கள், படிப்படியான வாழ்வியல் மாற்றங்கள், தமிழர் புதிய நிலத்தில் உள்நாட்டு மக்களுடனான ஒன்றிணைந்த வாழ்க்கை - தமிழ்க் கல்வி, பண்பாடு, போன்ற ஆய்வுகளைத் தமிழகக் கல்வி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் முக்கியத்துவம் அளித்துச் செயல்படுத்த வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர் ஆய்வுத்துறையைக் கல்வி நிறுவனங்கள் உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

2. ஐரோப்பிய, அமெரிக்க, கிழக்காசிய, தூரக்கிழக்காசிய நாடுகளில் உள்ள தமிழ், தமிழர், தமிழ்நாடு தொடர்பான ஆவணங்கள் ஓலைச்சுவடிகளாக, தாள் ஆவணங்களாக, செப்பேடுகளாக, வரலாற்றுச் சின்னங்களாக அயல்நாடுகளில் பாதுகாக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளில் இவற்றை மின்னாக்கம் செய்து பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அது தொடர்பான தகவல்களையும் தொடர்ந்து தமிழ் மரபு அறக்கட்டளை செயல்படுத்தி வருகின்றோம். தனி நபர்களாகவும் அமைப்பாகவும் எங்களால் முடிந்த வரையில் இப்பணிகளைச் செய்து வருகின்றோம். தமிழக அரசின் உதவி கிடைத்தால் இவ்வாவணங்களை விரைவாக மின்னாக்கம் செய்து நாம் ஆய்வு செய்து வெளியிடப் பேருதவியாக அமையும்.

3. அயல் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்குத் தமிழ் வாசிப்பை வளர்க்கும் வகையில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சிகளை ஏற்படுத்துவது அவசியத் தேவையாகின்றது. இப்புத்தகக் கண்காட்சிகளை ஐரோப்பாவிலும், மலேசியா, சிங்கையிலும் ஏற்பாடு செய்து தமிழ் நூல்கள் அயலகத் தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் பரவும் வகை செய்ய வேண்டும்.

4. ஐரோப்பாவில் இருக்கும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் முறைசாரா பள்ளிக்கூடங்களாக இயங்கி வருகின்றன. அதற்கான ஒருங்கிணைந்த பாடத்திட்டங்களையும், பாட நூல்களையும் தமிழக அரசு உருவாக்கித் தர வேண்டும்.

அதுமட்டுமன்றி ஜெர்மானியர், ஆங்கிலேயர், பிரெஞ்சு மக்கள் என வேற்றுமொழி பேசும் மக்களும் பேச்சுத்தமிழ் கற்கும் வகையில் இணையவழி பேச்சுத்தமிழ் கற்கும் வாய்ப்புகளைத் தமிழக அரசு உருவாக்கித்தரக் கேட்டுக் கொள்கிறோம்.இந்த வாய்ப்பிற்கு நெஞ்சார்ந்த நன்றி. ஏற்பாட்டாளர்களுக்கு எமது வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

தமிழால் இணைவோம்.

முனைவர்.க.சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு




உரையையும் நிகழ்ச்சியை இணையம் வழி காண இங்கே செல்க.
https://youtu.be/McFlZxj51xs
https://fb.watch/au59ueQu_j/

# 2. தாய்வீடு திரும்பும் தமிழ்க் கல்வெட்டுகள்

— *முனைவர் எஸ்.சாந்தினிபீ*

மைசூரில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டுகள் சென்னைக்கு வர உள்ளதாக இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் (ஏஎஸ்ஐ) அறிவிப்பு, தமிழக மக்களையும் உலகமெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்களையும் பெருத்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

1984-ல் சென்னை பல்கலைக்கழகத் தொல்லியல் துறையில் நான் எம்.ஃபில்., பயின்ற காலம். பதிக்கப்பட்ட கல்வெட்டுகள் கிடைக்காமல், அவற்றின் படிகளைத் தேடி மைசூரில் உள்ள ஏஎஸ்ஐயின் கல்வெட்டுப் பிரிவின் அலுவலகம் எனக்கு முதலில் அறிமுகமானது. 60 ஆண்டுகளுக்கு முன் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இன்னமும் பதிப்பிக்கப்படவில்லை என நான் உணர்ந்த முதல் புள்ளி அது. கால தாமதம், இடையூறுகள் போன்றவற்றைக் கடந்து மைசூரில் தங்கி, கல்வெட்டுகளைப் படித்து எழுதி எடுத்து வந்தேன். தமிழில் உள்ள கல்வெட்டுகள் ஏன் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை, எல்லா மாணவர்களாலும் மைசூருக்கு வருவது எப்படி முடியும் போன்ற கேள்விகள் என் மனதில் எழுந்தன. எனது முனைவர் பட்ட ஆய்வுக் காலத்திலும் இந்த நிலையே நீடித்தது. எனது முனைவர் பட்ட ஆய்வேட்டை 2005-ல் நூலாக வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்தபோது அதே கல்வெட்டுகள் 80 ஆண்டுகளைக் கடந்தும் பதிப்பிக்கப்படாததை அறிந்துகொண்டேன்.

எடுத்துக்காட்டாக, தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி எண் 26, 1976-78-ல் வெளியானது. இதன் அடுத்த தொகுதி எண் 27, 2001-ல்தான் வெளியானது. இடையில் 23 ஆண்டுகள் தமிழ்க் கல்வெட்டுப் படிகள் படிக்கப்படவில்லையா? பதிப்பிக்கப்படவில்லையா? தெரியவில்லை. இதுதான், ஜூன் 6, 2006-ல் ஜூனியர் விகடன் எடுத்த ஒரு முன்னெடுப்பு. 'காவிரியும் போச்சு... கல்வெட்டும் போச்சு!' என்ற செய்திக் கட்டுரையாக

முதல் வடிவம் கொண்டது. பொதுவெளியில் இத்தகவல் முதன்முறையாகப் பரவியது. எனக்கு ஓர் ஆசுவாசம். இந்த விஷயம் அப்போதைய முதல்வரான கருணாநிதி கவனத்துக்குச் செல்ல, நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். மைசூர் அலுவலகத் தமிழ்க் கல்வெட்டுகளைத் தமிழகம் கொண்டுவரும் முயற்சியாகத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கி, பிறகு ரூ.25 லட்சமாகவும் உயர்த்தப்பட்டது. நிதி, முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் அரசிடமே திரும்பியது. அப்போது மற்றொரு தகவலும் பரவியிருந்தது. திமுக இடம்பெற்ற ஐ.மு. கூட்டணி ஆட்சியின் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் அம்பிகா சோனிக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டதாகவும், முதல்வர் கருணாநிதி மைசூரின் கல்வெட்டுப் பிரிவை மீண்டும் தமிழ்நாட்டுக்கு மாற்றக் கோரியது ஏற்கப்படவில்லை என்றும் தெரிந்தது.

ஜனவரி 2013-ல் இப்பிரச்சினை ஜூனியர் விகடனில் மீண்டும் ஒரு கட்டுரையானது. இதே காலகட்டத்தில் தனிநபர்களுக்கும் மாணவர்களுக்கும் ஓய்வுபெற்ற கல்வெட்டியல் வரலாற்று ஆர்வலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஓர் அலைபோல் தமிழ்நாட்டைப் பற்றிய வரலாற்று ஆர்வம் மேலோங்கியது. இக்காலத்தில் மரபு நடைப் பயணங்கள், வரலாற்றுச் சுற்றுலாக்கள் உருக்கொண்டன. பல உள்ளூர் வரலாற்று அமைப்புகள் தோன்றி, தினந்தோறும் தங்களது கண்டுபிடிப்புகளைச் சமூக வலைதளங்களில் பதிவிட்டன. இதை ஊக்குவிக்கும் வகையில், கீழடியில் ஏஎஸ்ஐயின் அகழாய்வு தொடங்கியது. அங்கே ஒரு வரமாக வந்த அமர்நாத் ராமகிருஷ்ணன், வைகை நதிக்கரையில் அகழாய்வுக்கு உரிய இடங்களாக 200-க்கும் மேற்பட்ட இடங்களைக் கண்டறிந்தார். இந்த அகழாய்வுக்கும் தடை ஏற்பட்டதால், நீதிமன்றம் வாயிலாகத் தடை நீக்கப்பட்டு, தமிழ்நாடு அரசே கீழடி அகழாய்வை மேற்கொள்ள வழி ஏற்பட்டது.

இதனிடையே, ஜனவரி 7, 2015-ல் 'இந்து தமிழ்' நாளேட்டில் கல்வெட்டுகளைப் பற்றி நான் அளித்த செய்தி வெளியானது. மேலும், கல்வெட்டுகளைத் தமிழகத்துக்குக் கொண்டுவர நீதிமன்றத்தின் வாசல் தட்டப்பட்டது. வழக்கறிஞர் மணிமாறன்

தாக்கல்செய்த மனுவை நீதிபதிகள் என்.கிருபாகரன், எம்.துரைசாமி ஆகியோர் விசாரித்தனர். இவ்வழக்கில் திமுகவின் மாநிலங்களவை உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான என்.ஆர்.இளங்கோ வாதிட்டார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 19-ல் மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளையின் அமர்வு அளித்த தீர்ப்பு, மத்திய அரசின் கீழ் செயல்படும் ஏஎஸ்ஐயின் கல்வெட்டியல் பிரிவின் மைசூர் அலுவலக இயக்குநருக்கு இட்ட கட்டளையாக அமைந்தது.

இனிதான் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். ஏஎஸ்ஐ தனது உத்தரவில் சொல்லியிருக்கும் இரண்டு செய்தியும் ஆழ்ந்து படிக்க வேண்டியவை. ஒன்று, ஏற்கெனவே சென்னையில் இயங்கிவரும் கிளை அலுவலகத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மைசூர் அலுவலகத்தில் இருக்கும் இயக்குநர் தமிழ்க் கல்வெட்டு மைப் படிவங்களையும் அதைச் சார்ந்த ஆவணங்களையும் சென்னை ஏஎஸ்ஐ கிளைக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்பதாகும்.

கல்வெட்டியல் பிரிவு முதன்முதலாக பெங்களூருவில் 1886-ல் தொடங்கப்பட்டது. பிறகு, கல்வெட்டுப் படிகளின் பாதுகாப்பு கருதி 1903-ல் ஊட்டிக்கு மாற்றப்பட்டது. பிறகு, 1966-ல் மீண்டும் மைசூருக்கு இப்பிரிவு சென்றது. இதற்கு இரண்டு கிளைகள் 1990-ல் உத்தர பிரதேசம் ஜான்சியிலும் சென்னையிலும் அமைக்கப்பட்டன. இதில், ஜான்சியின் கிளை தற்போது உபியின் தலைநகரான லக்னோவில் செயல்படுகிறது. கடந்த 2008-ல் மைசூரிலேயே புதிய கட்டிடத்துக்குக் கல்வெட்டுப் பிரிவு மாற்றப்பட்டது. அப்போது தமிழ்க் கல்வெட்டுகளின் பல படிகள் சேதமாகித் தூக்கி எறியப்பட்டதாகப் புகார்கள் எழுந்தன. எனவே, தற்போது மைசூரிலிருந்து சென்னைக்கு வரும் படிகளைப் பத்திரமாக சென்னைக்குக் கொண்டுவருவதை உறுதிப்படுத்துவது அவசியம்.

சென்னையில் இயங்கும் தொல்லியல் துறை கிளை நிறுவனத்துக்கும் தமிழ்நாடு அரசிற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. மைசூரில் இருந்தாலும் சென்னையில் இருந்தாலும் மத்திய அரசின் கீழ் இயங்கும் அதே ஏஎஸ்ஐயின்

கைவசம்தான் இருக்கும். இந்தச் செய்தியை நாம் ஆழமாக மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும். உயர் நீதிமன்றத் தீர்ப்பால் நிச்சயிக்கப்பட்ட பலன் என்னவென்றால், கல்வெட்டுகளைத் தேடி மைசூர் செல்லத் தேவையில்லை, சென்னைக்குச் சென்றால் போதும் என்பதே. ஆகவே, இதில் நாம் பெரிதும் மகிழ்வதற்குப் போதுமான வெற்றி இருப்பதாக எனது பார்வையில் தெரியவில்லை. வெற்று இடமாற்றம் மட்டுமே இதில் குறிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, தமிழ்க் கல்வெட்டுகளைப் படிக்கக் கல்வெட்டியலாளர்களை அமர்த்துதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அவசியம். அப்படி நடவடிக்கைகள் மேற்கொண்டு அனைத்துத் தமிழ்க் கல்வெட்டுகளும் பதிப்பிக்கப்பட்டால், அதன் பின் செய்யப்படும் ஆய்வுகளால் சர்வதேச அளவில் தமிழர்களின் வரலாறு அதிக முக்கியத்துவம் பெறுவது நமக்குப் பெருமை அல்லவா?

நன்றி: இந்து இதழ்

- முனைவர் எஸ்.சாந்தினிபீ, அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர், ‘கல்வெட்டுகளில் தேவதாசி’ நூலாசிரியர்

## 3. புதுக்கோட்டைக் குடைவரைகள்

— முனைவர். ப. தேவி அறிவு செல்வம்


வெள்ளாற்றை மையமாகக் கொண்டது புதுக்கோட்டை. வெள்ளாற்றின் கரையே சோழ பாண்டிய நாட்டு எல்லை ஆக இருந்தது என பழைய பாடல் ஒன்று கூறுகிறது.

***"வெள்ளாறது வடக்காம் மேற்குப்பெருவழியாம்****
***தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் - உள்ளார***
***ஆண்டகடல் கிழக்காம் ஐம்பத்தறுகாதம்***
***பாண்டிநாட்டெல்லைப்பதி."***

வெள்ளாறு வட எல்லையாகவும், மேற்கு எல்லையாகப் பெருவழியும், தெளிந்த நீர் கொண்ட கன்னி(குமரி) தென் எல்லையாகவும், (பல பாண்டிய மன்னர்களாலும் துறைமுகமாகக் கொண்டு) மனநிறைவுடன் ஆட்சி செய்யப்பட்ட கடல் கிழக்கு எல்லையாகவும், இந்த ஐம்பத்தாறு காதம் வரை விரிந்துள்ள நிலமே பாண்டிநாட்டின் எல்லைக்கு உட்பட்ட இடமாகும்.

(*பெருவழி என்பதற்குப் பதில் பெருவெளி என்ற பாட பேதமும் உண்டு).

சங்ககாலம் முதல் பாண்டியர்கள், சோழர்கள், பல்லவர்கள், அவர்களுக்குக் கீழே இருந்த குறுநிலத் தலைவர்கள், முத்தரையர்கள், கொடும்பாளூர் வேளிர்கள், வழுதூர் பல்லவராயர்கள், சிற்றரசர்கள் ஆகியோர் புதுக்கோட்டையை கிபி 15 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டு உள்ளார்கள். கிபி 17 ஆம் நூற்றாண்டு முதல் 1948 வரை புதுக்கோட்டையானது ஒரு தனியரசாக ஒன்பது மன்னர்களால் ஆட்சி செய்த பகுதியாக இருந்துள்ளது.




on Google maps: https://www.google.com/maps/d/viewer?mid=1nCb7YqSUT0FZWI4_GRwdfxSgfpqAT870&usp=sharing

குறிப்பிடத்தக்க வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல குடைவரைகள் புதுக்கோட்டைப்பகுதியில் உள்ளன.

## 1. மலையடிப்பட்டி குடைவரை:






கீரனூருக்கு வடபுறம் இரண்டு குடைவரைகள் உள்ளன. ஒன்று சிவனுக்கு மற்றொன்று விஷ்ணுவுக்கு. நந்திவர்ம பல்லவனால் எடுக்கப்பட்ட இக்கோயிலில் தாய்ப்பாறையிலேயே அமைக்கப்பட்ட நந்தி உள்ளது. மேலும் சப்தமாதர்கள் ஆயுதங்களுடனும், சிம்ம வாகனத்தில் உள்ள காளியும் சிற்பங்களாகக் காட்சி தருகின்றனர். மேற்குப் புறம் திருமால் பாம்பணையில் துயில் கொள்வது போலவும் தேவர்கள் போன்றோர் விஷ்ணுவைப் பார்ப்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. விஷ்ணுவின் கிடந்த கோலத்தில் அவரது நாபிக் கமலத்திலிருந்து பிரம்மா வருவது போலவும், மேலும் நின்ற அமர்ந்த கோலங்களிலும், நரசிம்ம அவதாரத்தின் இரண்யவத சிற்பங்களும் இங்கு உள்ளன. தந்திவர்மப் பல்லவனின் கல்வெட்டு கொண்ட பல்லவர்கால குடைவரை இது.

**2. குன்றாண்டார் குடைவரை:**




இரண்டாம் நந்திவர்ம பல்லவன் கல்வெட்டுகள் இரண்டு இங்கு உள்ளது என்பதால் இது பல்லவர் காலத்துக் குடைவரையாகும். பாறையிலேயே இருக்குமாறு மூலவர் லிங்கத் திருமேனி கருவறை உள்ளே உள்ளது. துவாரபாலகர்கள் மனித உருவச் சிற்பமும் தாய் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளது. வலம்புரி விநாயகர், சோமாஸ்கந்தர் சிற்பங்களும் இங்கு உள்ளன. பல்லவர்களுக்குப் பிறகு பாண்டியர், சோழர் முன் மண்டபத்தை ஏற்படுத்தியுள்ளனர்

**3. நார்த்தாமலை குடைவரை:**

நகரத்து ஊர் மலை என்பது நார்த்தாமலை என மருவியது. பழியிலி ஈஸ்வரம் முத்தரையர் குடைவரை இது. சிறியநங்கை என்ற பெண் நந்தி வைக்க ரிஷபக் கூட்டை ஏற்படுத்திய செய்தி நிருபதுங்கன் கல்வெட்டு ஆக உள்ளது. அருகே சமணக் குடைவரை தெற்கு வடக்காக நீள் சதுர வடிவத்தில் கருவறை, முன் மண்டபம் என தாய்ப்பாறையிலேயே உள்ளது.

**4. பதினெண் பூமி விண்ணகரம் குடைவரை:**

பதினெண் பூமி என்ற வணிகக் குழு விஷ்ணுவின் 12 சிற்பங்களைத் தாய் பாறையிலேயே செதுக்கி உள்ளனர். பதினெண் பூமி விண்ணகரம் என்ற பெயர் கொண்டதாக கல்வெட்டு கூறுகிறது.

**5. திருகோகர்ணம்:**

சதுர ஆவுடையாராக லிங்கத் திருமேனி இருப்பதாலும் மாறன் சடையன் கல்வெட்டு இங்கு உள்ளதாலும் இக்குடைவரை பாண்டியர்களுக்கானது. மலையின் சிறு பகுதியில் கருவறை, முன் மண்டபம் தாய்ப்பாறையிலேயே உள்ளது. கங்காதரர், வலம்புரி விநாயகர் சிற்பங்களும் இங்கு உள்ளன.

**6. சித்தன்னவாசல் குடைவரை:**



மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் குடைவரை செதுக்கி ஓவியம் தீட்டியதாக கல்வெட்டுச் செய்தி இருப்பதால் இக்குடைவரை பாண்டியர்களுக்கானது. இங்கு அஜந்தா ஓவியத்துக்கு இணையான ஓவியம் உள்ளது. கருவறை, முகமண்டபம் மூன்று சமணர்களின் புடைப்பு சிற்பமும் இங்கு உள்ளன.

**7. குடுமியான்மலை மேல் தளி:**

இக்குடைவரை குடுமிநாதர் கோயில் எனக் கல்வெட்டு கூறுகிறது. சதுர ஆவுடையாக லிங்கத் திருமேனி மற்றும் கோமாறன் சடையன் கல்வெட்டு இருப்பதால் இது பாண்டியர்களுக்கானது எனத் தெரிகிறது. இங்கு 'பரிவாதிநிதா' என்று தொடங்கும் பல்லவகிரந்தத்தில் வெட்டப்பட்ட இசைக் கல்வெட்டு வீணை குறித்த குறிப்பைக் கொண்டுள்ள சங்கீதக் கல்வெட்டு உள்ளது. புடைப்புச் சிற்பமாக வலம்புரி விநாயகரும், துவாரபாலகர்கள் அருகிலேயே தெற்கு பார்த்து மனித வடிவமாக உள்ளனர்.

**8. தேவர்மலை:**

திருமயம் தாலுகாவில் கோட்டூர் அருகே, பேரையூர் மேற்கே காட்டிற்குள் சிறுமலையில் உள்ளது. சதுர ஆவுடை கொண்ட லிங்கத் திருமேனி, மற்றும் துவாரபாலகர்கள் மனித உருவத்தில் உள்ளனர். இங்கே அரிட்டாபட்டியில் உள்ளது போல லகுலீசர் சிற்பம் உள்ளது. மற்ற இடங்களில் காணப்படும் லகுலீசர் சிற்பம் உதிரி சிற்பமாக உள்ளவை.

**9. திருமயம்:**

மலைமேல் திருமயம் கோட்டைக்குள் சதுர ஆவுடையார் லிங்கத்திருமேனியும், 'பரிவாதிநிதா' என்ற கல்வெட்டும் உள்ளது. இது ஏணிப்படிகளில் ஏறிப் பார்க்குமாறு இந்தியத் தொல்லியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு பாதுகாக்கப்படும் பாண்டியர் காலக் குடைவரையாகும்.

**10. திருமயம் மலை மேற்குக் குடைவரை:**

அடிவாரத்தில் மேற்கு குடைவரையில் கிழக்கு நோக்கி சிவன் லிங்கத் திருமேனியாக தாய்ப்பாறையிலேயே சதுர ஆவுடையார் கொண்டும், மனித உருவில் துவார பாலகர்களும் தாய் பாறையிலேயே செதுக்கப்பட்டு உள்ளனர். அத்துடன் இங்கும்

‘பரிவாதிநிதா’ என்று தொடங்கும் கல்வெட்டும் சிறு குறிப்புடன் இங்கும் உள்ளது, மிகப் பெரிய லிங்கோத்பவர் உருவம் தாய்ப்பாறையில் புடைப்புச் சிற்பமாக உள்ளது.

**11. திருமயம் மலை கிழக்குக் குடைவரை:**
அடிவாரத்தில் கிழக்கே விஷ்ணு குடைவரைக் கோயிலும் பாம்பணையில் விஷ்ணு சயன கோலத்திலும், மேலே தேவர்கள் அகத்தியரும் உள்ளது போலவும், பூமாதேவியை தூக்குவதற்கு வரும் அரக்கர்களை விரட்ட பாம்பு விஷத்தைக் கக்கி தாக்குவது மாதிரியும், அவர்கள் பயந்து ஓடுவது மாதிரியாகவும் சிற்பம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வருடம் ஒருமுறை இதற்கு தைலக்காப்பு நடைபெறும். சைவ வைணவ வழிபாட்டுச் சண்டையைக் கருத்தில் கொண்டு 13ஆம் நூற்றாண்டில் ஹொய்சாள மன்னர் வீர சோமேஸ்வரனின் தண்டநாயகன் இருபகுதிக்கும் இடையே நடுவில் எழுப்பிய 'கையுருவிச் சுவாரால்' இப்பகுதி பிரிக்கப்பட்டு தனித்தனி வழிபாட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**12. நச்சாந்துபட்டி மலையக் கோவில்:**
பொன்னமராவதிக்கு ஒரு கிலோ மீட்டர் வடக்கில் மலையக் கோவில் இருக்கிறது. இங்கு நச்சாந்துபட்டி அருகே, இம்மலையின் அடிவாரத்தில் வடபுறத்தில் சிவன் குடைவரை கோயில் உள்ளது. அதில் கருவறையில் எட்டுப் பட்டைகளுடன் உள்ள ஆவுடையாருடன் லிங்கத் திருமேனியாக மூலவர் உள்ளார். இங்கு உள்ள அபிஷேகம் நீர் செல்லும் பாதையானது சிங்கம் முகமாக உள்ளது. இங்கும் ‘பரிவாதிநிதா’ என்று தொடங்கும் கல்வெட்டு உள்ளது.

**13. தெற்கு குடைவரை:**
இதே பகுதியில், தெற்கு குடைவரையில், கருவறை முன், மண்டபம் எனவும் மூலவர் எட்டுப்பட்டை ஆவுடையார் கொண்ட லிங்கத் திருமேனியாக, புடைப்புச் சிற்பமாக உள்ளார். தூணின் தொகையானது தரங்கப் போதிகைகள் கொண்டு உள்ளது. எதிரே வலம்புரி விநாயகர் புடைப்பு சிற்பமாக தாய்ப்பாறையிலேயே உள்ளார்.

**14. பூவாலக்குடி குடைவரை:**
பொன்னமராவதிக்குக் கிழக்கே இருக்கும் பூவாலக்குடி என்ற ஊருக்குத் தெற்கே உள்ள ஒரு சிறிய மலையில், ஆவுடையாரும் லிங்கமும் கொண்ட கருவறை உள்ளது. அமரூன்றிய முத்தரையன் என்ற 8 ம் நூற்றாண்டு மன்னனால் உருவாக்கப் பட்டதாக கல்வெட்டு கூறுகிறது. பின்னர் இந்தக் குடைவரைக் கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் மண்டபம் கட்டி விரிவு படுத்தப் பட்டுள்ளது.

**15. குலாலகோட்டையூர் குடைவரை:**
திருமயம் - இராயவரம் வழியில், ராயவரத்திற்கு மேற்கே குலாலகோட்டையூர் என்று அழைக்கப்படும் கோட்டையூர் இராயவரம் சிவன் குடைவரைக் கோயில் உள்ளது. இந்த இராயவரம் குலாலகோட்டையூர் குடைவரையில் சுற்றுப்பாதை இல்லாமலேயே அமைந்த அரை வட்ட வடிவ ஆவுடையார் கொண்ட லிங்கத் திருமேனியாக மூலவர் அமைக்கப்பட்டுள்ளார். இது வேறெங்கும் காணக்கிடைக்காத வகையில் அரைவட்ட வடிவில் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும்.

**16. ஆயிங்குடி குடைவரை:**
இராயவரம் நேர் தென்புறத்தில் ஆயிங்குடியில் உள்ள மலைக்குடைவரையில் பாறையிலேயே லிங்கத் திருமேனியாய் மூலவர் உள்ளார். பின்பு நகரத்தார்களால் முன் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. முத்தரையர்கள், பல்லவர்கள் பாண்டியர்கள் மேன்மையை ஏற்றுக் கொண்டு ஆட்சி செய்ததால் தங்களுக்குச் சாத்தான் மாறன் என்ற பெயர் வைத்துக் கொண்டனர். பல்லவர்கள் முதலாம் மகேந்திரவர்மனின் வீணை பரிவாதினி என்ற கல்வெட்டு கிடைக்கின்றது.

நார்த்தாமலைக்குத் தெற்கே பல்லவராட்சி இருந்ததற்கான சான்றும் இல்லை. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் கல்வெட்டு, பெரும்பிடுகு முத்தரையர், மடைசெய்த கல் தூண் கல்வெட்டு, முத்தரையன் என்னும் கல்வெட்டு, நாமனூர் குளத்தில் வட்டெழுத்து அவனீஸ்வர கல்வெட்டு என கிட்டத்தட்ட ஆயிரம் கல்வெட்டுகள் புதுக்கோட்டையில் சமீப காலத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

**குறிப்பு:** தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு நடத்தும் இணையவழி திசைக் கூடல் உரைத்தொடர் நிகழ்ச்சி வரிசையில், டிசம்பர் 11, 2021 அன்று, புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக்கழகத்தின் தலைவரும், கல்வெட்டு அறிஞருமான திரு. கரு. ராசேந்திரன் அவர்கள் "புதுக்கோட்டை மாவட்ட குடைவரைக் கோயில்கள்" என்ற தலைப்பில் வழங்கிய உரையிலிருந்து முனைவர். ப. தேவி அறிவு செல்வம் அவர்கள் தொகுத்த தரவுகள் கட்டுரை.

படங்கள் உதவி: முனைவர் க. சுபாஷிணி.

கூகுள் வரைபடத்தில் இடக்குறிப்பு உதவி: முனைவர் தேமொழி

https://www.google.com/maps/d/viewer?mid=1nCb7YqSUT0FZWl4_GRwdfxSgfpqAT870&usp=sharing

புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைக் கோயில்கள்: திரு. கரு. ராசேந்திரன் அவர்களின்

உரை-யூடியூப் காணொளியாக: https://youtu.be/XDSob-c3_k0

## 4. அகழாய்வினால் அறியப்படும் தமிழகத்தில் சிறந்திருந்த நகர நாகரீகம்

— கி. ஸ்ரீதரன்

சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியில் நகர நாகரீகத்தின் ஒரு முக்கிய அம்சமாக விளங்கும் வடிகட்டியுடன் கூடிய நீர் செல்லும் குழாய் அமைப்புகள் மற்றும் உறைகிணறுகள் கண்டு பிடிக்கப்பட்ட செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம். தொன்மைச் சிறப்புமிக்க ஆதிச்ச நல்லூர் கொற்கை போன்ற ஊர்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் நீர் செல்லும் குழாய்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மனித இனத்திற்கு மிகவும் தேவையானதாக விளங்கும் சுத்தமான குடிநீரை தண்ணீரை பெறுவதற்கும் கழிவு நீரை அகற்றவும் "சுருங்கை' எனப்படும் குழாய்களும் கழிவு நீர் அகற்றும் வாய்க்கால்களும் இருந்திருக்கின்றன. இலக்கியங்களிலும் இது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சங்க இலக்கியமான பரிபாடலில் குழாய்கள் நிலத்தின் அடியில் நீண்ட யானையின் துதிக்கை போல அமைந்திருந்ததாக குறிக்கப்படுகிறது.

> ***அருவி சொரிந்த தியிற்றுரந்து***
> ***நெடுமால் சுருங்கை நடுவழிப்போந்து***
> ***கடுமாகி களிறணத்துக் கைவிடு நீர் போலும்***
> ***(பரிபாடல் 20 : 14-106)***

நீர் செல்லும் குழாய் அமைப்பு "சுருங்கை" என அழைக்கபடுகிறது. அரண்மனையின் மாடிமேல் நிலா முற்றம் அமைந்திருந்தது. அம்முற்றத்தின் மேலாக பெய்த மழைநீர் கீழே விழுவதற்கு மீன்

வாயைப் போன்ற அம்பணங்கள் (தூம்புகள்) அமைக்கப்பட்டிருந்ததாக நெடுநல்வாடை (96) கூறுகிறது. நீர்செல்லும் "சுருங்கை" பற்றி மதுரைக் காஞ்சியும் குறிப்பிடுகிறது.

***கல்லிடித்தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின்***
***நல்லெயிலுடிந்த செல்வத்தம்மின் (730-31)***

மேலும் "சுருங்கை' அமைப்பினைப் பற்றி சிலம்பு, மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகளை அகழ்வாராய்ச்சிகள் சான்றுகளுடன் மெய்ப்பிக்கின்றன. சுடுமண்ணால் ஆன குழாய்வகை நீர்க்கால்கள் திருக்கோவிலூர் (விழுப்புரம் மாவட்டம்) ஊத்தங்கரை (தர்மபுரி மாவட்டம்) சென்னை-நங்கநல்லூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

இவ்வகை குழாய்களில் ஒரு முனை சற்று குறுகலாகவும் மறுமுனை அகலமாகவும் இருக்கும். குழாய்களை ஒன்றுக்குள் ஒன்று சொருகிவிடலாம். களிமண் பூச்சு தேவையிருக்காது. மேலும் இவை துணிகளுக்கு வண்ண சாயமேற்றும் பணிகளுக்காக இவை பயன்பட்டிருக்கலாம் எனக் கருத முடிகிறது.



தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் "சுருங்கை' எனப்படும் நீர் செல்லும் குழாய்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, வசவசமுத்திரம் திருக்கோவிலூர், உறையூர் உலகடம் (ஈரோடு மாவட்டம்) போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. உலகடத்தில் கிடைத்த குழாய்களின் மீது எண்கள் (கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை) தமிழ் எண்கள் இடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தரைக்கு கீழே நீர் செல்லக் கூடிய வடிகால்கள், படைவீடு, கண்ணனூர், கங்கை கொண்ட சோழபுரம், கரூர் போன்ற தொன்மைச் சிறப்புமிக்க இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வாராய்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சிறந்த நகர நாகரீகம், சிறப்பான நிலையில் இருந்ததற்கான சான்றுகளாக (சுருங்கை) சுடுமண் குழாய்களும், வடிகால்களும் விளங்குகின்றன.

## 5. இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைத் தரும் திருகோணமலைக் கல்வெட்டு

— பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்

புகை படர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு. அக்கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதினால் அவற்றிலிருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகமானதாகவே பார்க்கப்படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

முதலில் இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஜே.எஸ். அருள்ராஜ் என்பவரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டதன் மூலம் அதுபற்றிய தகவல் எமக்கும் பரிமாறப்பட்டது. அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்குத் தொல்லியற் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான திரு. பா.கபிலன், திரு.வி. மணிமாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் திரு.கிரிதரன்

ஆகியோருடன் 30.01 2021 அன்று திருகோணமலை சென்றிருந்தோம். இந்நிலையில் திருகோணமலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜூடன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் திரு. நா.சந்திரசேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேசசெயலக உத்தியோகத்தர் திரு. நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது. இக்கல்வெட்டு, திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனிநிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டிட அத்திவாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதேநிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது. இம்மலையின் மேல்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன.

சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளுக்குக் கீழே 23 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் இரு வரிகளும், ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன.









1)... ... கூடிகே ஶ்ரீவிம்[ங்கோ3]நௌ ம்ருகே3விம்ச0தி ப4.
2).... .....ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஶ்ரீ ...
3) [த்திகள் ?] [ஶ்ரீகுலோ]த்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழ[ம
4) ண்டலமான மும்முடி]சோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-
5) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-
6) [நேமி பூசை கால]ங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-
7) [யிலை]யுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-
8) நாற்கு ச0[க்தி] ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா
9) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்ணுவித்து நமக்கு [ப்
10) ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்[து] நாட்டில் ல-
11) ச்சிகா[தி]புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-
12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய
13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடிமக்களுள்பட
14) இந்நா[ச்சியார்க்கு திருபப்]படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-
15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோத3கம் ப-
16) ண்ணிக் குடுத்தேன்இ .... லுள்ளாரழிவு படாமல்
17) ...ண்ண..ட்ட......ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆ]ய்
18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்
19) மாக . . டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்
20) குரால் பசுவைக் கொன்றா[ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-
21) ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்]டார்கள் மேலொரு ...
22) மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின்[சொல்படி] ... ...
23) த்தியஞ் செய்வார் செய்வித்தார் ||.... ......

இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப் படித்தனர்.

ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலு அவர்களுக்கும், தமிழகத் தொல்லியற் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபால் அவர்களுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன்.

அவர்கள் இருவரும் ஒருவாரக் காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும்பகுதியை வாசித்து அதன் வாசகத்தைத் தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு:

1)... ... க்ஷகே ஸ்ரீவிம்[ங்கோ3]நௌ ம்ருகே3விம்ச0தி ப4.

2).... .....ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ ...

3) [த்திகள் ?] [ஸ்ரீகுலோ]த்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழ[ம

4) ண்டலமான மும்முடி]சோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-

5) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-

6) [நேமி பூசை கால]ங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-

7) [யிலை]யுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-

8) நாற்கு ச0[க்தி] ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா

9) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்னுவித்து நமக்கு [ப்

10) ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்[து] நாட்டில் ல-

11) ச்சிகா[தி]புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-

12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய

13) மரமும் கீநோக்கிய கிணறும்பேருடரை நீக்கி குடிமக்களுள்பட
14) இந்நா[ச்சியார்க்கு திருபப்]படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-
15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோத3கம் ப-
16) ண்ணிக் குடுத்தேன்இ .... லுள்ளாரழிவு படாமல்
17) ...ண்ண..ட்ட......ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆ]ய்
18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்
19) மாக . . டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்
20) குரால் பசுவைக் கொன்றா[ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-
21) ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்]டார்கள் மேலொரு ...
22) மாற்றம் விலங்குரைப்பார் .. காலிங்கராயரின்[சொல்படி] ... ...
23) த்தியஞ் செய்வார் செய்வித்தார் ||.... ......

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.

மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன். பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப்போது எனக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இந்நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள்

என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர்; இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தகசோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம். சோழரின் 77 ஆண்டுக்கால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன. திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழமண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது. கல்வெட்டுப்

பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது. மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.


பேராசிரியர்.சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (3-5) வரும் “ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்” என்ற சொற்றொடரைப் புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார். இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது. இங்கே கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது

ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும். பொலநறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இந்நிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கைமீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது. இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தபோது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன. சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர். இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக்கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெடுப்புகள் மூலம் கலிங்கநாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கரவர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர்பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புப்படுத்தி பேராசிரியர் இந்திரபாலா அவர்களால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கட்டுரையை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை

ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் “திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து” என்ற சொற்றொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில்(காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இது போன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜசோழன் காலத்திலிருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்குத் தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது . அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும். கோமரன்கடவல சிவன்கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்றொடரால் தெரிகின்றது. காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்குச் சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவிலிருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டைப் பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.



கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களைக்

கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்குக் கீழே கோட்டுருவுமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. முதலில் '"ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாயநாரை" எனப் படிக்கப்பட்டதைப் பேராசிரியர் இரகுபதி "ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை" எனப் படித்திருப்பதைப் பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார். இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை "லச்சிகாமபுரம்" என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும். பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் "மாநாமத்துநாடு" என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றைப் பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக்கல்வெட்டில் "பற்று" என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று

என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் "பத்து" என அழைக்கப்படுகின்றது. இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.


இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருந்தது. ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்கவேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும்.



இவ்விடத்தில் இக்கல்வெட்டைப் படிப்பதற்கும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும் உதவிய என் ஆசிரியர்களுக்கும், எனது தொல்லியல் பட்டதாரி மாணவர்களுக்கும், ஆய்விடத்தை அடையாளப்படுத்திக் காட்டியதுடன் எம்முடன் இணைந்து பணியாற்றிய திருகோணமலை நண்பர்களுக்கும் என் நன்றிகள்.

# 6. தொ.பரமசிவனின் அழகர் கோயில்

— அ.முத்து சிவகாமி






பெரியாரியச் சிந்தனையாளரான தொ. பரமசிவன் அவர்கள் பண்பாடு வரலாறு மற்றும் சமயத் துறையில் ஆய்வுகளை செய்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆய்வு வரலாற்றினை கீழிருந்து மேல் நோக்கி ஆராய்வதாகும். வரலாற்றை மக்கள் வாழ்வியலில் இருந்து ஆராய்வதை வானமாமலை அவர்கள் துவக்கிச் செய்து வந்துள்ளார். அவருடைய வழியிலேயே தொ. பரமசிவன் அவர்களும் ஆய்வினை செய்து வந்துள்ளார். அவரது ஆய்வு நூல்கள் தொகுக்கப்பட்டு பண்பாட்டு அசைவுகள், பரண், விடுபூக்கள், தெய்வம் என்பதோர், அறியப்படாத தமிழகம், இந்து தேசியம் முதலான படைப்புகளாக வெளிவந்துள்ளது. அழகர் கோவில் என்பது தொ. பரமசிவன் அவர்கள் முனைவர் பட்ட

ஆய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட உரைகளின் தொகுப்பு. இந்நூலை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.

கோயில் பற்றிய ஆய்வுகள் நாட்டு வரலாற்று ஆய்வாக மட்டுமன்றி சமூக, பண்பாட்டு ஆய்வுகளாகவும் விளங்கும் திறன் உடையன. தமிழ்நாட்டில் கோயில்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை சிறப்புகள், கல்வெட்டு தரும் சிறப்புகளுமே பெரிதும் ஆராயப்படுகின்றன. கே. கே. பிள்ளையின் சுசீந்திரம் கோயில், காஞ்சி கே.வி ராமனின் காஞ்சி வரதராச சுவாமி கோயில் ஆகிய நூல்களும், சி.கிருஷ்ணமூர்த்தியின் திருவெற்றியூர் கோயில் என்னும் அச்சிடப்படாத ஆய்வு நூலும் வரலாறு குறித்த முக்கியமான நூல்கள்.

ஒரு கோயிலுக்கும் அதனை வழிபடும் அடியவர்க்கும் உள்ள உறவு, கோயிலைப் பற்றி சமூகத்தில் வழங்கும் கதைகள், பாடல்கள், வழக்கு மரபுச் செய்திகள், கோயிலை ஒட்டி எழுந்த சமூக நம்பிக்கைகள், திருவிழாக்களில் அவை வெளிப்படும் விதம் ஆகியவை பற்றிய ஆய்வுகள் தமிழ்நாட்டில் பெருகி வளரவில்லை. பினாய் குமார் சர்க்கார் என்பவர் கிழக்கிந்தியப் பகுதிகளில் கொண்டாடப்படுகின்ற திருவிழாக்கள் கஜல், கம்பீரா என்னும் இரண்டு திருவிழாக்களை மட்டும் ஆராய்ந்து இந்துப் பண்பாட்டில் நாட்டுப்புறக் கூறுகள் எனும் ஆங்கில நூலை 1917இல் எழுதினார். இவ்வகையான ஆய்வு நெறி தமிழ்நாட்டில் இன்னும் பிள்ளைப்பருவமாகத் தவழ்ந்த நிலையிலேயே உள்ளது.

அழகர் கோயில் எனும் நூல் இரண்டு வகையான திறனாய்வின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. அவை மதிப்பீட்டு முறை, விளக்க முறை என்பன; மதிப்பீட்டு முறை என்பது தனக்கு முன்பே ஆராய்ந்து வெளிவந்து இருக்கிற ஆய்வுகள் கல்வெட்டு சிற்பங்கள் செப்பேடுகள் மூலம் கிட்டும் செய்திகளை கள ஆய்வு செய்து ஒப்பிட்டு ஒரு முடிவுக்கு வருவது. திரு. ஹட்சன் ஆய்வு, மயிலை சீனி வேங்கடசாமியின் அழகர்கோவில் பற்றிய ஆய்வு வழிகளைத் தமது ஆய்வுப் பயணத்தை நடத்திச் செல்லத் துணையாகக் கொண்டிருக்கின்றார் தொ. பரமசிவன் அவர்கள். விளக்க முறை திறனாய்வு வழியில் ஆய்வாளர் தான் நேரில் கண்டறிந்து

அச்செய்திகளை ஏற்க செய்வது. தொ. பரமசிவன் அவர்கள் கள ஆய்வு செய்த காலம் 1977இல் 1979 வரை. இன்று கோயில் வழக்குகளிலும்,வழிபாடுகளிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கலாம்.

**ஆய்வின் நோக்கம்:**
அழகர்கோயில் மதுரைக்கு வடகிழக்கே பன்னிரண்டு மைல் கல் தொலைவில் உள்ளது.கோயில்கள் வழிபடும் இடங்களாக மட்டும் இருப்பதில்லை. அவை சமூக நிறுவனம். எனவே சமூகத்தில் எல்லாத் தரப்பினரோடும் கோயில் உறவு கொள்கிறது. ஒரு குறிப்பிட்ட கோயிலோடு அரசர்களும் உயர் குடிகளும் கொண்ட உறவினை போலவே எளிமையும் இனிமையும் நிறைந்த அடியவர்கள் கொண்ட உறவும் ஆய்வுக்குரிய கருப்பொருளாக முடியும். அழகர்கோயில் அடியவர்கள், குறிப்பாக நாட்டுப்புறத்து அடியவர்கள் கொண்டுள்ள உறவினை விளக்குகின்றது. அழகர்கோயில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைணவத் திருப்பதிகளில் பழமை சார்ந்த ஒன்றாகும். இந்தக் கோயிலுக்கு மதுரை மாவட்டத்தில் முகவை மாவட்டத்தில் தெற்கு கிழக்குப் பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான நாட்டுப்புற அடியவர்கள் வருகின்றனர். மண்சார் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு உடைய பிரிவினரோடு நிறுவன மயமாக்கப்பட்ட சமயக் கோயில் தெய்வங்கள் கொண்டுள்ள உறவின் தன்மையினை விளக்க முற்படுகின்றது அழகர்கோயில் ஆய்வு.

**அழகர் கோயிலின் அமைப்பு:**
அழகர் கோயிலின் அமைப்பு எனும் முதல் இயலில் கோயிலில் அமைந்துள்ள நிலப்பரப்பின் தொன்மை கோயிலில் கட்டிடங்கள் மண்டபங்கள் முதலியவை கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. கோயிலின் தோற்றம் என்னும் இரண்டாவது இயலில் இக்கோயிலைப் பற்றிய மயிலை சீனி வேங்கடசாமியின் கருத்து மதிப்பிடப்படுகிறது. இக்கோயில் பௌத்தக் கோயிலாக இருந்தது என 1940இல் அவர் வெளியிட்ட கருத்து கோயில் ஆய்வாளர்களால் ஏற்கப்பட்டதும் இல்லை. மறுக்கப்பட்டதும் இல்லை. இவ்வியலில் சீனி வேங்கடசாமியின் கருத்து மதிப்பீடு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கியங்களில் அழகர் கோவில்:**
மூன்றாவது இயலில் இக்கோயிலைப் பற்றிய பரிபாடல் பாட்டு ஒன்றும், ஆழ்வார்களின் பாசுரங்களும், பாசுரங்களுக்கான உரையும் இக்கோயில் மேல் எழுந்த குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி மாலை ஆகிய பலவகைப்பட்ட சிற்றிலக்கியங்களும் ஆராயப்படுகின்றன. மேலும் கோயில் இறைவன் பெயர், மலைப் பெயர், விமானம், தலவிருட்சம் முதலிய செய்திகள் இத்தளம் குறித்த பாசுரங்களில் காணப்படும் பிற மத எதிர்ப்புணர்ச்சி முதலியவையும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

**ஆண்டாரும் சமயத்தாரும்:**
ஆண்டாரும் சமயத்தாரும் என்ற நான்காவது இயலில் ஆய்வாளர்கள் கள ஆய்வில் கண்ட அமைப்புமுறை விளக்கப்பட்டுள்ளது. ஆண்டார் என்பது இக்கோயில் தல குருவாக மதிக்கப்பெறும் பணிப்பிரிவொன்றின் பெயராகும். இப்பணி பிரிவினருக்கு மதுரை முகவை மாவட்ட கிராமங்களில் சமயத்தார் எனப்படும் பிராமணரல்லாத 18 பிரதிநிதிகள் உள்ளனர். இவர்கள் நாட்டுப்புற மக்களை வைணவ அடியார் ஆக்கி ஆண்டவரிடம் சமய முத்திரை பெறச்செய்வர். பெருமளவு சிதைந்து விட்ட இந்த அமைப்பு முறை கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

**கோயிலும் சமூகத் தொடர்பும்:**
அழகர் கோயிலோடு மேலை நாட்டுக் கள்ளர், இடையர், பள்ளர், பறையர் அழகர் கோயிலை ஒட்டிய சிற்றூர்களில் வாழும் வலையர் கொண்டுள்ள உறவு மதிப்பிடப்பட்டுள்ளது.

திருவிழாக்கள் என்ற ஆறாவது இயலில் சித்திரைத்திருவிழா தவிர்ந்த பிற திருவிழாக்கள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சமூக தொடர்புடைய சில திருவிழாக்கள் விரிவாக விளக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. இக் கோயில் சித்திரைத் திருவிழா 7, 8, 9 ஆகிய மூன்று இயல்களில் விளக்கப்படுகின்றது. சித்திரைத் திருவிழாவும் பழமரபுக்கதையும் என்னும் ஏழாவது இயலில் சித்திரைத் திருவிழா நிகழ்ச்சிகள் விளக்கப் பெறுகின்றன.

வர்ணிப்பு பாடல்கள் என்னும் எட்டாவது இயலில், அழகர் கோயில் சித்திரைத் திருவிழாவில் பாடப்பெறும் வர்ணிப்பு பாடல்கள் ஆராயப் பெறுகின்றன. நாட்டுப்புற மக்களால் பாடப்பெறும் இவ்வகை பாடல்களின் தோற்றமும் மதுரை வட்டாரத்தில் அழகர் கோயில் சித்திரைத் திருவிழாவினால் இவை வளர்க்கப்பட்ட செய்தியும் விளக்கப்படுகின்றன.

நாட்டுப்புறக் கூறுகள் என்னும் 9 ஆவது இயலில் இக்கோயில் சித்திரைத் திருவிழாவில் நாட்டுப்புற அடியவர்கள் வேடமிட்டு வழிபடும் முறைகள் காணிக்கை செலுத்துதல் போன்றவை வினா பெட்டி வழியாக பெற்ற செய்திகளைக் கொண்டு விளக்கப்படுகின்றன. கோயில் பணியாளர்கள் என்பது 10 ஆவது இயலில் கோயில் பரம்பரை பணியாளர் பற்றிய ஆவணச் செய்திகளும் நடைமுறைகளும் விளக்கப்படுகின்றன.

பதினெட்டாம்படி கருப்பசாமி என்னும் 11 ஆவது இயலில் இக்கோயிலில் அடைக்கப்பட்ட ராஜகோபுர வாசலில் உள்ள கருப்பசாமி என்னும் தெய்வம் பற்றிய செய்திகள் ஆராயப்படுகின்றன. இக்கோயில் கோபுரம் அடைக்கப்பட்ட செய்தி, கருப்பசாமியின் தோற்றம் முதலிய செய்திகள் ஆராயப்படுகின்றன. முடிவுரை என்னும் இறுதி இயலில் ஆய்வு முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**அழகர் கோவிலின் அமைப்பு:**
அழகர் கோவிலின் அமைப்பு குறித்த ஒரு பூகோளச் சித்திரம். கோவிலின் பெயரே ஊரின் பெயராக கொண்ட இந்தப் பகுதியில் பணியாளர் குடியிருப்புகளைத் தவிர மக்கள் வசிக்கும் ஊர் பகுதி என்று எதுவும் இக்கோயிலை ஒட்டி இல்லை. பிராமணர் கோவில் பணியாளர்கள் கூட தல்லாகுளம் என்னும் ஊர் பகுதியில் வசித்தனர். இந்த அழகர்கோவில் ஊராட்சி மேலூர் வட்டத்தில் அமைகின்றது. இந்நிலப்பகுதியில் தென் கிழக்கிலிருந்து வடகிழக்கு திசை நோக்கிச் செல்லும் ஒரு மலையும் கிழக்கே இருந்து வரும் ஒரு மலையும் சந்திக்கின்ற இடத்தில் தென்திசையில் மலைச்சரிவில் கிழக்கு திசையினை நோக்கியதாக அழகர் கோயில் எனப்படும் கோயில் அமைந்துள்ளது. இதிலிருந்து மக்கள் புழங்காத

மலையடிவாரத்தில் உள்ள கோவில் அழகர் கோவில் என்று அறியலாம். அழகர்கோவில் இரண்டு கோட்டைகள் உள்ளன ஒரு கோட்டை வெளி கோட்டை அழகாபுரி கோட்டை என்று அழைக்கப் படுகின்றது உட்கோட்டை இரணியன் கோட்டை என்றும் அழைக்கப்படுகின்றது. பெரியாழ்வார் மதில் சூழ் சோலை மலை என்று இத்தலத்தினை பாடுகின்றார். அதனால் இக்கோயிலைச் சுற்றி ஒரு மதில் இருந்திருக்க வேண்டும்.

அழகர்கோயிலின் வெளிக் கோட்டை 14ஆம் நூற்றாண்டில் வாணாதிராயர் களால் கட்டப்பட்டிருக்கலாம் என்று இரா நாகசாமி கருதுவர். எனவே ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த பெரியாழ்வார் குறிப்பிடும் மதில் இரணியன் கோட்டை எனப்படும் உட் கோட்டை மதில் ஆகத்தான் இருக்க முடியும். கோவிலின் ராஜ கோபுர வாசல் எப்பொழுதும் மூடப்பட்டு இருக்கும் திறக்கப்படுவது இல்லை. அதன் முன்னர் பக்கச் சுவர்களுடன் கூடிய இரட்டை மரக்கதவுகள் உள்ளன. இவையே பதினெட்டாம்படி கருப்பசாமியாக வழிபடப்படுகின்றன. ஆனால் வருடத்தில் ஒரே ஒருமுறை மட்டும் சக்கரத்தாழ்வார் வைபவத்தின்போது மட்டும் பதினெட்டாம்படி கருப்பசாமி வாசல் இராஜகோபுர வாசல் திறக்கப்படுகிறது. மதிலின் வட எல்லையில் மற்றொரு பகுதியில் மக்களும் இறைவனின் பல்லக்கும் போய் வருவதற்காக வண்டி வாசல் அமைக்கப்பட்டிருக்கும். கருவறை வட்ட வடிவம் கொண்டது. மிகப் பழமையானது புதுக்கோட்டை நார்த்தாமலை விஜயாலய சோழீஸ்வரம் அழகர்கோவில் போன்றே வட்டவடிவக் கருவறையைக் கொண்டது. இறைவனைச் சுற்றி அமைந்த வட்ட சுற்றுக்கான பெயர் நங்கள்குன்றம் என்று அழைக்கப்படும். பெரியாழ்வாரின் பாசுரத்தில் நங்கள்குன்றம் என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது.

கருவறையில் உள்ள இறைவன் திருமால் அழகர் சுந்தரராஜன் என்று அழைக்கப்படுகின்றார். இறைவன் நின்ற கோலத்தில் இருக்கிறார். அவரின் மேல் கைகளிலே சங்கும், சக்கரமும் இருக்கின்றது. கீழ்க்கைகளில் வாளும், கதையும் இருக்கின்றன. ஒரு போர்க்கோல வடிவத்தில் இருக்கின்றார் அழகர். அவர் கையில் இருக்கக் கூடிய சக்கரம் வைணவக் கோயிலில் இல்லாதபடி வித்தியாசமாக இருக்கின்றது. சக்கரத்தைப்

பிரயோகம் செய்யும் நிலையில் பாவனையில் இருக்கின்றார். வெளிக்கோட்டையின் மேற்புறத்தில் ஒரு குளம் இருக்கின்றது. இது ஆராமத்துக் குளம் என வழங்கப் படுகின்றது. சங்கராமம் என்பது பௌத்த பிக்குகள் தொடர்பைக் காட்டுகிறது. இந்தக் குளத்துக்கு வடக்கே ஒரு நந்தவனம் இருக்கின்றது. அது பெரியாழ்வார் நந்தவனம் என்று அழைக்கப்படுகின்றது. இறைவனுக்குத் திருமாலை கட்டித்தரும் பணியில் பெரியாழ்வார் ஈடுபட்டிருந்ததால் கோயில் நந்தவனத்துக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது போலும். அழகர் கோவில் பெருந்தெய்வக் கோயிலாக இருந்தாலும் கிராமத்து மக்களின் வழிபாட்டுத்தலமாகவே நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளை ஏற்றுள்ளது. பெரிய கோவில் சிறு தெய்வ வழிபாட்டினை ஏற்றுக் கொள்வதாகும்.

**அழகர் கோயிலின் தோற்றம்:**

அழகர் கோவில் தோன்றிய வரலாறு கோயிலின் தோற்றம் பற்றிக் கூறுவது. அழகர்கோவில் தோற்றம் குறித்த முதலில் பரிபாடலைக் கொண்டு தொடங்குகின்றார் தொ. பரமசிவன். ஏனென்றால் பழமை வாய்ந்த அழகர்கோவிலில் தோற்றம் குறித்த செய்திகள் கல்வெட்டுகளிலோ, செப்பேடுகளிலோ ஆதிகாலத்துச் செய்திகள் எதுவும் இல்லை. எனவே இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு வழித்தடத்தில் உற்றுநோக்கினால், சங்கப்பாடலில் ஒன்றான பரிபாடல் இக்கோவிலை இருங்குன்றம் என்று அழைக்கின்றது. இந்தக் கோயிலில் திருமாலோடு பலராமனும் வழிபட்ட செய்தியினையும் கூறுகின்றது. ஆழ்வார்களுடைய பாசுரங்களில் இருங்குன்றம் குறித்த செய்தியோ, பலராம வழிபாடு நிகழ்ந்த வழிபாடு செய்தியோ, குறிப்புகளோ காணப்படவில்லை. மயிலை சீனி வேங்கடசாமி கருத்து; அழகர் மலை என்று வேறு பெயர் உள்ள திருமாலிருஞ்சோலை வைணவ திருக்கோயிலில் ஒன்றாக இருந்தாலும் முற்காலத்தில் அது புத்தக் கோயிலாக இருந்திருக்கலாம் என்று கூறுகின்றார்.

பெரியாழ்வார் நந்தவனத்திற்கு எதிரே உள்ள கோவிலின் ஆராமத்துக்குளம் என்று கூறப்படுவது பௌத்தப் பிக்குகள் வசிக்கும் சங்கராமத்தைக் குறிக்கும். இந்தக் கோயிலில் தலவிருட்சம் போதிமரமாக (அரச மரமாக) இருந்து இருக்கின்றது.

ஆகவே பண்டைக் காலத்தில் இக்கோயில் புத்தக் கோயிலாக இருந்திருக்கும் என்று கூறுகின்றார். தமிழகக் கோவில் வரலாற்றில் ஒரு சமயத்துக்கு உரியதாக இருந்த கோயில் வேறொரு சமயத்திற்கு உரியதாக மாறுவதும் வழக்கமே. சிக்கல், கீழ்வேளூர், புதுக்கோட்டை நார்த்தாமலை குடைவரை கோவில்கள் சைவ-வைணவ கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன. ஆராமம் என்பது தமிழ்ச்சொல் இல்லை இது ஒரு பாலி மொழிச் சொல். பௌத்த சங்கத்திற்கு உரிய குளம் உடைய நந்தவனத்தினை இச்சொல் குறிக்கும் என்ற சீனி வேங்கடசாமியின் கருத்துக்கு தொ. பரமசிவன் அவர்கள் உடன்படுகின்றார். ஆராமம் சூழ்ந்த அரங்கம் என்ற தொடருக்கு மற்றைய கோயில்களால் சூழப்பட்ட அரங்கம் என்றும் நாலாயிர திவ்ய பிரபந்த அகராதிப் பொருள் கூறுகின்றது. எனவே ஆராமம் என்ற சொல் தோட்டமும் சோலையும் கோயிலும் இணைந்த ஒரு பகுதி. பௌத்த சங்கத்தை பற்றி எழுதும் உ.வே சாமிநாதையர் ஸ்ரீ பிக்குகளுக்கு ஏதேனும் குற்றம் நேரிடும் ஆயின் அதற்குப் பரிகாரம் நந்தவனத்திற்கு நீரிறைக்கையென்று தெரிகின்றது. இதனைப் பிக்குகளுக்குப் பிழை புகுந்தாற் பிராயச்சித்தம் புத்தர் கோயில் முற்றத்து மணற்சுமக்கை பஷினிகளுக்கு நந்தவனத்துக்கு நீர் இறைத்தல் (நீலகேசி -அருக்கத்தி வாதம் சருக்கம் 25ஆம் பாட்டுரை). எனவே, மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் கூற்றுப்படி குளமுடைய நந்தவனங்கள் புத்தர் கோவிலில் இருந்த செய்தி தெளிவாகிறது.

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் சமணம் பௌத்தம் ஆகிய இரண்டு மதங்களின் செல்வாக்கும் இருந்திருக்கின்றது. பிற சமயங்களின் போராட்டத்திற்கு பின்புதான் வைணவர்களால் அழகர்கோவிலைத் தனதாக்கிக் கொண்டிருக்க முடியும். பரிபாடல் அழகர்கோவில் குறித்து பகைவர்களை வெற்றி கொண்டவன் உடைய இருங்குன்றத்துக்கு பெற்றோரோடும், பிறந்தாரோடும்,உறவினரோடும் செல்லுங்கள் என்பது இப்பாடல் தரும் செய்தி. பிரச்சார நோக்கில் அமைந்த இந்தப் பாடல் மூலம் இருங்குன்றம் சமய போராட்டக் களமாக இருந்தது என்ற குறிப்பும், கோயிலுக்கு மக்கள் ஆதரவைத் திரட்ட வைணவம் முயன்றது என்ற செய்தியையும் நாம் அறிந்து கொள்ளலாம். பகைவர்களிடம் பெரியாழ்வார் அழகர் கோவிலை நங்குன்றம்

என்று உரிமை பாராட்டுகின்றார். வைணவர்கள் பௌத்தர்களிடமிருந்து வெற்றிகொண்டதை உரிமை பாராட்டவே திருமங்கை ஆழ்வாரும், ஆண்டாளும், நம்மாழ்வாரும் உரிமை பாராட்டுகிற பாணியிலேயே நமது கோயில் என்று கூறுகின்றனர்.ஒன்பதாம் நூற்றாண்டு திருமங்கை ஆழ்வார் பாசுரத்தையும் மேற்கோள் காட்டுகிறார்.

அழகர்கோவிலில் வைணவர்களுக்கு எதிராக சமணர்கள் இருந்தார்களா இல்லை பௌத்தர்கள் இருந்தார்களா என்பதைப் பற்றி ஆராய தொ. பரமசிவன் பிராமி கல்வெட்டுகளை ஆராய்கிறார். அதில் சமணர்கள் (அச்சணந்தி முனிவர்) வாழ்ந்தனர் எனும் குறிப்பு காணப்படுகின்றது. எனவே தமிழ் வாழ வைக்கும் முன்னரே வைணவம் பௌத்தர்களை வெற்றி கொண்டுள்ளது எனும் செய்தியை அறிந்து கொள்ளலாம். பிற மதத்தவரை எதிர்க்கும் பொழுதெல்லாம் வைணவர்கள் நரசிம்ம மூர்த்தியை வழிபடுவர்.
அழகர் கோயிலும் நரசிம்ம வழிபாடு தனித்தன்மையுடன் விளங்குவதன் காரணம் புறமத எதிர்ப்பு என்று கூறுகின்றார்.

**இலக்கியங்களில் அழகர் கோவில்:**
சங்க இலக்கியத்தில் பெயர் சூட்டப் பெறும் ஒரே ஒரு வைணவத் தலம் இதுவேயாகும். பரிபாடலில் புலவர் இளம்பெருவழுதியார் தலத்தினை மாலிருங்குன்றம் என்று குறிப்பிடுகின்றார். பரிபாடல் திருமாலுடன் பலராமன் வழிபாடும் உடையது என்று கூறுகின்றது. சிலப்பதிகாரம் இக்கோயில் அமைந்த மலையினைத் திருமால் குன்றம் என வழங்குவதோடு, இக்கோயிலினையும் குறிப்பிடுகின்றது. பூதத்தாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் 108 பாசுரங்களில் இக்கோயிலைக் குறித்துப் பாடுகின்றனர். பூதத்தாழ்வார் அழகர் கோயிலை இருஞ்சோலை மலை என்று குறிப்பிடும் பொழுது மற்ற ஆழ்வார்கள் திருமாலிருஞ்சோலை, மாலிருஞ்சோலை என்று குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்கள் இந்தப் பெயர்களை எல்லாம் தவிர்த்து இன்று வடமொழிப் பெயரைக் கூறுகிறது இம்மலைக்கு மேற்குறித்த பெயர்கள் தவிர பெருவழக்கு பெற்றுள்ள புராணப் பெயர் விருஷபாத்ரி என்பதாகும் ரிச பாத்திரி, இடப மலை, விடை மலை என பல்வேறு

வடிவங்களில் வழங்கும் இப்பெயராலேயே கோயில் தலபுராணம் விருஷ பாதிரி மகாத்மியம் என வழங்கப்படுகின்றது. அழகர் கிள்ளைவிடுதூது, வருமதர்ம தேவன்முன் தவம்புரி வாய்மையால் திருநாமம் இடபாத் திரியெனப் புகல்வார் என்கிறது.

**ஆண்டாரும் சமயத்தாரும்:**
ஆண்டார் என்பவர் கோயிலின் ஆன்மீக அதிகாரத்தை வைத்திருக்கக்கூடிய ஆச்சாரிய பீடத்தில் இருப்பவர்கள். அவர்கள் பிராமணச் சமூகத்தைச் சார்ந்தவர்கள். ஆண்டார் தோழப்பர் என்றும் இரண்டு நிர்வாகத்தினர் தனது அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு செயல்பட்டு இருக்கின்றனர். இந்த நிர்வாகப் பிரிவு இப்பொழுது சிதைந்து அழிந்துவிட்டது என்று கூறலாம்.நிர்வாகத்தினர் இரண்டு பேருமே பிராமணர்களாக இருந்தாலும் அவர்கள் தங்களது அடியவர்களாக (சமயத்தவர்களாக) ஆக எல்லாச் சாதியினரையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆண்டார் பரம்பரை வாக்கில் வருகின்றனர்.தொ. பரமசிவன் அவர்கள் ஆய்வு செய்யும் பொழுது 34வது வாரிசு இருந்துள்ளனர் என்று கூறுகின்றார். சித்திரைத் திருவிழாவின்போது இந்த ஆண்டார்கள் சமயத்தோடு பல்லக்கில் வருவர். இவர்களின் பணி என்று பார்க்கும்பொழுது ஆலயத் தூய்மை, பாசுரங்களை எழுதுதல், தனது அடியவர்களுக்கு முத்திரை ஆசி வழங்குதல் போன்றவை யாதும். ஆரம்பத்தில் பூமாலை கட்டுவது தான் இவரது பணியாக இருந்திருக்கும் என்று தொ. பரமசிவன் அவர்கள் கூறுகின்றார். சமயத்தவர்கள் தங்கள் இனத்தவரை வைணவத்திற்கு மாற்றக்கூடிய ஒரு பணியைச் செய்கின்றனர். அடியவர்கள் தம் சமயத்தாரைச் சந்தித்து அவரிடம் முத்திரை பெறுவர் சமயத்தார் கையாலோ, பூ இதழ்களாலோ குங்குமத்தைத் தொட்டு நெற்றியில் திருமண் குறியிடுவார்.இதற்குப் பூ முத்திரை என்று பெயர். அக்கினி முத்திரை பெரிய முத்திரை என்றும் கட்டி முத்திரை என்றும் வழங்கப்பெறும். இது கோயிலில் மட்டும் நடைபெறு. சங்கு சக்கர அச்சுகளை நெருப்பிலிட்டுச் சுட்டு அடியவர் இரு தோளிலும் வைப்பர் சுட்ட புண் ஆறிய பின்னும் சங்கு சக்கரத் தழும்புகள் அடியவர்கள் சாகும் வரை உடலில் மாறாது இருக்கும்.

தீயிற் பொலிகின்ற செஞ்சுட ராழி திகழ்திருச் சக்கரத்தேதின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு
எனப் பெரியாழ்வார் திருப்பல்லாண்டு இதனைக் குறிப்பர். சமயத்தார்கள் ஆண்டாருக்குக் கோமாளியாகவும் இருந்து தங்களது பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

**கோவிலும் சமூகத் தொடர்பும்:**

அழகர் கோயிலோடு மேலை நாட்டு கள்ளர், இடையர், பள்ளர், பறையர் ஆகியோர் அழகர் கோயிலை ஒட்டிய சிற்றூர்களில் வாழும் பறையர் சாதியார் கொண்டுள்ள உறவு விளக்கி மதிப்பிடப்பட்டுள்ளது. அழகர்கோயில் இறைவன் கள்ளழகர் என்ற பெயரிலேயே இன்று அழைக்கப்படுகின்றார் மதுரைக்குச் சித்திரைத் திருவிழாவிற்கு அவர் பூண்டு வருகின்ற கோலம் கள்ளர் கோலம். தல்லாகுளம் பகுதியில் இந்தக் கோலம் களையப்பட்டு பெருந்தெய்வ வேடத்தைப் புனைந்து கொள்கிறார். கள்ளர் சமூகத்தோடு அழகர்கோயிலுக்கு உள்ள உறவு என்ன என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளக்கூடிய ஓர் இயல் இதுவாகும்.

**கள்ளர் கோலம்:**

ஒரு கையில் வளைதடி எனப்படும் வளரித் தடி, மற்றொரு கையில் வளரித் தடியும் சாட்டைக்கம்பும் ஆண்கள் இடுகின்ற ஒருவகையான கொண்டை, தலையில் உருமால் காதுகளில் அடிப்புறத்தில் கல் வைத்துக் கட்டிய வளையம் போன்று கடுக்கன் இவற்றோடு கங்கன் எனப்படும் ஒரு கருப்பு புடவை சுற்றப்பட்டிருக்கும். கணுக்கால் தொடங்கி இடுப்புவரை அரை ஆடையாகவும், இடுப்புக்கு மேல் ஆடையாகவும் சுற்றப்பட்டிருக்கும் இதுவே கள்ளர் திருக்கோலத்தின் தோற்றமாகும். வளரி என்ற ஆயுதம் கள்ளர் சமூகத்தினர் பயன்படுத்திய ஓர் ஆயுதம். 1801 இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி அதிகாரத்தின் போது இந்த ஆயுதம் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. மதுரை நாயக்கர் அரசு கடைசிவரை வெற்றி கொள்ளாதது கள்ளரைத் தான்.இவர்கள் நாயக்கர் அரசுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தது வரலாற்றில்

உள்ளது. திருமலை நாயக்கர் மட்டும்தான் அழகர்கோயிலையும் மதுரை மீனாட்சி திருவிழாவையும் இணைத்த மன்னர்.

அவர் காலத்துக்கு முன்பிருந்தே கள்ளர்களும் கோவிலுடன் நல்லுறவைப் பேணி வந்திருக்கின்றனர். கள்ளர்களுடன் ஒவ்வாத உறவுள்ள ராணிமங்கம்மாள், விஜயரங்க சொக்கநாத காலத்திலும் கள்ளர் ஆதிக்கம் அதிகமாக செயல்பட்டு அழகர் ஊர்வலத்தை மறிக்கக்கூடிய அளவில் தொடர்ந்து ஆட்சியை எதிர்க்க கூடியவர்களாக வரலாற்றுப் பதிவு உள்ளது என்று தொ. பரமசிவன் அவர்கள் கூறுகின்றார். அதற்குப் பிறகு விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் உடன்பாடு ஏற்பட்டு அழகருக்குக் கள்ளர்களின் கோலத்தைத் தரித்து கள்ளரோடு உறவினைப் பேணி இருக்க வேண்டும். தங்கள் பகுதியிலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் கள்ளர்கள் காவல் என்றொரு அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். அதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் தங்கள் உடமைகள் களவு போகாமல் இருக்க கள்ளரில் ஒரு சிலரைக் காவலராக ஏற்க வேண்டும். அதற்காக வரி கூட இவர்களுக்குச் செலுத்தவேண்டும். கள்ளர் நாட்டு பகுதிகளைக் கடந்து செல்லும் பயணிகளிடமும் அவர்கள் கட்டாயம் வரி வசூலித்தனர். பிற்காலத்தில் ஐரோப்பியர்கள் இடம் கூட இவ்வாறு வசூல் செய்தனர் எனக் கூறுகிறது இந்திய இம்பீரியல் கேசட் டியர்.இது இந்நாட்டின் மிகப்பெரிய போலீஸ் முறையில் எச்சம் என்றும் குறிப்பிடுகின்றது.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பரகாலன் என்னும் திருமங்கை ஆழ்வார் கள்ளர் சாதியைச் சார்ந்தவர். திருமணக்கோலத்தில் மனிதனாய் வந்த திருமாலை வழிமறித்துக் கொள்ளையிட முனைந்த போது திருமால் இவருக்கு திருவடிப்பேறு காட்டி அடியாராக்கினார் என்னும் செய்தியையும் கூறுகின்றார் திருமங்கையாழ்வார். வேடுபறி என்னும் திருவிழா நிகழ்ச்சி பெரிய வைணவ கோயில்களில் நடந்து வருகிறது கள்ளருக்கும் கோயிலுக்கும் இவ்வளவு நெருங்கிய உறவு இருந்தாலும் முத்திரை பெற்ற வைணவ அடியார் ஆகி வைணவ சமய எல்லைக்கும் புகுவதில் இச்சாதியினர் நாட்டம் கொள்ளவில்லை. திருமாலை விடவும் பதினெட்டாம்படி கருப்பசாமி இவர்களின் வழிபாட்டுக்குப் பெரிதும் உரியவராக

விளங்குகின்றார் என்று தொ. பரமசிவன் அவர்கள் கூறுகின்றார். கள்ளர் நாட்டிலேயே கருப்பசாமி பெரிதும் வழிபடப் பெறுகிறார்கள் என்பது ஹட்சனின் கருத்தும் கூட. கிபி 1775 திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் விக்ரகங்களை ஆற்காட்டு நவாபின் படைகளும் ஆங்கிலப் படைகளும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டன. மீண்டும் படைகள் திரும்ப வடக்கு நோக்கிச் செல்லும்போது திருமோகூர் விக்கிரகங்களைக் கள்ளர்கள் கை வசப்படுத்திக்கொண்டு கோவிலில் கொண்டு வந்து சேர்ந்தவர்கள் என்று மதுரை தல வரலாறு கூறுகின்றது. இதன் பயனாக திருமோகூரில் தேர் இழுக்கும் உரிமை கள்ளர்களுக்கே வழங்கப்பட்டது. அழகர்கோயில், திருமோகூர் ஆகிய இரண்டு கோவில்களிலும் கள்ளர் வேடமிட்டு வந்தாலும் அழகர் கோயில் காலத்தால் முந்தையது என்று தொ. பரமசிவன் அவர்கள் கூறுகின்றார். கோயிலும் இடையரும் அழகர்கோயில் இறைவனை வழிபடும் அடியவரின் இடையர் சாதியினரும் ஒருவர்.

வாடா சீர் தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத்து ஆயர்

என்று கலித்தொகை பாடல் இவர்கள் பாண்டியரோடு தோன்றியதாக இச் சாதியினரின் தொன்மையைக் குறிக்கிறது. கோயில்கள் கற்றளிகளாக பெரிய அளவில் தமிழ் நாட்டில் எழுந்த பொழுது இச்சாதியினர் கோயிலோடு கொண்டுள்ள தொடர்பு மிகவும் நெருக்கம் ஆயிற்று. ஏனெனில் கோயிலில் நந்தா விளக்கேற்ற விரும்புபவர்கள் தரும் ஆடு மாடுகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பாண்டியர் கல்வெட்டு இந்தப் பணியாளர்கள் வெட்டிக்குடி என்று அழைக்கப் படுகின்றனர் என்று கூறுகின்றது. தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுகளில் முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வாறு நெய் வழங்க ஒப்புக் கொண்டு ஆடு மாடுகளைப் பெற்ற நூற்றுக்கணக்கான இடையர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

ஒருமுறை அழகர் மதுரைக்குச் சித்திரைத் திருவிழாவிற்காக வந்துகொண்டிருந்தார். வழியில் தல்லாகுளம் மாரியம்மன் கோயில் அருகில் ஓர் இடைச்சி மோர் விற்றுக் கொண்டிருந்தார்.

களைப்பு தீர அவளிடம் மோர் வாங்கி குடித்தார் அழகர். திருவிழா முடிந்து திரும்பும்போது குடித்த மோருக்குக் காசு தருவதாக சொன்னார். ஆனால் திரும்பும்போது கையில் காசில்லாததால் கள்ளர் வேடம் போட்டுக் கொண்டு தப்பியோடி விட்டார்.கள்ளர் வேடக் கதை இது. இந்தக் கதை பிறப்பிற்கு இடையர்கள் கூறும் ஒரு காரணம் உண்டு. அழகரின் கள்ளர் வேடம் கள்ளர்சாதி யாரோடு தொடர்பு கொண்டது. கள்ளர் வேடம் காரணமாக அழகருக்கும் கள்ளர் சாதியாருக்கும் ஏற்பட்ட நெருங்கிய உறவினை வைணவப் பற்றுள்ள இடையர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவே கள்ளர் அழகர் வேடம் போடுவதற்கான காரணத்தினை தங்கள் சாதியுடன் இணைப்பதற்கு அவர்கள் முயன்று இருக்க வேண்டுமென்று தொ. பரமசிவன் அவர்கள் கூறுகின்றார்.

**கோயிலும் பள்ளர் பறையரும்:**

பழங்குடியினராக இருக்கும் பள்ளர் பறையர் இரு சாதியினரும் வயல் வேலை செய்பவர்கள் என்று ஹட்சன் குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் உழுதொழில் செய்வோரின் தெய்வமாக இந்திரனைக் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியத்தில் இந்திர வழிபாடு குறித்த செய்தி இல்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூர் எடுத்த காதையில் இந்திர விழா குறித்த செய்தியை அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் இந்திர விழா அரசரும் வணிகரும் நடத்திய விழாவேயன்றி மருத நில உழவர்களுக்கு அந்த விழாவில் பங்கு இல்லை. சிலம்பின் காலத்திலேயே இந்திர வழிபாட்டில் இருந்து நீக்கிவிட்டனர். விஷ்ணுபுரத்தில் கிருஷ்ணனின் இந்திர எதிர்ப்பும், தமிழகத்தில் பலராம வழிபாட்டின் அறிமுகமும் மருதநிலத்து உள்ளவரை இந்திர வழிபாட்டில் இருந்து கிருஷ்ண வழிபாட்டுக்கு இழுக்கும் முயற்சி பரிபாடல் காலத்திலேயே தமிழகத்தில் தொடங்கி விட்டது என்பதற்குச் சான்றுகள் ஆகும்.

அழகர்கோயில் தான் தமிழ்நாட்டில் பலராம வழிபாட்டின் மையமாகத் திகழ்ந்திருக்கவேண்டும். கலப்பை ஏந்திய பலராமனைக் காட்டி இந்திரவிழா வழிபாட்டினரான அவர்களைத் தன் பக்கம் இழுக்கும் முயற்சியைத் தமிழ்நாட்டு வைணவம் மேற்கொண்டிருக்கிறது. ஆழ்வார் பாசுரங்களில் பலராம

வழிபாடு குறித்த எந்தக் குறிப்பும் இல்லை. ஆழ்வார்களின் காலத்திற்கு முன்னரே இத்தலத்தில் பலராம வழிபாடு கிருஷ்ண வழிபாட்டில் கலந்து மறைந்து விட்டது. தமிழ்நாட்டு வைணவம் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த வரை தம் சமய எல்லைக்கு ஈர்த்துக் கொள்வதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. வைணவ சமய சீர்திருத்தவாதியான ராமானுஜருக்கு முன்னரே ஆளவந்தாரின் மாணவர்களில் ஒருவரான மாறனேரி நம்பி என்பவர் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்தவர். இராமானுசர் அந்நெறியைத் தொடர்ந்தார். தாழ்த்தப்பட்டவரைச் சக மனிதராக பாவித்து அவர்களோடு தோழமை பூண்டது தமிழ்நாட்டு வைணவத்தின் சிறப்பு என்றாலும் தென்னிந்தியாவில் பிராமணர் வருகைக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆக கருதப்படும் இவர்கள் பிராமணர்கள் பெற்றிருந்த இடத்தைப் பெற்று இருந்தனர். அவர்கள் நில உடைமையாளர் ஆகவும் அரசர்களுக்கும் ஆலோசனை வழங்குபவராக சமயத் தலைவர்களாகவும் முதன்மை பெற்றவர்களாக திகழ்ந்தனர். அவர்களின் உயர்வு குறித்த தொல்லெச்சங்கள் நம்மிடையே இன்றளவும் காணப்படுகின்றன. மதுரை கள்ளர்களே தெய்வ வாக்கு சொல்பவராகவும் இருந்தனர்.

திருவாரூர் கோயில் திருவிழாவில் ஒரு பறையர் யானை மீதேறி வருவதையும், சென்னை வாணிக சாதியினரில் தன்னுடைய வீட்டுத் திருமணத்திற்கு அவர்களிடம் அனுமதி பெறுவதையும் மாரியம்மன் கோயில் - பறையர்கள் கோயில் மணமகனாக இருப்பதையும், கேரளத்தில் பகவதி கோயில்களில் ஆரியப் பிராமணர்கள் வருகைக்கு முன்னர் பகவதி கோயில்களில் அவர்களே பூசை செய்பவராக இருந்திருக்க வேண்டும் என்று கோபாலகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். தொ. பரமசிவன் அவர்கள் பார்ப்பானுக்கும் பறையன் மூப்பு. பறையன் கேட்பார் இல்லாமல் கீழ்சாதி ஆனான் என்னும் சொலவடை தென் மாவட்டங்களில் பெருக வழங்குகின்றது என்று கூறுகின்றார். இந்த வழக்கு மரபு அவர்கள் பெற்றிருந்த உயர்ந்த இடத்தை உணர்த்துகின்றது. உயர்ந்த நிலையிலுள்ள பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து கேள்வி கேட்டதால் சாதி அடுக்குகளிலிருந்து அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். பின்னுக்குத் தள்ளப்பட்டன அவர்களின் உரிமையை வலியுறுத்த

எவரும் இல்லாத காரணத்தால் கோவிலில் நுழைவதற்குக் கூட அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன. அழகர்கோயிலில் , பறையர் கொண்ட ஈடுபாடு அவரிடமிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட பரிவட்டம் மரியாதை கூடத் தொல்லெச்சங்களில் ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்கிறார்.

**கோயிலும் வலையரும்:**

அழகர் மலையை ஒட்டிய கிராமங்களில் கள்ளர் சாதியினரை அடுத்து வலையர் என்னும் சாதியினர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர் தங்களுடைய அழகர்சாமி மற்றவர்கள் பறித்துக் கொண்டார்கள் என்ற கோபம் இச் சாதியினருக்கு இருக்கிறது. கோயிலோடு இவர்கள் கொண்டுள்ள தொடர்பை வரலாற்றுப் போக்கில் அறிய வேறு நடைமுறை சான்றுகள் இல்லை. ஒரே ஒரு எழுத்து சான்று மட்டுமே கிடைத்துள்ளது. 1591 இல் வெள்ளியங்குன்றம் ஜமீன்தார் திருமலைநாயக்கர் வழங்கிய பட்டயம். அழகர்கோயில் தங்கள் சாதியினருக்கு உரியது எனும் நோக்கில் ஒரு கதையை அவர்கள் தங்களுக்குள் வழங்கிக் கொள்கின்றனர். மலையடிவாரத்தில் கிழங்கு தோண்டும் பொழுது வலையன் ஒருவனால் கண்டெடுக்கப்பட்டது தான் அழகர்சாமி. போர்க் குணம் நிறைந்த வலிமை படைத்த கள்ளர்களை ஏற்றுக்கொண்ட அழகர்கோயில் உலகியல் அறிவு குறைந்த வலிமையற்ற அவர்களை எளிதாகப் புறம்தள்ளியது என்று கூறுகின்றார் தொ. பரமசிவன்.

**திருவிழாக்கள்:**

கோயிலுக்கும் சமூகத்திற்குமான உறவைக் காத்தும் வளர்த்தும் மறுவினை திருவிழாக்கள் திருவிழாக்கள் தொலைவில் உள்ள மக்களையும் ஈர்த்து நல்லுறவை வளர்க்கும் ஆற்றல் மிகுந்தவை சமூக தொடர்புடைய திருவிழாக்கள் சமூக தொடர்பு இல்லாத திருவிழாக்கள் என்று இரு வகையான விழாக்கள் கொண்டாடப்படுகின்றன சித்திரைத்திருவிழா கோயிலுக்கும் சமூகத்திற்குமான தொடர்பு வாயில்களாக அமைந்து சுற்றுவட்டார மக்களை ஈர்க்கும் தன்மை உடையவையாக விளங்குகின்றன.

**முடிவுரை:**

கோயில் பற்றிய ஆய்வுகள் நாட்டு வரலாற்றாய்வாக மட்டுமன்றி சமூகத்தின் பண்பாடுகளை விளக்கக்கூடிய திறமுடையன என்பதை அறிந்து இனி வரும் இளம் ஆய்வாளர்கள் கோயில்கள் குறித்த ஆய்வுகளில் வெறும் கட்டிடக்கலை சிற்பக்கலை சிறப்புகளை மட்டுமே ஆராய்வதைத் தவிர்த்து கோயிலை ஒட்டி எழுந்த சமூக நம்பிக்கைகள் திருவிழாக்கள் சமூகத்தில் உள்ள அடியார்களுடைய உறவுகள் ஆகியவற்றை விளக்கக்கூடிய வகையினில் தொ.பரமசிவன் அவர்களின் இந்த ஆய்வின் அடிப்படையில் இன்னும் பல்கிப் பெருக வேண்டும் என்பதே இந்த ஆய்வின் நோக்கம் ஆகும்.

அ.முத்து சிவகாமி,
மகாலட்சுமி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## 7. தமிழகத்தின் சிற்பக்கலையும் ஆடற்கலையும்

— கி. ஸ்ரீதரன்

மனிதன் படைத்த அற்புதமான கலைகளில் ஒன்று சிற்பக்கலை. மனித நாகரீகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் முக்கியமானது சிற்பக்கலை.

தமிழ்நாட்டின் தொன்மை வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகிறது. கண்ணால் கண்ட உருவங்களையும், கற்பனை உருவங்களையும் சிற்பங்களாக வடிவமைத்து சிலைகளாக வடித்தனர். சிற்பங்கள் கல், மண், மரம், செம்பு, செங்கல், தந்தம், மெழுகு ஆகியவை கொண்டு வடிக்கப்பட்டன. கல்லில் கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக்கல் என்பனவும் உலோகங்களில் பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு ஏற்றனவாகக் கருதப்பட்டன.

திருக்கோயில்களில் வழிபாட்டிற்குரிய சிற்பங்களை வடிக்கும்பொழுது தேர்ந்தெடுக்கப்படும் கற்களை சிற்பிகள் நன்கு பரிசோதித்து எடுப்பார்கள். மலைகள், நதிக்கரை, பால்மரத்தடி, வனங்கள் ஆகியவற்றில் கிடைக்கும் கற்கள் சிறப்பானவை. மேலும் அதன் நிறத்தை கொண்டும் வகைப்படுத்துவர். கற்களில் ரேகை, புள்ளிகள் இல்லாதவாறு தேர்ந்தெடுப்பர். கற்களின் வலிமை - உறுதியைக் கொண்டு ஆண் கல், பெண் கல், (அலிக்கல்) வலிமையற்ற கல் எனவும் வகைப்படுத்தி சிற்பிகள் சிற்பங்களை வடித்தனர்.

**விசிறிப்பாறை:**
வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே கல்லிலே சிற்பம் வடிப்பதை தமிழர்கள் உணர்ந்திருந்தனர். விழுப்புரம் அருகில் உடையாநத்தம், திருவண்ணாமலை அருகில் மோட்டூர் என்ற இடத்திலும் பறவை போன்ற அமைப்புடைய கல்லாலான சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை "விசிறிப்பாறை'



என மக்கள் அழைக்கின்றனர். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பெருங்கற்கால சிற்பங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. தாய், தெய்வ வழிபாட்டிற்கு இச்சிற்பங்கள் முன்னோடி என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

**நடுகற்கள்:**



இதற்கு பின்னர் வரலாற்றுக் காலமாகிய சங்ககாலத்தில் போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு மற்றும் ஊருக்கு ஏற்படும் துன்பங்களைப் போக்க போரில் இறந்த வீரர்களின் நினைவாக எடுக்கப்பட்ட கற்கள் "நடுகற்கள்' எனப்படும். அக்கல்லில் வீரனது உருவத்தைச் செதுக்குவர். அதற்கு அடியில் வீரனின் பீடும், பெயரும் பொறிப்பர் என சங்ககால இலக்கியச்

செய்திகள் கூறுகின்றன. இத்தகைய நடுகற்கள், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றை இன்றும் மக்கள் போற்றி வழிபாடு செய்கின்றனர். வேடியப்பன் என அழைத்து போற்றுகின்றனர்.

**பல்லவர்:**

பல்லவ மன்னர்கள் காலத்திலிருந்து கல்லிலே தான் கோயில்கள் அமைக்க தொடங்கிவிட்டனர். கட்டடக்கலையும் சிற்பக்கலையும் வளர்ச்சி பெற்றன. பல்லவர்கள் குடைவரைக்கோயில், ஒற்றைக்கல் கோயில்களை பாறைகளைச் செதுக்கி அமைத்தனர். கட்டடக் கோயில்களையும் எழுப்பினர்.



பல்லவன் மகேந்திரவர்மன் எழுப்பிய குடைவரைக் கோயிலில் உள்ள முதல் ஆடவல்லான் புடைப்புச் சிற்பம், சீயமங்கலம், திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம்

குடைவரைக் கோயில்களில் சுவர்களில் (தாய்ப்பாறைகளில்) சிற்பங்களை அமைத்தனர். இதற்கு புடைப்புச் சிற்பங்கள் எனப் பெயர். மண்டகப்பட்டு, தளவானூர், வல்லம், திருச்சிராப்பள்ளி, மாமண்டூர், மாமல்லை போன்ற பல இடங்களில் குடைவரைக் கோயில்களைக் காணலாம்.



சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில் சிற்பக்கலை மேலும் வளர்ச்சி அடைந்தது. சுவரில் இருந்து வெளிவரும் புடைப்புச் சிற்பங்களும் முன்புறம் பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களையும் அமைத்தனர். இவ்வகை முழு வடிவ சிற்பங்களும் திருக்கோயில்களில் இடம்பெற்று வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உற்சவத் திருமேனிகளும் முழு வடிவ சிற்பங்கள் ஆகும்.

**சிற்பிகள்:**

அழகுமிக்க சிற்பங்களை கல்லிலே வடிக்க திறமையான சிற்பிகள் இருந்தனர். பல்லவ மன்னர்கள் காலத்தில் இருந்து நாயக்க மன்னர்கள் காலம் வரை சிற்பங்களை, திருக்கோயில்களை அமைத்த சிற்பிகள் பற்றிய கல்வெட்டுகள் மற்றும் அவர்களது சிற்ப வடிவங்களையும் பல கோயில்களில் காண முடிகிறது. இவர்கள் பண்டைய சிற்ப நூல்களின் அடிப்படையில் அழகு மிக்க சிற்பங்களை கல்லிலே வடித்தனர்.

**ஆடற்கலை இலக்கணம்:**

தமிழ்நாட்டுச் சிற்பங்களின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலை இலக்கணங்கள். அவற்றில் அளவாய் அமைந்துள்ள நிலையாகும். சிற்பம் - ஆடற்கலை இரண்டுமே திருக்கோயில்களில் போற்றி வளர்க்கப்பட்டன. சிற்ப வடிவங்கள் நின்ற வடிவில் காட்சி அளித்தாலும், அமர்ந்திருந்தாலும்,

புராணக்கதைகளை எடுத்துக்காட்டும் வகையில் தோன்றினாலும், அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்துடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

உதாரணமாக சிவபெருமான் காலனைக் கடிந்த நிலையிலும், ஆனை உரித்த எம்பிரானாகக் காட்சித்தரும் போதும் அச்செய்கை ஆடற்கலை இலக்கணத்தை நினைவூட்டும் வகையில் அமைந்திருக்கும். இச்சிற்பங்களை சிற்பிகள் வடிக்கும்பொழுது ஆடற்கலை இலக்கணத்தை நன்கு அறிந்து கலை உணர்வு கலந்து அமைத்ததால் கலை அழகுடன் அவை காட்சி தருகின்றன. மேலும் சிற்பிகளின் திறமையையும் எடுத்துக்காட்டுகின்றன.

**தமிழகச் சிற்பங்கள்:**
தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் மாமல்லபுரம் சிற்பங்கள், பாண்டியர் கால கலைப்படைப்புகள், திருவரங்கம், மதுரை, திருநெல்வேலி, தென்காசி, தாடிக்கொம்பு போன்ற பல திருக்கோயில்களில் காணப்படும் விஜயநகர நாயக்கர் காலச் சிற்பங்கள் அமைந்துள்ளன.

சோழ மன்னர்கள் காலத்தில் புள்ளமங்கை, குடந்தை நாகேசுவரர் சுவாமி கோயில் சிற்பங்கள், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் ஐராவதீசுவரர் திருக்கோயில் போன்றவை சோழர் கால சிற்பக் கலையின் உயர்ந்த நிலையை எடுத்துக் கூறுகின்றன.

மேலும் தமிழகச் சிற்பக்கலை மராட்டிய மன்னர்கள், மற்றும் செட்டிநாட்டு கோயில்களில் மிகச் சிறப்புடன் விளங்குவதையும் காணமுடிகிறது.

தமிழர்களின் சிற்பக்கலை தொடர்ந்து பல சிற்பிகளின் கைவண்ணத்தைக் திறமையினாலும் தொடர்ந்து சிறப்பு பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றதையும் காணமுடிகிறது. தமிழகம் பெருமை கொள்கிறது.

# 8. வீரமாமுனிவரின் பாடல்களும் வரலாற்றுத் தரவுகளும்

— முனைவர் ஆனந்த் அமலதாஸ்

இலக்கியத்தை ஒரு வரலாற்று நூலாகவும் வாசிக்கலாம்; இலக்கியத்தை இலக்கியமாக மட்டும் பார்க்காமல் அதை ஒரு வரலாற்று நூலாகவும் வாசிக்க வேண்டிய நிலை தற்சமயம் உருவாகியுள்ளது. அது ஒரு தேவையாகவும் மாறிக்கொண்டிருக்கிறது. ஏனெனில், இலக்கியம் ஒரு கற்பனையின் புனைகதை மட்டும் அல்ல. அது ஒரு வரலாற்றுச் சூழ்நிலையில் எழுகின்றது. அந்தப் படைப்பின் ஆசிரியர் வரலாற்றுத் தரவுகளைத் தொடாமல் அல்லது தொடர்பில்லாமல் எதையும் எழுதவோ பாடவோ முடியாது. அந்தப் பாடல்களில் வரும் உவமைகள், சொல்லாடல்கள், சுற்றுச்சூழல் பற்றிய தொகுப்புக்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலநிலையைச் சுட்டிக்காட்டும் என்பது தெரிந்ததே. ஆசிரியர் சொல்லும் கதை மட்டும் அல்ல, அவர் கையாளும் மொழியும் அவரைக் கண்ணாடிபோல் காட்டிக் கொடுக்கும். அதனால் இலக்கியத்தில் வரலாற்றுத் தரவுகளைத் தேடுவது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு வழிமுறைதான்.

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்து பணிபுரிந்த வீரமாமுனிவர் பல நூல்களைத் தமிழில் படைத்துள்ளார். அவர் எழுதிய காப்பியத்தை, கலம்பகத்தை, அம்மானையை அலசிப்பார்த்து அங்குக் காணும் வரலாற்றுத் தரவுகளைத் தேடுதல்தான் இதன் நோக்கம்.




தேம்பாவணி வீரமாமுனிவர் எழுதிய முக்கியமான நூல். 36 படலமாகப் பிரித்து, 3615 பாடல்களோடு அமைந்த ஒரு காப்பியம். விவிலியத்தில் வரும் வளனாரை (சூசையை/Joseph) காப்பியத் தலைவனாகக் கொண்டது. இறுதிப்  படலத்தில் சூசையின் முடி சூட்டுதலோடு காப்பியம் முடிவு பெறுகிறது. இங்குத் திடீரென ஆஸ்திரியப் பேரரசர் லியோபோல்டு (Leopold I, Holy Roman Emperor) பற்றிக் குறிப்பிடுகிறார். லியோபோல்டுவின் ஆட்சியில் (1658 -1705) துருக்கியரோடு (ஓட்டோமன் பேரரசு) நடந்த போரில் லியோபோல்டு வெற்றி பெற்றதால் ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறித்தவ உலகம் அவரை இலக்கியத்திலும், ஓவியங்களிலும், பாடல்களிலும் பாராட்டிச் சிறப்புச் செய்தனர்[1].  போர் முடிந்த பிறகு லியோபோல்டு ஆஸ்திரிய நாட்டை புனித வளனாருக்கு அர்ப்பணிக்கிறார்.

வீரமாமுனிவர் அவரைத் தமிழ் அரசர்க்குரிய மரபோடு அறிமுகப்படுத்துகிறார்.

> அயப் போது அலர் வேலி அணிந்து, அழியா
> நயப்பு ஓகை ரோமையின் நாடு இனிது ஆள்,
> வியப்போடு வணங்கு இகல் வெம் படை வெல்,
> லெயு போல்து எனும் நாம வெள் வேல் இயலான்.  [2]
> (தேம்பாவணி: முடிசூட்டு படலம், 36, 50)

ஆஸ்திரிய அரசருக்கும் தமிழகத்திற்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி எழுகிறது. இங்கிலாந்தின் “ஈஸ்ட் இண்டியா கம்பெனி” போல ஆஸ்திரியாவும் நெதர்லாந்தும் சேர்ந்து ஒரு வணிகத்துறை தொடங்கியது (ஓஸ்டென்ட் கம்பெனி). ஆஸ்திரியக் கப்பல் மெட்ராஸ் துறைமுகத்தில் இரண்டு ஆண்டுகள் தங்கித் தமிழகக் கடற்கரைப் பகுதியில் வணிகம் நடத்தி வந்தது. (1722-1724) [3].

அப்பொழுது வீரமாமுனிவர் பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள கோணாங்குப்பத்தில் தங்கியிருந்து தேம்பாவணி காப்பியம் எழுதியதாக வரலாறு கூறுகிறது. அப்படியானால் வீரமாமுனிவர் ஆஸ்திரியக் கப்பலைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். அது அவருக்கு அரசன் லியோபோல்டுவை நினைவுக்குக் கொண்டு வந்திருக்கலாம். இதுதான் காரணம் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. ஆனால் இந்த வரலாற்று நிகழ்வுக்கும், தேம்பாவணியில் லியோபோல்டுவுக்கு இடம் கொடுத்தற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும் சொல்லவும் முடியாது. இது இன்னும் ஆராய்ச்சிக்குட்படுத்த வேண்டிய ஒரு வரலாற்றுத் தரவு.

**தரங்கம்பாடியாருக்கும் வீரமாமுனிவருக்கும் இடையே எழுந்த பூசல்:**

வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சியில் இருந்து பணி செய்த போது தரங்கம்பாடியார் விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார்கள். அவர்களது மொழிபெயர்ப்பை வீரமாமுனிவர் குறைகூறினார். இருவர்களுக்கிடையே இருந்த வேறுபாடுகளைக் கோட்பாட்டளவில் விமர்சனம் செய்தார்.

இவ்வாறு இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட பூசல்கள் முனிவரின் படைப்பைக் கணிக்கும் முறையிலும் காணலாம். எடுத்துக்காட்டாக பெரிய அறிஞரான கால்டுவெல் கூட ஒருதலைப்பட்சமாக முனிவரை மதிப்பிடுவதைக் காணலாம். கால்டுவெல் ஒருபக்கம் வீரமாமுனிவரின் படைப்பைப் பாராட்டுகிறார். ஆனால் அடுத்த நொடியிலேயே தேம்பாவணியைக் கடுமையாக விமர்சிக்கின்றார். "இந்து மக்களோடு இணக்கமாய் வாழவிரும்பி விவிலிய வரலாற்றைச் சிதைத்து விட்டார், அதாவது, இந்துமய மாக்கிவிட்டார்" என்பது அவரது தீர்ப்பு [4]. வீரமாமுனிவர் விவிலிய வரலாறு எழுத தமிழகம் வரவில்லை. விவிலியத்தில் வரும் ஒருவரை மையமாக வைத்து ஒரு காப்பியம் படைக்கின்றார். மில்ட்டனும் (பாரடைஸ் லாஸ்ட்) தாந்தேயும் (டிவைன் காமெடி) விவிலிய வரலாற்றைச் சிதைத்ததாக குறை சொல்லாதவர்கள் வீரமாமுனிவரை மட்டும் ஏன் இவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்யவேண்டும் என்பதற்குப் பதில் தெரியவில்லை.

வீரமாமுனிவர் பயிற்சி கொடுத்த வேதியர்களில் பலர் தரங்கம்பாடியருடன் சேர்ந்து விட்டனர். இது அவருக்குப் பெரிய வேதனையாகவும்; ஏமாற்றமாகவும் இருந்தது. இத்தகைய பூசல் வீரமாமுனிவர் அன்னை மரியாளைப் பாடும் முறையிலும் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது கவனத்திற்குரியது. பல பூக்களில் தேன் குடிக்கும் தேனீக்களைப் பார்த்து ஒரு கேள்வியை வைக்கிறார். திருக்காவலூர் பூஞ்சோலையில் உள்ள தேனுக்கு ஈடாக வேறெங்கும் உண்டோ என்று கேட்பது போல் அமைந்துள்ளது. யாரையோ கேட்க வேண்டிய கேள்வியைத் தேனீக்களிடம் கேட்கிறார். இதற்குத் தேனீக்கள் பதில் சொல்ல முடியாது. வரலாற்று ஆசிரியர்கள் பதில் சொல்ல வேண்டும்.

தரங்கம்பாடி சென்று மதமாறியவர்களுள் பலர் திரும்பிக் கத்தோலிக்கச் சபைக்கு வந்துவிட்டதாகவும் வரலாறு கூறுகிறது. அவர்களை இவ்வாறு கேட்பதுபோல் அழகாய் அமைந்துள்ளது இப்பாடல். திருக்காவலூர் கலம்பகம் (23):

> காந்தள்கை கஞ்சத்தாள் காவிக்கண் ஆம்பல்வாய்
> வேய்ந்தலர்ந்த காவலூர் மென்கொடியே – ஈய்ந்தமது
> வுண்ணளிகாள் சொல்மின் நீர் ஒத்துளதோ பூவுலகிற்
> பண்ணளிபூந் தீந்தேன் பனித்து.
> (திருக்காவலூர் கலம்பகம் -23) [5]

**தமிழ் இலக்கியத்தில் 'ஆரிய' என்ற சொல்லின் பின்னணி:**

'ஆரிய' என்ற சொல் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரிய சர்ச்சைக்குரியது. இந்தச் சொல் சங்க இலக்கியத்திலேயே எட்டு முறை இடம் பெறுகிறது (எடுத்துக்காட்டு: 'எதிர் தலைக்கொண்ட ஆரியப் பொருநன்' - அகம் 386/5). பக்தி இலக்கியத்திலும் கூட சில இடங்களில் காணலாம். சித்தர் பாடல்களில் வரும் இச்சொல் கேலியாகத்தான் வருகிறது. "ஆரியக் கூத்தாடி" என்ற சொல்லாடல் அதைத் தெளிவு படுத்துகிறது.இருப்பினும் கம்பன் காப்பியத்தில் பல முறை வருவதில் வியப்பு இல்லை. ஏனெனில் கம்பன் சொல்லும் கதையே வடநாட்டுக்கதை.

வீரமாமுனிவரும் தேம்பாவணியில் ஆரிய என்ற சொல்லைப் பலமுறை பதிவு செய்கிறார். அதுவும் பெருமைக்குரிய, உயர்குலத்தைச் சார்ந்த என்ற பொருளில் இந்தச் சொல் இடம் பெறுகிறது. பாயிரத்தின் தொடக்கத்திலேயே "ஆரிய வளன்" என்று சூசையை அறிமுகப்படுத்துகிறார். மீண்டும் பாயிரத்தின் இறுதிப்பாடலில் "ஆரியனூரில் தேம்பாவணி எனப் பிணித்தல் செய்வோம்", என்று பதிவு செய்துள்ளார். இதை வரலாற்றுத் தரவாகப் பார்க்க வேண்டிய தேவை எழுகிறது. அப்பொழுது அவர் தங்கியிருந்த இடம் கோணாங்குப்பம். அந்த ஊருக்கு ஆரியனூர் என்று பெயர் இருந்ததாக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று ஆர். பாலகிருஷ்ணன் (ஐ.ஏ.எஸ்) பதிவு செய்கிறார்.

அந்தப்பகுதியில் வாழ்ந்த - இன்னும் வாழ்கின்ற - மக்கள் வன்னியர் குலமரபைச் சார்ந்தவர்கள். அவர்கள் வாழும் மற்றைய பகுதிகளிலும் ஆரியனூர், ஆரியங்காவு (விழுப்புரம் அருகில்), ஆரியநல்லூர் (திண்டுக்கல்லுக்கு அருகில்) என்ற பெயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் தங்கள் இனத்தின் பெருமையைச் சுட்டிக்காட்டும் வகையில் இப்பெயர் எழுந்ததாக ஒரு வரலாறு கூறுகிறது. இதுவும் ஆராய்ச்சிக்கு உட்பட வேண்டிய தரவு.[6]

**கித்தேரி அம்மாள் அம்மானையில் வரலாற்றுக் குறிப்பு:**
வீரமாமுனிவர் தேம்பாவணி காப்பியம் எழுதிய பிறகு, சாதாரண மக்கள் புரிந்துகொள்ளும் அளவில் நாட்டுப் புற மரபில் அம்மானை பாடல் ஒன்று எழுதுகிறார். 1716 - ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையில் புனிதராக உயர்த்தப்பட்ட கித்தேரியின் வாழ்வை மூலமாக வைத்து எழுதப்பட்ட அம்மானைப்பாடல். கித்தேரி 130 ஆம் ஆண்டு போர்த்துகல் நாட்டில் அவளது தந்தையாகிய அரசன் காயனால் தலையைக் கொய்து கொலை செய்யப்பட்டாள். கித்தேரி அவள் தந்தையின் சொற்படி கிறித்தவ நம்பிக்கையைக் கைவிடவும், திருமணம் செய்யவும் மறுத்ததால் அவளுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் கதையை மையமாக வைத்து 1100 அம்மானைப் பாடல்களும் 38 விருத்தப்பாடல்களும் உள்ளடங்கிய ஒரு

பாமாலையாக, அணிகலமாக வீரமாமுனிவர் கித்தேரிக்கு அளிக்கின்றார். இதன் நோக்கம் புனித கித்தேரியைப் போல கிறித்தவ நம்பிக்கையில் மக்கள் திடமாக இருக்க வேண்டும் என்பது. ஏலாக்குறிச்சியில் அவர் வாழ்ந்த காலம் என்பது, மராட்டிய ஆட்சியாளர்களிடம் இருந்து ஒரு பக்கம், தரங்கம்பாடியாரிடம் இருந்து மறு பக்கம் எனப் பெரிய நெருக்கடியைச் சந்தித்த காலக்கட்டம். அதனால் புனித கித்தேரியம்மாள் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, துன்புறும் நேரத்தில் நம்பிக்கை இழக்காமல் இருக்கப் பாதுகாவலாகவும் முன்வைக்கப்பட்டாள்.

இது நாட்டுப் புறப்பாடலாக இருந்தாலும் பல வரலாற்றுத் தரவுகளை உள்ளடங்கியது. எடுத்துக்காட்டாக இந்தப் பாடலில் போர்த்துக்கல் நாட்டு அரசன் ஐந்தாம் ஜான் என்பவரை அறிமுகப்படுத்துகிறார். "அருள் ஏந்தும் நாமம் உடை ஐந்தாம் கோன் ஆங்கு உதிப்பான்." (9, 33). அவர் 1706 முதல் 1749 வரை போர்த்துக்கல் நாட்டில் ஆட்சி செய்தவர். அப்பொழுது போர்த்துக்கீசியர் தமிழகத்தில் சந்தா சாகிப்போடு சேர்ந்து ஆட்சி புரிந்தனர். சந்தா சாகிப்பின் தோல்விக்குப் பிறகு அரசியல் சூழ்நிலை தமிழகத்தில் மாறியது.

தேம்பாவணியில் ஆஸ்திரிய அரசன் லியோபோல்டுவை வீரமாமுனிவர் அறிமுகம் செய்தார் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். இங்கு போர்த்துக்கல்லின் அரசரைப்பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. இதன் உள்நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் கிறித்தவத் தமிழ் இலக்கியத்தில் இத்தகைய வரலாற்றுத் தகல்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வீரமாமுனிவர் கிறித்தவ மறைப்பணி செய்ய தமிழகம் வந்தவர். ஒருவேளை கிறித்தவத்திற்குச் சாதகமான ஓர் அரசன் இங்கு ஆட்சிக்கு வருவான் என்று கனவு கண்டிருக்கலாம். ஐரோப்பாவில் லியோப்போல்டு கிறித்தவ அரசனாய் இருந்தது போல, ஐந்தாம் ஜான் போர்த்துக்கல் நாட்டில் கிறித்தவத்தை நிலைநாட்டியது வரலாறு. கித்தேரியம்மாள் அம்மானையில் வரும் சில வரிகள் இதற்குச் சான்றாக உள்ளன. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கித்தேரியை மையமாகக் கொண்ட பாடலில் லூசித்தானிய நாடு

கிறித்தவ நெறிக்கு வரும் என்று முன்னறிவிப்பாக அமைந்துள்ளது. “அந்நாடு என் நாடாக ஆளும் முதற்கோன் அவனே” (9, 23) என்று பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேம்பாவணியில் இத்தாலிய நாட்டு வருணனை, புரோகிதப்படலம்:
தமிழ் இலக்கியத்தில் முதன் முறையாக இத்தாலிய நாட்டு வருணனை இடம் பெறுகிறது. தமிழ் மரபிற்கேற்ப அதை வீரமாமுனிவர் பதிவு செய்கிறார்.

“செல் நாகம் நீர் பொழியத், தேன் பொழியும் புன்னாகம் திருவின் பூப்ப,
கல் நாகம் நீர் உமிழக், கவி நாகம் வெருண்டு அஞ்ச, கல் ஊடு ஊர்ந்த
கொல் நாகம் ஒப்ப மணி கொழித்து அருவி பாய்ந்து ஓடக், கொழுஞ் செய் வாய்ப்ப,
பொன் நாகம் ஒப்ப வளர் புகழ் இத்தாலிய நாட்டுப் பொலிவு இது அன்றோ. (32, 22)

“விரைவாய்ப் பூந்தாழை உலாம் வெள்வளை ஈன்ற
பூவயல் ஊர்ந்து மிளிர் முத்து ஈன்ற
கரை வாய்ப் பூஞ் சுனை பூப்பக், கனி யாழ் வண்டு இமிர்ந்து,
ஒகரம் களி கூர்ந்து ஆடும்
சுரை வாய்ப் பூம் பொழில் காய்ப்ப, ஈர் அறமும்
முச் சீரும் சுகம் ஓர் ஏழும்
நிரை வாய்ப் பூங் குடியாக நிமிர்
இத்தாலிய நாட்டு நிலை இது அன்றோ. (32, 23)

“பொருள் ஈன்ற பெருஞ் செல்வப் பொலிவு ஒழிக்கும் வளம் புணரப் புகன்ற நாடு,
மருள் ஈன்ற அவா ஒழிப்ப வையகத்தில் நான் உதித்து, மறை என்று ஓதும்
தெருள் ஈன்ற நூல் ஒருங்கே திரு விளக்கு என்று ஏற்றி, எலாத் திக்கும் தானே
அருள் ஈன்ற விளக்கு ஆகி, அவனி எலாம் ஆளும் இத்தாலிய நாடு அன்றோ.(32, 24)

**வீரமாமுனிவரும் சமத்துவ நம்பிக்கையும்:**
'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் (972) வைதிகத்தில் மையம் கொண்ட சாதிப் பிரிவினையை விமர்சனம் செய்வது குறிப்பிடத் தக்கது. சமத்துவம் இடம் பெறாத ஆன்மீகம் முரண்பாடானது, முழுமை பெறாதது. இது போன்ற குறள் கூறும் கருத்துக்கள் கிறித்தவம் நிலைநாட்ட விரும்பும் பார்வைக்கு உடன்பாடாய் அமைந்துள்ளன. அதனால், இஞ்ஞாசியாரின் ஆன்மீகத்தைக் குறளோடு இணைத்துப் பார்க்க இடம் தருகிறது.

இயேசுசபை மரபில் பயிற்சி பெற்ற வீரமாமுனிவர் தனது 'தொன்னூல் விளக்கத்தில்' (சூத்திரம் 183) சமத்துவம் பற்றி விமர்சனம் செய்கின்றார்.

> வன்னியர் மன்னர் வணிகர் சூத்திர
> ரென்னிவர் நால்வர்க் கியல்வன வுரைக்கில்
> ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்
> அல்லாத கல்வி யெல்லார்க்கும் உரித்தே.

"சமுதாயத்தில் மக்களை வன்னியர் (பிராமணர்), மன்னர், வணிகர், சூத்திரர் என நான்கு வகையாகப் பிரித்து, ஓதுதல் முதல் மூன்று வகையினருக்கு மட்டும் தகுதி என்று விதித்தாலும், கற்பது எல்லோருக்கும் உரிமை." கல்வி பொதுவாக இருக்க வேண்டும் என்பது வீரமாமுனிவரின் விளக்கம்.

**கவிஞர் தாசோவின் தாக்கம்:**
இத்தாலிய நாட்டுக் கவிஞர் தாசோ (1544-1595) தனது "செருசலேமின் மீட்பு" என்ற காப்பியத்தில் ஐரோப்பியக் கிறித்தவர்கள் மேற்கொண்ட முதலாம் சிலுவைப்போரின் பின்னணியைச் சித்தரிக்கிறார். இது ஒரு வரலாறு தழுவிய நூல். அதில் நான்காம் காண்டத்தில் பேய்கள் கூடி கிறித்தவப் போர்த் தளபதிகளைத் திசை திருப்பத் திட்டமிட்டதாக தாசோ விமர்சிக்கின்றார். கிறித்தவ போர்த்தளபதியரிடையே எழுந்த பூசல்களும், குழப்பமும், ஒற்றுமை யின்மையும் அவர்கள் மேற்கொண்ட குறிக்கோளுக்கு இடையூராக இருந்தது வரலாற்று உண்மை. ஆனால் தாசோ அவற்றை வெளிக்கொணர கவிதை வடிவில் பேயின் சூழ்ச்சி என்று வடிவமைத்துள்ளார்.

வீரமாமுனிவர் தேம்பாவணியில் (23 - ஆம் படலம்) இதைப் புகுத்துகிறார். சூசையும் மரியாளும் எகிப்து நாட்டில் தங்கியிருக்கும் பொழுது யாரையும் அவர்கள் மனம் திருப்பி விடக்கூடாது, அங்கே அவர்களின் தாக்கம் ஏதும் தங்க விடாமல் தடுக்க பேய்கள் திட்டமிட்டதாகக் குறிப்பிடுகிறார். வீரமாமுனிவர் காலத்தில் கிறித்தவ மறைப்பணியாளர்கள் தமிழகத்தில் எதிர் கொண்ட நெருக்கடிகள் அதிகம். இந்த எதார்த்த நிலைக்குக் காப்பிய வடிவில் பேய்கள் கூடித் திட்டமிட்டு சமய மாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக தேம்பாவணியில் கூறுகிறார். இது முனிவரின் கனவுலகை நிரந்தரமாக்கும் கற்பனையா அல்லது வரலாற்று நிலையின் எதிரொலியா என்பது நம்மைச் சிந்திக்க அழைக்கும் ஒரு பகுதி.

**கிறித்தவப் பக்தி சின்னத்தின் இடம் பெயர்ப்பு:**
தேம்பாவணியில் பாலஸ்தீன நாடும் செருசலேம் நகரும் தமிழகத்தின் ஒரு பகுதிபோல் வருணனை அமைகிறது. தமிழ் பெருங்காப்பிய மரபில் ஒரு நாட்டையும் ஒரு நகரத்தையும் வருணனை செய்து தொடங்குவது போல வீரமாமுனிவர் தனது காப்பியத்தைத் தொடங்குகிறார். தேம்பாவணியின் தொடக்கத்தில் மேகங்கள் மழைபொழிய தமிழக நிலப்பிரிவுகட்கு ஏற்ப மழைநீர் மலைகளிலிருந்து (குறிஞ்சி), காடுகள் வழியாக (முல்லை), விளை நிலங்களை (மருதம்) நிரப்பி, கடற்கரையை (நெய்தல்) வந்தடைகிறது.

பாலை நிலம் பற்றிப் பின்பு சூசையும் மரியாளும் எகிப்துக்குப் பயணம் செய்யும் பொழுது சீனாயி பாலைவனத்தைக் கடந்து சென்றதாக அமைகிறது. பாலஸ்தீன நாட்டில் உள்ள மரங்களையும் செடிகளையும் மிக நுணுக்கமாக வரிசைப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

“ஓலைகள் கிடந்தநீண் கமுகொடும்பனை
பாலைகள் மாமகிள் பலவு சுள்ளிகள்
கோலைகள் சந்தனம் குங்கு மம்பல
சோலைகள் கிடந்தன தொகுப்ப வண்ணமோ”
(நாட்டுப்படலம் 1.37)

தமிழ் இலக்கியத்தில் நிலப்பரப்பு அகம்-புறம் கோட்பாட்டோடு அமையும். ஆனால் இங்குக் காடும் மலையும் காதலர்கள் உறவோடும், ஊர்ப்பகுதிகள் திருமணத்தோடும் முடிவதில்லை. இயற்கை கிறித்தவக் கடவுளோடு இணையும் தளமாக இங்கு அமைகிறது. படைப்பின் மேல் கொண்ட அன்பெல்லாம் படைத்தவனை நோக்கிப் பார்க்கிறது; இறைவன் திட்டப்படி எல்லாம் அசைகிறது என்பது உட்கருத்து.

தேம்பாவணியின் முதல் இரண்டு படலத்திலும் - நாட்டுப்படலம், நகரப்படலம் - வீரமாமுனிவர் இயற்கையின் காட்சியை இறைவன் படைப்பின் குறிக்கோளில் பங்கெடுப்பதாக புனைகிறார். இதற்கு இரண்டு இலக்கியச் சாதனங்களைப் பயன்படுத்துகிறார். ஒன்று, உவமைகள் வழியாக. இது ஏற்கனவே சைவ மரபில் அதிக அளவில் முக்கியத்துவம் பெற்ற முறை. எடுத்துக்காட்டாக மாணிக்கவாசகரின் திருக்கோவையார் பாடலைக் குறிப்பிடலாம். அதாவது, அகத்திணை மரபை பக்திவழியில் விளக்கம் கூறுவது.

அது போல வீரமாமுனிவர் கூறுவது ஒரு எடுத்துக்காட்டு.

“மலையின் நேர்அறல் மலியநால் திணையருந்தியபின்
அலையின் நேர்உறல் அவனிதன் மகர்க்கெலாம் ஊட்டி
முலையின் ஏர்உறீஇ விஞ்சுபால் முடுகலில் உடுத்த
கலையின் ஏர்உறீஇக் களிப்போடு சிந்துவ போன்றே.”

(தேம்பாவணி – நாட்டுப்படலம் 1, 9. Virgo lactans)

மற்றொரு வழி தற்குறிப்பேற்றவணி – ஒரு பொருளின் குணத்தை அல்லது பணியை மற்றொன்றின் மேல் இணைப்பது. எடுத்துக்காட்டாக நகரப்படலத்தில் செருசலேம் வருணனையைக் கூறலாம்.

“பூவுலகு இயல்பன்று அம்பொன் பொலிமணி நகரம் பெண்ணார்
தேவுலகு உரித்தென்று அங்கண் தெளிந்து புக்கிடுமென்று ஆழி
தாவுலகு இருந்த வெள்ளித் தாள்தளை இட்டதே போல்
கோவுலகு இஞ்சி சூழ்ந்த குவளைநீள் அகழித் தோற்றம்.”

(தேம்பாவணி – நகரப்படலம் 2, 8)

இதன் கடைசி இரண்டு வரிகள் செருசலேம் நகரைச் சுற்றிய சுவர்களுக்குக் கீழ் அமைந்த ஆழியில் வளர்ந்த குவளை மலர்கள் நினைத்ததாக கற்பனை உருவெடுக்கின்றது. இந்த நகரம் இந்த உலகை விட்டுப்பிரிந்து தனக்கே சொந்தமான விண்ணகம் சென்றுவிடுமோ என்று அஞ்சி வெள்ளிக் கம்பிகளால் கட்டிக்காப்பது போல என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப்பாடல் ஒருவேளை புனித அகுஸ்தீனார் கருத்தான விண்ணக செருசலேமைக் குறிக்கலாம். இந்தப்பாடல் உண்மையில் தன்னைப் படைத்த இறைவனைப் புகழும் இயற்கை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

மற்றுமொரு எடுத்துக்காட்டு;

“கோதகன்று அளிக்குவார் அருந்திக் கொள்கைபோல்
தீதகன்று அருந்திரு நுகரச் சென்மினென்று
ஏதகன்று அணிக்குலத்து இலங்கு மாடங்கள்
மீதகன்று அசை கோடி விளிப்ப மானுமே.”

(தேம்பாவணி – நகரப்படலம், 2. 19)

உயர்ந்த வீடுகளின் மேல் அசைந்தாடும் கொடிகள் மக்களை வரவேற்பது போல் தோன்றின. இப்பாடலின் முதல் வரி தாராள மனத்தோடு மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும் பண்பைக் குறிக்கிறது. பிறர்க்குதவி செய்தல் கிறித்தவ அறத்தின் முக்கிய அம்சம். இது திருக்குறள் கூறும் இரண்டு அதிகாரத்தோடு (22-23: ஒப்புரவு அறிதல், ஈகை) இணைந்த பண்பையும் நினைவூட்டுகிறது.

கடைசி இரண்டு வரிகள் விருந்தினரை வரவேற்கும் வகையில் மாளிகையின் மேலே அசைந்த கொடிகள் தோன்றின. இது சிலப்பதிகாரத்தின் நிகழ்வை நினைவூட்டுகிறது. கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வரும்பொழுது இங்கு வர வேண்டாம் என்று எச்சரிக்கும் பொருள்படத் தோன்றியது என்பது தெரிந்ததே. இவ்வாறு தேம்பாவணி கிறித்தவப் பார்வையை முன்வைத்து இயற்கையின் நிகழ்வுகளுக்கு விளக்கம் தருவது குறிப்பிடத் தக்கது.

**பண்பாட்டுப் பரிமாறல் - புனித வீடு (Santa Casa) புலம் பெயர்தல்:**

“சாந்தா காசா” என்பது நசரேத்தூரில் மரியாளும், சூசையும், சேசுவோடு வாழ்ந்த வீடு. கிறித்தவ மரபின்படி இஸ்லாமியர் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய போது விண்ணகத் தூதர்கள் அதைக் காப்பாற்றினார்கள். முதலில் அதை இன்றைய குரோவாசியவிற்குத் தூக்கிச் சென்றார்கள். இறுதியாக, அது இத்தாலியில் உள்ள லொரேட்டோ மலை நகரத்தை வந்தடைந்தது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து அங்கு செங்கல்ளால் கட்டப்பட்ட ஒரு வீடு இருந்தது. பிறகு இது ஒரு முக்கிய திருப்பயண மையமாக மாறியது.

இது வீரமாமுனிவருக்கு முக்கிய இடமாக இருந்திருக்கிறது. அதை வருங்காலத்தில் நிகழவிருக்கும் இத்தாலியின் பெருமையை சேசு சூசைக்கு முன்னறிவித்ததாக தேம்பாவணியில் பதிவு செய்கிறார். (32, 25-26)

“ஓர் ஆழி உருட்டிய நான் வீற்றிருக்கும் கோயிலெனக்கு உலகில் ஆகிப்
பாராழி ஒன்றிணையாய்ப் படர்செல்வ நாட்டியல்யான் பகர்வது என்ன
நீராழி கடந்தங்கண்; இம்மனைசென்று அடைக்கலமே நிலத்தில் செய்தாங்கு
ஓராழி இரவியின் இவ் இல் இலங்கச் செயும் இத்தாலியநாடு அன்றோ”

வீரமாமுனிவர் திருக்காவலூரையும் மரியாளையும் தமிழகத்தின் மிக முக்கிய அடைக்கலத் தலமாகக் கருதினார். அதனால் லொரேட்டோவில் உள்ள வீட்டை இடம்பெயர்த்து காவிரிக்கரைக்குக் கொண்டுவருகிறார். அவரது பாடல் திருக்காவலூர் கலம்பகம் (15) இதைத் தெளிவுபடுத்துகிறது.

“நாணி பூட்டிய சாப மேந்திய வீர வெங்கர வேடனார்
நாணி வுட்சுடு தீய சொற்கொடு நம்மை யெள்ளின ராரடா
சேணி பூட்டிய கொம்ப ரேந்திய தேற லூட்டிய காவலூர்

சீரினாளொரு தேவ மானொரு சீய மேகரு வுற்றகாற்
பாணி பூட்டிய வெங்க டார்மலை பற்றி யெங்குடி லெய்தினாள்
பாத மூன்றிய வாயிறாமரை பூத்த காடென வாயடா
தூணி பூட்டிய வம்பு போலவள் புக்க சிற்றில லர்ந்தபூ
தூய தேனுக வின்னும் வாடில சூழ்ந்து வாழ்த்திட வண்டரோ."

இப்பாடல் முதலில் வேடர்கள் வாழும் மலையிலுள்ள ஒரு குடிலில் மரியாள் தான் கர்ப்பிணியாக இருக்கும்பொழுது அடைக்கலம் புகுந்தாள் என்பதையும், சேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்ததையும் சுட்டிக் காட்டுகிறது. இப்பாடலின் இரண்டாவது பகுதியில் ஒரு சிறிய இல்லத்தில், அதாவது நசரேத்தூரில் வாழ்ந்ததைக் குறிக்கிறது.
இங்குப் புதிதாக புகுத்தியிருப்பது "சாந்தா காசா" தமிழகத்தில் மறவர் வாழும் மலைப் பகுதி. பாலஸ்தீனத்திலிருந்து இத்தாலிக்கு வந்த "சாந்தா காசா" தொடர்ந்து பயணம் செய்தது. சேசு சபையினர் தாங்கள் பணிசெய்யச் சென்ற நாடுகளுக்கெல்லாம் இந்த உருவத்தை எடுத்துச்சென்றனர் – வடக்கு, மத்திய, தெற்கு அமெரிக்காவில் கோவில் கட்டினர். இந்தப் பக்தி முறையைப் பல இடங்களில் பரவச்செய்தனர். அதுபோல திருக்காவலூரில் எழுப்பப்பட்ட கோவிலும் இன்னுமொரு லொரேட்டோவாக அமைந்தது.

தேம்பாவணியில் காணும் நிலப்பரப்பும் இயற்கை வருணனைகளும் இலக்கிய முறையில் மட்டும் எழுந்த காப்பியப் படைப்பல்ல. தமிழகத்தின் மலைகளிலும், நதிகளிலும், நிலப்பரப்பிலும் கிறித்தவக் கண்ணோட்டத்தோடு ஆன்மீக வழியில் சிந்திக்க வைக்கும் வருணனைகள்.

**தமிழகத்தில் கத்தோலிக்கக் கவிதை:**
பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வேதியர் தேம்பாவணியை வாசித்த முறை: -
1721 சனவரி 12ஆம் தேதி பிரான்சு நாட்டு சேசுசபை குரு நோவேல் தே பூர்ஜெஸ் பாரிஸில் இருந்த எத்தியென் சூசெவுக்கு எழுதிய கடிதத்தில் வீரமாமுனிவரை "பூக்களின் தந்தை" என்று

குறிப்பிட்டு அவருக்காகப் பல வகையான பூக்களின் விதைகளை வாங்கி அனுப்பியதாகப் பதிவாகியுள்ளது. இந்தியாவில் சேசுசபையினர் வாழ்ந்த பல இடங்களில் அழகுக்காகவும் மருந்துக்காகவும் தோட்டங்களை அமைத்தனர். ஏனெனில் அவர்கள் ஆன்மீக அளவிலும் உடல் அளவிலும் குணமளிப்பவராகப் பணிசெய்து வந்தனர்.

ஏலாக்குறிச்சி என்ற ஊரில் வேதியர்களோடு வாழ்ந்த வீரமாமுனிவர் இவ்வாறு வெளிநாட்டிலிருந்து பெற்ற விதைகளை வைத்து என்ன பயன் அனுபவித்தார்? தேம்பாவணியில் வரும் பாடல்கள் இதற்குக் கொஞ்சம் புரிதல் அளிக்கின்றன. (ஐயம் நீங்கு படலம் 8, 50-53.)

நீமம் உடைத் திங்கள் துடைத்து ஒளியைப் பாய்ந்த
நேர் அடியாள், நேர் அற, விள்ளா வண்ணம்,
காமம் உடைத்து, ஒளி உடுத்து, சுடரில் தூய
கருத்தில் அமை கன்னி நலம் காட்டுதற்கே,
தாமம் உடைத் தண் தாது மடு உடைத்துச்
சாய்ந்த மது வெள்ளமொடு வாசம் வீசி,
ஏமம் உடைத் தனி விருது என்று, அலர் சுவேத
இலீலி எனும் மாலை, பதத்து, ஒரு நூறு, உய்த்தார். (50)

இருதி எழில் படுத்திய வான் வரத்து வல்லாள்,
இவர் வானோர் நிலை கடந்த அன்பு விஞ்சக்
கருதி, எழில் படுத்திய ஒன்று ஆய எந்தை
கண்ணி அமை நேய நலம் காட்டுதற்கே,
குருதி, எழில் படுத்திய செந்தாது உலாவும்
கொழுந் தண் தேன் உரோசை எனும் கோதை கொண்டு,
பருதி எழில் படுத்திய சீறு அடியைப் போற்றிப்
பணி ஆக முன் படைத்தார், ஒரு நூறு அன்றோ. (51)

வீடு அவிழ்த்த நலம் காட்டும் வனப்பின் நல்லாள்,
விரி புவி மன் உயிர்கள் எலாம் இன்பு உற்று உய்ய,
கேடு அவிழ்த்த நெஞ்சினர்க்கும் உறுதி செய்யும்
கிளர்ந்தன தன் தயாப நலம் காட்டுதற்கே,

நீடு அவிழ்த்த வாய் இடத்துப் பிரிந்து ஓடும் பல்
நீர்க்கு எல்லாம் அடைக்கலம் செய் வாவி பூத்த
தோடு அவிழ்த்த விரைக் கமலம் மாலை மாற்றி,
சூடிய தாள் தொழுகின்றார், ஒரு நூறு அன்றோ. (52)

துறை கெழு நூல் வழி அனைத்தும் அடையா ஞானத்
துறை அன்னாள், மாசு அறு நல் உணர்வின ஈர்த்து,
மறை கெழு நூல் வழி வழுவா, கடவுள் நல் தாள்
மாறு இல மெய்ஞ் ஞான நலம் அமைந்ததற்கே,
முறை கெழு நூல் வழி அன்ன வெய்யோன் வானின்
முடுகு வழி விடா திரியும் இரவிக் காந்தம்,
அறை கெழு நூல் வழித் தொடை போல் தொடையல் ஆக்கி,
அருச்சனை செய்து, அடி அணிந்தார் ஒரு நூறு அன்றோ. (53)

இந்தப்பாடல்கள் சூசை கண்ட காட்சியின் ஒரு பகுதி. இது சூசையின் சந்தேகத்தை நீக்குகிறது. மரியாள் தூயவள் என்று ஏற்றுக்கொள்கிறார். அந்தக்காட்சியில் வானதூதர்கள் மலர் தூவி மரியாளை வணங்குவதைக் காண்கிறார். இது தென்னிந்தியாவில் உள்ள மரபோடு இணைந்தது.

ஆனால் வானதூதர் மரியாளுக்குச் சமர்ப்பிக்கும் மலர்கள் தமிழகத்தில் வழக்கமாகச் சொல்லக்கூடிய வகைகள் அல்ல- - வெள்ளை இலீலி (சுவேத இலீலி - Lilium canditum in Latin)- கத்தோலிக்க மரபில் மரியாளின் கற்பையும், தூய்மையையும் குறிப்பது@ அது தமிழ் நாட்டில் இல்லாதது; இரண்டாவது மலர் இரோசு, இதுவும் தமிழ் மரபில் இல்லாதது; பிறகு இஸ்லாமிய மரபோடு சேர்ந்து தமிழகத்தில் தோன்றியதாகச் சொல்வதுண்டு. ஆனால், கமலம் - தாமரை தமிழகத்தில் நன்கு அறியப்பட்டது. ஏலாக்குறிச்சியில் மரியாள் “அடைக்கல மாதா” வாக அறிமுகமாகிறாள். மரியாள் வருந்தி வருவோர்க்குத் தஞ்சம் கொடுப்பவள் என்று பொருள்.

தேம்பாவணி எந்த ஒரு பின்னணியும் இல்லாமல் தனி ஒரு காப்பியமாக எழுதப்படவில்லை. 1720 – ஆண்டளவில் வீரமாமுனிவர் இரண்டு முக்கிய நூல்களை எழுதினார் –

திருக்காவலூர் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை. கலம்பகம் அன்னை மரியாளைத் திருக்காவலூரின் அடைக்கல மாதாவாக சிறப்புச் செய்யும் பாடல். தமிழகத்தில் உள்ள தலபுராணம் போல அமைந்துள்ளது. இப்பொழுது அக்கோவிலைச் சுற்றிய மதில்களில் இப்பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கோவில் வளாகத்தின் மூலையில் கித்தேரி அம்மாளுக்கு ஒரு சிறு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வீரமாமுனிவர் கித்தேரியை ஒரு கிராம தெய்வமாக, குருதி சிந்திய தேவதையாக கற்பனை செய்து அம்மானை பாடல் எழுதி அவளுக்குச் சிறப்புச் செய்கிறார். திருக்காவலூர் ஒரு கிறித்தவ பக்தியைக் கற்பிக்கும் மையமாக நிலை நாட்ட வீரமாமுனிவர் தொகுத்த கனவுக்காட்சியின் சின்னங்கள்தான் இந்த இரண்டு பாடல்களும். இவையெல்லாம் தேம்பாவணியோடு தொடர்பு கொண்டவை. அதாவது, தமிழ், இலத்தீன், இத்தாலியப் பண்பாடு, மற்ற கிறித்தவ அம்சங்கள் கலந்த ஒரு காப்பியம்தான் அவர் எழுதிய தேம்பாவணி.

**தேம்பாவணியின் தாக்கம்:**
தமிழ் இலக்கிய உலகில் கிறித்தவர்களுக்கு நிலையான அடையாளம் கொடுத்தது வீரமாமுனிவர். அவருக்கு முன்பு பல கிறித்தவப் பணியாளர்கள் தமிழில் எழுதினார்கள். ஆனால் அவையெல்லாம் இலக்கியமாக தமிழ் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தமிழ் கிறித்தவம் உண்டு என்று சொல்லும் நிலைக்கு அடிக்கல் நாட்டியவர் வீரமாமுனிவர். அவர் 1747-இல் இறந்தார். அதன் பின் என்ன நிகழ்ந்தது? எப்படி கிறித்தவம் தமிழகத்தில் தொடர்ந்தது என்ற கேள்வி எழுகிறது.

சேசு சபை தொடங்கி (1542) 200 ஆண்டுகளில் அவர்கள் உலகெங்கும் சென்று பணிசெய்து புகழ் தேடினர். பிறகு திடீரென்று அவர்கள் வாழ்வில் காற்று எதிர் திசையில் பலமாக வீசியது. 1759-இல் போர்த்துக்கீசிய அரசு சேசு சபைக்குத் தடை விதித்தது. 1764-இல் பிரான்சு நாடும், 1767- இல் இஸ்பானிய நாடும் தடை விதித்தன. பிறகு 1773-இல் திருத்தந்தை (The Pope) உலகெங்கும் சேசு சபையினரைத் தடைசெய்தார்.

இத்தகைய தடை அவர்கள் வாழ்வுக்கு ஒரு முடிவு கட்டியது. தென்னிந்தியாவில் இருந்த சேசு சபையினர் தங்கள் உரிமையை

இழந்தனர். அவர்களுக்கு இலக்கியம் படிக்கவோ புதிதாக நூல்கள் எழுதவோ நேரம் இல்லை. தங்களைப் பாதுகாக்க மற்ற துறவியரிடமும், ஆட்சியாளரிடமும் தஞ்சம் புகுந்தனர். தமிழகத்தின் அரசியல் சூழ்நிலையும் வெகு விரைவில் மாறிக்கொண்டிருந்தது. 1740- ஆண்டுகளில் தமிழகம் 72 பாளையமாகப் பிரிக்கப்பட்டு குறு நில மன்னராட்சி போல நிகழ்ந்தது. பிறகு ஆங்கிலேயர் ஆட்சி தொடர்ந்தது.

இக்கால கட்டத்தில் மறைப் பணியாளர்கள் கவிதை எழுதவில்லை. ஆனால் வீரமாமுனிவர் பயிற்றுவித்த வேதியர்கள் முன்வருகின்றனர். சவரிமுத்து பிள்ளை வடக்கண்குளத்தில் தேம்பாவணியை ஓலை ஏடுகளில் பிரதி எடுக்கிறார். சுவாமிநாத பிள்ளை மெட்ராசில் வாழ்ந்து கொண்டு வீரமாமுனிவர் வழியில் காப்பியமும் கலம்பகமும் எழுதுகிறார். வீரமாமுனிவரின் வரலாறு எழுதிய முத்துசாமி பிள்ளை பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவரின் நூல்கள் கத்தோலிக்கச் சமுதாயத்திற்கு வாழ்வு கொடுக்கும் ஆதாரமாக விளங்கின என்று பதிவு செய்கிறார். அவரது பாடல்களைப் படித்தும் பாடியும் அவரது நூல்களைப் பரப்பி வந்தார்கள்.

முக்கியமாக கவனிக்க வேண்டியது எப்படி மறைப்பணி பொதுமக்கள் எடுத்துச் செய்தார்கள் என்பது. குருக்கள் யாரும் இல்லாத நிலையில் இவர்கள் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கினர். கத்தோலிக்க பொது மக்கள் கிறித்தவ நம்பிக்கை சார்ந்த பாடல்களும் காப்பியங்களும் எழுதத் தொடங்கினர்.

இக்காலக் கட்டத்தில் வாழ்ந்த முக்கிய எழுத்தாளர் சாமுவேல் வேதநாயகம் பிள்ளை (1826-1889);. சமுகச் சீர்திருத்தவாதி, பெண்கள் கல்விக்காகப் போராடியவர், முதல் நாவல் பிரதாப முதலியார் சரித்திரம் எழுதியவர். கத்தோலிக்கக் கிறித்தவராக சிற்றிலக்கியங்கள் பல இயற்றினார்.

பிறகு 1814- இல் சேசு சபையினருக்கு இருந்த தடை நீக்கப்பட்டது. 1834- இல் ஐரோப்பாவிலிருந்து தமிழகம் வந்த சேசு சபையினர் எப்படி கிறித்தவ இலக்கியம் கத்தோலிக்கரை ஒன்றிணைத்துத் தொடர்ந்து வழிநடத்தியது என்பது கண்டு வியந்தனர்.

சுருங்கச்சொல்ல வேண்டுமானால், சேசு சபையினர் மறைப்பணி திட்டங்கள் தோல்வியில் முடிந்தன. ஆனால், வீரமாமுனிவர் தொடங்கிய இலக்கியப் பணி, அவர் ஏலாக்குறிச்சியில் பயிற்றுவித்த வேதியர் குழு எல்லாத் தடைகளையும் எதிர்கொண்டு நிலைத்து நின்றது.

இதற்கான காரணங்களைத் தேட வேண்டும். ஏன் கத்தோலிக்கச் சிந்தனையாளர்கள் தமிழ் நூல்களில் பெரிய அளவுக்கு ஈடுபாடு கொண்டிருந்தனர்? இந்த நூல்கள் அவர்களுக்கு எந்த வகையான அழுத்தம் கொடுத்தது?
கிறித்தவ மறைப்பணியாளர்கள் தங்கள் ஆன்மீக, பண்பாட்டு, பொருளாதார அதிகாரத்தை வேதியர்களிடம் ஒப்படைத்தபோது இத்தகைய வரலாற்றுத் தொடர்புக்கான விதையைப் பயிரிட்டார்கள். சேசு சபையினர் அவர்கள் பயிற்றுவித்த வேதியர்களுடன் தமிழ் இலக்கியத்திற்குள் கிறித்தவ நூல்களை இணைத்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக தேம்பாவணி அமைந்துள்ளது.

ஏலாக்குறிச்சியில் தொடங்கிய அத்தகைய பயிற்சி வீரமாமுனிவரும், அவரது தோழர் ஞானப்பிரகாசியாரும் (பெர்த்தோல்டி) எழுதிய நூல்கள் ஒரு புதிய கண்ணோட்டத்தை முன் வைக்கின்றன. வேதியர்கள் ஞானமுயற்சி, வேதியர் ஒழுக்கம் போன்ற நூல்களைப் படித்துத் தியானிக்கும் பொழுது தமிழ் உலகத்தைக் கிறித்தவக் கண்ணோடு பார்க்கக் கற்றுக் கொண்டனர். அதோடு இயற்கைக் காட்சியெல்லாம் கிறித்தவக் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் நூலாக வாசிக்கத் தொடங்கினார்கள்.

> "கண்ட(து) எலாம் கர்த்தாவைக் காட்டிய கண்ணாடி எனக்,
> கொண்ட(து) எலாம் மெய்ஞ்ஞானம் கூறியவாய் ஆயினவே."
> (கித்தேரியம்மாள் அம்மானை, 2 13)

அதன் தொடர்ச்சியாக ஒரு சமுதாய உணர்வை அனுபவித்தனர்- நரகத்தின் முன் அச்சமும், விண்ணகம் நோக்கிய ஆவலும், தீயவை கண்டு அருவருப்பும், தவறுகளை நினைத்து

வெட்கமடையவும், தானாக சொந்த முயற்சியால் மீட்படையலாம் என்பது ஆணவம் என்றும் உணரத் தொடங்கினர். இந்தக் கண்ணோட்டத்தைத்தான் ஏலாக்குறிச்சியில் கற்றுக்கொண்டனர். இத்தகைய பார்வை தமிழ் மரபோடு, சித்தர், வள்ளுவர் உலகோடு இணைந்து இருந்தது என்பதுதான் அதன் சிறப்பு.

(துணை நின்ற நூல், Margherita Trento, Writing Tamil Catholicism. Literature, Persuasion and Devotion in the Eighteenth Century. Leiden: Brill, 2021)

**Additional Notes:**

[1]
Cf. Maria Goloubeva, The Glorification Of Emperor Leopold I In Image, Spectacle And Text, 2000.

[2]
There was a king with the white spear in hand by name Leopold,
He could conquer the wicked enemy and make them surrender,
He ruled joyfully the glorious land of Rome,
Which was surrounded by the fields with water flowers. (Tempavani, 3532)

[3]
Baguet, Jelten. 2015. "Politics and commerce: a close marriage? The case of the Ostend Company (1722-1731)." TSEG/ Low Countries Journal of Social and Economic History 12, 3. DOI: 10.5117/TSEG2015.3.BAGU

[4]
Robert Caldwell, A Compartive Grammar of the Dravidian, 1875, 155.

[5]
Your hands are the glory-lily,
Your feet are the lotus flower,
Your eyes are the blue-lotus,

Your mouth is the red-lily,
All these flowers bloom in unison in Tirkkāvalūr.
You are the tender garland,
The bees drink its honey,
This is the best one,
The sweet honey from the flowers on this earth cannot equal this.
Tell us, o bees. (23)

[6] வீரமாமுனிவர் கட்டிய முதல் தேவாலயம் (https://www.hindutamil.in/news/spirituals/197827-.html)..

## 9. தமிழ்த் தொண்டு செய்த மேலைநாட்டு நல்லறிஞர் வீரமாமுனிவர்

— *ஆலடி எழில்வாணன்*

ஜெர்மனியிலிருந்து வரலாற்று ஆய்வு செய்யும் முனைவர் க.சுபாஷிணி மற்றும் முனைவர் ஆனந்த் அமலதாஸ் அவர்களின் சீரிய முயற்சியால் "வீரமாமுனிவர்" புத்தகம், ஒளிவண்ணனின் எழிலினி பதிப்பகம் மூலம் வெளியாகியுள்ளது. மொழிகளின் தாயான தமிழை உலகில் பரப்பி உயர்த்திப் பிடித்த முக்கிய ஆளுமைகளில் சிறப்பிடம் பெற்றவர் இத்தாலியை சேர்ந்த Constantine Joseph Beschi (November 8, 1680 – February 4, 1747). இவர் பின்னாளில் வீரமாமுனிவர் என அழைக்கப்பட்டு தமிழர்கள் மனதில் நிலைத்திருக்கிறார்.




பல மாதங்கள் கப்பலில் பயணம் செய்து 1710ஆம் ஆண்டு தனது 21ஆவது வயதில் கிருத்துவத்தைப் போதிக்க இத்தாலியில் இருந்து அருட்தந்தை அர்னால்டுடன் கோவா வந்தடைந்தார். உடன் வந்தவர் மலபார்

பகுதியான கேரளம் செல்ல, இவர் 1711ல் மதுரை வந்தடைந்தார். மக்களோடு மக்களாகக் கலந்து இறைப்பணி மற்றும் மதபோதகம் செய்ய அந்த ஊரின் மொழி அறிதலின் அவசியத்தை உணர்ந்தார் வீரமாமுனிவர். தெலுங்கு, சமற்கிருதம் மற்றும் தமிழ் கற்றார். இதில் தனக்குச் சிறந்ததாக, மொழி கட்டமைப்பில் தனக்குத் தெரிந்த இலத்தீன், போர்ச்சுக்கீசு மொழியின் ஒற்றுமை உள்ளதாக இருந்த தமிழை இன்னும் தீவிரமாகப் பயின்றார். அவர் வாசிக்காத தமிழ் காப்பியங்களே இல்லை எனலாம்.

18ஆம் நூற்றாண்டில் கல்விக்கூடங்கள் மற்றும் தேவாலயங்கள் பல அமைத்து மதக் கோட்பாடுகளை தமிழகத்தில் காலூன்ற வைத்த காலங்களில் வீரமாமுனிவருக்கு தமிழ் மீதான அதீத பற்றுதல் பன்மடங்கு கூடியது. 1726ல் அவரது முதல் படைப்பான மேரிமாதாவை போற்றிப் புகழும் காப்பியமான தேம்பாவணி வெளியானது. 3615 பாடல்கள், அதற்கு 1729 தெளிவுரைகள் என, தான் வாசித்த தமிழ் பெரும் காப்பியங்களுக்கு இணையாக தேம்பாவணியைப் படைத்தார்.

அந்நாள் வரை Constantine Joseph Beschi தமிழகத்தில் 'தைரியநாதசாமி' என்ற பெயரில் உலவினார். தேம்பாவணி படைத்து முழு மொழி ஆளுமை பெற்றபிறகு தைரியநாதசாமி சரியான தமிழ் பெயரல்ல அது சமற்கிருதம் எனத் தெளிவு பெற்று 'வீரமாமுனிவர்' (Great Champion Devotee) என்றானார். தமிழ் மொழியை காப்பியம் மற்றும் இறை வழிபாடுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளாமல் தனது படைப்புகளில் தமிழர் வாழ்வியலைக் கலந்து படைத்தார்.

அவரது வாழ்நாளின் பிற்பகுதியில் வீரமாமுனிவரால் படைக்கப் பெற்ற படைப்புகள்:
செய்யுள் - 9
உரைநடை - 10
அகராதி - 5
இலக்கணம் - 4
உரைகள் - 5
பஞ்சாங்கம் - 2

மொழிபெயர்ப்பு - 9
இலத்தீன் - 3
எழுத்து சீர்திருத்தம் - 4
ஆக மொத்தம் 51 நூல்கள்

இதில் குறிப்பாக திருக்குறள் உள்பட பல தமிழ் காப்பியங்களுக்குத் தெளிவுரை எழுதியது, இலத்தீன் பிரெஞ்சுக்கு மொழி மாற்றம் செய்தது, தமிழ் - லத்தீன், தமிழ் - பிரெஞ்சு அகராதிகள் படைத்தது, சுவாரசியமாக பஞ்சாங்கம் மற்றும் சோதிட நூல்களை சமற்கிருதத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்தது இவருடைய சாதனைகள். மிக முக்கியமாக சதுரகராதி என்பது பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி மற்றும் தொடை அகராதி என்னும் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. மொழி சீர்திருத்தத்தில் முன்னோடியாகத் திகழ்பவர் வீரமாமுனிவர் என்பதும் வியப்பே. குறிப்பாக எழுத்துகளுக்கு மேல் புள்ளி வைப்பது, துணைக்கால் போல் எழுதி கீழ் இழுப்புக் கோடு 'ர' வீரமாமுனிவரின் தமிழ் மொழிப் பங்களிப்பு. பாடல்களாகவே இருந்த காப்பியங்களை உரைநடைத் தமிழ் (Father of Tamil Prose) என மாற்றிய பெருமை இவரையே சாரும்.

1730க்கு பிறகு அரியலூர் மற்றும் தரங்கம்பாடி பகுதிகளில் இயேசுசபை நிர்வாகியானார். இப்பகுதி அந்நாளில் ஆற்காடு நவாப் கட்டுப்பாட்டில் இருந்தது. நவாப்களிடத்தில் நட்பாக இருந்துள்ளார் வீரமாமுனிவர். தமிழ் துறவிகளைப் போல் சாதாரண வாழ்வையே வாழ்ந்தார், சைவ உணவையே உண்டார், ஒரு பொழுது மட்டுமே உணவருந்தினார், இல்லத்தில் இருக்கும்போது காவி உடையில் இருந்தார். முக்கிய நிகழ்வுகளுக்கு வெளியே செல்லும் போது நவாப் அரசர் போன்று உடையணிந்தார் என்பது வியப்பாக உள்ளது. இதனை புத்தகத்தின் அட்டைப் படத்தில் பார்க்கலாம்.

பல இடங்களில் இந்து சமயத்தின் வர்ணாசிரமப் பிறப்பு படிநிலைக் கோட்பாட்டை இடித்துரைத்துள்ளார் வீரமாமுனிவர். ஒரே பிரம்மனின் உடலின் வெவ்வேறு பாகத்தில் இருந்து பிறந்ததால் பிராமணன்-சத்திரியன்-வைசியன்-சூத்திரன் எனப்

பிரிக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை முன்வைத்தார். Son of man without an equal, I worship the newly blown flower of thy feet. இவரால் ஐரோப்பியர்கள் பலர் தமிழ் கற்றனர், தமிழ் மொழி ஆய்வுகளை மேற்கொண்டனர் என்பது கூடுதல் செய்தி. இப்படிப்பட்ட ஆளுமையின் மரணம் ஒரு சாதாரண சம்பவமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது கவலையான செய்தியாக உள்ளது.

பதிப்பாசிரியர்கள் முனைவர் க.சுபாஷினி மற்றும் முனைவர் ஆனந்த் அமலதாஸ் இருவரும் மறுபதிப்பு செய்த இந்த நூல் வரலாற்றுச் சிறப்புமிக்கது. வீரமாமுனிவர் ஒரு வரலாற்றுக் காலப் பெட்டகம். இந்தப் புத்தகத்தில் அவரின் வரலாறு வாசிப்பவருக்கு ஆச்சரியத்தைத் தரும். தமிழ் மொழி மீது பற்றுள்ளவர்கள் வாசிக்க வேண்டிய நன்னூல்.



வீரமாமுனிவர் (Constantine Joseph Beschi)
நூல் ஆசிரியர்: முத்துசாமி பிள்ளை
பதிப்பாசிரியர்கள் முனைவர் க.சுபாஷினி மற்றும் முனைவர் ஆனந்த் அமலதாஸ்
பதிப்பகம்: எழிலினி பதிப்பகம்
விலை: ₹350/=
https://www.emeraldpublishers.com/veeramamunivar/
நூல் திறனாய்வு: ஆலடி எழில்வாணன்

குறிப்பு: ஜனவரி 9, 2022 அன்று தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு இணையவழி நடத்திய "'சித்திரக் கதைகள்' மற்றும் 'வீரமாமுனிவர்' - நூல்கள் திறனாய்வு" உரை நிகழ்ச்சியில் திரு. ஆலடி எழில்வாணன் வழங்கிய உரை

## 10. இன்றைய நவீனக் கல்விக்கு வித்திட்ட கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் - ரேனியஸ் ஐயர்

— முனைவர் த.ஜான்சி பால்ராஜ்

ஐரோப்பாவிலிருந்து கிறித்தவத்தின் ஒளியை உலகெங்கும் ஏற்றிட விளைந்த மிஷனெரிகளின் பணிகள் மகத்தானவை! வெறும் சமயம் பரப்புதல் மட்டுமே இவர்களது பணியாக இருந்திருந்தால் பிற மதப் பரப்புநர்களைப் போலவே இவர்களையும் காணாமல் போக விட்டிருக்கலாம் நாமும்! ஆனால் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை முதற்கண் நிறைவேற்றி அந்தந்த நாடுகளில் காணப்பட்ட ஆதிக்க நிலையையும் அடிமை முறைகளையும் களைந்து, விடுவித்து அதன் பின்னரே தாங்கள் கண்டுணர்ந்த ஆன்மீக வெளிச்சத்தைக் காண்பித்தனர் இவர்கள்.

அதற்கு மிக முக்கியக் காரணமாக விளங்கியது ஜெர்மனின் ஹலே பல்கலைக்கழகத்தின் மிஷனெரி பயிற்சிக் களத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளே! அவற்றுள்:

1. அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும்.
2. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைக்கான தொழில் பயிற்சி அளிக்க வேண்டும்.

என்ற இவ்விரு அடிப்படைத் தேவைகளையும் அளித்தலின் விளைவால் தான் நமது சமய ஏற்பு அமையப் பெறல் வேண்டும் என்பதே அதன் மையக் கருத்தாக்கம். அத்தகைய அழுத்தமான பயிற்சிக்குப்பின்னரே அவர்கள் பிற நாடுகளுக்குச் சமயப்பணியாளர்களாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அவ்விதத்தில் ஹலே பல்கலைக்கழகத்தினால் பட்டைத்தீட்டப்பட்ட வைரமாய் கி.பி.1814 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தவர் தான் சார்லஸ் தியோபிலஸ் ஈவார்ட் ரேனியஸ் என்ற செயல் வீரர். 1790 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் நாள் ஜெர்மன் நாட்டில் பிறந்த இவர்.




இந்தியாவிற்கு வந்த அனைத்துக் கிறித்தவ மிஷனெரிகளிலும் மிகவும் சிறப்பிற்குரியவராகத் திகழ்ந்த இவர், வெகு துணிச்சலோடு இந்தியக் கட்டமைப்பின் மிக மோசமான சாதியத்தின் சாதி வேரை முதன் முதலில் அசைத்தவர்!

ஆதிக்க வர்க்கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட அடிமைத்தன மரபுவழிச் சாசனங்களின் சூட்சுமங்களைப் பாமர மக்கள் தாங்களாகவே உணராதவரை அவர்களை அதிலிருந்து விடுவிப்பது என்பது தற்காலிகமானதாகவே இருந்து வந்தது. நிரந்தரமான தீர்வை, கல்வியைக் கொண்டுதான் அடையச் செய்ய முடியும் என்பதை உணர்ந்திருந்த ரேனியஸ் தாம் ஏற்படுத்திய சபைகள் அமைந்திருந்த ஊர்களிலெல்லாம் சாதி சமயப் பாகுபாடின்றி கல்வியைக் கட்டாயமாக்கினார். அவருக்கு முன்பு இங்கு வந்திருந்தோரும் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் இவரது கல்விப்பணி நவீனக் கல்விமுறைக்கு முதல்தர விதைகளாயின.கல்வியே அறியாமையை அகற்றும் ஆயுதமாதலால் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தினார்.

வெறும் எண்ணும் எழுத்தும் தான் கல்வி என்ற நிலையை மாற்றி, பொது அறிவு, தாவரம், மண்வளம், வரலாறு, புவியியல், கணிதம், கனிப்பொருள்கள், மொழியறிவு என்று இன்றைய கல்விமுறையை ஒத்த கல்வித் தரத்தை ஏற்படுத்த நூல்களையும் தாமே எழுதி இச்சமூகத்தின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்தார்.

அதில் கி.பி1832 ல் அவரெழுதிய பூகோள சாத்திரம் என்ற அறிவியல் நூல் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாயிற்று! இந்நூல் இந்தியர்களின் தவறான அறிவியல் பார்வையை மாற்றி தீர்க்கமாக சிந்திக்கத் தூண்டியதில் முதலிடம் பிடித்தது; ஆசியாவிலேயே முதன்முதலாக எழுதப்பட்ட அறிவியல் நூலாக ஏற்கப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பிரதி வரலாற்றுச் சங்கத்தின் நூலகத்தில் இருப்பது பெருமைக்குரியதாகும்.
அந்நூலில் வானம், பூமி, சூரியகிரகணம், சந்திரகிரகணம் போன்ற இயற்கை நிகழ்வுகளைத் தம் கற்பனையில் தோன்றிய கதைகளாகப் புனைந்து அவற்றை எழுத்துக்கள் வாயிலாகவும் வாய்வழிச் செய்தியாகவும் மக்கள் நம்பிக்கொண்டு வந்தவற்றை மாற்றியமைக்க ரேனியஸ் அரும்பாடுபட்டிருப்பதை அதில் அறியமுடிகிறது!

முறையான கல்வியளிப்பதிலும் அதில் செழுமையடையச் செய்வதிலும் பெரும் கல்வியாளராகவே செயல்பட்டிருக்கிறார் ரேனியஸ். ஏனோதானோ வென்று பெற்றோர்களின் அக்கறையற்று பெயரளவில் செயல்பட்ட பள்ளிகளை மூடினார். பள்ளிகளுக்கென்றே சிறந்த ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சிப் பள்ளிகளை(செமினரி) ஏற்படுத்தி மிகச் சிறந்த ஆசிரியர்களை உருவாக்கினார். சாதியத்தைக் கடைப்பிடிப்பதைத் தமது பள்ளிகளிலும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலும் கடுமையாக எதிர்த்தார். பள்ளியின் கல்வித் தரத்தை ஆராய, கல்வி விசாரணை அல்லது பரீட்சிக்கும் ஆசிரியர் என்றதொரு(பதவியை) ஆய்வுக் குழுவையும் ஏற்படுத்தி (Inspecting School Master I.S.M) அவ்வப்போது பள்ளிக்கல்வியின் தரத்தைச் சீரமைத்தார். இச்செயல் முறை இந்தியாவில்

முதன்முதலாக ரேனியசால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு முறையாகவே அறியமுடிகிறது!

பெண்கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்து அதற்கென்றே பெண்கள் பள்ளிகளை ஏற்படுத்தி அனைவருக்குள்ளும் சமத்துவச் சிந்தையை விதைத்தவர் ரேனியஸ். கி.பி1823 ஆம் ஆண்டு பெண் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் , பெண் ஆசிரிய பயிற்சிப்பள்ளியையும் ஏற்படுத்தினார். இப்பள்ளியே இந்தியாவில் இரண்டாவது பெண்களுக்கான தங்கும் விடுதியுடனான பள்ளியாகும்.இன்றும் இது பாளையங்கோட்டையில் மேரி சார்சன்ற் பெண்கள் மேல்நிலைப்பள்ளியாக சிறப்பாக செயல்பட்டுவருகிறது. அடுத்தவர் சீரமைத்த நிலங்களை விளைவிப்பது எளிது! ஆனால் காட்டையும் மேட்டையும் திருத்தி விளைநிலமாக்கும் பணிகள் கடினமானவை! அதனை சுமார் 24 ஆண்டுக்காலம் நேர்த்தியாக செய்து புரையோடிப் போய்க்கிடந்த தமிழக மண்ணின் அசுத்தங்களை அறிவொளிப் புகுத்தி, அடையாளங்கண்டு ஒதுங்கவும் ஒழிக்கவும் செய்தவர் சமூகச் செயற்பாட்டாளர் ரேனியஸ் அவர்களே!!

1838 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் நாள் தனது 48 வது வயதில் இவ்வுலகவாழ்வை நிறைவு செய்தார்.அவரது கல்லறை, பாளையங்கோட்டை, தூய யோவான் ஆலயக் கல்லறைத்தோட்டத்திற்கு வெளியே சற்று தள்ளி ஊரின் நடுவில் அமைந்துள்ளது.

# 11. மெக்காலே மகாத்மாவா?

— முனைவர் சிவ. இளங்கோ




இந்தியாவின் தற்போதைய மதச் சார்புள்ள அரசாங்கம், சென்ற ஆண்டில் அறிமுகப்படுத்திய புதிய கல்விக் கொள்கைத் திட்டம் நாடு முழுவதும் பெரிய விவாதங்களையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியது. மதத்தைத் திணிக்கும் ஒரு கல்வி முறையாக இது பரவலான எதிர்ப்பைச் சந்தித்தாலும், அரசாங்கம் அதை வலுக்கட்டாயமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்தப் புதிய கல்விக் கொள்கை தற்காலத்தில் எதிர்கொண்ட எதிர்ப்புகளை விடவும், பிரிட்டிஷ் ஆட்சியின்போது மெக்காலே கொண்டுவந்த கல்விச் சீர்திருத்தம், அது மதச்சார்பற்றது என்றாலும், அந்நாளில் பெரும் எதிர்ப்பைச் சந்தித்தது.

இது குறித்துப் புதிய கோடாங்கியில் பல அறிஞர் பெருமக்களும் விளக்கம் அளித்திருந்தனர். "மொந்தை புதுசு கள்ளு பழசு" என்ற தலைப்பிட்ட (2020, செப்டம்பர்) கட்டுரையில், மெக்காலேயின் கல்வித் திட்டம் குறித்தும் அலசப்பட்டு இருந்தது. இக்கட்டுரையின்

சில கருத்துக்களும், பகுதிகளும் இணைய தளங்களில் பதிந்த போது அவை பெரும் விவாதப் பொருளாக மாறி இருந்தன.

மெக்காலேவின் கல்விச் சீர்திருத்தங்கள் சட்டமாக்கப் பட்டதை வைத்து, அவரை மகாத்மா அளவுக்குப் புகழ்ந்தவர்களும் உண்டு. அதேநேரம் அவர் இந்தியாவை மிகவும் இழிவாகக் கருதியவர் என்றும், இந்தியப் பண்பாட்டுக்கும், இந்தியப் பாரம்பரியக் கல்வி முறைக்கும் எதிரானவர் என்றும் அவரை எதிர்ப்பவர்கள் கட்டமைக்கும் கருத்துக்களின் உச்சமும் உண்டு. மெக்காலேவை எதிர்ப்பவர்கள், அவர் கூறியதாக, மிக முக்கியமான குற்றச்சாட்டின் ஒரு சான்றாகச் சுட்டிக்காட்டுவது இதுதான்.

"நான் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்துள்ளேன். அங்கே ஒரு பிச்சைக்காரரர் கூடக் கிடையாது. ஒரு திருடர் கிடையாது. மிக்க வளமான நாடு. உயர்ந்த ஆன்மீக மதிப்பீடுகள் கொண்ட நாடு. அதை வென்று அடிமைப்படுத்துவது எளிதல்ல. அதற்கு முதலில் அதன் இந்த வலிமையை உடைத்துத் தகர்த்தாக வேண்டும். அதனுடைய முதுகெலும்பாக உள்ள அதன் ஆன்மீக கலாச்சார மதிப்பீடுகளைத் தகர்க்க வேண்டும். அதற்கு நான் முன்வைக்கும் திட்டம் என்னவென்றால் அதன் பண்டைய கல்விமுறையை முதலில் தகர்க்க வேண்டும். அதனிடத்தில் ஆங்கிலக் கல்விமுறையை வைத்தால் தங்களுடைய கலாச்சாரம் முதலியவைதான் உயர்ந்தது என்கிற சுய பெருமிதத்தை அவர்கள் இழப்பார்கள்"

மேலுள்ள சொற்றொடரை மெக்காலே, இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் 2.2.1935 அன்று பேசியதாக மெக்காலே எதிர்ப்பாளர்கள் கூறி வருகிறார்கள்.

மெக்காலே இவ்வாறு கூறவில்லை என்று இதற்கு முன்பாகவே பல விளக்கங்கள் வெளியிடப்பட்டு விட்டன. ஆனாலும் மிகத் தந்திரமான ஃபோட்டோ ஷாப் தொழில்நுட்பத்துடன், அந்நாளில், அதாவது 1835 ஆம் ஆண்டு வெளியானதாக, மேற்கூறிய கருத்தை இணையதளத்தில் வெளியிட்டு, அதுதான் மெக்காலேவின் இந்தியாவைப் பற்றிய உண்மையான கருத்து என்ற புரளியைப் பரப்பிக் கொண்டு வருகிறார்கள்.

தாமஸ் பாபிங்டன் மெக்காலே (1800 - 1859) இங்கிலாந்தின் கிராமமான லைசெஸ்டர்ஷயரில் 25.10.1800 அன்று பிறந்தவர். எளிமையான குடும்பத்தில் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்த மெக்காலே, சிறுவயதிலிருந்து மிகவும் புத்திக்கூர்மை உள்ள மாணவராகத் திகழ்ந்தார். அறிவுத் தரம் உயர்ந்தோரில் ஒருவராக அவர் 1926 ஆம் ஆண்டு ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக அச்சகம் வெளியிட்டுள்ள "300 அறிவாளிகள்" (The Early Traits of 300 Genius) என்ற நூலில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டார். ஐம்பத்து ஒன்பது ஆண்டுக் காலமே வாழ்ந்த அவர், இறுதிவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. அதே நேரம் தனது கல்வியின் மூலம் அரசாங்கத்தின் உயர் பதவிகளை அடைந்தவர். அவரது மதிநுட்ப ஆலோசனைகளுக்காகப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பனியின் கவர்னர் ஜெனரல் வில்லியம் பென்டின்கின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 1834 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து, பிரிட்டிஷ் இந்திய கவர்னர் ஜெனரலின் ஆலோசகராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மெக்காலே, அதன் பிறகு 1838 ஆம் ஆண்டு தான் இங்கிலாந்து திரும்பினார்.

மெக்காலே இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் பேசியதாகக் குறிப்பிடப்பட்ட நாளில் (2.2.1835 அன்று) அவர் இங்கிலாந்தில் இல்லை. இந்தியாவில், கல்கத்தாவில் தான் இருந்தார். கல்கத்தாவில், பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலின் ஆளுநர் மாளிகையில், இந்தியக் கல்வி முறை குறித்து, பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் மற்றும் உயர்மட்டக் குழுவினர் முன்பு மெக்காலே நடத்திய விவாதங்கள் அவ் ஆணையத்தின் நடவடிக்கைக் குறிப்பில் உள்ளன. அவற்றில் 2.2.1835 ஆம் நாளில் இந்தியக் கல்வி முறை குறித்து மெக்காலே பேசியிருக்கிறார். அந்த உயர்மட்டக் குழுவில் மெக்காலே பேசாத ஒரு கருத்தை, அவர் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் பேசியதாக, அதுவும் இந்தியப் பண்பாட்டை அழிக்க வேண்டும் என்று பேசியதாக, மேற்குறிப்பிட்ட பேசாத பேச்சை வெளியிட்டுள்ளனர். சரி, கல்கத்தாவில் மெக்காலே என்னதான் பேசினார் என்பதைக் காணப் புகுமுன், அது தொடர்பான வரலாற்றுப் பின்னணியைக் காண்போம்.

மெக்காலே இந்தியா வருவதற்கு முன், இந்தியக் கல்விமுறை சமஸ்கிருதம் மற்றும் பாரசீகம் (அரேபியம்) ஆகிய இரு மொழிகளை மட்டுமே சார்ந்திருந்தது. இந்து மதத்தின் இரு பிறப்பாளர்கள் என்று கூறப்படும் பிராமண, பனியா, சத்திரியர், காயஸ்தர், காத்ரிஸ் என்னும் உயர் சாதியினருக்கு மட்டும் கல்வி சமஸ்கிருத மொழியிலும், பத்தன், அராபியர், மதம் மாறிய இருபிறப்பாளச் சாதியினருக்கு அரேபியக் கல்வியும் சாத்தியமாகி இருந்தது. உணவு உற்பத்தியில் கடும் உழைப்பாளிகளான சூத்திரர்களுக்கும், தலித்துகளுக்கும், ஆதிவாசிகளுக்கும், மகளிருக்கும் கல்வி மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது. 1817 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கிறித்துவ அமைப்புப் பள்ளி தான், முதன் முதலில் ஆங்கில மொழியில் கற்பித்தது. வில்லியம் கேரி (1761 - 1834) என்பவரால் கல்கத்தாவில், ராஜாராம் மோகன் ராயுடன் சேர்ந்து இந்தத் தனியார் ஆங்கிலப் பள்ளி தொடங்கப்பட்டது. அங்கும் இரு பிறப்பாளர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிக்கப்பட்டது. வில்லியம் கேரி இறந்த ஆண்டில்தான் (1834) மெக்காலே இந்தியா வந்தடைந்தார். மெக்காலேவின் முதல் திட்டமே இந்தியக் கல்வி முறையில் சமஸ்கிருதம், அரபிய மொழிகளை நீக்கி, ஆங்கில வழிக் கல்வி முறையைப் புகுத்துவது தான்.

அதற்கான காரணத்தைத்தான் கல்கத்தாவில் நடந்த உயர்மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் 2.2.1835 அன்று மெக்காலே பேசினார். அப்போது இந்தியக் கல்வி முறையின் பயிற்று மொழி குறித்து அவர் கூறும் பொழுது, இந்தியக் கல்வி முறையின் பயிற்று மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார். அவர் தனது உரையில், "இந்தியாவில் அதுவரையில் பழங்காலக் கல்வி முறைகள் சமஸ்கிருத மொழியிலும், அராபிய மொழியிலும் இருந்தன. இந்த இரண்டு முறைகளும் இந்தியாவின் வருங்கால இளைய தலைமுறையினர்க்கு ஏற்றதல்ல" என்று கூறினார். அதற்கான காரணத்தை, மெக்காலே இப்படிக் கூறுகிறார்.

"சமஸ்கிருத மொழி நூல்களிலிருந்து திரட்டி இருக்கக்கூடிய வரலாற்றுத் தகவல்கள் அனைத்தும், இங்கிலாந்தில் இருக்கும் குழந்தைகள் பள்ளியில் கொடுக்கப்படும் சுருக்கமான

பாடங்களுக்கு முன்னால் மதிப்பற்றவை என்பது தனது மிகையற்ற நம்பிக்கை. மேலும், ஐரோப்பிய நாடுகளின் மதிப்புமிக்க இலக்கியங்களுடன் ஒப்பிடக்கூடிய அளவில் அரபு, சமஸ்கிருத மொழியின் செய்யுள்கள் இல்லை. அப்படி இருக்கிறது என்று சொல்லக்கூடிய கீழை நாட்டு மொழிகளின் வல்லுநர் ஒருவரைக் கூட நான் சந்தித்ததில்லை"

இதுதான் மெக்காலே 2.2.1835 அன்று கல்கத்தாவிலுள்ள கவர்னர் ஜெனரல் மாளிகையில் இந்தியக் கல்வி முறை குறித்துப் பேசிய குறிப்புகளில் இடம் பெற்றிருக்கும் வாசகங்கள். இனி வருவதும் மெக்காலே பேசியவை தான்.

"ஆடு மாடுகளைக் கொல்வது என்னும் காலாவதியாகிப் போன வேதக் கருத்துக்களை மொழிவதிலும், ஒரு கழுதையைத் தொட்டுவிட்டுத் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்வதில் தங்கள் இளமையைக் கழித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை ஆசை காட்டி இழுப்பது இந்திய அரசாங்கத்தின் வேலை அல்ல" (இதில் கழுதை என்னும் சொல்லுக்கு மெக்காலே ஆங்கிலத்தில் பயன் படுத்திய Ass என்னும் பதத்திற்கு வேறு பொருள்களும் உண்டு).

"இப்படிப்பட்ட சூழ்நிலையில் வருங்கால இந்தியாவை உருவாக்க இந்திய மாணவர்களுக்குக் கணிதம், அறிவியல், நிலவியல் போன்ற பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதைக் கற்பிப்பதில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்" என்று மெக்காலே உறுதியாகக் கூறினார். ஆங்கிலக் கல்வி முறையைச் சார்ந்திருப்பது தான் எதிர்கால இந்தியாவிற்கு நல்லது என்றும், சுதந்திரமான அரசியலும், அப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் உள்ள அரசாங்கத்தை வகுத்தல் என்ற ஒரு கருத்தியலை உருவாக்குவதும் தான் எதிர்கால இந்தியாவுக்குத் தேவை என்பதும், எதிர்கால இந்திய அரசியல்வாதிகள் சுதந்திர உணர்வின் மகத்துவத்தை அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதும் மெக்காலேவின் கருத்துக்களாக இருந்தன (Macaulay's Minutes on Education, 2.2.1835).

இதற்கு முன்பும், இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும், மெக்காலேவின் குரல் இந்தியாவுக்கான உண்மையான விடியலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. “இந்திய மக்கள், மோசமான நிர்வாகத்தில் நமக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பதைக் காட்டிலும், நம்மிடமிருந்து சுதந்திரம் பெற்று நல்ல முறையில் நிர்வாகம் செய்யப்படுவதுதான் நமக்கு நல்லது” என்று 1832 ஜூலை 10ஆம் நாள் நடைபெற்ற பிரதிநிதிகள் கூட்டத்தில் (இங்கிலாந்தில்) மெக்காலே கூறினார்.

1832 இல், தான் ஆற்றிய உரையில் மெக்காலே பின்வரும் கருத்துக்களையும் கூறினார்: “கடுமையான தண்டனைச் சட்டத்தைக் காட்டிலும் மென்மையான தண்டனைச் சட்ட அமைப்பு முறையில்தான் நான் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளேன். பிராமணர்களுக்கு மென்மையான சட்ட விதிகளும், சூத்திரர்களுக்குக் கடுமையான சட்ட விதிகளும் இருப்பதுதான் தற்போதைய ஆட்சி அமைப்பு முறைகளில் மிக மோசமான ஒன்று. சாதி வேறுபாடுகளாலும் புரையோடிப் போயுள்ள பாரபட்சமான அணுகுமுறைகளாலும் இந்தியா ஏற்கெனவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.” என்று பிரிட்டிஷ் பேரரசு, இந்திய நிர்வாகத்தை ஏற்குமுன்பே, அதாவது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தின் போது பேசப்பட்டது என்ற உண்மை, மெக்காலேவின் எதிர்காலப் பார்வை எத்தனை சமத்துவமானது என்பதை நிரூபிக்கும். அதுமட்டுமல்ல, 1848-ஆம் ஆண்டில் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' வெளிவரும் முன்பே சமத்துவத்தை, அதுவும் சாதி ஒழிப்பின் சமத்துவ அரசியலைப் பற்றி மெக்காலே பேசினார் என்பதும் கவனிக்கத்தக்கது. இனவெறி நாட்டின் சிந்தனை, இதுவரையும் மேற்கத்தியர்கள் புரிந்துகொள்ள முடியாத சாதிவெறியைப் பற்றியும், அதை அழித்தொழிக்கும் வழியைப் பற்றியும் மெக்காலே வழி வெளிப்பட்டது என்பதும் கூட இந்தியாவைப் பொறுத்தவரைப் புதுமையானது தான். புத்தர், திருவள்ளுவர் ஆகியோருக்கு அடுத்துப் பேசப்பட்ட சமத்துவச் சிந்தனை மெக்காலேவுடையது என்பதையும் இந்தியச் சிந்தனையாளர்கள் முழுமையாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில், இந்தியாவுக்கு வந்த பின்னர் மெக்காலே மேலும் பேசினார்.

"நாம் அவர்களை அடக்கி, ஒடுக்கி வைத்திருப்பதற்காக இந்திய மக்களை அறியாமையிலேயே சிக்குண்டு வைத்திருக்கப் போகிறோமா? அல்லது விழிப்புணர்வுக்கான ஆவலைத் தூண்டிவிடாத அறிவைக் கொடுக்கலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது விழிப்புணர்வைத் தூண்டிவிட்டு அதற்கு உரிய வடிகால் இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறோமா? நமது அமைப்பு முறையின் வரம்புகளைக் கடந்து இந்திய மக்களின் மனம் விசாலமடையலாம்; அதாவது நிர்வாகத்தின் மூலம் நமது மக்கள் சிறந்த அரசை அமைத்துக் கொள்வதற்கான தகுதியைப் பெறுமளவுக்கு நமது சிறந்த அரசு நமது மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும். அதற்கான கல்வி ஐரோப்பிய மொழி மூலம் வழங்கப்பட வேண்டும். அதனால், எதிர்காலத்தில் ஐரோப்பியக் கல்வி நிலையங்களுக்கான தேவை ஏற்படலாம். அப்படிப்பட்ட ஒருநாள் என்றாவது வருமா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அதைத் தடுப்பதிலோ, தாமதப்படுத்துவதிலோ நான் ஈடுபடவே மாட்டேன். ஆனால், அப்படி ஒருநாள் வந்தால், அதுதான் ஐரோப்பிய வரலாற்றின் பெருமைக்குரிய நாளாக இருக்கும்" என்று கூறியதன் மூலம், 1835 ஆம் ஆண்டிலேயே மெக்காலேவின் சமத்துவச் சிந்தனை, இந்தியச் சுதந்திர உணர்வுக்கு வித்திட்டதை எப்படி மறக்கவும், மறைக்கவும் முடியும்?

இந்திய மக்களுக்குக் கல்வி வழங்குவதற்காக ஒரு லட்சம் ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு ஒப்புதல் கொடுக்குமாறு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் உத்தரவிட்டபோது, அதிகாரிகளிடையே மாறுபட்ட கருத்துகள் எழுந்தன. ஒரு தரப்பினர் அன்று நடைமுறையில் இருந்த அரேபிய மற்றும் சமஸ்கிருதக் கல்வியைத் தொடரும்படி வலியுறுத்தினர். மெக்காலேயின் தலைமையிலான மற்றொரு தரப்பினர், அறிவியல் களத்தில் விரைந்து முன்னேறுவதற்காக ஆங்கிலக் கல்விதான் தேவை என வலியுறுத்தினர். அரேபிய, சமஸ்கிருதக் கல்வியில் மோகம் கொண்டுள்ள தனது சக அதிகாரிகளைத் தன் கருத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்காக, அன்று அவர் பேசியது 15 ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்தின் நிலையைப் பரிகசிப்பதாக இருந்தது:

“15 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் எழுத்துகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்காக மேற்கத்திய நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளை நினைவுபடுத்துகிறேன். அந்தக் காலகட்டத்தில், வாசிக்கத் தக்க கருத்துகள் அனைத்தும் தொன்மையான கிரேக்க மற்றும் ரோமன் மொழிகளில்தான் இருந்தன. நமது மூதாதையர்கள், துசைடிடஸ் (Thucydides), பிளாட்டோ, டெசிடஸ் ஆகியோரின் மொழிகளைப் புறக்கணித்திருந்தால், இன்றுள்ள நிலையை இங்கிலாந்து எட்டியிருக்குமா?”

இந்திய மாணவர்களுக்குச் சுதந்திர உணர்வும், விடுதலை உணர்வும், சமத்துவம் நிறைந்த அரசியல் உணர்வும் ஊட்டக்கூடிய கல்வி முறை தேவை என்ற மெக்காலேவின் கருத்து, அவர் வெறும் கல்விப் புரட்சிக்கு மட்டுமல்ல, இந்திய விடுதலைக்கு வித்திட்ட மகாத்மா என்று மெக்காலேவை மகாத்மாவாக முன்மொழியும் கூற்றுகளும் உண்டு. அதற்கு அணிகலனாக, மெக்காலேவின் எளிமையை விரும்பும் பண்பைச் சுட்டிக்காட்டுகிறார் கல்வியாளர் டி ஷியாம் பாபு. அரசாங்கத்தின் மகத்தான கவுரவ முத்திரையான (லார்ட்) பட்டத்தைத் துறந்தவர் என்றும், இந்தியத் தன்மையிலிருந்து (சாதி, சமத்துவமின்மை) மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட "இந்தியக் குற்றவியல் சட்டத்தினைத் (இந்தியன் பீனல் கோடு - Indian Penal Code)" தனது கடும் உழைப்பால் வடிவமைத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் என்றும், இந்திய ஆட்சிப் பணி முதல் பல நிர்வாகப் பணி அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் இந்தியப் பணிச் சேவை (இந்தியன் சிவில் சர்வீஸ் - Indian Civil Services) அமைப்பை வடிவமைத்தவர் மெக்காலே என்றும் ஷியாம் பாபு கூறுகிறார். இந்தியாவில் நவீனச் சட்டங்கள் அவதாரம் எடுக்கவும், நவீன இந்தியா உருவாக்கத்திற்கும் உயிர்நாடியானவர் மெக்காலே என்பது, இந்திய வரலாற்று ஆய்வாளர் கே.எம். பணிக்கரின் கருத்து. ('விடுதலைக்கு வித்திட்ட மகாத்மா மெக்காலே'; சந்திர பான் பிரசாத் கட்டுரை. தமிழில் ராஜலட்சுமி சிவலிங்கம் /minnambalam.com/ 29.10.2017/ / livemint.com / indianexpress.com).

உயர்மட்டக் குழுவில் இருந்த சில ஆங்கிலேயர்கள், தங்கள் அனுபவங்களைக் கொண்டு, மெக்காலேவின் கல்விமுறை பலத்த

எதிர்ப்பைச் சந்திக்க நேரும் என்று எச்சரித்த போதும், இந்தியாவின் கல்வி முறை இங்கிலாந்தின் கல்வி முறையையும், ஆங்கில மொழியைச் சார்ந்தும் இருப்பதை மெக்காலே உறுதிப்படுத்தினார். மெக்காலேவின் கல்வி முறையைச் சனாதனிகளும் கடுமையாக எதிர்த்தனர். அவற்றைப் புறந்தள்ளிய மெக்காலே, அன்றைய அரசாங்கத்தின் பலத்தால், தான் தயாரித்திருந்த சீர்திருத்தக் கல்வியைச் சட்டம் ஆக்கினார். இதற்காக மெக்காலே கல்விமுறைக் குழுவினரோடும், இந்தியச் சனாதனிகளோடும் பல கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

மெக்காலே, இந்து சனாதன வாதிகளுடன் மூன்று கட்டமாக நடத்திய பேச்சுவார்த்தையின் முதல் கட்டத்தில், இந்தியர்கள் அனைவருக்கும் (அனைத்துச் சாதியினர், மகளிர்) கல்வி கொடுக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் அதைச் சனாதன வாதிகள் முழுமையாக மறுத்தனர். கல்வி என்பது பார்ப்பனர்கள் மற்றும் மேல் சாதி மக்களுக்கு மட்டுமே என்று அவர்கள் தங்கள் வாதத்தை வைத்தனர். இந்த முதல் கட்டப் பேச்சு வார்த்தையே பலகட்டமாக நீடித்தது. பல கட்டப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகும் எல்லோருக்கும் கல்வி என்ற நிலைப்பாட்டில் மெக்காலேயும், பிரிட்டிஷ் இந்திய அரசாங்கமும் உறுதியாக இருந்ததால் சனாதன வாதிகளுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது.

இரண்டாவது கட்டமாக எத்தகைய கல்வி என்ற பிரச்சினையில் கணிதத்தையும், அறிவியலையும் சேர்க்க வேண்டுமென்று மெக்காலே கூறியதற்குச் சனாதன வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். வேத, புராண, இதிகாசங்களைக் கற்பித்தால் போதும் என்பது அவர்களுடைய வாதம். இதுவும் பல கட்டப் பேச்சு வார்த்தைகளுக்கு உள்ளானது. மெக்காலே, வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னோக்கி ஓட்ட முடியாது என்று பிடிவாதமாக இருந்தார். அதை வைதீக பிராமணர்கள் இறுதி வரை ஒப்புக் கொள்ளவே இல்லை. இறுதியாக ஆங்கிலேயர்கள் தனிப்பட்ட அரசு ஆணை ஒன்றைக் கொண்டு வந்து அறிவியல், கணிதம் சார்ந்த கல்வி முறையை வலுக்கட்டாயமாக ஏற்படுத்தினர். அதையும் எதிர்த்துப் பிராமணர்கள் இங்கிலாந்துப்

பாராளுமன்றத்திற்கும், அரசருக்கும் மனுக்களை அனுப்பினார்கள். ஆனாலும் அது பயனளிக்கவில்லை.

மூன்றாவது கட்டமாகப் பயிற்று மொழி எந்த மொழியில் இருக்க வேண்டும் என்ற விவாதத்தில் மெக்காலே அரேபியம், சமஸ்கிருதத்தை விடுத்து ஆங்கில மொழியைத் தெரிவு செய்தார். ஆனால் வைதிகர்களின் தேர்வு சமஸ்கிருத மொழியும், அது உயர் வகுப்பினர்க்கு மட்டுமே கற்றுத் தர வேண்டும் என்பதாகவும் இருந்தது. அதற்கு ஒத்துக் கொள்ளாத மெக்காலே, பிரிட்டிஷ் பேரரசில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்திய நவீனக் கல்விமுறையை இந்தியர்கள் அனைவருக்கும் விரிவாக்கினார்.

இந்தியர்களின் கல்விக்காக மெக்காலே எவ்வளவு போராடியுள்ளார் என்பது அவரது அறிக்கை வழியாக வரலாற்றிலும் பதிவாகியிருக்கிறது. இதன் காரணமாகவே வைதிகச் சமுகம் இன்றுவரையும் மெக்காலேயின் கல்வி முறையையும், அவரையும் குறை சொல்லிக்கொண்டே இருக்கின்றனர். இதனால் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி படித்தவர்கள் மெக்காலேவின் குழந்தைகள் என்று கூடக் கேலியாக அழைக்கப்பட்டனர். இது மெக்காலேவிற்குக் குழந்தை இல்லாத நிலையைச் சுட்டிக் காட்டுவதாக நினைத்துச் சொல்லப் பட்டது தான். ஆனால் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் குழந்தைகள் மட்டும் இல்லை. மகாத்மா காந்தி, பண்டிதர் நேரு, முகமதலி ஜின்னா, டாக்டர் அம்பேத்கர் போன்ற மகத்தான தலைவர்கள் கூடத் தங்களின் கல்வியை இங்கிலாந்தில் படித்தவர்கள்; இங்கிலாந்தின் சட்டம் படித்தவர்கள்; இங்கிலாந்தின் நீதிமன்றங்களில் பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள். மகாத்மா ஜோதிராவ் புலேயின் ஆங்கிலக் கல்வி தான் அவரையும், அன்னை சாவித்திரி புலேவையும் கல்வித் தந்தை, தாயாக்கி மகா ஆத்மாக்கள் என்று போற்ற வைத்தது. பண்டிதர் அயோத்திதாசரும் அவரது முன்னோர்களும் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்ததையும், அப்படி இவர்கள் எல்லாம் பெற்ற கல்விச் சிந்தனைகளே, இந்தியச் சமுதாயத்தைச் சமத்துவத்தை நோக்கி மாற்றி அமைத்ததையும் நாடறியும். மெக்காலேவின் கல்வி முறையும், பயிற்சியும் தான் இந்தியாவுக்கான சுதந்திரத்தைப்

பெறுவதற்கு அவர்களுக்கு அடிப்படைத் தளத்தை அமைத்துக் கொடுத்திருந்தன.

மெக்காலே இந்தியத் தன்மை முழுவதையுமே இழிவாகக் கருதினார் என்றும், இந்தியாவிற்கு வரும் போது இந்தியாவைப் பற்றி ஒரு சார்பு எண்ணத்துடனும், இந்தியாவுக்கு அருள் புரிய வேண்டும் என்ற ஒரு தெய்வீகத் தன்மையுடனும் நினைத்துக் கொண்டு வந்தார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டது. இதற்குக் காரணம், "இந்துக் கடவுள்கள் கோரமான உருவத்துடனும், பயங்கரம், அருவருப்பு நிறைந்ததாகவும் உள்ளன. அறியாமையும், பழிப்புக்கு இடமாகும் கணபதி போன்ற உருவங்களும் கடவுளாக இருக்கின்றன" என்று அவர் கருத்து தெரிவித்ததுதான். முப்பதடி உயரமுள்ள மன்னன், முப்பதாயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று கூறும் இந்திய வரலாறும், மனிதர்கள் காலிலும், தலையிலும் முளைத்த கதையும் யாருக்குத் தேவை? இந்த உலகம் பாற்கடலால் சூழப்பட்டது என்று கூறும் நிலவியலின் மொழி அமைப்பின் புனிதம் என்னவாக இருக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார் (English Education Act, 1835 - Macaulay's Minute upon Indian education, wikipedia.org).

இந்து மதம் குறித்தும், கடவுள்கள் குறித்தும், வேதங்கள் குறித்தும் மகாத்மா ஜோதிராவ் புலே, அயோத்திதாசப் பண்டிதர், டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் இவர்களெல்லாம் என்ன கூறினார்களோ, இதே கருத்தைத் தான் இவர்களுக்கு முன்பாகவே மெக்காலே கூறினார். அது மட்டுமல்லாமல் இந்தியக் கல்விமுறையில், மேற்கூறிய இந்தியத் தலைவர்கள் ஆங்கிலத்திற்கு முன்னுரிமை கொடுத்ததைத் தான், அதற்கு முன்பே மெக்காலே உறுதிப்படுத்தி, அதைச் சட்டமாகவும் ஆக்கினார். இவை எல்லாம் தாமஸ் பின்னி என்பவர் தொகுத்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம் வழி பல பாகங்களாக வெளியிடப்பட்ட "மெக்காலேவின் கடிதங்கள்" நூலில் இடம் பெற்றுள்ளவை (online publication May 2010/cambridge.org).

மெக்காலே செய்தது உண்மையில் ஒரு கல்விப் புரட்சி தான். இப்படிப்பட்ட ஒரு புரட்சியைக் கொண்டு வந்தவரைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட விளைவுகள் (இந்திய விடுதலை உட்பட)

குறித்தும் ஏதும் சொல்லாமல், தங்கள் மதத்தையும், கடவுளையும் அவர் இழிவுபடுத்தினார் என்ற இந்துத்துவப் பார்வையை மட்டுமே கொண்டு, மெக்காலே மேல் சேற்றை வாரி இறைத்தது தான் அப்படிச் செய்தவர்கள் ஏற்படுத்திய விளைவுகள். மெக்காலே சொல்லாததை எல்லாம் அவர் கூறியதாக அவர்களால் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இவையெல்லாம் இந்துத்துவக் கருத்தியல் அடிப்படையில் தொகுக்கப்பட்டு, அவை "விடியல் கதிர்" என்ற தலைப்பில் நூலாக வெளிவந்து, பின்வந்த நாட்களில் இந்தியப் பத்திரிகைகளை ஆக்கிரமித்தன (The Awakening Ray, vol.4 - No.5, Published by Gnostic Centre/'Niti', Indian Magazine in 2002). இணையதளங்களில் புகுந்து விளையாடும் இணையதள வாதிகளால் (நெட்டிசன்கள்) இவை இன்னும் பரவலாக்கப்பட்டன.

இவற்றின் விளைவால் "மெக்காலே வின் கல்விப் புரட்சி என்பது இந்தியாவின் பண்பாட்டைக் கேவலப்படுத்திய செயல் என்றும், இந்தியாவின் முதுகெலும்பாக இருந்த இந்திய மரபுவழிக் கல்விமுறையை நொறுக்கியது தான் மெக்காலேவின் சாதனை என்றும்" கூறும் அளவுக்கு மெக்காலே எதிர்ப்பு வாதம் சென்றது. இதைப் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரான எல். கே. அத்வானியும் படித்து விட்டு மெக்காலேவைப் பற்றிக் கடுமையாகக் கருத்து தெரிவித்துள்ளார். இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமும் இதே கருத்திலேயே, தொலைக்காட்சி கருத்து விவாதங்களிலும் பேசி இருக்கிறார். இதற்கான அடிப்படை என்பது மெக்காலே இந்து மதம், வேதம், கடவுள்கள் குறித்துக் கருத்து தெரிவித்தது தான். ஆனால் இதன் மறுபக்கம் வேறு விதமாக உள்ளதை, "மெக்காலேவின் இகழ்ச்சியான பேச்சு ஒருபோதும் நிகழவில்லை" என்ற தி வயர் இணையத்தின் ஆய்வுக் கட்டுரை தெளிவுபடுத்துகிறது (19 2.2017 இல் பதிப்பிக்கப்பட்டது. thewire.in).

இந்தியச் சனாதனப் பாதுகாவலர்கள் தான் முதன்முதலில் ஆங்கிலக் கல்வியைப் பயின்றனர். அதற்கு முன்பு அரேபிய மொழியையும் அவர்கள் பயின்றனர். ஆட்சியாளர்களின் தாள் பணிவதும், பிறரைத் தன் தாள் பணிய வைப்பதுமே அவர்களின் இலக்காக இருந்தது. சமஸ்கிருதமோ, அரேபியமோ, ஆங்கிலமோ

அதுவரை உயர் சாதியினருக்கு மட்டுமே இருந்து வந்த கல்வியை, 1834 ஆம் ஆண்டு முதல் அனைவருக்கும், அதாவது அனைத்துச் சாதியினருக்கும், மகளிர்க்கும் என்று மடை திறந்த வெள்ளமெனக் கல்வியைப் பாய்ச்சியதாலேயே, மெக்காலே இந்தியச் சனாதனிகளுக்கு வேண்டாதவர் ஆகிவிட்டார். மெக்காலேவால் கொண்டுவரப்பட்ட ஆங்கிலக் கல்வியைப் பயின்று, பின்னர் அவரையே திட்டித்தீர்த்த சனாதனிகள் போல், கல்வி மறுக்கப்பட்டவர்களும் சேதியறியாது மெக்காலே மேல் கடும் விமர்சனம் வைக்கின்றனர். ஆங்கிலக் கல்விப் பாகுபாடு சாதிகளுக்குள் மறைவாக நிலவ, கிராமம் - நகரக் கல்வியில் அது வெளிப்படையாக நிலவுகிறது. ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் அதிகார மையம், உயர் வணிகம், உலக மயமாக்கல் என்று பவனி வரும்போது, மாநில மொழி கற்றவர்கள் பின்தங்கும் நிலை இன்றும் உள்ளது. இப்படிப் பின் தங்கியவர்களும் தங்கள் நிலைக்குக் காரணமாக்குவது மெக்காலேவைத்தான். இருமொழிக் கொள்கையை அறிஞர் அண்ணா காலத்திலிருந்து (1968) நடைமுறைப்படுத்திய தமிழ்நாட்டிலேயே இந்த நிலை என்றால், இந்தியாவின் மற்ற மாநிலங்களில் மும்மொழிக் கல்வியை ஏற்று, ஆங்கிலத்தை மூன்றாம் நிலைக்குக் கொண்டு சென்று, இந்தியர்களை மெக்காலே காலத்திற்கு முன் இருந்த நிலைக்குக் கொண்டு செல்வதையா "இந்தியா ஒளிர்கிறது" என்று சொல்ல முடியும்? அறிவுப் பாதையைத் தடுத்து நிறுத்துவதே சனாதனமும், இந்துத்துவமும் என்ற சிந்தனை எப்போது ஒளிரத் தொடங்கும்?

அனைவருக்கும் கல்வி என்ற நிலையைக் கொண்டு வந்த மெக்காலே, சட்டத்தின் முன் அனைவரையும் சமம் ஆக்கினார். இந்தியாவில் வர்ணமும், சாதியும், வந்தேறி நாட்டாண்மையும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் கோலோச்சி வந்த இருண்ட காலத்தை, இந்தியக் குற்றவியல் சட்டம் மூலமாக (ஐபிசி) 1835 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி மனு தர்மம் என்னும் அதர்மத்தைச் சட்டத்தின்முன் செல்லாக்காசு ஆக்கினார் மெக்காலே. பூர்வகுடி மக்கள் கல்வி கற்று, நிர்வாகத்தில் பங்கேற்பதற்காக "இந்திய சிவில் சர்வீஸ்" என்னும் அமைப்பை உருவாக்கினார் மெக்காலே. இந்தியாவில் சாதியினால் ஒடுக்கப்பட்டுப், பழிவாங்கப்பட்ட மக்கள், கல்வி கற்று, உயர்

நிலைப் பதவிகளை அடையவும், அரசாங்கத்தில் இடம்பெற்றுத் தங்களைத் தாங்களே நிர்வகிக்கவும், நிர்ணயிக்கவும் வேண்டும் என்ற மெக்காலேவின் விருப்பத்தைக் கல்வி மறுக்கப்பட்ட பல்லாயிரம் பேர் நிறைவேற்றினர்.


மெக்காலேவின் எதிர்பார்ப்புக்குச் சரியான இந்தியக் கல்வியாளர் ஒருவரைக் கூற வேண்டுமானால், உச்சமாக அண்ணல் அம்பேத்கரைத் தான் கூறமுடியும். அம்பேத்கரின் ஆங்கிலக் கல்வியும், வெளிநாட்டுக் கல்வியும் அவரைச் சமத்துவத்தின் உயரத்தில் ஏற்றி வைத்தன. புத்தரிடம் இருந்து பெற்ற சமத்துவப் பார்வையை அனைவருக்கும் விரிக்க அம்பேத்கருக்குப் பெருந்துணையாக இருந்தது அவர் கற்ற கல்வியே. அதுவே அவரை ஒரு நாட்டுக்கான அரசியலமைப்பை உருவாக்க வைத்தது. எங்கிருந்தோ வந்து சமத்துவத்தைச் சட்டப்பூர்வமாக்கிய மெக்காலேவின் எண்ணச் சிதறல்கள் அதில் குவிந்து கிடந்தன. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பக்கங்களில் மெக்காலே, அம்பேத்கர் முகங்களைச் சமத்துவ வாதிகள் காணமுடியும்.

மேற்கத்தியக் கல்வி முறையும், அதன் கல்வி நிறுவன அமைப்புகளும் இந்தியாவை உலகத்தோடு கைகோர்க்க வைக்கும் என்ற மெக்காலேவின் சிந்தனை, அம்பேத்கரிடம் இருந்ததை அரசியலமைப்பின் பக்கங்களைப் புரட்டினால் அறியமுடியும். இருவருக்கும் இடையில் கருத்தியல் ரீதியான ஒற்றுமையுடன், வெளிப்படையான ஒற்றுமையையும், இருவரின் மேற்கத்திய பாவனைகளில் காணமுடியும். எப்போதும் நூல்களைக் கையோடு வைத்திருக்கும் பிம்பங்களாக அடையாளப் படுத்தப் படும் புகழ்பெற்ற இருவரில், மெக்காலேவையும், அண்ணல் அம்பேத்கரையும் தான் உலகம் சிறப்புடன் அடையாளம் காட்டும். வர்ணம், சாதியினால் சனாதன பூமியாக்கப்பட்ட இந்தியாவை, சமத்துவப் பூமியாகக் கட்டமைத்த அந்த இருவருமே இந்தியாவிற்கு வழிகாட்டிகள். இருவருமே இந்தியாவின் மகாத்மாக்கள்.

## 12. எஸ்.பொ.: இரண்டெழுத்தில் ஓர் ஆளுமை

— அ.பாலமனோகரன்

குறிப்பு: அக்கினிக்குஞ்சு' அவுஸ்திரேலியா இணைய இதழும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு - ஜெர்மனியும் இணைந்து நடத்திய, ஈழத்தமிழ் எழுத்தாளர் மூதறிஞர் எஸ்.பொ. அவர்களின் நினைவுப் பேருரை மெய்நிகர் நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று (18.12.2021) எழுத்தாளர் அ.பாலமனோகரன், டென்மார்க் அவர்கள் வழங்கிய தலைமையுரை.




டென்மார்க்கில் வாழும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் மூத்தவன் நான் என்பதாலேயே எனக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது என்பதை நான் உணர்ந்தேன். இந்த நிகழ்வில் மூதறிஞர் எஸ்.பொ. அவர்களுடன் மிக நெருங்கிய நட்பைக் கொண்டிருந்தவர்களும், அவருடைய ஆக்கங்களை மிகவும் ஆழமாக ஆராய்ந்த அறிஞர்களும், அவருடைய அன்பு இரசிகர்களும் எனப் பல பேராசிரியர்களும், கல்விமான்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர். அவர் வளர்த்துவிட்ட எழுத்தாளர்களும் இவர்களுள் அடங்குவர். இந்த வரிசையில் வருவதற்கு எனக்குள்ள தகுதி மிகவும் குறைந்ததுதான். ஆனாலும் ஓர் ஈழத்தமிழ் எழுத்தாளன் என்ற வகையில் அமரர் அவர்களுடன் எனக்குப் பழகக் கிடைத்த ஒரு சில சந்தர்ப்பங்களை எண்ணிப் பார்க்கின்றேன்.

எஸ்.பொ. என்ற இரண்டெழுத்து ஆளுமை உலகத் தமிழ் இலக்கிய உலகில் மாத்திரமன்று, அரசியல், சமுதாய ஏற்றத் தாழ்வுகள், பொதுவுடைமை தனியுடைமை தத்துவங்கள், உளவியல் உண்மைகள், உறவுச் சிக்கல்கள், முரண்பாடுகள் போன்ற எண்ணற்ற பரந்துபட்ட துறைகளில் தனது ஆளுமையை மிக ஆழமாகப் பதிந்துள்ளது.

உலகத் தமிழ் இலக்கியப் பூங்காவில் பல நினைவுத் தூபிகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் எமது மனங்களில் பிரமாண்டமாக எழுந்து நிற்பது வள்ளுவருக்கு குமரிமுனையில் அமைக்கப்பட்ட அவருடைய சிலைதான். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் இவர் ஒருவரா எழுதினார் என மேல்நாட்டு அறிஞர்கள் பலர் அதிசயப்பட்டதாகவும் அறிகின்றோம்.

என்னுடைய எண்ணத்தில் அமரர் எஸ்.பொ. அவர்களும் உலகத் தமிழ் இலக்கியப் பூங்காவில் நிமிர்ந்து நிற்கும் ஒரு நினைவுத் தூபியாகவே தெரிகின்றார். வெறும் தூபியாக மட்டுமல்லாமல் அவர் ஒரு கோபுரமாகக் காட்சியளிக்கின்றார். அந்தக் கோபுரத்தில் அவருடைய அத்தனை ஆக்கங்களும் சிலைகளாக அமைந்துள்ளன. அவருடைய எழுதுகோல் சித்தரிக்காத துறைகளே இல்லை என்பதுபோல் பலநூறு படைப்புக்கள் அந்தக் கோபுரத்தில் மிளிர்கின்றன. இந்த மெய்நிகர் நினைவேந்தல் நிகழ்வில், பல அறிஞர்களும் பேராசிரியர்களும் என்னுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு அந்தக் கோபுரத்தைச் சுற்றிவந்து காட்டியது போன்று நான் உணர்ந்தேன். இவர்களில் சிலர் 'தோள் கண்டார் தோளே கண்டார்' எனக் கம்பன் கூறியதுபோல் தத்தமக்குப் பிடித்த சிலைகளையே சித்தரித்து மகிழ்ந்தனர். அமரரின் 'தீ', சடங்கு' போன்ற படைப்புக்களை மட்டுமே கஜுராஹோச் சிற்பங்களைப் போல் பார்த்துப் பரவசப்பட்டார்கள்.

ஆனால் பல பேராசிரியர்களும், அறிஞர்களும் அமரர் எஸ்.பொ.வின் ஏனைய பல, தனித்தன்மை வாய்ந்த வல்லமைகளை வியந்து, விபரமாக எனக்கு அறியத் தந்தனர். அப்போதுதான் சதாவதானி என்ற சொல் எனது நினைவுக்கு வந்தது. எந்த ஒரு விசயத்தைக் குறிப்பிட்டாலும் அதையிட்டுத்

தனது, தனித்தன்மை வாய்ந்த கருத்தைச் சொல்லவும், எழுதவும், கவி புனையவும் கூடிய ஆற்றலையும் கொண்டவர் எஸ்.பொ. அவர்கள் என எனக்குத் தெரியவைத்தனர். பல்துறை அவதானி என்று அழைக்கப்பட வேண்டியவர் எஸ்.பொ. அவர்கள். அவருடைய எழுதுகோல் தொடாத துறையே இல்லை என்று துணிந்து கூறமுடியும்!

எனது எழுத்தாசான் அமரர் மூதூர் வனா அனா அவர்கள்தான், தனது ஆத்ம இலக்கிய நண்பன் எஸ்.பொ. அவர்களையிட்டு எனக்குக் கூறியவர். ஒரு வரியிலேயே, இலக்கண வழு எதுவுமின்றி ஒரு சுவையான சிறுகதையை எழுதியவர் எஸ்.பொ. அவர்கள் என அறியத் தந்தார். இதைப் போன்றே அவரையிட்ட பல அரிய சங்கதிகளை அவர்மூலம் தெரிந்து கொண்டேன்,

நோபல் பரிசுபெற்ற வங்கக் கவிஞர் தாகூரைப் போன்று மகாகவி பாரதி உலகளவில் பிரசித்தம் பெறாது போனமைக்குக் காரணம் அவருடைய ஆக்கங்கள் ஆங்கிலத்திலே வெளிவராமையே என்று சொல்வார்கள். ஆனால் அமரர் எஸ்.பொ. அவர்கள் ஆங்கிலத்திலேயும் பல ஆப்பிரிக்க நாவலாசிரியர்களுடைய ஆக்கங்களை நமக்கு அளித்திருக்கின்றார்.

இவ்வளவு அற்புத ஆற்றல்கள் கொண்ட, மிக எளிமையான குணம் படைத்த எஸ்.பொ. அவர்கள் ஈழத் தமிழ் இலக்கிய உலகுப் பிரபலங்கள் சிலரால் கண்டுகொள்ளாமல் விடப்பட்டதும் உண்மைதான். ஆனால் தமிழ்நாட்டில் அவருக்கு அபரீதமான புரிதல் தமிழறிஞர் மத்தியில் இருந்தமை யாவரும் அறிந்ததே.

தர்மன் தர்மகுலசிங்கம் அவர்கள் நிகழ்வில், எஸ்.பொ. அவர்களைப் பற்றிய விரிவான ஓர் ஆராய்ச்சி நூலை பிஎச்டி பட்டம் பெறுவதற்கு எழுதி அதனை உலகறியச் செய்ய யாராவது முன்வந்தால் அதற்கான பொருளாதார உதவியைத் தானே வழங்கமுடியும் என்று அறிவித்திருந்தார். இக் கனவு நனவாகவேண்டும்.

எனது இரண்டு நாவல்களைத் தமிழ்நாட்டு வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் எஸ்.பொ. அவர்கள் தமது மித்ரா

பதிப்பகத்தில் வெளியிட்டிருந்தார். அந்த நூலுக்கு அவர் எழுதிய முன்னீட்டில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"மண்பற்றை ஒரு வெறியாகத் தன்னுள் வளர்த்து, கிழக்கிலங்கைக் கதைக்கலையின் பிதாமகராய் வாழ்ந்த வ. அ. வை ஆதர்சமாகவும், குருவாகவும் சம்பாவனை செய்யும் வன்னிக் கதைஞருடைய இரண்டு நாவல்களையும் கடந்த பத்து நாள்களுக்கிடையில் மூன்று தடவைகள் எழுத்தெண்ணி வாசித்திருக்கின்றேன். அத்தகைய வாசிப்பு ஒரு பதிப்பாசிரியர் ஒருவரின் கடமையாகும். அப்பணி பல சமயங்களில் சுமையாக இருக்கும். ஆனால், இங்கு அக்கடமை மகா சுகமாக அமைந்தது குறிப்பிடத் தக்கது."

என்னை 'வன்னிக்கதைஞர்' என அமரர் எஸ்.பொ. குறிப்பிட்டதை நான் மிகவும் உயர்வாகவே கருதுகின்றேன். வசிட்டர் வாயால் பிரம்மரிசி என அழைக்கப் பட்டமை போன்று!

தமிழ் இலக்கியப் பூங்கா போன்றே பலதுறைகளில் நினைவுப் பூங்காக்களும் நினைவுத் தூபிகளும் ஏராளமாக உள்ளன. எமது காலத்தில் இவற்றில் ஒரு சிலதையே தரிசிக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டுகின்றது. வானவெளியிலே ஒளிவீசும் எண்ணற்ற விண்மீன்களைப் போன்றும், கடற்கரைகளிலே கொட்டிக் கிடக்கும் கோடிக்கணக்கான மணற் துகள்கள் போன்றும் எண்ணுக்கடங்காத் தூபிகளும், கோபுரங்களும், நடுகற்களும் நிறைந்து கிடக்கின்றன.

இந்தப் பூங்காக்களின் தரையிலே, காலை தோன்றி மாலையில் மடிந்துவிடுகின்ற ஆயிரமாயிரம் புற்பூக்களும் உண்டுதான். இவை புற்பூக்கள் என்பதனால் அவை சமானியமானவை அல்ல! மன்னன் சாலமன்கூட அத்தகைய வண்ண ஆடைகளை அணிந்ததில்லை என்று இயேசு ஒரு சமயம் கூறியிருக்கிறார்.

இந்த உலகில் காலத்தைக் கடந்தும் வாழ்கின்ற ஆக்கங்களை எஸ்.பொ. அவர்கள் போன்ற மகாமனிதர்கள் எமக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் விட்டுச் சென்றுள்ளனர். தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும் என்பது

பொய்யாமொழிப் புலவர் எமக்குக் கூறியது. எச்சம் என்பதை ஒருவருடைய பிள்ளைகள் என உரையாசிரியர்கள் கூறுகின்றனர். அவர்கள் மட்டுமல்ல அவர்கள் வீட்டுச் செல்லும் ஆக்கங்களும் அவர்களுடைய எச்சங்கள்தான்!

எஸ்.பொ. அவர்களின் எச்சங்களாகிய அவருடைய ஆக்கங்களும் அவருடைய தகமையை எமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றன!

மூதறிஞர் எஸ்.பொ.வின் நினைவுப் பேருரை:
முதல் நாள் நிகழ்ச்சி - https://youtu.be/jhdCoGC3qoA
இரண்டாம் நாள்நிகழ்ச்சி - https://youtu.be/Xm4426tMVis

# 13. எஸ்.பொ. இன்றி நவீன ஈழத்தமிழ் இலக்கியம் இல்லை

— க. நவம்

குறிப்பு: அக்கினிக்குஞ்சு' அவுஸ்திரேலியா இணைய இதழும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு - ஜெர்மனியும் இணைந்து நடத்திய, ஈழத்தமிழ் எழுத்தாளர் மூதறிஞர் எஸ்.பொ. அவர்களின் நினைவுப் பேருரை மெய்நிகர் நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று (18.12.2021) எழுத்தாளர் க. நவம், இதழியலாளர், கனடா அவர்கள் வழங்கிய சிறப்புரை.

எஸ்.பொ.வுக்கும் எனக்கும் இடையிலான ஊடாட்டம் - ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவரது வகிபாகம் - அவரது இலக்கியம் சார் கருத்துநிலை - என எல்லை வகுத்து, எனது கருத்துக்களைச் சுருக்கமாக முன்வைக்கிறேன்.

நவீன ஈழத்தமிழ் இலக்கியப் புத்தகங்களைப் பள்ளிக் காலத்திலேயே படிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருந்தது. எஸ்.பொ.வின் 'சில புத்தகங்கள்' அப்போதைய என்னைப் போன்ற சின்னஞ் சிறிசுகளின் கண்ணில் பட்டுவிடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ, வீட்டில் புத்தகங்களோடு புத்தகமாய்ப் புதைத்து வைக்கப்பட்டிருந்த காலமது. விளங்கினது பாதி – விளங்காதது பாதியென, அசுமாத்தம் ஏதுமின்றி அவசர அவசரமாகப் படித்துவிட்டு, மீண்டும் கிடந்த இடத்தில் அப்படியே அவற்றை நானும் பதுக்கி வைத்த ஞாபகம். ஆனாலும் தொடர்ந்து அவ்வப்போது எஸ்.பொ.வைப் படித்துவந்த எனக்கு, அவரது எழுத்தில் காரணம் தெரியாத ஒரு கவர்ச்சி இருந்து வந்தது. அவரை என்றைக்காவது ஒருநாள் காணவேண்டும் என்ற 'காதல் மனதில் பெருகி இருந்தது' என்றுகூடச் சொல்லலாம்.


1973 அல்லது 74ஆக இருக்க வேண்டும் - கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் நான் ஆசிரியப் பணியாற்றிவந்த தருணம், அகில இலங்கைத் தமிழ்த் தினவிழா மிகப்பெரும் ஏற்பாடுகளுடன் அங்கு நடைபெற்றது. அதன்பொருட்டு எஸ்.பொ. உட்பட, கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளிகள் பலரும் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அன்றுதான் நான் எஸ்.பொ.வை முதன்முதலாகக் கண்டேன். சற்றே காலம் கடந்த காட்சிப் படிமத்துடன் கூறுவதாயின், 'மாமேரு மலையை அண்ணாந்து பார்த்த மலைப்புடன்' அவரைத் தூர நின்று பார்க்கக் கிடைத்ததே தவிர, துரதிருஷ்டவசமாக அவருடன் பேசவோ பழகவோ எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.


எண்பதுகளின் ஆரம்பத்தில் என்னினத்தவர்க்கும் எனக்கும் இலங்கையில் விளைவிக்கப்பட்ட இன்னல்கள் காரணமாக - நாடுகள், கடல்கள், கண்டங்கள் கடந்து, பரதேசியாக கனடா வந்து சேர்ந்திருந்தேன். ஆனாலும், எஸ்.பொ.வின் வார்த்தைகளில் சொல்வதாயின், நீண்ட பயணங்களிலும் அவற்றையும் மீறி, நெடிதுயர்ந்த ஆய்க்கினைகளிலும், அமோக இழப்புக்களிலும் 'நான் தமிழன்' என்ற பிரக்ஞையை மட்டும் கனடாவில் தொலைக்கவில்லை.

என்னைப் பொறுத்தவரை இங்கு கலை இலக்கிய முயற்சிகள் தவிர, மனதுக்கு இதந்தரும் வேறெந்தப் பொதுக் காரியங்களாலும் என் ஏதிலி வாழ்வின் தழும்புகளை என்னால் முற்றாக மூடிமறைக்க முடியவில்லை. இவைகளே எனது மனதுக்குக் குதூகலம் அளித்தன; வாழ்வுக்கு அர்த்தத்தை வழங்கின. ஆகையால், அவ்வப்போதான சிறுசிறு அஞ்ஞாதவாசம் தவிர, இத்துறைகளுடனான சிநேகிதம் இங்கும் தொடர்ந்தது.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் நான் வெளியிட்டுவந்த 'நான்காவது பரிமாணம்' கலை இலக்கிய இதழினூடாக, சென்னையில் தமது இலக்கிய ஊழியத்தை மேற்கொண்டுவந்த எஸ்.பொ.வுக்கும் எனக்கும் தொடர்புகள் ஏற்பட்டன. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களே புத்தாயிரத்தில் தமிழ் இலக்கியத்திற்குத் தலைமை தாங்குவார்கள் என ஒரு வெற்றுப் புலம்பலாய் அல்லாமல், ஆறுகோடி தமிழ் மக்கள் வாழும்

சென்னைத் தலைநகரிலே ஒவ்வொரு சொல்லினது அர்த்தமும் உணர்ந்து பிரசித்தம் செய்தவர், எஸ்.பொ. அந்த நம்பிக்கையின் அடையாளமாக, புலம்பெயர்ந்த கதைஞர்களின் 39 புதுக் கதைகளை ‘பனியும் பனையும்’ என்ற மகுடத்துடன் தமது மித்ர வெளியீடாக 94இல் வெளியிட்டார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க, கனடாவிலிருந்து கதைகளைத் திரட்டி அனுப்பியவர்களுள் நானும் ஒருவன்.
['பனியும் பனையும்' நூலினை 'நூலகம்' தளத்தில் - வாசிக்க... http://noolaham.net/project/01/65/65.pdf]






உலகச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு, 2000ஆம் ஆண்டு செப்ரெம்பரில் எஸ்.பொ. கனடா வந்து, 2 வாரம் தங்கியிருந்தபோதுதான் அவரைச் சந்தித்து நேரடியாகப் பேசிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கொள்கை அடிப்படையில் நாமிருவரும் முரண்பட்டவர்கள் தான்; ஆனாலும் இங்கு இடம்பெற்ற பல சந்திப்புகளின் போதெல்லாம் என்னோடு பயணிப்பதையே அவர் தமது விருப்புக்குரிய தேர்வாகக் கொண்டிருந்தார். மொன்றியால் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சந்திப்புக்கென, ஒருநாள் காலை புறப்பட்டு, அது முடிந்த கையோடு மீண்டும் அன்று மாலையே ரொறன்ரோ திரும்பினோம். எங்கள் இருவரதும் மனைவியர்கள் வாகனத்தின்

பின் இருக்கைகளில் அமர்ந்துகொண்டு, தத்தமது வீடுகளில் 'கோழி குட்டி போட்ட கதைகளையும் – ஆடு குஞ்சு பொரித்த கதைகளையும்' அந்நியோன்யமாக்கப் பரிமாறிக்கொண்டு வந்தனர்.

ஆனால் அந்த 12 மணிநேரக் கார்ப் பிரயாணத்தில் இடம்பெற்ற, 'குருஷேத்ர கீதா உபதேசத்தின்போது', தொடர்ந்து வினாக்களைத் தொடுத்த பார்த்தனாக நானிருந்தேன். கீதாசிரியன் கண்ணனாக இருந்து அலுக்காமல், சலிக்காமல் எனது வினாக்களுக்கான விடைகளாக அவர் மனம் திறந்து என்னோடு பகிர்ந்துகொண்ட செய்திகள், தகவல்கள், அனுபவங்கள், அறிவுரைகள் விலைமதிப்பற்றவை. தமது வாழ்வியல் அனுபவங்களை இளைய படைப்பாளிகளுடன் பகிர்ந்து கொள்வதை, இலக்கியச் சகாயத்திற்கு உதவும் ஒரு சல்லாபமாக மதிக்கும் அவரது அன்றைய பகிர்வுகள் ஓர் அருமந்த நூலாக ஆவணப்படுத்தப்பட வேண்டிய தகுதியுடையவை. அதேயாண்டு, மார்கழி மாதம் கனடாச் சிறப்பிதழாக, கணையாழி வெளிவந்தமைக்கும், அதன் தொகுப்பாசிரியராக நான் பங்காற்றியமைக்கும், எஸ்.பொ.வின் முன்னெடுப்பும் முயற்சியுமே முழு முதற்காரணங்கள். அதன் பின்னர் அவர் மறையும்வரை, சில கடிதங்கள், தொலைபேசி உரையாடல்கள் மூலமாக மட்டுமே அவருடனான உறவும் தொடர்பும் நீடித்திருந்தன.

இனி, ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவரது வகிபாகம் என்ன என்பதை ஒரேயொரு வரியில் சொல்வதாயின், எஸ்.பொ. என்ற இந்த மகத்தான இலக்கிய ஆளுமை இன்றி, ஈழத்து நவீனத் தமிழ் இலக்கிய வரலாறே இல்லை. சிறுகதை, உருவக்கதை, நாவல், நாடகம், கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, கல்வி, வானொலி, சினிமா என்று அவர் அகலக் கால் பதிக்காத துறையே இல்லை. அபிமன்யு, அம்யுக்தன், கொப்பன் கணபதி, கொண்டோடிச் சுப்பர், புரட்சிப்பித்தன், பழமைதாசன், ராஜ்மித்ரா, ராஜபுத்ரா என்ற மாறுவேடங்களுடன் எழுத்துலகில் நடமாடிய இவர், சிறுகதை மன்னன், ஈழத்து ஜெயகாந்தன், நடைச்சிற்பி என்றெல்லாம் விதந்துரைக்கப்பட்டவர்.

நவீன ஈழத்தமிழ் இலக்கிய உலகை ஒருகால் வழிநடத்திக்கொண்டுவந்த மாபெரும் இயக்கமொன்றைத் தமது வீரியம் மிக்க எழுத்தாற்றலைக் கொண்டும் - கரு, நடை, உத்திமுறை என்பவற்றைக் கையாளும் தமக்கேயான தனித்துவத்தினைக் கொண்டும் எதிர்த்து நின்ற துணிச்சலாளர். எதையும் புதிது புதிதாகச் செய்து பார்த்து, அதன் வெற்றி தோல்விகள் மீது மீண்டும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவராக, சக எழுத்தாளர் பலருடன் இணைந்து மத்தாப்பு, மணிமகுடம் போன்ற மேலும் பல கூட்டு முயற்சி இலக்கியங்கள் தோன்றக் கால்கோளமைத்தவர். ஆங்கிலப் புலமையாலும் - ஆசிய, ஆப்பிரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களில் வாழ்ந்தமையால் கிட்டிய பட்டறிவினாலும் - ஒரு பண்பட்ட படைப்பாளிக்குரிய பரந்துபட்ட பார்வையினையும் ஆழ்ந்தகன்ற நுண்ணுணர்வையும் தனதாக்கிக் கொண்டவர். இவ்வாறாக, தாம் சென்ற இடமெல்லாம் தமது கலாச்சாரத்தை, பண்பாட்டை, இலக்கியத்தை, தனித்துவத்தைப் பெருமையுடன் வெளிக்கொணர்ந்து வந்த பெருமகன், அவர். ஒரு யாழ்ப்பாணத்தவனாகப் பிறந்து, யாழ்ப்பாண வாழ்க்கையின் பழக்க வழக்கங்களை உட்கொண்டு, அதே சமயம் ஒட்டுறவற்ற ஒரு துறவு மனப்பக்குவத்துடன் யாழ்ப்பாண வாழ்க்கையை உற்றுநோக்கியதன் பெறுபேறாகவே ‘நனவிடை தோய்தல்’ என்னும் புதிய இலக்கிய வடிவம் உட்பட, அலாதியான படைப்புக்கள் பலவற்றை ஆக்கி அளித்தவர்.

மலிவான பிரசுர களங்கள் என்னும் போர்வையுடன், புலம்பெயர்ந்த தமிழனின் குருதியும் வியர்வையும் உறிஞ்சிச் சுகிக்கப்பட்டு வந்த ஒரு காசாசைக் காமாலை நோய்ச் சூழலில், மித்ர வெளியீடு என்ற அழுத்தகம் ஒன்றை ஆரம்பித்து, அவனதும் ஏனைய பலரதும் படைப்புகள் நூலுருப் பெறுவதற்கு ஆவன செய்தவர். இவ்வாறாக ஈழத்தமிழ் இலக்கியத்தில் அவர் வகித்த பாகங்களின் விபரங்களைத் தொடர்ந்து அடுக்கிக்கொண்டே போகலாம்.

எஸ்.பொ. ஒருமுறை சொன்னார், “தமிழ் ஊழியம் என்னைப் பொறுத்தமட்டில் ரோஜாமலர்ப் படுக்கையாக அமையவில்லை. அது முள்முடி தரித்த, சிலுவை சுமந்த யாத்திரை! ஏன் இந்த

ஆய்க்கினைகள்? என் தமிழ்ச் சேவிப்பிலே சதா புதிதுகளைத் தேடுகிறேன். அதுவும் இடையறாத ஓய்வில்லாத தேடல். அது இருட்டு அறையிலே கறுப்புப் பூனையைத் தேடுவதல்ல. அன்றேல் காரட் தொங்கும் தடிக்குப் பின்னாலான கழுதை ஓட்டமுமல்ல! அது உண்மையின் உள்ளொளி நாடிய தேடல்." எஸ்.பொ.வினது இலக்கியக் கருத்துநிலையினைக் கோடிட்டுக் காட்டுவதற்கு அவரது வாய்வழி வந்த இந்த ஒப்புதலை விட வேறென்ன வாக்குமூலம் வேண்டிக் கிடக்கின்றது?

கைதேர்ந்த எழுத்துநடை வேறுபாடுகளுக்கும் அப்பால், தமது எழுத்துக்களில் உயிராக - ஊடுபாவாகப் பரவியிருப்பது இலக்கியச் சத்தியமே என்பதை "There was something in common in the diversity of styles which I employ" என ஆங்கிலத்தில் அழகாக ஒருமுறை கூறியிருக்கின்றார்.

படைப்பாளிகள் சத்தியத்திற்கு முன்னுரிமை கொடுத்துப் படைக்க வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தும் எஸ்.பொ., இந்தப் படைப்புச் சத்தியத்திற்கு உண்மையே அழகு; பொய்மைக்குத்தான் பூ வேலையும் பூச்சு வேலையும் தேவை எனச் சொல்லியிருக்கின்றார்.

மேலும், "இலக்கியத்தில் சமூக முக்கியத்துவத்தை வலியுறுத்தும் உள்ளடக்கமே பிரதானமானது என மார்க்சியவாதிகள் கருதுகின்றனர்" எனக் கூறும் எஸ்.பொ., இலக்கியத்தில் இந்த உருவம், உள்ளடக்கம் என்ற பகுப்புமுறை கொச்சையானது என எதிர்வினையாற்றி வந்துள்ளார்.

இவ்விதமாக, இஸங்கள், கோட்பாடுகள், தத்துவங்களின் அடிப்படையில் வாழ்வியலை உற்று நோக்கும் வழிமுறையை விடுத்து, படைப்பு மொழியைத் தனது போக்கில் நகரவிட்டு எழுதும் கட்டற்ற எழுத்து முறையை அவர் கையாண்டவர். மூடி மறைக்கப்படும் மானுட நடத்தை குறித்த உண்மையை உண்மையாகச் சொல்ல வேண்டும் என்ற வேட்கையுடன், ஒரு சராசரி மனிதனது ஆழ்மன விருப்புக்களையும் சபல சஞ்சலங்களையும் இலக்கியமாக்கித் தந்தவர்.

மேலும், மண்வாசனையுடன் கூடிய ஈழத்து வட்டார மொழி வழக்குகளை, அட்ஷர லட்ஷணம் பிசகாதபடி, அவற்றிற்கே உரிய அழகியல் நுட்பங்களுடன் கையாண்டு வெற்றி கண்டவர் என்றும், ஒரு கைதேர்ந்த இலக்கியப் படைப்பாளிக்குரிய கட்டற்ற நுட்பமான கதைகூறு முறை கைவந்த கலைஞர் என்றும் விமர்சகர்களால் புகழ்ந்து கொண்டாடப்பட்டவர். ஒரு சிறுகதையையோ அல்லது ஒரு நாவலையோ படைக்க முற்படும்போது, அதில் தாம் சித்தரிக்கவிருக்கும் கருப்பொருளுக்கு ஏற்ற பொருத்தமான எழுத்து நடையையும் உருவத்தையும் கொடுக்க வேண்டும் என்று நம்பும் எஸ்.பொ., தம்மை அழகியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு படைப்பாளி என்று வெளிப்படையாகவே சொல்லிக்கொள்கின்றார்.

சர்ச்சைக்குரிய ஒரு படைப்பாளியாக தம்மை இனங்காட்டிக்கொண்ட அவர், எதன் பொருட்டும் சலுகை காட்டாமல் தன்னளவில் கண்ட உண்மைகளைத் துணிந்து சொல்லவும் எழுதவும் ஒருபோதும் தயங்கியதில்லை. அதன் உடனடி விளைச்சலாக ஏககாலத்தில் எதிர்ப்பையும் ஆதரவையும் சம்பாதித்துக் கொண்டவர். தமது செழுமை மிக்க மொழி வல்லபத்தினாலும் ஆக்கத்திறனாலும் நெருக்கமான உறவுகளையும், அதேவேளை ஆழமான பிளவுகளையும் எதிர்கொண்டவர். ஒரு படைப்பாளிக்கு அடிப்படைத்தேவை நுண்ணுணர்வு. அது இல்லாதவன் ஒரு படைப்பாளியே அல்ல. நுண்ணுணர்வு உள்ளமையால் தான் மற்றவர்களால் பார்க்க முடியாதவற்றை அவனால் பார்க்க முடிகிறது. அதேவேளை, அந்த நுண்ணுணர்வுதான் அவனை எதிர்வினை ஆற்றுபவனாகவும் ஆக்கிவிடுகின்றது. அதன் விளைவாக அவன் ஏகப்பட்ட புறந்தள்ளலுக்கும் ஆளாகின்றான். அது எல்லாப் படைப்பாளிகளுக்கும் ஏற்படக்கூடிய ஒரு பேரவலம், சாபக்கேடு. இந்நிலையில், நுணுக்கரிய நுண்ணுணர்வு கொண்ட எஸ்.பொ. மட்டும் எப்படி இந்த நியதியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்!

2000ஆம் ஆண்டு அவர் கனடா வந்திருந்த சமயம், ஒருநாள் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது, நான் கேட்டேன் – “பிரேம்ஜியும் கனடாவிலதான் தன்ர பிள்ளையளோட

வாழ்ந்துகொண்டிருக்கிறார், தெரியுமோ?" "ஓமடா தம்பி... கேள்விப்பட்டனான்" என்று எஸ்.பொ. சுருக்கமாகப் பதில் சொன்னார்.

"நான் உங்களைக் கூட்டிக்கொண்டு போறன். நீங்கள் ஏன் அவரை ஒருக்கால் சந்திக்கக் கூடாது?"

ஒரு கணநேர தாமதத்தின் பின் எஸ்.பொ. சொன்னார் - "அதுக்கென்ன, சந்திக்கலாம்..."

உடனே பிரேம்ஜியைத் தொலைபேசியில் அழைத்து "எஸ்.பொ. உங்களைச் சந்திக்க விரும்புறார். கூட்டி வரட்டுமா?" எனக் கேட்டேன். "எனக்கொரு பிரச்சினையும் இல்லை, நவம்." மறுமுனையிலிருந்து பதில் வந்தது. உடனடியாக நானும் எஸ்.பொ.வும் புறப்பட்டுச் சென்றோம்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆயுட்காலப் பொதுச் செயலாளராக இருந்தவர், பிரேம்ஜி. கோட்பாட்டு ரீதியில் கைலாசபதியையும் சிவதம்பியையும் பிரேம்ஜியையும் எஸ்.பொ. தன் பரமவைரிகளாக வரிந்துகட்டிக்கொண்டிருந்தமை ஊருலகறிந்த ரகசியம்.

அதே பிரேம்ஜியின் வீட்டை நாங்கள் சென்றடைந்தபோது, அவர் வாசலில் எமக்காகக் காத்து நின்றார். இருவரும் இன்முகத்துடன் ஒருவரை ஒருவர் வரவேற்றனர். இலக்கியக் கோட்பாட்டு முரண்பாடுகளையும் மன முறுகல்களையும் மறந்து, தேநீர் அருந்தி அன்போடு அளவளாவினர். சுமார் ஒரு மணித்தியால உரையாடலின் பின்னர் அதே மலர்ந்த முகத்துடன் பிரேம்ஜியிடமிருந்து விடைபெற்று என்னுடன் புறப்பட்டு வந்தவர், எஸ்.பொ.

இது மட்டுமன்றி, இதே முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளர் தெணியானின் தம்பிதான் நான் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தும், என்னோடு எந்தவிதக் கோபதாபமும் இன்றி, சம்பிரதாயம் ஏதுமற்ற

அன்போடும் அளவிறந்த மரியாதையோடும் உறவாடிப் பழகி வந்தவர், எஸ்.பொ.

என்னதான் கொள்கை ரீதியான மோதல்களும் முரண்பாடுகளும் இருந்தாலும், காலம் பூராவும் கறாரான விமர்சனங்களையும் கண்டனங்களையும் அள்ளிக் கொட்டினாலும், நேருக்கு நேர் காணக் கிடைக்கின்றபோது நயத்தக்க நாகரிகத்துடனும், இனிமை தோய்ந்த இங்கிதத்துடனும் பேசிப் பழகும் மனப் பக்குவம் பெற்றவர் எஸ்.பொ. அவர்கள் என்பதற்கான இருசிறு உதாரணங்கள் இவை. முடிவாக -

ஷேக்ஸ்பியர் தனது காதலிக்கு எழுதிய கவிதையில் இப்படிச் சொன்னாராம் –
‘So long as men can breath or eyes can see,
So long lives this, and this gives life to thee’
அதுபோலவே, மனித இனம் வாழும்வரை எஸ்.பொ.வின் படைப்புகளும் வாழும்; அவரது படைப்புகள் வாழும்வரை அவரும் இவ்வுலகில் தொடர்ந்து வாழ்வார்.

## 14. எஸ்.பொ. வுடனான எனது அனுபவங்கள்

— தியாகலிங்கம்

குறிப்பு: அக்கினிக்குஞ்சு' அவுஸ்திரேலியா இணைய இதழும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு - ஜெர்மனியும் இணைந்து நடத்திய, ஈழத்தமிழ் எழுத்தாளர் மூதறிஞர் எஸ்.பொ. அவர்களின் நினைவுப் பேருரை மெய்நிகர் நிகழ்ச்சியின் இரண்டாம் நாளன்று (18.12.2021) எழுத்தாளர் திரு. தியாகலிங்கம், நோர்வே அவர்கள் வழங்கிய உரை.

எஸ்.பொ. வுடன் எனக்கு இருந்த தொடர்புகள், அனுபவங்கள் பற்றி மிகவும் சுருக்கமாகக் கூறுவதென்றால், எஸ்.பொ. வுடனான பழக்கம் என்பது எனது வாழ்வில் கிடைத்த இலக்கிய, குருகுல, மனிதநேயக் கணத்துளிகள் என்றுதான் நினைக்கிறேன். அழிவின் அழைப்பிதழ் என்கின்ற நாவலை நான் காகிதத்தில் கிறுக்கி வைத்திருந்த காலம் அது. நோர்வேயின் வடதுருவத்தில் தனிமையாக இருக்கும் பொழுதே அந்தப் பணி நடந்தது. அதை வெளியிட வேண்டும் என்கின்ற பேராசையுடன் அலைந்து திரிந்தேன். அப்போது என்னோடு வசித்து வந்த குகனேரியப்பன் என்பவர் அவஸ்ரெலியாவில் வசித்து வந்த எஸ் கிருஷ்ணமூர்த்தி என்பவரைத் தொடர்புகொண்டு எஸ்.பொ.வை அறிமுகப்படுத்தினார். அதன் பின்பே 1994 ஆண்டு அவரைச் சந்திக்க சென்னை சென்றேன். அழிவின் அழைப்பிதழ் எனது முதலாவது நாவலாக அச்சேறியது. அது மித்ர பதிப்பகத்தின் நாலாவது பதிப்பும், முதலாவது நாவலுமாகும்.

ஒரு மதியம்போல கோடம்பாக்கத்தில் இருக்கும் பாலத்திற்குக் கீழே, மசூதியோடு இருந்த மித்ர அச்சகத்திற்குப் போயிருந்தேன். அப்பொழுது எஸ்.பொ, இளம்பிறை ரஹ்மான் இருவரும் அங்கே இருந்தார்கள். இருவரும் மிகவும் மென்மையாக அன்பாகப் பேசினார்கள். எஸ்.பொ கதைத்தால் அதில் நிறையத் தமிழ்

இலக்கியக் கூறுகள், நெளிவு சுளிவுகள், எள்ளல்கள், பொதிந்து இருக்கும். நட்பு அதில் உறவாடும். முதல் சந்திப்பிலிருந்தே எனக்குப் பிடித்துக்கொண்ட விடயம் அது. அவரது பேச்சுத் திறமைக்கு அவரே நிகர் என்பதே சத்தியம். சிலர் அவரை ஈழத்துப் பாரதி, ஈழத்து ஜெயகாந்தன் என்றெல்லாம் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரைத் தமிழுலகு மொத்தத்திற்குமான ஈடுயிணையற்ற படைப்பாளி அவர் என்று நினைக்கிறேன். வானத்தில் இருக்கும் நட்சத்திரம் போன்றவர். அவருக்கு ஈழம் என்று அணை போடக்கூடாது என்று நினைக்கிறேன். எப்படி பாரதி தமிழ் உலகு முழுமைக்கும் சொந்தமான, நிகரற்ற படைப்பாளியோ, அதைப்போலவே எஸ்.பொ. என்பது என் கருத்து.

கோடம்பாக்கத்தில் அவரைச் சந்தித்த போது அவரின் வயதிற்கு என்னால் அவரை ஒரு குருவாக, அல்லது அப்பா போன்ற ஸ்தானத்திலேயே வைத்துப் பார்க்க முடிந்தது. அதுவே எனது இறுதி வரையுமான எஸ்.பொ பற்றிய தரிசனமாக இருந்தது என்பதே உண்மை. ஆனால் நான் பார்த்தவரை அவர் எல்லோரையும் வயது வித்தியாசம், தகமை வித்தியாசம் இல்லாமல் நட்பாகவே நடத்துவார். நண்பர் போலவே பழகுவார். பாரியாரோடும் (ஈஸ்வரம்) மிகவும் தோழமையாகப் பழகுவார். சிறு குழந்தைகளுடனும் அதைப் போலவே பழகுவார்.

ஒரு நாவலை எழுதிவிட்டால் அதை வெளிக்கொண்டு வராது வைத்திருப்பது இயலாத காரியம். என்னிடம் சில நாவல்கள் இருந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு மீண்டும் விடுமுறை கிடைக்கும் போது சென்னை பயணமாவேன். ஆண்டுவாரியாகப் பட்டியல் இட முடியாத நிலையில் உள்ளேன். 1994 – 1999 இடையில் அவரை சில முறைகள் சந்தித்து இருக்கிறேன். அவருடன் ஒரு புத்தக அறிமுக விழாவிற்கு Book point இற்குச் சென்ற ஞாபகம் உண்டு. அப்படி ஒரு நிகழ்வில்; சிவசங்கரி, மாலன், அம்பிகைபாகன், பிரபஞ்சன், கணேசலிங்கம் மற்றும் பல இலக்கியப் பிரபலங்களை அவர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். கவிஞர் இன்குலாப்பை மித்திர அச்சகத்தில் வைத்து அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். அவர் தான் மாத்திரம் உயரத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணாது மற்றவரையும்

அந்த இடத்தில் வைத்துப் பார்க்கும் சிந்தனை கொண்டவர் என்பதை நான் கண்டேன்.



தியாகலிங்கம், எழுத்தாளர் சிவசங்கரி, ஏழத்தாளர் மாலன், யாழ்பாணன் எஸ்.பொ.

சென்னையில் அவரைச் சந்தித்தபோது வெறுமனே எனது நாவல்களைப் பிரசுரிப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது, அதை எப்படிச் செப்பனிடுவது (editing செய்வது) என்று எனக்குப் பயிற்சி தந்தார் என்பதை நான் என்றும் மறக்க முடியாது. நான் அதற்காகக் கோடம்பாக்கத்தில் அவரது பதிப்பகத்திற்கு அருகே இருந்த விடுதியில் தங்குவேன். அவர் அப்போது மாலை வேலைகளில் அங்கே வந்து, நாவலில் என்ன என்ன மாற்றம் செய்ய வேண்டும், எப்படி மெருகூட்ட வேண்டும் என்பதை அழகாகப் பயிற்றுவிப்பார். உண்மையில் நான் அச்சேற்றுவதற்குத் தயாராக இந்த நாவல்களை அங்கே கொண்டு சென்றது இல்லை. அதை அச்சேற்றுவதற்குத் தயாராக்கியதே அவர்தான். இதைச் சொல்வதற்கு நான் பின்னிற்கவோ வெட்கப்படவோ இல்லை. அன்று அவர் தந்த பயிற்சி இன்று எனக்கு உதவுகிறது என்பது உண்மை. ஆகக்குறைந்தது எனது படைப்புக்களையாவது நானே சொந்தமாக இயன்ற அளவு செம்மைப்படுத்தி வெளியிட முடிகிறது.

எஸ்.பொ, பாரியார் ஈஸ்வரம் அவர்களோடு ஒஸ்லோவுக்கு 2000 ஆண்டு இலக்கியப் பயணமாக வந்திருந்தார். எனது நாளை நாவலை வெளியிட்டதோடு ஒஸ்லோவில் இலக்கியச் சந்திப்பும் நடந்தது. அப்போது எனது இல்லத்திற்கும் வருகை தந்திருந்தார். அது எனது வாழ்நாளில் கிடைத்த பாக்கியமாக நினைக்கிறேன். எஸ்.பொ. வுக்கு பல அவமதிப்புகள் ஏற்பட்டதான வருத்தம் அவரிடம் இருந்தன. அது உண்மையும் கூட. ஈழத்திலும் சரி, புலம் பெயர்ந்த தேசங்களிலும் சரி சிலர் தங்களை மேதாவிகளாகக் காட்டிக் கொள்வதற்காக, அல்லது கருத்தியல் ரீதியாக வெல்ல முடியாத காழ்ப்பில் அவருக்கான மதிப்பை அளிக்கத் தவறிவிட்டார்கள் என்பது என் எண்ணம். இன்றும் அதைப் பலர் ஒத்துக்கொள்ள முடியாது இருக்கிறார்கள். அவர் வார்த்தையில் சொல்வதென்றால் 'எலியோட்டம் ஓடுகிறார்கள்'.

மேற்கூறியவற்றை விடவும் அவரிடம் வேறு சில கவலைகள் இருந்தன. அதைப்பற்றியும் என்னுடன் கதைத்தது ஞாபகம் இருக்கிறது. ஒன்று கோடம்பாக்கம் பாலத்திற்குக் கீழே இருந்த பதிப்பகத்தை மாற்ற வேண்டி வந்தபோது ஏற்பட்ட சிக்கல். அதில் அவர் மனமுடைந்து போய் இருந்தார். அது மிகவும் கரடுமுரடாக நடந்திருப்பதாக நான் உணர்ந்தேன். அதன் பின்பு பதிப்பக உரிமையில் அல்லது செயற்பாட்டில் ஏற்பட்ட சிக்கலிலும் மனமுடைந்து போய் இருந்தார். அதைப் பற்றிக் கதைக்கும் போது 'உங்கள் நேரம் என்பது தமிழ் உலகிற்கானது. அதை அற்ப விஷயங்களுக்கு நீங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள்' என்று கூறினேன். தமிழை வைத்து வியாபாரம் செய்கிறார்கள் என்கின்ற கோபமும் அவரிடம் இருந்தது. அதைச் சில முன்னீடுகளிலும் காணலாம்.

எஸ்.பொ. வுக்குச் சென்னையில் போகுமிடங்களில் நல்ல மதிப்பும், மரியாதையும் இருந்தன. அவரது பேச்சில் பலர் ஈர்க்கப்பட்டு இருந்தார்கள் என்பதை நான் கண்டிருக்கிறேன். சபையில் துணிவோடு, மிகவும் இயல்பாக அவரால் பேசமுடியும். அவர் பேசத் தொடங்கினால் அரங்கம் தானாகக் கட்டுண்டு கிடக்கும். கல்வி அமைச்சராக இருந்த அரங்கநாயகத்திடம் இருந்து ஒரு விருது கிடைத்தது. அதற்கு நானும் சென்றிருந்தேன். எதற்கு என்பது எனக்கு இப்போது ஞாபகம் இல்லை. மது அருந்துவதைப்

பற்றி எஸ்.பொ.வின் பாரியாருக்கு மிகுந்த கவலை இருந்தது. மது அருந்தாமலிருந்தால் இன்னும் அதிக காலம் இருப்பாரே என்றும், அதனால் தமிழுக்கு மேலும் ஊழியம் செய்ய முடியுமே என்று கவலைப்படுவார். அவர் வீட்டில் எனக்கும், ஓவியர் புகழேந்திக்கும், யுகபாரதிக்கும் ஒரு நாள் விருந்து கொடுத்தார். அப்போது இந்தியாவில் திருமணம் செய்திருந்த மகன் உயிரோடு இருந்த காலம். மித்ரவுக்கு அடுத்ததாக அதுவும் அவருக்குப் பின்னாளில் மிகுந்த கவலையைத் தந்த விடயமாகும்.

இவ்வளவு பிரச்சனை இருந்தாலும் காலையும் மாலையும் அலுவலகத்திற்கு வந்து, தனது தமிழ் ஊழியத்தை யாகம் செய்வது போலச் செய்வார். தொடக்கத்தில் சென்னையில் வாட்டி எடுக்கும் வெப்பத்திற்குள், ஒரு சிறிய இடத்தில் அது நடந்தது. பின்னாளில் அது விஸ்தரிக்கப்பட்டுக் குளிரூட்டப்பட்டது. எது எப்படி இருந்தாலும் ஒவ்வொரு கணமும் தமிழ் இலக்கியம் என்று வாழ்தல் அவர் வாழ்க்கையாக அமைந்தது. அதைப்போல ஈழத்திலும், புலம்பெயர்ந்த தேசங்களிலும் பலர் உண்மையான தமிழ் ஊழியம் செய்வது பற்றி அவர் பெருமைப்படுவார்.

ஒரு முறை ஒரு நாவலை வாசித்தால் பின்பு வரிவரியாக எங்கெங்கே என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுமளவிற்குக் கிரகிக்கும் அபார சக்தி அவரிடம் இருந்தது. அது என்னை வியப்பில் ஆழ்த்தும். அதைவிட அரசியலா, வரலாறா, பொது அறிவா, எது என்றாலும் ஆழமாக, துல்லியமாக அவர் நினைவில் நிலைத்து நிற்பதைப் பார்த்து அதிசயப்பட்டு இருக்கிறேன். அப்படியான விடயங்களை வாசித்து அறிந்து கொள்ளவும் அவர் ஊக்குவிப்பார். எனக்கும் சிலவற்றைப் பிரதி எடுத்துத் தந்திருக்கிறார். அத்தோடு எந்தெந்த படைப்புக்களை வாசிக்க வேண்டும் என்கின்ற தன் கருத்தையும் தெரிவிப்பார்.

நான் அவரைப் பார்த்துக் கற்றுக்கொண்டது என்னவென்றால், ஒரு நாளைக்கு ஒரு பக்கம் என்றாலும் எழுதுவது. ஒவ்வொரு நாளும் சிறிதாவது எழுத முயல்வது. எஸ்.பொ. இறுதிக் காலத்தில் தனது படைப்பைவிட மற்றவர்களின் படைப்பிற்கு அதிக நேரம் செலவு செய்திருக்கிறார். அதை நாங்கள் என்றும் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். தமிழ் உலகே அதற்கு நன்றி செலுத்த

வேண்டும். எஸ்.பொ. வின் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு விதமாக இருக்கும் என்பதைப் பலர் அறிந்திருப்பார்கள். அது மட்டுமல்ல, அவர் வெளியிட்ட ஒவ்வொரு புத்தகமும் ஒவ்வொரு தனி வடிவமைப்புடன், தனிக் கலையழகுடன் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதையும் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். பதிப்பாசிரியராக நிச்சயம் அவர் கௌரவிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

அவர் எழுதிய முன்னீட்டில் ஒரு பகுதி தொகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவை முழுமையாகத் தொகுக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்காக 1994 இல் இருந்து 2014 வரையும் ஒன்பது புத்தகங்களை வெளியிட்டுத் தந்ததிருக்கிறார். நான் அதற்கு என்றும் நன்றியுடையவன் ஆவேன். அதைச் சாத்தியமாக்க ஒத்துழைத்த அவரது துணைவியாருக்கும் குடும்பத்திற்கும் எனது நன்றிகள். ஒருகட்டத்தில் மித்ர அச்சகத்தை எடுத்து நடத்தும்படி கேட்டுக்கொண்டார். என்னால் நோர்வேயில் இருந்து குடிபெயர முடியாத இக்கட்டான நிலையிலிருந்ததால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. எஸ்.பொ. வுடன் பல முறை தொலை பேசியில் கதைக்கும் வாய்ப்பும், சில கடிதப் பரிமாற்றங்களும் எனக்குக் கிட்டியிருந்தன. அவையும் எனக்குக் கிடைத்த அற்புதமான நினைவுகளே.

எஸ்.பொ. வின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு பெரும் இழப்பு என்பது யாவரும் அறிந்ததே. என்னைப் பொறுத்தவரை எனக்கு ஒரு நல்ல ஆசானின், ஒரு நல்ல குருவின், ஒரு நல்ல தந்தை போன்றவரின் இழப்பாகும். எஸ்.பொ. அவர்கள் இலக்கியம் மட்டும் படைக்கவில்லை. பல புதிய எழுத்தாளர்கள் உருவாக ஊக்கமளித்தார். அவர்களை மேலும் செழுமைப்படுத்தினார் என்பதும் மறக்க, மறைக்க முடியாத வரலாற்று உண்மையாகும். அவர் இன்று இல்லாவிட்டாலும் அவர் படைப்புகள், அவர் ஆற்றிய தமிழ் ஊழியம் என்பன என்றும் அவரை ஞாபகம் கொள்ள வைக்கும் கல்வெட்டுக்கள். எஸ்.பொ என்றால் எஸ்.பொ. தான். அவருக்கு இணையாக யாரையும் ஒப்பிடத் தேவையில்லை. அவராக, அவரின் உச்சம், அதை யாரும் தொடமுடியாது என்று எண்ணுகிறேன்.

## 15. இனி வரும் உலகம்: பெரியார் ஈ.வெ.ரா.

— *பெரியார் ஈ.வெ.ரா.*




**முன்னுரை:**

இன்றைய உலகமானது பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்குநாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது? இனிச் சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும்? என்பனவாகிய விஷயங்கள் பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடுமே தவிர புராண இதிகாசப் பண்டிதர்கள் என்பவர்களுக்கு, அதுவும் நம் "கலை காவியப்" பண்டிதர்களுக்குத் தெரிவது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும் ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், பிரத்தியட்ச அனுபவத்திற்குச்

சம்பந்தப்படுத்த முடியாத கலை காவியங்களையும் படித்து, உருப்போட்டு, அவைகளிலிருப்பவைகளை அப்படியே மனதில் பதியவைத்துக்கொண்டிருப்பதோடல்லாமல், அவைகளில் சம்பந்தப்பட்ட கதை கற்பனைகளை உண்மையாக நடந்தவைகள் என்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களாவார்கள்.

பகுத்தறிவுவாதிகள், அந்தப்படிக்கில்லாமல், அனுபவத்தையும், தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும், வஸ்துக்களின் குணங்களையும், அவற்றின் மாறுதல்களையும், இயற்கையின் வழிவழித்தன்மைகளையும் அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டுவரும் புதுமை அதிசயங்களையும், மனிதனுக்கு முன்காலத்தில் இருந்துவந்த அறிவாற்றலையும் சிந்தித்து, இன்று உள்ள அறிவையும் ஆற்றலையும், இனி ஏற்படும் அறிவாற்றலையும், சாதனங்களையும், மற்றும் இவை போன்றவைகளையும் ஆராய்ச்சிக்காரர்களோடு நடுநிலையில் இருந்து பார்ப்பவர்களாவார்கள்.

பண்டிதர்கள், பழங்காலத்தையே சரியென்று கருதிக்கொண்டு அதற்கே புது உலகம் என்று பெயர் கொடுத்து அங்கே செல்ல வேண்டுமென்ற அவாவுடையவர்கள். பகுத்தறிவுவாதிகள் எவரும் ஒரொரு விநாடியையும் புதிய காலமாகக் கருதிப் புதிய உலகத்திற்குப் போவதில் ஆர்வமுள்ளவர்கள். பண்டிதர்கள் என்பவர்கள் "எந்த நாட்டிலும் இப்படித்தான் இருப்பார்கள்" என்று நாம் சொல்ல வரவில்லை. நம் நாட்டுப் பண்டிதர்கள் என்பவர்களில் பெரும்பாலோர்களைக் கருதித்தான் நாம் இப்படிச் சொல்கிறோம், ஏனெனில் நம்நாட்டுப் பண்டிதரென்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படவோ, அது வளர்ச்சியடையவோ முடியாமல் தடை செய்யத் தகுதியான மாதிரியிலேயே அவர்களது படிப்பும் பரிட்சையும் இருக்கிறது.

ஆதலால் நம் பண்டிதர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய அவர்களது அறிவுக் குறைவன்று.

தவறிக் கீழேவிழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரிலிருந்தால் எப்படி அதிக காயம் ஏற்படுமோ, அதுபோல் புராண இதிகாசக்

கலைச் சேற்றில் விழுந்த நமது பண்டிதர்களுக்கு, இயற்கை வாசனை அறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ்படுத்தத்தக்க வண்ணம், மூடநம்பிக்கைச் சமய(மத)ங்கள் என்னும் விஷப்பாம்புகள் அவர்களைக் கரையேறவிடாதபடி சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நம் மதவாதிகள்: சிறப்பாக இந்து மதவாதிகள் என்பவர்கள் பண்டித மதவாதிகளைவிட மோசமானவர்கள். பண்டிதர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போக வேண்டுமென்றால், மதவாதிகள் பதினாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும், பல யுகங்களுக்கும் முன்னால் இருந்த உலகத்துக்குச் செல்லவேண்டுமென்பவர்கள். இவர்கள் இருவருக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாததும் மனித சக்திக்கு மீறினதுமான காரியங்களிலும் அசாத்தியமான கற்பனைகளிலுந்தான் நம்பிக்கையும் பிரியமும் இருக்கும்.

ஆகவே இப்படிப்பட்ட இவர்களால் கண்டறியப்படும் புது உலகம் காட்டுமிராண்டிகள் வசிக்கும் உலகமாக இருக்கும் என்பதையும் அவர்களை மதிக்கும் மக்கள் பெரும்பாலும் மூடநம்பிக்கையில் மூழ்கிய காட்டுமிராண்டிகளாய் இருப்பார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆதலால்தான் பழையவைகளுக்கே மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பவைகளால் மாறுதலின் சக்தியும் அம்மாற்றத்தின் தன்மையும் அதனால் ஏற்படும் பயனும் உணர்ந்து கொள்ளவோ எதிர்பார்க்கவோகூட முடியாது என்று சொல்லவேண்டியதாயிற்று.

பழையவைகளை ஏற்ற அளவுக்கும் நற்பயன் தரவேண்டிய அளவுக்கும் உபயோகித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின்வாங்கமாட்டோம். ஆனால் புதியவற்றிலேயே முயற்சியும் ஆராய்வதில் ஆர்வமும் இருக்கவேண்டியது அவசியமாகும், ஏனெனில் அவற்றினால் தான் இயற்கையைப் படிப்பது என்பதோடு புதியவற்றைக் கண்டு பிடிப்பதும் முற்போக்கு அடைவதும் (இன்வென்ஷன், ப்ராக்ரஸ்) சுலபத்தில் சாத்தியமாகலாம்.

இன்று உலகத்தின் வேறுபல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும் அப்பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம் அந்நாட்டவர்கள், பழையவற்றோடு திருப்தி அடைந்து அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி அப்பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங்கொண்டு, நடுநிலைமை அறிவோடு, முயற்சித்ததின் பலனாலேயே ஏற்பட்டனைகளாகும். அவை இன்று எல்லா மக்களாலும் ஆதரவோடு அனுபவிக்கப்படுகின்றன.

ஆகவே, இதை உணர்ந்தவர்கள் தான் இனிச் சில நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் எப்படிப்பட்ட உலகத்தைக் காணலாம், அதற்கு என்ன முயற்சி செய்யலாம் என்பதை ஒருவாறு கற்பனைச் சித்திரமாகவாவது தீட்டமுடியும்.

**இனிவரும் உலகம்:**

உலகத்தை ஒருவாறு படித்தறிந்த பல பெரியார்களின் அபிப்பிராயங்களையும் உலகின் பல பாகங்களில் இதுவரை ஏற்பட்டு வந்திருக்கும் காரியங்களையும் ஊன்றிப்பார்ப்போமேயானால், இனிவரும் உலகமானது, அரசனது ஆட்சி அற்றதாகவே இருக்கும். ஏனெனில், இனிவரும் உலகம் , தங்கம், வெள்ளி முதலிய (உலோக) யங்களும் தனிப்பட்டவர்களுக்கென்று, சொத்து உடமை யும், உரிமையும் இருக்காது. ஆதலால் அப்படிப்பட்ட உலகத்துக்கு அரசனோ இன்றுள்ளது போன்ற ஆட் சியோ எதற்காக வேண்டியிருக்கும்! மக்கள் உயிர் வாழ்க்கைக்கும் ஓய்வுக்கும் அனுபவிப்புக்கும் இன்றுள்ள உழைப்புகள், கஷ்டங்கள், கட்டுக்காவல்கள் இருக்காது.

இன்றுள்ள பெருவாரியான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்யும் நேரம் அதிகம். பயன் அனுபவிக்கும் நேரம் குறைவு.

உண்ணும் உணவுப் பொருள்களுக்கும் அனுபவிக்கும் போகப்பொருள்களுக்கும் வசதி அதிகம். போதிய உணவு இல்லாமலும் குறைந்தபட்ச சுகபோக அனுபவ மில்லாமலும்

பட்டினி கிடக்கும் மக்களும் வறுமையை அனுபவிக்கும் மக்களும் அநேகம்!

சுயேச்சைக்கு வசதியும் சுய நிர்ணயத்துக்கு மார்க்கமும் தாராளமாய் இருக்கிறது. சுயேச்சையோடு இருப்பவர்களோ, தன்னம்பிக்கையோடு இருப்பவர்களோ மிகக் குறைவு.

பொருள் செய்கைகளும், அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருள்களும் ஏராளமாயிருக்கின்றன. குறைந்த அளவு, அதாவது, இன்றியமையாத, தேவையான பொருள்கூட இல்லாமல் கஷ்டப்பட்டும், வேதனையும் படுகிற மக்கள் அநேகர்.

நிலப்பரப்பு ஏராளம்; நிலமில்லாதவர்கள் என்பவர்கள் அநேகர். இப்படிப்பட்ட, சர்வ செல்வமும் நிறைந்துள்ள உலகில் பட்டினி, வறுமை, மனக்குறை வாழ்வுக்கே போராட்டம் ஏன் உண்டாகவேண்டும்?

இவைகளுக்கும், கடவுளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? இவைகளுக்கும், மதங்களுக்கும், ஏதாவது சம்பந்தம் உண்டா?

அல்லது இவைகளை கடவுளர்களுக்கும் சம்பந்தப் படுத்திக்கொண்டிருக்கும் மக்களில் எந்தக் கடவுளையாவது எந்த மதத்தையாவது நம்பிப் பின்பற்றி, வழி படுகிற மக்களில் யாருக்காவது மேலேகண்ட குறைபாட்டுணர்ச்சி இல்லை என்று கூறமுடியுமா?
அல்லது கடவுள், மதம் முதலியவைகளைப்பற்றி இலட்சியப்படாவிட்டாலும், மனிதனுக்கு மேற்கண்ட குறைகளை நீக்கிக்கொள்ள அறிவு இல்லை என்றாவது சொல்ல முடியுமா?

உலக சீவராசிகளுக்குள்ளே மனிதனே அதிக அறிவு பெற்றவன். கடவுள்களையும், மதங்களையும், ஞானமார்க்கங்களையும், ஆத்மார்த்த அரிய தத்துவங்களையும் மனிதன்தான் கண்டுபிடித்திருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் 'தெய்வீகசக்தி பெற்று' தெய் வத்தோடு கலந்தும், தெய்வமாகியும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களாலும் மேற்கண்ட குறைபாடு, பட்டினி, அவரவர் உணவுக்கே கஷ்டப்படுவது முதலாகிய

சாதாரணத்தன்மைகள் கூட நீடிக்கப்படவில்லை என்றால், இவற்றிற்கு முக்கிய காரணம், மேலே குறிப் பிட்ட கடவுள், மதம், ஞான மார்க்கம், நீதி, ஒழுக்கம், அரசாட்சி என்பவைகளும், மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட அதிக அறிவை மேற்கண்டவற்றின் கட்டுப்பாடுகளிலிருந்து வேறுபடுத்தித் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்காததும் தான் காரணங்களாகும் என்பது விளங்க வில்லையா?

இப்போழுது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட "ஆத்மார்த்தம்" முதலிய "சூட்சமங்களில்" உள்ள கவலையையும் மூடநம்பிக்கையையும் விட்டுத் தம் அறிவையும் அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததன் காரணமாகவே பல அற்புதங்களும், அதிசயங்களும் காண முடிந்தபின், மேல்நாடுகளிலே அதிகம் பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்து விட்டார்கள். பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். புதிய உலகத்தைப்பற்றியே சிந்திப்பதும் சித்தரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

> *ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபடவேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்து சிக்கலான பிரச்னைகளாக இருந்தவை இன்று தெளிவாக்கப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டும் வருகிற காலம் நடக்கிறது. இந்தப் போக்குச் சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும்படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான் நான் முன் சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது. அரச ஆட்சி இருக்காது. கடினமான உழைப்பு என்பது இருக்காது. இழிவான வேலை என்பது இருக்காது. அடிமைத் தன்மை இருக்காது. ஒருவரை ஒருவர் நம்பிக்கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது. பெண்களுக்குக் காவல் கட்டுப் பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.*

காந்தியாரைப் போலவும், மடாதிபதிகளைப் போலவும், அரசர்கள், ஜமீன்தாரர்கள் முதலிய பெரும் பெரும் செல்வான்கள், போக போக்கியம் அனுபவிப்போர்கள் போலவும், பார்ப்பனர்கள் போலவும், உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழவேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒருநாள் ஒன்றுக்கு ஒரு மணிநேரம், அல்லது இரண்டு மணி நேரத்துக்குமேல் வேலை செய்ய வேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தனது காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் "எனக்கு வலிக்கிறது" என்று சொல்லுவது போல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டது போல் நினைக்கும் படியும், அனுபவிப்பது போல் துடிக்கும்படியும் அவ்வளவு கூட்டுவாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்தப்பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்கை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்ய வேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள் 'உடற்பயிற்சிக்காக வேலை செய்ய வேண்டுமே', என்கின்ற கவலை கொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

அதிசயப் பொருளும், அற்புதக்காட்சிகளும், அவற்றின் அனுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல் அனுபவிப்பார்கள். இலேவாதேவிக்காரர்கள், தனிப் பட்ட வியாபாரிகள், தொழிற்சாலை, இயந்திரசாலை முதலாளிகள், கப்பல், இரயில், பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜண்டுகள், இன்சூரன்ஸ் ஏஜண்டுகள், தரகர்கள், விளம்பரங்கள், மற்றும் வேறு எவ்விதமான தனிப்பட்ட இலாபமடையும் மக்களும், தொழில்களும் எவையுமே இருக்காது. சண்டைக்கப்பல், யுத்தப்படை யுத்த தளவாடங்கள் வேண்டி இருக்காது என்பதோடு,

மக்களைக் கொன்று குவிக்கும் சாதனமோ அவசியமோ, எதுவுமே இருக்காது.

*வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச்சிறிய அளவுக்குவந்துவிடும். சுகம் பெறுவதிலும், போகபோக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும் முயற்சியும் வளர்ந்து கொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்தி செய்வதற்காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிகமிகக் குறை வாகவே இருக்கும்.*

உதாரணமாக, மக்கள் முன்பு கொஞ்சமான உடை அணிந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத்துக்குச் சுமார் 150 இழைகள் தான் கோத்து வாங்க (நெய்ய) முடிந்தது. இன்று மக்கள் முன்னைவிட பல மடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும், அவ்வளவும் கிடைக்கும் படியான அளவுக்கு மேலே நெசவுத்துறையில் விஞ்ஞானம் அபிவிருத்தி அடைந்து ஒரு நிமிஷத்துக்கு 15000 இழைகள் கோத்து வாங்கும்படியான இயங் திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிகரெட்டுகளைப்பற்றிச் சிந்திப்போமானால் அக் காலத்தில் ஒரு நிமிடத்துக்கு இரண்டு மூன்று சிகரெட் டுகள் தான் சுற்ற' முடிந்திருக்கும். ஆனால் இன்று ஒரு நிமிடத்துக்கு 2500 சிகரெட்டுகள் ஒரு இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதுவும் ஒருபக்கம் புகையிலையைப் போட்டால் மறுபக்கம், ரயிலில் எற்றும்படியான மாதிரியில் சிகரெட்டுப் போக்குகள் கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டு விடுகின்றன என்பதோடு அந்தச் சிகரெட்டுக் கம்பெனியின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் சரியாய்ப் பதியவில்லையானால், பதியாத சிகரெட்டை இயந்திரம் கீழே தள்ளி விடுகிறது. இப்படிப்பட்ட நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் போது, இனி வருங்கால இயந்திர உலகம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமா! இம்மாதிரி யாகவே வாழ்வுக்கு வேண்டிய

எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது, நாட்டு மக்களில்

ஒவ்வொருவரும் ஆண்டிற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகி விடலாம்.

**வேலை இல்லாமற் போகாது:**
ஆகவே ஒரு ஆண்டில் மீதி உள்ள 50-வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்கச்செய்யுமே என்று யாரும் பயப்படவேண்டியதில்லை.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும் யோசனையும் கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ, அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற் பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும், போக போக்கியத்துக்கும் யோசனைகளும் ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவைகளைச் சுலபமாகச் செய்ய வசதிகளும் கண்டு பிடிப்பதும், அவை நாளுக்குநாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்பட வேண்டி இருக்கும்.

அக்கால நிலை நாம் வரையறுக்க முடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்கும் என்று சொல்லுவது மிகைப்படச் சொன்னதாக ஆகாது. ஆதலால் மக்கள், குறிப்பாக அறிவாளிகள் சிந்தனையாளர்கள் முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு இவற்றின் மூலம் சதாவேலை இருந்து கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளது போல் கூலிக்கு வேலை செய்வது போலவோ, இலாபத்துக்கு வேலை செய்வதுபோலவோ இல்லாமற் உற்சாகத்துக்காகவும், போட்டிப் பந்தய உணர்ச்சி போன்ற தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் வேலை செய்வதாக இருக்கும்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்து முடித்து உலகுக்கு பயன்படச் செய்து கொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

**சோம்பேறிகள்:**

இப்படியானால் சோம்பேறிகள் வளர்ந்துவிடமாட்டார்களா, என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்க முடியாது. இருப்பார்கள் என்றே வைத்துக்கொண்டாலும் இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலையும் குறைந்து போகாது. அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் அப்படிப்பட்ட இவர்கள் வேலையில் ஈடுபடுவதைவிட சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமாயிருக்கும்.

பொதுவாகவே அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மையிலேயே தங்களுக்கு "வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே" "வீணாக நேரம் கழிகிறதே" என்று வேலைக்கு போராடிக் கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச்சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, யாருக்கும் கவலை இருக்காது. எல்லாமக்களுக்கும் அவர்கள் ஆசைதீர வேலை கொடுக்க முடியாத காலமாக இருக்குமே ஒழிய, அந்தக்காலம் வேலைக்கு ஆள் தேடவேண்டியதாகவோ, 'அவன் வேலை செய்யவில்லை' இவன் வேலை செய்யவில்லை' என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

**"இழிவான" வேலை:**

"இழிவான" வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா? என்ற கேள்வி பிறக்கலாம். இழிவான வேலை என்பது வருங்காலத்தில் இருக்க முடியாது. சரீரத்தில் செய்யப் படவேண்டிய எல்லாக் காரியங்களும் அநேகமாக இயந்திரங்களாலேயே செய்யும்படியாக ஏற்பட்டுவிடும். கக்கூசு எடுக்கவேண்டியதும், துலக்கவேண்டியதும், வீதி கூட்டவேண்டியதும்கூட இயந்திரத்தினாலேயே செய்து முடிந்துவிடும். மனிதன் பாரம் எடுக்கவேண்டியதோ ஆள் இழுக்க வேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவேயிருக்காது. அக்காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொதுஜன நன்மை சவுகரியம் ஆகியவைகளைச் செய்யவேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டியினால் 'இழிவான' வேலைக்கும் எப்போதும் கிராக்கி இருந்து கொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும், போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப் பார்கள். திறமையானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும், மற்றவர்கள் அலட்சியப்படுத்தப் படுவார்கள்.

**"ஒழுக்கக் குறைவு":**

அக்காலத்தில் 'ஒழுக்கக் குறைவு' என்பதற்கு இடமே இருக்காது. ஒழுக்கக்குறைவாய் ஒருவன் நடக்க வேண்டுமானால், அதனால் அவனுக்கு ஒழுக்கமாய் நடப்பதன்மூலம் கிடைக்கப்படாத ஏதாவது லாபமோ, திருப்தியோ, ஆசைப் பூர்த்தியோ ஏற்படவேண்டும். புதிய உலகில் தனிப்பட்டவர் தேவைக்கும் தனிப்பட்டவர் மனக்குறைக்கும், ஏங்கித் திரியும் ஆசைக்கும் இடமே இருக்காது. தன்னிலும் மேலாகவோ தன்னிடமிருப்பதை விட அதிகமாகக்கொண்டோ, வேறொருவன் இருக்கிறான், அனுபவிக்கிறான் என்கின்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான் அதிருப்தியும், மனக்குறைவும் ஏற்படும். அதை நிவர்த்தித்துக்கொள்வதற்குத்தான் எந்த மனிதனும் ஒழுக்கக் குறைவாய் நியாயவிரோதமாய் கட்டுத் திட்டத்துக்கு மீறி நடக்கவேண்டியவனாகலாம். பொதுவாக இன்று ஒழுக்கம், நியாயம், கட்டுத்திட்டம் என்பவைகளே பெரிதும் உயர்வு தாழ்வுகளையும் தனிப்பட்டவர்கள் உரிமைகளையும் சவுகரியங்களையும் நிலைநிறுத்த ஏற்படுத்தப்பட்டவைகளேயாகும். ஆகையால் இவை இரண்டும் இல்லாத இடத்திற் அவை இரண்டுக்கும் இடமிருக்காது. அதுபோலவே திருட்டுக்கும் இடமிருக்காது.

கங்கைக்கரை ஓரத்தில், குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருடவேண்டிய அவசியம் ஏற்படுமா? அல்லது அவர்களது தேவைக்கு மேல் அதிகமாக எடுப்பார்களா? "நாளைக்கு வேண்டுமே," என்று சேகரித்து வைக்க முயற்சிப்பார்களா? ஆதலால் தேவை உள்ள சாமான்கள் தாராளமாய் வழிந்தோடும் போது திருட்டுக்கு இடமே இருக்காது. அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது. பொய் பேசவேண்டிய அவசியமும்

இருக்காது. அதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய்பேசநேரிடும். குடியினால் மக்களுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்பட இடமிருக்காது, கொலை செய்யும்படி தூண்டத்தக்க காரியமும் இல்லாமல் போய்விடும். சூது ஆடுவது என்பதும், பந்தயப் போட்டியாயிருக்கலாமே தவிர பண நஷ்டமாக இருக்காது.

**விபசாரம்:**

விபசாரம் என்பதும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் பணத்துக்காகவும், பண்டத்துக்காகவும் விபசாரம் என்பது அடியோடு மறைந்தே போகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆளமுடியாது.

ஒருவர் தயவைக்கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது. ஒருவரை ஒருவர் அதாவது ஆணும் பெண்ணும் மனப்பூர்வமான சமவிருப்பமின்றி காதல் அனுபவிக்கமாட்டார்கள். கலவி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும், கல்வியும் ஏற்படும். ஆனதால் மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கையென்பதைத் தவிர, புதுமைக்காக, மாறுதலுக்காக அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது, அன்றியும் உடல் நலம் பற்றிய அறிவும் கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும், தன்மான உணர்ச்சியும் இருக்கும். "விருப்பமில்லாத இடத்தில், சம்பந்தம் இல்லாத இடத்தில் இச்சை வைப்பது தனது சுயமரியாதைக் குறைவு" என்றே ஆண் பெண் இருபாலரும் கருதுவார்கள். பெண் அடிமையோ ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ வற்புறுத்தலோ உடல் நலத்திற்கு கேடோ இல்லாமலும், ஒத்த காதல், ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட கலவியால் சமுதாயத்துக்கோ தனிப்பட்ட நபர்களுக்கோ எவ்விதக் கெடுதியும் ஏற்பட்டு விடாது. ஆதலால் விபசாரம் என்பதற்கு இடமில்லாது போகும்.

மூளைக்கோளாறான குணங்கள் என்பவைகளை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால் அதற்கு மாத்திரம் பரிகாரம் தேட வேண்டிய அவசியம் இருக்கலாம். அதுவும் அப்படிப்பட்டவர்களால் பிறருக்கோ, தங்களுக்கோ கேடு

ஏற்படுவதாய் இருந்தால் மாத்திரம் தானே? ஆதலால் பஞ்சேந்திரியங்களும் ஒரே துறையில் ஒரே சமயத்தில் இன்பந்தரக்கூடிய இவ்வின்பத் துறையில் இயற்கைக்கேடு, சமுதாயக்கேடு அல்லாமல் வேறு காரியத்திற்குக் கட்டுப்பாடு இருக்காது.

**மற்ற சவுகரியங்கள்:**

- போக்குவரவு எங்கும் ஆகாயவிமானமும் அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.
- கம்பியில்லாத் தந்திச் சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.
- ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.
- உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஒரு இடத்திலிருந்துக் கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்விகற்றுக்கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவு சத்துப்பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடங்கக் கூடிய உணவு ஏற்பட்டு விடும்.

மனிதனுடைய "ஆயுள் நூறு" ஆண்டு என்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம். இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண்பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்து துடனும், புத்தி நுட்பமும், அழகும் காத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாகப் பொலிகாளைகள் போல் தெரிந்தெடுத்த மணி போன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை 'இன்செக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்புக் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குள் கொண்டுவந்துவிடக்கூடும்.

**போகப்பொருள்:**
போகப் பொருள்களும் வெகு தூரம் மாற்றமடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்ற மடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார்கார் ஒரு அந்தர் வெயிட்டுக்கு வரலாம். பெட்ரோல் செலவு குறையலாம். பெட்ரோலுக்குப்பதில் மின்சார சக்தியே உபயோகப் படுத்தப்படலாம். அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடியவிதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும் பெருகும். விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன் படும்படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிக் கிடக்காமல் சகல மக்களுக்கும் சவுகரியம் தருகிற பொது சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனிவருங்காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள, அரசு, உடமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய பல துறைகளிலும், இப்போது எவை எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டுவருகின்றனவோ, அம்முறைகளுக்கெல்லாம் அவசியமில்லாமற் போய் விடும் என்பதோடு அவை சம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துக்கள் அர்த்தமற்றதாகவும் போய்விடும்.

**கடவுள்:**
இனிவரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப் படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால் சிறியோர்களுக்குப் போதிக்கப்பட்டும் காட்டப்பட்டுமே தோற்றமான எண்ணமும் உருவமுமாகும். ஆனதால் இனிவரும் உலகத்தில் கடவுளைப் பற்றி போதிக்கிறவர்களும் காட்டிக்கொடுப்பவர்களும் மறைந்து விடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர் களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப்போகும். ஏனெனில் கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு அவசியம் இருந்தால்தான் நினைப்பான் — சகல காரண காரியங்களுக்கும் மனிதனுக்கு விபரம் தெரிந்துவிடுவதாகவும்; சகல தேவைகளும் மனிதனுக்கு கஷ்டப்படாமல் பூர்த்தியாவதாகவும் இருந்தால் ஒரு மனிதனுக்கு கடவுளை கற்பித்துக்கொள்ளவோ நினைத்துக் கொள்ளவோ அவசியம் ஏன் ஏற்படும். மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு மோட்சமாய்க் காணப்படுமானால் விஞ்ஞானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான். அதற்கு ஏன் ஆசைப்படுவான். "தேவை அற்றுப்போன இடமே கடவுள் செத்துப்போன இடமாகும்" என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப்பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

சாதாரணமாக மனிதனுக்கு இன்று கடவுள் நிச்சயத்திற்கு ஒரே ஒரு காரணம் தானே இருந்து வருகிறது. அக்காரணம் என்ன வென்றால் "இந்த உலகத்தோற்றத்திற்குக் காரணம் என்ன? காரணபூதமாய் இருப்பது எது? அதுதான் கடவுள்" என்று சொல்லப்படுகிறது. இது விஞ்ஞானிக்குச் சுலபத்தில் அற்றுப்போனவிஷயம். நம்முடைய வாழ்வில் நாம் எதை கடவுள் செயல் என்று உண்மையாய்க் கருதுகிறோம்? நம் அனுபவத்திற்கு வந்த ஒவ்வொன்றுக்கும் நாம் சமாதானம் தெரிந்து கொள்ளுகிறோம். தெரியாதவற்றைத் தெரியாது என்று ஒப்புக்கொள்ளுகிறோம். தெரிந்ததைத் தெரிந்தது என்று சொல்லுகிறோம். இதுவேதான் உலகத்தோற்றத்துக்கும் உலக நடப்புக்கும் கொள்ள வேண்டிய முறையாகும். ஒருசமயம் உலக நடப்புக்குக் காரணம் தெரியாவிட்டாலும் அதற்காக ஒரு காரியத்திற்கும் தேவை இல்லாத கடவுளை எவனும் வணங்கமாட்டான்.

**மோட்ச நரகம்:**

*புதிய உலகத்தில் மோட்ச நரகத்திற்கு இடம் இருக்காது. நன்மை தீமை செய்ய இட மிருந்தால் தானே மோட்சமும், நரகமும் வேண்டும்; எவருக்கும் யாருடைய நன்மையும் தேவை இருக்காது. புத்திக்கோளாறு இருந்தால் ஒழிய ஒருவனுக்கு ஒருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக்கேட்டுக்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட நிலையில் மோட்ச நரகத்துக்கு வேலை ஏது? ஆள் ஏது?*

எனவே இப்படிப்பட்ட நிலை புதிய உலகத்தில் தோன்றியே தீரும். தோன்றாவிட்டாலும் இனிவரும் சந்ததிகள் இந்த மாறுதல்களைக் காணவேண்டுமென்றும், இவைகளால் உலகில் மக்களை இப்போது வாட்டி வரும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, வாழ்க்கை என்றால் பெருஞ்சுமை என்று சலித்துக்கொண்டும் வாழ்க்கையென்றால் போராட்டம் என்று திகைத்துக் கொண்டும் இருக்கிற நிலைமை போய், வாழ்க்கை என்றால், மக்களின் இன்ப உரிமை என்ற நிலைமை உண்டாக வேண்டுமென்றும், ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்.

"நம்மால் என்ன ஆகும். அவனன்றி ஓரணுவும் அசையாதே என்று வாய் வேதாந்தம் பேசமாட்டார்கள். நம் கண்முன் காணப்படும் குறைபாடுகளைப் போக்க நாம் எப்படி உழைக்க வேண்டும் என்பதே அவர்களின் கவலையாகவும் அவர்களின் எண்ணமாகவும் இருக்கும். என்றோ யாரோ, எதற்காகவோ, எழுதிவைத்த ஏட்டின் அளவோடு நிற்கமாட்டார்கள். சுய சிந்தனை யோடு கூடிய தாகவே அவர்களின் செயல்கள் இருக்கும். மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கிவிட முடியும் என்ற ஆசையும் நம்பிக்கையுங்கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு, மனித சமுதாயத்தை நாளுக்குநாள் முன்னுக்குக்கொண்டு வந்தவண்ணமாகவே இருக்கும். சுய சிந்தனைக்கு இலாயக்கற்றவர்களே இந்த மாறுதல் களைக்கண்டு மிரள்வதும், 'காலம் வரவரக் கெட்டுப் போச்சு', என்று கதறுவதுமாக இருப்பார்கள்.

இன்றைய மக்களிலே பலருக்கு, பழமையிலே இருக்கும் மோகம், அறிவையே பாழ்செய்து விடுகிறது, புதிய உலகத் தோற்ற வேகத்தைத் தடை செய்துவிடுகிறது. பழைய முறைப்படி உள்ள அமைப்புகளால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும் பாமரரின் ஞானசூன்யம், சுயநலக்காரனின் எதிர்ப்பு எனும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலை செய்வோரே, இனிவரும் உலகச் சிற்பிகளாக முடியும்.

அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று, வாலிபர்கள், பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வரவேண்டி இதை முடிக்கிறேன்.

இனி வரும் உலகம்: பெரியார் ஈ.வெ.ரா.
குடி அரசு பதிப்பகம், ஈரோடு
ஆறாம் பதிப்பு - 1961
தமிழன் அச்சகம், ஈரோடு.
விலை: 15 காசு
[தமிழ் இணையக் கல்விக்கழகம் —
https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0010846_இனி_வரும்_உலகம்.pdf]

# 16. சாக்கிய வேதந் தேக்கிய பாதம்: வடலூர் வள்ளலார்

— ஆ.சிவசுப்பிரமணியன்

நீதிமன்ற வழக்குகள் என்பன அவை உரிமையியல் வழக்காக இருந்தாலும், குற்றவியல் வழக்காக இருந்தாலும் பெரும்பாலும் தனிமனிதரைச் சார்ந்தவை யாகவே இருக்கும். இதனால் இவ்வழக்குகளின் மீது வழங்கப்படும் தீர்ப்புகளை வெறும் செய்தியாக மட்டுமே பெரும்பாலோர் படிப்பர்.

தம் சட்ட அறிவுக்குத் துணைபுரியும் என்றும் வேறு வழக்கில் மேற்கோள்காட்ட உதவும் என்றும் கருதினால் வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் நீதிமன்றத் தீர்ப்புகள் சிலவற்றை வரி பிறழாது படிப்பர்.

ஆனால் இவ்வெல்லையைத் தாண்டி சமூக வரலாற்றாவணமாக நீதிமன்றத் தீர்ப்புகள் சில அமைந்துவிடுவதுண்டு. வரலாற்றாய்வாளர்களும், சமூகவியல் ஆய்வாளர்களும் படித்து விவாதிக்கும் தகுதியை இவை பெற்றிருக்கும். இத்தீர்ப்பின் வாசிப்புத்தளம் இதனால் விரிவடைந்துவிடும்.

இத்தகையத் தீர்ப்புகளில் தீர்ப்பு வழங்கியவரின் சட்ட அறிவு மட்டுமன்றி, அவரது உலகக் கண் ணோட்டமும் சார்புநிலையும்கூட வெளிப்படும். அத்துடன் சில வரலாற்றுண்மைகளையும் சமூகச் சிக்கல்களையும் இவை வெளிப்படுத்தி நிற்கும். இத்தன்மை வாய்ந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பொன்றை இக்கட்டுரை அறிமுகம் செய்கிறது.

வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் (1823-1874) வடலூரில் நிறுவிய சத்திய ஞான சபையை மையமாகக் கொண்டது இத்தீர்ப்பு. இத்தீர்ப்பை வழங்கியவர் நீதியரசர் சந்துரு.

வழக்கின் பின்புலம்:
வழிபாட்டிற்காக உருவம் எதுவும் நிறுவப்படாத சத்தியஞான சபையில் சிவலிங்கம் ஒன்றை சபாபதி சிவாச்சாரியார் என்பவர் 2006இல் நிறுவினார். 'பிரதோசம்' அன்று அதற்கு வழிபாடு நிகழ்த்திப் பிரசாதங்களும் திருநீறும் வழங்கினார். அவரது இச்செயல் இச்சபையை நிறுவிய வள்ளலாரின் கோட்பாடுகளுக்கு முரணானது என்று, அவரைப் பின்பற்றுவோர் சிலர் இந்து அறநிலையத் துறையிடம் முறையீடு செய்தனர். இம்முறையீடே இவ்வழக்கின் தொடக்கமாக அமைந்தது.

விசாரணை:
13.07.2006இல் இதுதொடர்பான விசாரணையை இந்து அறநிலையத் துறை மேற்கொண்டது. இவ் விசாரணையை இந்து அறநிலையத் துறையின் இணை ஆணையர் நடத்தினார். இவ்விசாரணையில் மேற்கூறிய சிவாச்சாரியார் கலந்து கொள்ளவில்லை.

இராமனாதபுரம் மாவட்டம் புதுக்குடியைச் சேர்ந்த தொண்டர்குல வி.பெருமாள் என்பவர் 22.08.2006இல் நடந்த விசாரணையில் கலந்துகொண்டு அறிக்கை அளித்தார். அதன் சுருக்கம் வருமாறு:
-- 18.07.1872இல் வள்ளலார் வகுத்த விதிமுறைகளின் படி பன்னிரெண்டு வயதுக்கு உட்பட்ட, எழுபத்தி யிரண்டு வயதுக்கு மேற்பட்ட எவரும் சத்தியஞான சபையைத் தூய்மைப்படுத்தி விளக்கு ஏற்றலாம்.

-- 18.09.2006 அன்று உதவி ஆணையரும் சத்திய ஞான சபையின் நிர்வாக அதிகாரியும் மனு அளித்தனர். சமயம் சார்ந்த வழிபாடு நடத்தி வள்ளலாரின் அடை யாளத்தைச் சிதைக்கக் கூடாது என்று இருவரும் தம் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இதே நாளில் மேற்படி சிவாச்சாரியார் தமது வழக்கறிஞர் வாயிலாக மனுவொன்றை அளித்தார். இம்மனுவில் 25.01.1872ஆம் ஆண்டில் முதல் முறையாகத் தைப்பூசத் திருவிழா நடைபெற்றதாகவும், தம்முடைய தாத்தாவிடம் கண்ணாடி ஒன்றையும், விளக்கு ஒன்றையும் வள்ளலார் வழங்கியதாகவும், அன்றிலிருந்து தற்போதைய பூசைமுறை தொடங்கிய தாகவும்

அவர் குறிப்பிட்டிருந்தார். தம் மனுவுடன் ஆறு ஆவணங்களையும் இணைத்திருந்தார்.

முதல் ஆவணத்தில் வள்ளலாரின் கையப்பம் இருந்தது,
11.02.1941இல் நடந்த திருவிழா அழைப்பிதழ் இரண்டாவது ஆவணமாகவும்,
01.02.1942இல் நடந்த திருவிழாவின் அழைப்பிதழ் மூன்றாவது ஆவணமாகவும் இடம்பெற்றிருந்தன.
நான்கு மற்றும் அய்ந்தாவது ஆவணங்கள் தைப்பூசத் திருவிழா தொடர்பான ஆவணங்களாகும்.
அறங்காவலர்கள் பட்டியலாக ஆறாவது ஆவணம் அமைந்திருந்தது.

நிகழ்வின்போது நிர்வாக அதிகாரியாக இருந்த சங்கர நாராணயன் சத்தியஞான சபை அறக் கட்டளையின் தலைவர் வி.எம்.சண்முகம் மற்றும் இதர அறங்காவலர்களான அருட்பா அண்ணாமலை, எம்.ஏ.ராஜன், கணக்காளர் பி.ஞானப்பிரகாசம் ஆகியோர் இணை ஆணையரிடம் மனுச்செய்தனர். இம்மனுவில் பின்வரும் கருத்துக்கள் இடம் பெற்றிருந்தன:
-- வள்ளலார் காட்டிய வழிகாட்டுதலின்படி ஜோதி வழிபாடே நிகழுதல் வேண்டும்.

-- பிராமணர் ஒருவர் வழிபட விரும்பினாலும்கூட அவர் தனது பூணூலை நீக்கி, தன் சாதியடையாளத்தைக் கைவிட்டே வழிபடவேண்டும். ஆனால் மனுதாரர் சபையின் கிழக்குப் பகுதியில் சிவலிங்கத்தை நிறுவி சமயச் சடங்குகளையும் மேற்கொண்டுள்ளார். திருநீறு விநியோகித்துள்ளனர். இதை உறுதி செய்யும் வகையிலான புகைப்படங்களும் துண்டறிக்கைகளும் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இம்மனுக்களில் இடம்பெற்றுள்ள செய்திகளின் அடிப்படையில் இவ்வழக்கில் பின்வரும் வினாக்களுக்கு விடைகாண வேண்டும் என்று இணை ஆணையர் முடிவு செய்தார். அவர் எழுப்பிய மூன்று வினாக்கள் வருமாறு:

1. சத்தியஞான சபை தொடங்கிய 25.01.1872 லிருந்து யார் சடங்குகளைத் தொடங்கியது?
2. உருவ வழிபாடு எப்போது தொடங்கியது? எப்போது சிவலிங்கம் நிறுவப்பட்டது.
3. இச்சடங்குகள் வள்ளலார் வகுத்த விதிமுறை களுக்கு உட்பட்டனவா?

இவ்வினாக்களுக்கான விடைகளாக தம் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:
சபாபதி சிவாச்சாரியார் வழங்கியுள்ள ஆவணத்தில் நாள், திங்கள், ஆண்டு எதுவும் இல்லை. இதில் இடம் பெற்றுள்ள சபாபதி சிவாச்சாரியார் வள்ளலார் ஆகியோரின் கையப்பங்கள் அடையாளம் காணப் படவில்லை. இதன் நம்பகத்தன்மை நிலைநாட்டப் படவில்லை.

சபாபதி சிவாச்சாரியார் 13.11.1903வரை அறங் காவலராக இருந்ததாகவும், அவரது உடல் நலக் குறைவுக்குப் பின்னர் அவரது மகனும் மருமகளும் அறங்காவலர்களாக இருந்து தைப்பூசத் திருவிழாவின் போது சைவ சமயம் சார்ந்த சடங்குகளை மேற்கொண் டிருந்தனர் என்ற வாதத்திற்குச் சான்றுகளில்லை. மேலும் சபாபதி சிவாச்சாரியார் மரபினர் அறங்காவலர்களாகத் தொடர்ந்து இருந்தார்கள் என்பது நிரூபிக்கப்பட வில்லை. அத்துடன் அறங்காவலர்களே பூசகர்களாக இருந்துள்ளனர் என்பதும் நிரூபிக்கப்படவில்லை.

25.01.1872இல் சத்தியஞான சபை நிறுவப்பட்ட பின்னர் 18.07.1872இல் வழிபாட்டு முறைகள் வகுக்கப் பட்டன. ஜோதி வடிவிலேயே இறைவனை வழிபடும் முறையைத் தவிர வேறு வழிபாட்டு முறைகள் பின் பற்றப்படவில்லை. தற்போதைய லிங்க வழிபாடு மிக அண்மைக்காலத்திலேயே தொடங்கியுள்ளது. இது வள்ளலார் வகுத்துள்ள விதிமுறைகளுக்கு முரணானது.

இணை ஆணையரின் வழிகாட்டுதல்:
மேற்கூறிய அறிக்கைகளையும் ஆவணங்களையும் மட்டுமே சான்றுகளாகக் கொள்ளாது, 18.07.1872

அன்று சமரச சுத்த சன்மார்க்க சபையை நிறுவியபோது, வள்ளலார் வகுத்த விதிமுறைகளின் சாரத்தைப் பட்டியலிட்டு இவையே இச்சபையின் செயல் பாட்டுக்கான வழிகாட்டி என்று இணை ஆணையர் சுட்டிக்காட்டினார். அவை வருமாறு:

1. சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்தோர் வள்ளலார் வகுத்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
2. பன்னிரெண்டு வயதுக்கு உட்பட்டோரும், எழுபத்தியிரண்டு ஆண்டுகட்கு மேற்பட்டோரும் சத்தியஞான சபையில் வழிபாட்டை நடத்த வேண்டும்.
3. உள்ளமும் உடலும் தூய்மையானவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.
4. நீராடிய பின்னர் தம் பாதங்களை ஆடையால் மறைத்துக்கொண்டு தகரத்தாலும் கண்ணாடி யாலும் செய்யப்பட்ட பெட்டியில் இருக்கும் ஜோதியை அறையில் இருந்து எடுத்துவந்து மேடையில் வைக்க வேண்டும்.
5. தம் பாதத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு நான்கு நாட்களுக்கு ஒருமுறை கருவறையில் நுழைந்து, கண்ணாடி விளக்கையும் மற்ற இடங்களையும் தூய்மைப்படுத்த வேண்டும்.
6. இதைத்தவிர வேறு எதையும் அங்கு மேற் கொள்ளக்கூடாது.
7. ஞானசபையின் திறவுகோல் நிரந்தரமாக ஒருவரிடமே இருக்கக்கூடாது. பணிமுடிந்ததும் திறவுகோலைப் பெட்டியன்றில் வைத்துப் பூட்டி பின் அறையையும் பூட்டி அத்திறவு கோலை அப்பகுதியைப் பாதுகாக்கும் காவலரிடமோ, நிர்வாக அதிகாரியிடமோ கொடுத்துவிட வேண்டும்.
8. சத்தியஞான சபையில் ஓசையின்மை உறுதி யாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.
9. எண்ணெய் ஊற்றி எரியும் ஜோதியை தகரத்தாலும் கண்ணாடியாலும் செய்யப் பட்ட பெட்டியில் வைத்துக் காட்ட வேண்டும்.
10. ஜோதியைக் காட்டும்போது மக்கள் இரைச்சலின்றி ‘அருட்பெருஞ்ஜோதி’ என்ற மந்திரத்தைக் கூற வேண்டும்.
11. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியன வற்றில் அவர்கள் நம்பிக்கை கொள்ளாதிருக்க வேண்டும்.
12. சைவம், வைணவம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகியனவற்றில் நம்பிக்கை இல்லாதிருக்க வேண்டும்.

இவ்விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வழக்கை ஆராய்ந்து சிவாச்சாரியார் மேற்கொண்ட வழிபாட்டு முறையைத் தடை செய்து இணை ஆணையர் உத்தரவிட்டார்.

மறுஆய்வு மனு:
இணை ஆணையரின் இத்தீர்ப்பை எதிர்த்து மறு ஆய்வு மனுக்களை இந்து அறநிலையத் துறையின் ஆணையரிடம் சிவாச்சாரியார் அளித்தார். இவற்றில் பின்வரும் வாதங்களை அவர் முன்வைத்தார்:
1. தாம் நிறுவிய சத்தியஞான சபையை சிவாலய மாகவே வள்ளலார் கருதினார்.
2. சிவ ஆகம விதிப்படியே இதில் வழிபாடுகள் நிகழ்ந்தன.
3. மனுதாரரின் (சிவாச்சாரியாரின்) முன் னோர்கள் சிவ ஆகம விதிப்படியே இதில் வழிபாடுகளை நடத்தி வைத்தனர்.

இவ்விவாதங்களை நிலைநாட்டப் பின்வரும் அய்ந்து சான்றுகளை அவர் முன்வைத்தார்:
1. வள்ளலார் தாம் எழுதும் கடிதங்களை 'உ' 'சிவமயம்' என்று தொடங்கி, சிதம்பரம் ராமலிங்கம் பிள்ளை என்று கையெழுத் திடுவார்.
2. சத்தியஞான சபையென்பது சிதம்பரம் சித்திர சபையின் மற்றொரு பகுதியாகும்.
3. தமது ஆறாம் திருமுறையில் சிவன், சிவ வழிபாடு, சித்திர சபை ஆகியன குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.
4. சிவலிங்கம், தூபதீபம், கண்ணாடி ஆகிய பூசைப்பொருட்களை சபாபதி சிவாச்சாரி என்பவரிடம் (வாதியின் முன்னோர்) ஒப்படைத்தார்.
5. சத்தியஞான சபை தொடங்கப்பட்டபோது பின்பற்றப்பட்ட சடங்குகளும், பூசை முறை களும் இன்றுவரை பின்பற்றப்படுகின்றன.

சபாபதி சிவாச்சாரியாரின் இம்மனுவை எதிர்த்து இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் அருகிலுள்ள புதுக்குடியைச் சேர்ந்த தொண்டர்குல வி.பெருமாள் என்பவர் எதிர்வாதங்கள் சிலவற்றை முன்வைத்தார். அவற்றுள் முக்கியமான சில செய்திகள் வருமாறு:



சத்தியஞான சபையைத் தெய்வ நிலையமாக வள்ளலார் உருவாக்கினார். தைப்பூசம் தொடர்பான துண்டறிக்கைகள் மனுதாரரின் முன்னோரால் தன்னிச்சையாக அச்சடிக்கப்பட்டவை. சத்தியஞான சபையானது சைவ ஆகம விதிமுறையிலான வழிபாட்டு முறையைப் பின்பற்ற வேண்டுமென்று வள்ளலார் விரும்பியிருந்தால் அதை சிவன் கோவிலாக நிறுவி யிருப்பார். சைவ ஆகம நெறிப்படி கோவில் ஒன்று நிறுவப்பட்டால், சிவலிங்கம் நிறுவப்பட்டிருக்க வேண்டும். மேலும் கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் ஆகியன இருக்க வேண்டும். சிவனுக்கு எதிராக நந்தி நிறுவப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவை எதுவும் இல்லாமல் சத்தியஞான சபையை அவர் நிறுவியுள்ளார். சிவலிங்கம் ஒன்றை அங்கு நிறுவி உருவ வழிபாட்டை அவர் நிகழ்த்தியதற்கு வரலாற்றுச் சான்று எதுவுமில்லை.

வள்ளலார் உயிரோடு இருந்தபோது ஆறாம் திருமுறை அச்சிடப்படவில்லை என்பதினாலேயே அதில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வில்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. 1885இல் வெளியான முதல் பதிப்பில் தொடங்கி, 1896, 1924, 1931-32 ஆண்டுகளில் ஆறாம் திருமுறை நூல் வடிவில் வெளிவந்துள்ளது. இவற்றில் அருட்பெருஞ்ஜோதி அகவல் இடம்பெற்றுள்ளது. சபாபதி சிவாச்சாரியாரின் மறுசீராய்வு மனுவைத் தள்ளுபடி செய்தும் இணை ஆணையரின் தீர்ப்பை

உறுதிசெய்தும், இந்து அற நிலையத்துறை ஆணையர் தீர்ப்பு வழங்கினார்.

உயர்நீதிமன்றத்தில் இந்து அறநிலையத்துறை இணை ஆணையரின் தீர்ப்பையும், அதை உறுதிசெய்து இந்து அறநிலையத் துறையின் ஆணையர் வழங்கிய தீர்ப்பையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் சபாபதி சிவாச்சாரியார் மேல் முறையீடு செய்தார்.

**இதை விசாரித்த நீதியரசர் சந்துரு மனுதாரர் முன்வைத்த விவாதங்களை ஏற்றுக்கொள்ளாது அவரது மனுவைத் தள்ளுபடி செய்து 24.03.2010இல் தீர்ப்பு வழங்கினார்.** அவரது தீர்ப்பு வள்ளலாரின் சிந்தனைகள் குறித்த ஆய்வுக்கட்டுரை போல் அமைந்துள்ளது. தீர்ப்பின் தொடக்கத்தில் வள்ளலாரைக் குறித்த சிறு அறிமுகத்தைச் செய்துள்ளார்.

> ‘கிழக்குவெளுத் ததுகருணை அருட்சோதி உதயம்
> கிடைத்ததென துளக்கமலம் கிளர்ந்ததென தகத்தே
> சழக்குவெளுத் ததுசாதி ஆச்சிரம்ஆ சாரம்
> சமயமதா சாரம்எனச் சண்டைஇட்ட கலக
> வழக்குவெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
> மனம்வெளுத்து வாய்வெளுத்து வாயுறவா தித்த
> முழக்குவெளுத் ததுசிவமே பொருள்எனும்சன் மார்க்க
> முழுநெறியில் பரநாத முரசுமுழங் கியதே’

> ‘ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
> அருட்பெருஞ் சோதிஎன் உளத்தே
> நீதியில் கலந்து நிறைந்தது நானும்
> நித்தியன் ஆயினேன் உலகீர்
> சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
> சத்தியச் சுத்தசன் மார்க்க
> வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
> விளம்பினேன் வம்மினோ விரைந்தே’

என்ற வள்ளலாரின் பாடல்களுடன் அறிமுகம் தொடங்குகிறது. சமயம், சாதி, ஆகமம், வேதம் என்பனவற்றை அவர் ஏற்றுக்கொள்ளாததை வெளிப் படுத்தும் வழிமுறையாக,

'சாதியும் மதமும் சமயமும் பொய் என ஆதியில்
உணர்த்திய அருட்பெருஞ்சோதி'

'ஆகமுடி மேல் ஆரண முடிமேல்
ஆக நின்று ஓங்கிய அருட்பெருஞ்சோதி'

'சமயம் குலம் முதல் சார்பு எலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட்பெருஞ்சோதி'

என்ற வள்ளலாரின் பாடல் வரிகளை எடுத்துக் காட்டுகிறார்.

1866ஆம் ஆண்டில் அன்றைய சென்னை மாநிலத்தில் நிகழ்ந்த கொடிய பஞ்சமும், அப்பஞ்சத்தால் மக்கள் பட்டினியால் வாடியது கண்டு வள்ளலார் பதைபதைத்ததும் தீர்ப்பில் இடம்பெறுகின்றன. இப்பதைபதைப்பு,

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்'

என்ற பாடலாக வெளிப்பட்டதைச் சுட்டிக்காட்டி விட்டு, இதுவெறும் புலம்பலாக நின்றுவிடவில்லை என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். 1867ஆம் ஆண்டில் கஞ்சித் தொட்டியன்றை வடலூரில் அமைத்ததையும், அங்குள்ள அடுப்பில் அவர் ஏற்றிய நெருப்பு இன்றுவரை அணையாது தொடர்வதையும், ஏழைகளுக்கு உணவளித்தலை உயரிய குணமாக அவர் கருதியதையும் குறிப்பிட்டுள்ளார். ஏழைகளின் அவல நிலையைப் பொறுக்காது இறைவனை நோக்கி,

'வாழைஅடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ

இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளல்யான் உனக்கு
மகன் அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழைஉல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக்
கொடுத்தருள் இப்பொழுதே'

என்று வேண்டுவதையும்,
'கருணை இலா ஆட்சி கடுகி ஒழிக அருள்நியந்த நன்மார்க்கர் ஆள்க' என்று கூறுவதையும் அவர் நினைவூட்டுகிறார். ஏனைய மடங்கள், ஆதினங்களைப் போன்று வாரிசையோ, இளைய பீடத்தையோ உருவாக்காத தன்மையையும் எடுத்துரைக்கிறார்.

தீர்ப்பின் தொடக்கத்தில் இடம்பெறும் இப்பகுதிகள் வள்ளலாரைக் குறித்த சரியான சித்திரத்தை வழங்குகின்றன.

* * *

வள்ளலாரின் உண்மையான இயல்பை வெளிப் படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்ட சான்றுகளையும், விவாதங்களையும் தம் தீர்ப்பில் எடுத்தாள்கிறார். அடுத்து வள்ளலாரின் கருத்துக்களின் சாரத்தை வெளிப்படுத்தும் தன்மைகொண்ட பின்வரும் திரு அருட்பா பாடல்களை மேற்கோளாகக் காட்டுகிறார். வள்ளலாரின் சமய நெறிமுறைகள் குறித்தும் பின்வரும் செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

உருவ வழிபாட்டை ஏற்காமையும், ஜோதி என்ற பெயரில் நெருப்பை வழிபடுவதும் வள்ளலாரின் கருத்தாக இருந்துள்ளது. நிறுவன சமயம் எதற்கும் அவர் இடமளிக்கவில்லை. மனிதகுலத்திற்கு முழுமையான இடத்தை அவர் வழங்கியுள்ளார். சாதி அடிப்படை யிலான பாகுபாட்டிற்கு அவர் இடமளிக்கவில்லை.

'எச்சம யங்களும்பொய்ச்சம யமென்றீர்
இச்சம யம்இங்கு வாரீர்
மெய்ச்சம யந்தந்தீர் வாரீர்'

‘சதுமறை யாகம சாத்திர மெல்லாஞ்
சந்தைப் படிப்புநஞ் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்திற் சாகா
வித்தையைக் கற்றன னுத்தர மெனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தன னென்றும்
பொன்றாமை வேண்டிடி லென்றோழி நீதன்
அதுவிது வென்னாம லாடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து’

‘சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே’

‘செவ்வணத் தவரும் மறையும்ஆ கமமும்
தேவரும் முனிவரும் பிறரும்
இவ்வணத் ததுஎன் றறிந்திடற் கரிதாம்
எந்தைநின் திருவருள் திறத்தை
எவ்வணத் தறிவேன் எங்ஙனம் புகல்வேன்
என்தரத் தியலுவ தேயோ
ஒவ்வணத் தரசே எனக்கென இங்கோர்
உணர்ச்சியும் உண்டுகொல் உணர்த்தே’

உருவமில்லாத வழிபாடும், நிறுவன சமய மறுப்பும் வள்ளலாருக்கு எதிரிகளை உருவாக்கின. அவருக்கு எதிரான பரப்புரையை அவரது எதிரிகள் மேற்கொண்டனர். அவரது பாடல்கள் ‘திருஅருட்பா’ என்றழைக்கப்படுவதை எதிர்த்து, ‘மருட்பா’ என்றழைத்தனர். இதுதொடர்பாக ஆறுமுக நாவலர் கடலூர் நீதிமன்றத்தில் 1869இல் வழக்குத் தொடுத்தார். இறுதியில் அது தள்ளுபடி செய்யப்பட்டது.

**தீர்ப்பின் இறுதியில் சிந்தனைக்குரிய கருத்து ஒன்றையும் நீதியரசர் சந்துரு முன்வைத்துள்ளார். புத்தமதத்தைப் பின்பற்றும்படி மறைமுகமாக மக்களை வேண்டியுள்ளார் என்பதே அக்கருத்தாகும்.**

இதற்குச் சான்றாக,

'சாக்கிய வேதந் தேக்கிய பாதம்
தாக்கிய ஏதம் போக்கிய பாதம்

'புத்தந்தரும் போதா வித்தத்தருந் தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்திரும் பாதா'

என்ற வள்ளலாரின் பாடல் வரிகளை முன் வைக்கிறார். முற்போக்குச் சிந்தனையாளர்கள் ஆராய வேண்டிய ஆய்வுப்பொருள் இது.



Footprints of the Buddha (2nd century)
Yale University Art Gallery-From Wikimedia Commons)

* * *

இவ்வழக்கு வேறொரு சிந்தனையையும் தூண்டுகிறது. சபாபதி சிவாச்சாரியார் சிவலிங்கத்தை வள்ளலாரின் சத்தியஞான சபையில் நிறுவி, சைவ ஆகம விதிமுறைப்படி வழிபாடு நிகழ்த்தத் தொடங்கியதுதான் இவ்வழக்கின் அடிப்படைக்காரணம். இன்று கிராமப்புற நாட்டார் தெய்வங்கள் ஆதிக்க வகுப்பினரால் ஆகம விதிக்குள் கொண்டு வரப்படுகின்றன. அம்மன்கள் அம்பாள்களாக்கப்படுகின்றனர். நாட்டார் தெய்வக் கோவில்களுக்குள் சிவனும், விஷ்ணுவும், முருகனும் அத்துமீறி நுழைந்து, அச்சாமிகளின் அசைவ உணவுப் படையலைத் தடுக்கின்றனர். ஆகம விதிகளின்றி நிறுவப்பட்ட இக்கோவில்களில் ஆகம விதிப்படி குடமுழுக்கு நிகழ்கிறதே! இதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தால் என்ன? நீதியரசர் சந்துரு இதற்கு வழிகாட்டினால் நன்றாக இருக்கும்.

நன்றி:
வடலூர் சத்தியஞான சபை 2007-2010 வழக்கில் நீதியரசர் சந்துருவின் தீர்ப்பு
நவம்பர் 2014 -உங்கள் நூலகம்

## 17. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி

— தமிழறிஞர் ஔவை நடராசன்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி
ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ?
வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே
விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல்
நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்
கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எங்தோழி
பரிசேலோர் எம்பாவாய்!

விளக்கம்:
எந்நாட்டவராலும் எக் காலத்தவராலும் உவந்து ஏற்றுக் கொள்ளுமாறு என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மைகளையோ நெறிகளையோ சிந்தைக்கும் செவிக்கும் இனிய செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியமென இலக்கண வரம்பு வகுப்போமானால் மணிவாசகர் அருளிய திருவாசகம் தலைசிறந்த தமிழ் மாமறையாகத் திகழ்வதாகும்.

திருவாசகத்தில் பேசப்பெறும் செய்தி, காலம், இடம் என்னும் பாகுபாடுகளைக் கடந்த, சிந்தை செல்லாச் சேணகத்ததாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையாய்ப் பிறங்குகின்ற பேரருட் பிழம்பைப் பற்றியதும், அவ்வருள் ஒளியை நாடிக் கலந்த ஒரு சிற்றுயிர்க்குற்ற பலதிறப்பட்ட நிகழ்வுகளைப் பற்றியதுமாகும்.

இன்னினிய பண்ணினிமையும், பொருட்செறிவும், கலை நலமும் வாய்ந்த சொற்களால் கற்பவர் பயிற்சிக்கும் உணர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள் பொலியுமாறு வளவிய பாடல்களை வழங்கிய வள்ளன்மை திருவாசகத் திறமாகும்.

திருவாசகப் பதிகங்களிடையே 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' எனப் பாராட்டப் பெற்ற பகுதி திருவெம்பாவையாகும்.

மனங்கவர் திருவெம்பாவையை மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் தங்கியிருந்த காலத்தில் அருளிச் செய்ததாகக் கடவுள் மாமுனிவர் தாம் எழுதிய "திருவாதவூரர் புராணத்தில்" குறித்துள்ளார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் தமது "திருப்பெருந்துறைப் புராணத்தில்" அக் கருத்தையே ஏற்றுள்ளார்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் திருவெம்பாவையைத் தில்லையில் அருளிச் செய்ததாகக் கருதி ஓர் ஆசிரியப்பா பாடியுள்ளார்.

இவர்களுக்கெல்லாம் காலத்தில் முற்பட்டவராகிய பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்" திருவெம்பாவையைத் திருப்பெருந்துறையிலே அருளிச் செய்ததாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு திருவண்ணாமலையிலும், தில்லையிலும், திருப்பெருந்துறையிலும் தெய்வ நலம் கற்பார் உள்ளத்தைக் கனிவிக்கின்றது.

பழந்தமிழ் நூல்கள் காட்டும் பாவைப்பாட்டு என்னும் வகையைச் சார்ந்தது திருவெம்பாவை.

நீர்த்துறையில் சீர்இள மகளிர் பாவையமைத்து நீராடி வணங்கும் நீர்மையைப் பொருளாகக் கொண்டது இப்பாட்டு.

பழங்காலத்தில் முழுத் திங்கள் வழியாக மாதங்கள் கணக்கிடப்பெற்றன. அதனால் மாதத்தைத் திங்கள் என்று குறிப்பது வழக்கம். பழந்தமிழ் நூல்களில் மாதம் என்ற சொல் காணப்படாது திங்கள் என்றே கூறப்படும். நாம் இப்போது வழங்கும் மார்கழித் திங்கள் மார்கழி முழுமதியோடு முடியும். மறுநாள் தொடங்கும் தைத் திங்கள் தை முழுமதியோடு முடியும்.

எனவே இம்மார்கழி நீராட்டைத் தைந்நீராடல், தையில் நீராடிய தவம் எனச் சங்கச் சான்றோர் குறித்தனர். இன்று 'இவ்வூராரெல்லாம் தை நீராடுப, மருவூரார் தை நீராடினார்' என்னும் இலக்கணச் சொற்றொடர்களும் பாவை நோன்பு புரிந்திருந்த பாங்கைச் சுட்டிக் காட்டுகின்றன. வெப்பம் மிகுந்த நாடுகளில் தண்புனலுக்குத் தனிச் சிறப்பு உண்டாவதும், நீராடுதலே விழாவாதலும் ஆகும். அவ்வகையில் பாவைப் பாட்டு நீராடுதலை அடிப்படையாகக் கொண்டிருத்தலும் இயல்பாகும்.

இப்போதைய தாய்லாந்து எனும் சயாம் நாட்டில் நடைபெறும் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை ஓதப்பெறுவது தமிழ் நாகரிகம் உலகளாவிப் பரவியிருந்த மாட்சிமைக்குச் சாட்சியாகும்.

'ஆணவக் காரிருளில் அழுந்தி உறங்காமல் அருள் வெள்ளத்தில் நீராட வருக' என அழைப்பதே திருப்பாவையின் உட்பொருள் என ஆன்றோர் கூறுவர்.

நாடு மழையால் நலம் பெறவேண்டும்.

வீடு சிறந்த கணவனால் வளம் பெறவேண்டும் என, நாடும் வீடும் செழித்தோங்கப் பாடும் பாவையர் பொய்கையருகே கூடிப் பரவுகின்றனர்.

வெள்ளி முளைப்ப விடியல் வந்ததும் வீடுதோறும் நாடி ஒருவரையொருவர் சென்று எழுப்புகின்றனர்.

எம் பாவாய் என அன்போடு அழைக்கின்றனர்.
இன்னுமா இருள் உறக்கம்!
எப்போது உனக்கு அருள் பிறக்கும் ! உண்டாக வேண்டாமா உருக்கம்!
அப்படியென்ன தூக்கத்தில் ஆசை ! அங்கே கேட்கவில்லையா எங்கள் பாட்டு ஓசை! என்றெல்லாம் பேசுகிறார்கள்.
பரம்பொருளை நினைத்து மகிழ்கிறார்கள்.
திருவருளின் பெருங்கருணைக்கு நெகிழ்கிறார்கள்.

இப்படி மகளிர், தமக்குள் பேசிக்கொள்வது இளமைக்குரிய ஏச்சா! வெறும் பேச்சா?
இல்லை பெரும் மூச்சு – ஞான உரை வீச்சு எனக் காட்டப் பெறுகிறது.
இவ்வண்ணம் எழுந்த பாவைப்பாட்டு இதோ வீதி வாய்க் கேட்கிறது.
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை அவர்கள் புகழ்ந்து பாடுகிறார்கள்.

உலகின் எல்லாப் பொருளுக்கும் முதலும் முடிவும் உண்டு.தோற்றமும் இறுதியும் உண்டு. எல்லாப் பொருளும் தோன்றவும் மறையவும் இடந்தருகின்ற - காண்பதற்கு அருமையும் உரைப்பதற்குச் சொல்லி முடியாத பெருமையும் பூண்ட பொருளாகிய – இருள் நீக்கித் தெளிவும் ஒளியும் ஊட்டுகின்ற பேரொளிப் பிழம்பாகிய சோதியின் நலங்களை உன் தோழியராகிய நாங்கள் பாடிப் பரவுகின்றோம்.

எங்கள் பாட்டொலி கேட்டும் விழித்து எழவில்லையே நீ !
நீண்ட ஒளியும் நெறியான அளவும் பொலிவான அழகும் பொங்கி மிளிர்கின்ற விழியழகி நீ !
உன் காதென்ன கேட்காத காதா? மற்றொரு தோழியோ பெருந் தேவனாகிய பரம்பொருளின் திருவடிகளை வணங்கிப் பரவும் எங்கள் குரலொலியைத் தெருமுனையில் கேட்ட அளவிலேயே உணர்வு மிகுந்து, உள்ளம் நெகிழ்ந்து மனங்கரைந்து தேம்பித் திகைத்துத் தன்னை மறந்து செயலற்று மெத்தென்ற அமளியிலிருந்து பொத்தென்று வீழ்ந்து புரண்டு செயல் மறந்து கிடக்கின்றாள்.

இத் தோழியின் உருக்கவியல்பு இப்படி உள்ளதே !
இதனை எண்ணிப் பாராய் !
எம் பாவாயே !

ஒன்பது சக்திகள் ஒருவரை ஒருவர் எழுப்பும் வகையில் மனோன்மணியாகிய சக்தி சர்வபூத தமனியை எழுப்புவதாகத் துயில் எழுப்பும் எட்டுப் பாக்களுக்கும் நுண்பொருள் கூறுபவருண்டு.


உயிர்கள் விழிப்புற்றுத் திருவருள் நலத்தில் மூழ்கி எழுந்து தெளிவு பெறுவது என்றும், அடியவர்கள் பலராகச் சேர்ந்து அருள் வழிபாடியற்றுவது என்றும் இப் பகுதிக்குப் பொருள் கூறலாம்.

இத் திருப்பாட்டில் கேவல நிலையிலுள்ள உயிர், பாடிக் கேட்டும் துயிலெழாமல் ஆணவத்தால் கட்டுண்டு இருண்முடி இறைவனை நினையாது வாளா கிடக்குமெனவும், சுத்த நிலையிலுள்ள உயிரோ இறையருட் பாடலைக் கேட்ட போதே அன்பின் பெருக்கினால் தன்னுடலை மறந்து உலகுநெறி விட்டுச் சிவநெறி புகுந்து சிவானந்தத்தில் மூழ்கித் திளைத்து நிற்கும் இயல்புடையதெனவும், இடைப்பட்ட சகல நிலையிலுள்ள உயிரோ விரதங் காப்பதோடு ஆண்டவனை அருட் பாடல்களால் துதித்தும் வழிபாடு செய்தும் புண்ணியப் பேற்றினையடைதற்கு முயலுஞ் சிறப்புடையதெனவும் உணர்த்தப்படுவதாகவும் நலம் உய்த்தறியலாம் என மூவகை இயல்பும் இப் பாடலில் குறிக்கப்பட்டன.

## 18. கலைஞர்: மிக உயர்ந்தவர்

— ஆலடி எழில்வாணன்

Kalaignar: The Great, by M.Farook
- கலைஞர்: மிக உயர்ந்தவர், பாரூக்
எமரால்டு பதிப்பகம்




தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் தனது ஆற்றலால் நான்கு தலைமுறைகளின் வளர்ச்சிக்கு நேரடிக் காரணமாக இருந்தவர் கலைஞர். இனிவரும் காலமும் தமிழ் உலகம் இவர் புகழ்பாடும். அப்படிப்பட்ட மாபெரும் தமிழ் சகாப்தமான கலைஞர் மு.கருணாநிதி பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்த, கைக்கு அடக்கமான, ஆழமான புத்தகம் முனைவர் M Farook எழுதிய “Kalaingar: The Great”.

எமரால்டு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 130 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் தகவல் களஞ்சியம். திராவிட இயக்கத்தின் கூர்வாள் திரு.நாஞ்சில் சம்பத்

அவர்களின் அணிந்துரையும், வளர்ந்து வரும் அரசியல் ஆளுமை விசிக திரு.ஆளூர் ஷாநவாசு அவர்களின் முன்னுரையும் இந்தப் புத்தகத்தின் தாக்கத்தை உணர்த்தும்.

எளிய ஆங்கிலத்தில் லைஞரின் வலிமையான வாழ்க்கையை, சாதனையை, சோதனையை 15 அத்தியாயத்தில் அழகாகக் கோர்த்துள்ளார் ஆசிரியர் பாரூக். அரிய பல சுவராசியத் தகவல்களோடு அப்போதைய அரசியல் சூழலுக்கு ஏற்ப வாசகரை ஒரு சாட்சியாக, பார்வையாளராக இணைக்கிறார், சிறக்கிறார். ஆசிரியரின் எழுத்தும், நடையும், கோர்வையும் அவரது மொழி ஆளுமையை விட தலைவர் கலைஞர் மீது இவருக்குள்ள பற்று மற்றும் இவர் கலைஞரின் தீவிர ரசிகர் என்பதை கலைஞர் பாணியில் உள்ளங்கையில் நெல்லிக்கனி என வெளிப்படுத்துகிறது.

நான் ரசித்த, வியந்த சில அத்தியாயங்களை மட்டும் உங்கள் கவனத்துக்கு எனது விமர்சனமாகப் பதிவிடுகிறேன்.

Kalaingar: A Promised Dravidian Messiah:
இந்த அத்தியாயத்தில் கலைஞர் திராவிட இயக்கத்தில் பெரியார், அண்ணாவுக்கு அடுத்து மூன்றாவது முக்கிய அத்தியாயமாக பரிணாமம் பெற்றதை வரலாற்று நிகழ்வுகளோடு எடுத்துரைக்கிறார். குறிப்பாக சுயமரியாதை சிந்தனை, பகுத்தறிவு, மொழிப் பற்று, மாநில உரிமை இவற்றை உள்வாங்கிய சமூகநீதி சிந்தனை, 1971ல் இட ஒதுக்கீட்டை மாற்றியது, 69% இட ஒதுக்கீட்டுக்கு அடித்தளமிட்டது, 1989ல் வி.பி.சிங் அரசால் அதை நடைமுறைப்படுத்தியது, 2006-2011 காலங்களில் உள் ஒதுக்கீடு எனப் போராடாமல் பெற்ற உரிமைகள், இறுதிவரை NEETடை தமிழகத்தில் அனுமதிக்காமல் அரணாக இருந்தது என கலைஞரின் சாதனைகளைக் கூறுகிறார்.

Kalaingar's Landmark, Land Reforms:
உழுபவனுக்கு நிலம் சொந்தம்; குடியிருப்பவருக்கு வீடு சொந்தம். பண்ணையார், நாட்டாண்மை என்றழைக்கப்பட்ட பெரும்நிலத்தாரிடம் இருந்து நிலங்களை நிலமில்லா விவசாயிகளுக்கு வழங்க பல சட்டங்களை இயற்றினார் கலைஞர்.

பெரியார் தலைமையில் திராவிடர் கழகம் சார்பில் "திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம்" 1952ல் நிறுவப்பட்டது. ஊதியம், நிலம்-நீர் உரிமை எனப் பல தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

1. 1969 - Tenancy Land Record Act
2. 1969 - Agriculture Labour Fair Wages Act
3. 1970 - Land Reforms Act
4. 1971 - Agricultural University Act
5. 1971 - Conferment of Ownership of Homestead Act

உயர் வகுப்பினரிடமிருந்து பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விவசாய நிலங்கள் செல்லக் காரணியாக இருந்தார் தலைவர் கலைஞர்.
தரிசுநில மேம்பாட்டுத் திட்டம்,
இரண்டு ஏக்கர் இலவச நிலம் திட்டம்,
எல்லாம் கலைஞரால் அறிமுகப்படுத்தப்பட்டன.

Kalaingar: A Versatile Wordsmith:
தமிழ் இலக்கியத்துக்காக கவிதை, கடிதம், திரைக்கதை, கதை, தன்வரலாறு, வரலாற்றுக் காவியம், நாடகம் மற்றும் வசனம் என எல்லாவிதங்களிலும் கைதேர்ந்த படைப்பாளியாக வலம் வந்தார் கலைஞர்.
ஐம்பெரும் காப்பியங்களான
சிலப்பதிகாரம் மணிமேகலை சீவகசிந்தாமணி
வளையாபதி குண்டலகேசி
ஆகியவற்றை முழுமையாக வாசித்து உள்வாங்கியவர் கலைஞர். அவரின் எழுத்து மற்றும் பேச்சுகளில் இதன் தாக்கம் அதிகம் இருக்கும்.

தமிழ்த்தாய் வாழ்த்தை எல்லா அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் பாட வைத்த பெருமை கலைஞரையே சேரும்.
இறுதியாக தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடிய "செம்மொழியான தமிழ் மொழியாம்" பாடலின் ஆசிரியர் கலைஞரே.
உலகப்புகழ் நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் எழுதியது 38 நாடகங்கள்; தலைவர் கலைஞர் எழுதிய நாடகங்களின் எண்ணிக்கை 34 என்ற இந்தத் தகவல் ஆச்சரியம் மட்டுமல்ல; அதற்கும் மேல்!

Wality 69 Fountain pen:
கலைஞர் பயன்படுத்திய எழுதுகோல் Wality 69 Fountain pen. வாழ்க்கையில் பெரும்பான்மையாக இந்த எழுதுகோலைத்தான் அதிகமாக உபயோகித்தார். சூன் 30, 2001 நள்ளிரவில் கலைஞரைக் கைது செய்து, ஒரு குற்றவாளியைக் கையாள்வது போலக் கையாண்டனர் ஏவல்துறையினர். அப்போது அவர் சட்டையை இழுத்துப் பிடித்துத் தூக்கிய போது கலைஞரின் சட்டைப்பை பகுதி கிழிந்தது. ஆனால் அந்த Wality 69 Fountain pen அவரைவிட்டுப் பிரியவில்லை.

Battle of Marina:
திருவாரூர் பள்ளியில் தலைமையாசிரியர் கஸ்தூரி அய்யர் அவர்களிடம் தனது 12 வயதில் போராடித்தான் வகுப்பில் நுழைந்தார் கலைஞர். அவர் இறந்த பிறகும் போராடித்தான் மெரினாவில் தனது உன்னதத் தலைவர் அறிஞர் அண்ணா அருகில் அடக்கம் செய்யப்பட்டார்; வாழ்நாள் போராட்டக்காரரர் தலைவர் கலைஞர் அவர்கள். புத்தக ஆசிரியர் 2010ஆம் ஆண்டு புதிய சட்டமன்றம் கட்டும் பணி நடக்கும்போது நடந்த ஒரு நிகழ்வை இந்த அத்தியாயத்தில் அழகாக விவரிக்கிறார். இரவு சுமார் 10.00-11.00 மணிக்கு செயலாளர் திரு.ராமசுந்தரத்திடம் அண்ணா நினைவிடம் செல்வோம் என்றார். அவர்கள் இருவரும் மற்றும் சில காவலர்களும் பயணிக்கின்றனர். அண்ணா சமாதியில் இருவரும் தேநீர் அருந்தியபடியே உரையாடுகின்றனர்.
கலைஞர்: அண்ணா சமாதியில் என்ன வாசகம் இருக்கிறது தெரியுமா ?
ராமசுந்தரம்: தெரியும் அய்யா, “எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது!"
கலைஞர்: அமைதியாக “எனக்கும் இங்கேதான் உறங்கணும்”
சில நிமிட அமைதி நிலவுகிறது.
ராமசுந்தரம்: அது எல்லாம் இப்போ எதுக்கு அய்யா பேசணும், நாம கிளம்பலாம் ரொம்ப லேட் ஆயிடுச்சி.
கலைஞர் நினைவிடத்தில் இன்று பொறிக்கப்பட்டுள்ள வாசகம் “ஓய்வு எடுக்காமல் உழைத்தவன், இதோ ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறான்”.

எளிமையான உரையாடல் காலம், சூழல், இடம் காரணமாக அதனை ஆழமான உரையாடலாக்கியது. கலைஞரின் இறுதி ஆசையை நிறைவேற்றத் தயங்கிய அதிமுக தலைமையை சட்டத்தால் வென்றது கலைஞர் கட்டிக்காத்த இயக்கமான திமுக. லண்டன் West Minister Abbeyக்கு நிகராக மெரினாவின் அண்ணா சதுக்கத்தை ஒப்பிடுகிறார் ஆசிரியர் ம.பாரூக்.

இந்தப் புத்தகத்தில் நான் வியந்து ரசித்த சில சொல்லாடல்கள், இவற்றை அந்த அத்தியாயத்தில் அழகாகச் சேர்த்து தனது கருத்துக்கும் முலாம் பூசியுள்ளார் ஆசிரியர்.

Quotes:
Turn in any direction you like, caste is the monster that crosses your path, Ambedkar.

Tamil Nadu is a paragon of administrative innovation among Indian states, Amartya Sen.

Merely because water in the sea evaporates, it does not become a desert; merely because the river mingles into the sea, they do not dry up.

He who controls others may be powerful, but he who masters himself is mightier still.

Sleep is a symbol of peace and rest: it symbolizes innocence, purity and peace of mind.

Cowards die many times before death; the valiant never taste of death but once, Julius Caesar.

History of Dravidian movement has not been written yet. It has entered into a new phase now.

Forgive your enemies but never forget their names, John F Kennedy.


I have lived a peru vazhvu.

Kalaingarist:
சமீபத்திய அரசியல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலால் எனது வாசிப்பு சற்று குறைந்தாலும் சில வாரங்களாக இந்தப் புத்தகம் என்னோடு பயணித்தது. திராவிட இயக்கத்தின் துருவ நட்சத்திரமான தலைவர் கலைஞர் பற்றி ஆங்கிலத்தில் வாசித்தது மனநிறைவாக இருந்தது. காட்டாற்று வெள்ளத்தை அணை போட்டு அதன் வலிமையைக் காட்டலாம், கலைஞர் போன்ற மாபெரும் ஆளுமைக்கு இந்தப் புத்தகம் அவரின் தாக்கத்தை உணர்த்தும் ஓர் அணை. இந்தத் தாக்கத்தை அணையாமல் இருக்கவைப்பது திராவிட இயக்கக் கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ளவர்களின் கடமை. கலைஞர் பற்றி பேராசிரியர் பாரூக் எழுதிய 'KALAIGNAR : THE GREAT' அருமையான புத்தகத்தைத் திறனாய்வு செய்ததில் மனநிறைவை அடைந்தேன்.


## 19. செவிமடல் பாகங்கள்

— இராம.கி.

அண்மையில், மின்தமிழ் மடற்குழுவில், ஒரு செவிமடல் படத்தைக் கொடுத்துப் பாகங்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது.




தோடு, தண்டட்டி, தொங்கட்டான் என வித விதக் காதணிகள் போடும் நம்மூரில், செவிமடல் பாகங்களுக்கான "இணைத் தமிழ்ச் சொற்களைச்" சான்றோடு சொல்ல நம்மிடம் எழுத்துப் பதிவுகள் இல்லை. இவ்வணிகளைப் போடும் பழக்கமும் அருகி விட்டது. இனியும் இப்படியொரு சொல்லில்லாச் சோகம் வேண்டாம். படத்தில் வரும் ஆங்கிலச் சொற்களுக்கு ஈடான தமிழ்க் கலைச் சொற்களைப் பார்ப்போம்.




முதலில் வருவது Helix (n.) இதற்கு விளக்கமாய், ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலியில், "a spiral thing," 1560s, originally of the volutes of Corinthian capitals, from Latin helix "spiral, a volute in architecture," from Greek helix (genitive helikos), a word used of anything in a spiral shape (an armlet, a curl of hair, the tendril of a vine, a serpent's coil), which is related to eilein "to turn, twist, roll," from PIE *wel-ik-, from root *wel- (3) "to turn, revolve," from PIE root *wel- (3) "to turn, revolve." The classical plural is helices என்று போட்டிருப்பர்.

தமிழில் spiralயைப் புரி என்போம். வலம்புரி/ இடம்புரிச் சங்கு எனும் சொல்லாட்சிகளைக் கவனியுங்கள். புரி என்பது கிடைப் பரிமானத்தில் (horizontal dimension) மட்டும் விரியும். helix-ஓ, குத்துப் பரிமானத்திலும் (vertical dimension) விரியும்.

”சுழிப்பு” என்ற சொல் முதலில் வட்டத்தைக் குறித்தாலும் வேக நீரோட்டத்தில் உள்நோக்கிய குழிவு ஏற்படுவதை மறக்க வேண்டாம். "சுழலுக்குள் மாட்டினான்" எனும்போது நம்மை அறியாமல் helix ஐச் சுழிகை என்ற சொல்லால் உணர்த்துகிறோம்.

சுல் எனும் வேரிலிருந்து சுழி எழுந்தது போல், சுரி என்ற சொல்லும் எழும். சுரிகுழல் = helical ஆகச் சுருண்டு கிடக்கும் முடிக்கற்றை. ”சுரிமுகம்” இது குத்துத் திசையிலும் சுருண்ட சங்கைக் குறிக்கும். நத்தைக்கூட்டைக் கூடச் சுரிமுகம் என்பார். இன்னொரு விதமாய் திருகாணி (helical screw) எனும் போது, திருகு என்ற சொல்லும் helical motion- யைக் குறிக்கிறது. முறுக்கு என்பதும் கூடத் திருகிக் கொண்ட தன்மையைக் குறிக்கும். முறுகு, திருகு, சுழிகை, சுரிகை என்ற நான்கும் ஒரே பொருளைக் குறித்தாலும், வேற்றுமை காட்டும் முகத்தான் இக்கால அறிவியல் புழக்கமாய்ச் சுரிகையையே helix-க்கு இணையாகக் கொள்ளலாம்.

அடுத்தது cartilage. இதைக் குருத்தெலும்பு என்பார். குருத்து = இளமை. cartilage (n.) "gristle; firm, elastic animal tissue," early 15c., from Old French cartilage and directly from Latin cartilaginem (nominative cartilago) "cartilage, gristle," which is possibly related to cratis "wickerwork".

மூன்றாவது சொல் snug (adj.) 1590s, "compact, trim" (of a ship), especially "protected from the weather," perhaps from a Scandinavian source such as Old Norse snoggr "short-haired," Old Swedish snygg, Old Danish snøg "neat, tidy," perhaps from PIE *kes- (1) "to scratch" (see xyster). Sense of "in a state of ease or comfort" first recorded 1620s. Meaning "fit closely" is first found 1838. தமிழில் சிக், நச், என்று ஒலிக்குறிப்புச் சொற்களால், பொருந்தப் பிடிக்கும் வினையைக் குறிப்போம். நெக்கு-தல் வினை, ஒன்று இன்னொன்றில் பொருந்தலையும். நெக்கு விடுதல் என்பது பொருத்துவாய் விடுதலையும் குறிக்கும். ”நெகிழ்ச்சி” என்பதும் கூட இதன் தொடர்ச்சியாகலாம். என்னைக் கேட்டால் நெக்கு என்பது snug இற்கு இணைகாட்டும் என்பேன்.

conch = சங்கு. இதற்குப் பெரிய விளக்கம் சொல்ல வேண்டாம்.

அடுத்தது, Tragus = துருகு. (n.) eminence at the opening of the ear,செவி வாசலில் துருகி வரும் எழுச்சி. துரு-த்தல் = முன்வரல். " 1690s, Modern Latin, from Greek tragos in this sense (Rufus of Ephesus),

properly "he-goat;" so called for the tuft of hair which grows there, which resembles a goat's beard.

Anti-Tragus = துருகெதிர். (பின்னொட்டையே பெரிதும் பயன்படுத்தும் மரபு தமிழில் உண்டு.)

Lobe மடல்; 2nd Lobe 2 ஆம் மடல்; 3rd Lobe 3 ஆம் மடல்


Rook = துருகடி. துருகு வளையத்தின் அடிப்பாகமாய் இது அமையும்.

Daith = குருத்தடி. (இன்னும் பொருத்தமான சொல்லைத் தேடவேண்டும்.)

## 20. ஓசைக்கும் ஒலிக்கும் என்ன வேறுபாடு?

— முனைவர் தேமொழி

பன்நெடுங்காலத்திற்கு முன்னர் ஓசை என்பது உருவாக்கப் படுவதற்கும்; ஒலி என்பது அதைக் கேட்பதற்குமான சொற்களாக தெளிவாகப் பிரித்து வேறுபாடு காட்டும் ஒரு முறை இருந்திருக்கக் கூடும்.




இப்பொழுது மலர், அலர் எல்லாமே பூ என்று ஒரே பொருளில் நாம் கையாள்வது போல, காலப் போக்கில் ஓசை, ஒலி என்ற சொற்கள் ஒரு பொருட் பன்மொழி என்ற ஒரு நிலைக்குப் பயன்பாட்டில் மாறியிருக்கக் கூடும்.

எழுப்பப்படுவது அல்லது உருவாக்கப்படுவது "ஓசை"; கேட்கப்படுவது "ஒலி"
என்ற எடுகோளை(Hypothesis) ஆய்வு செய்ய;
சங்க இலக்கியம் - தொடரடைவு தளத்தில் தரவுகள் சேகரிக்கப்பட்டது (நன்றி முனைவர் ப. பாண்டியராஜா).

(I) தரவுகளின் ஆய்வெல்லை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் (http://tamilconcordance.in/sangconc-1-oo1.html)
'ஓசை' என்ற சொல் கீழ்க்காணும் 10 இடங்களில் சங்க இலக்கியப் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

ஓசை (7)
நெடுநெறிச் சகடம் மணல் மடுத்து உரறும் ஓசை - நற் 4/10
அஞ்சு_தக உரறும் ஓசை கேளாது - நற் 154/6
உகிர் நுதி புரட்டும் ஓசை போல - குறு 16/3
ஆய்ந்து அளவா ஓசை அறைபூஉ பறை அறைய - பரி 10/7
கோள் வல் ஏற்றை ஓசை ஓர்-மார் - அகம் 171/9
கடி_மரம் தடியும் ஓசை தன் ஊர் - புறம் 36/9
நெய் உலை சொரிந்த மை ஊன் ஓசை புது கண் மாக்கள் செது கண் ஆர - புறம் 261/8,9

ஓசையின் (1)
உகிர் நெரி ஓசையின் பொங்குவன பொரியும் - அகம் 267/12

ஓசையும் (1)
களிறு அட்டு குழுமும் ஓசையும் களி பட்டு - அகம் 261/13

ஓசையொடு (1)
கரும் கோட்டு ஓசையொடு ஒருங்கு வந்து இசைக்கும் - அகம் 94/11

---

(1)
நற் 4/10
நெடுநெறிச் சகடம் மணல் மடுத்து உரறும் ஓசை
- நீண்ட வரிசையான வண்டிகள் மணலைத் தேய்த்து "எழுப்பும் ஓசை"

(2)
நற் 154/6
அஞ்சுதக உரறும் ஓசை கேளாது
- யாவரும் அஞ்சுமாறு "முழங்கும் ஓசை" கேளாது

(3)
குறு 16/3
உகிர் நுதி புரட்டும் ஓசை போல
- நக நுனியிலே புரட்டுதலால் "உண்டாகிய ஓசையைப்" போல

(4)
பரி 10/7
ஆய்ந்து அளவா ஓசை அறையூஉ பறை அறைய
- ஆராய்ந்து அளவிடமுடியாத பல்வேறு "ஓசைகள் ஒலிக்க"

(5)
அகம் 171/9
கோள் வல் ஏற்றை ஓசை ஓர்மார்
- கொல்லுதல் வல்ல கரடி ஏற்றின் "ஒலியினை உணர்வதற்காக"

(6)
*புறம் 36/9
கடி மரம் தடியும் ஓசை தன் ஊர் நெடு மதில் வரைப்பின் கடி மனை இயம்ப
- காவல் மரங்களை வெட்டுமோசை (எழுப்பப்படுகிறது) தன்னுடைய ஊரின்கண் நெடிய மதிலெல்லையில் தனது காவலையுடைய கோயிற்கண்ணே சென்றொலிப்ப (கேட்கப்படுகிறது)
அதாவது ஓசை ஒலிக்கப்படுகிறது

(7)
புறம் 261/8,9
நெய் உலை சொரிந்த மை ஊன் ஓசை புதுக்கண் மாக்கள் செதுக்கண் ஆர
- நெய்யில் ஆட்டு இறைச்சி "வறுப்பதால் எழும் ஓசை" கேட்டுக் கொண்டே இருக்கும். புதியவர்கள் இதைக் கண்டு கண் பூப்பர்
(8)
அகம் 267/11,12
வெதிர்படு வெண்ணெல் வெவ்வறைத் தாஅய
உகிர்நெரி யோசையிற் பொங்குவன பொரியும்

- மூங்கிலில் விளைந்த வெள்ளிய நெற்கள் வெப்பம் மிக்க பாறையில் உதிர்ந்து பரந்து நகத்தை நெரிப்பது போன்ற "ஓசையுடன்" பொங்கிப் பொரிந்திடும்

(9)
அகம் 261/13
இரும்புலி களிறு அட்டுக் குழுமும் ஓசையும்
- பெரிய புலியானது களிற்றினைக் கொன்று "முழங்கும் ஓசை"யினையும்

(10)
*அகம் 94/11
கரும் கோட்டு ஓசையொடு ஒருங்கு வந்து இசைக்கும்
- (தினைப்புனக் காவலர் ஊதும்) பெரிய கொம்பின் "ஓசையொடு கலந்து வந்து ஒலிக்கும்"

---

(II) தரவுகளின் ஆய்வெல்லை சங்கமருவிய நூல்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
(http://tamilconcordance.in/PATHINENconc-1-oo1.html)
'ஓசை' என்ற சொல் கீழ்க்காணும் 5 இடங்களில் சங்கமருவிய காலப் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

ஓசை (5)
ஓசை அவிந்த பின் ஆடுதும் என்று அற்றால் - நாலடி:34 2/2
குழல் இல் இயமரத்து ஓசை நற்கு இன்னா - இன்னா: 40:35/2
சிறு குழல் ஓசை செறிதொடி வேல் கொண்டு - ஐந்: 50:7/3
மடி செவி வேழம் இரீஇ அடி ஓசை அஞ்சி ஒதுங்கும் அதர் உள்ளி ஆர் இருள் - ஐந்:50:16/2,3
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் - குறள்:3 7/1

---

(1)
நாலடி:34 2/2
பெருங்கடல் ஆடிய சென்றார், ஒருங்குடன் ஓசை அவிந்தபின் ஆடுதும் என்றற்றால்
- பெருங்கடலிலே நீராடுவது குறித்துச் சென்றவர்கள், இக்கடலின் "ஒலி அடங்கிய" பின்னர் நாம் நீராடுவோம்' என்று கருதினால்

(2)
இன்னா: 40:35/2
குழலி னினியமரத் தோசைநன் கின்னா
- குழலோசை இல்லாது இயமரம் என்ற தோற்கருவியில் முழக்கப்படும் வெறும் தாள ஓசை துன்பம்.

(3)
ஐந்: 50:7/3
சிறு குழல் ஓசை, செறிதொடி! வேல் கொண்டு எறிவது போலும் எனக்கு.
- ஊதும் சிறிய புல்லாங்குழின் ஓசையானது, வேல் கொண்டு வீசுவது போல உள்ளது.

(4)
ஐந்:50:16/2,3
மடி செவி வேழம்-இரீஇ, அடி ஓசை அஞ்சி, ஒதுங்கும்
-மடிந்த காதுகளையுடைய யானையானது, பின்வாங்கி, தன் நடையால் உண்டாகும் ஓசையானது, (புலிக்குக் கேட்குமோ என்று,) பயந்து மெதுவாக நடக்கும்

(5)
ஐந்:50:16/2,3
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
- உலகமானது. உண்டுணரும் சுவையும், கண்டுணரும் ஒளியும், தொட்டால் உணரும் ஊறும். "ஓசை - (கேட்டுணரும்) ஒலியும்", மோந்துணரும் வாசனையும், என்று சொல்லப் படுகின்ற, ஐந்தின் திறத்தினை ஆராய்ந்தறிந்தவனிடத்திலேயே அடங்கிக் கிடக்கும் (பேரா. சுந்தரசண்முகனார்). i.e., Vulluvar mentions 'Inducing Source' of the senses

'ஓசை' என்பது பெயர்ச்சொல், அது குறித்துச் சுட்டும் பொழுது ஓசை என்பதைத் தொடர்ந்து ஒலிக்க, எழுப்ப, இசைக்க போன்ற சொற்கள் மேலும் விளக்கமாக கொடுக்கப்படுகிறது.
எடுத்துக் காட்டாக;
"கடி மரம் தடியும் ஓசை தன் ஊர் நெடு மதில் வரைப்பின் கடி மனை இயம்ப"
"கரும் கோட்டு ஓசையொடு ஒருங்கு வந்து இசைக்கும்"
ஓசை "தோன்றும் இடமும்" தவறாமல் குறிக்கப்படுகிறது.

மாறாக;
'ஒலி' என்பது பெயர்ப்பொருளாக மட்டுமின்றி வினைப்பொருளாகவும் வரும் பண்பு கொண்டது.
பெயர்ப்பொருள் - ஒலி = ஆரவாரம்,பேரிசை
வினைப்பொருள் - ஒலி = சப்தி, ஆரவாரி
(பார்க்க: தமிழ்ச்சொல் விளக்கம், முல்லை முத்தையா (2004) - https://ta.wikisource.org/s/5hhg)
இதற்கு சங்கப் படல்களிலேயே எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் உள்ளன.


எனவே மேலே குறிப்பிட்ட சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்களில் ஓசை என்பது உருவாக்கப்படும் இடத்துடன் தொடர்பு கொண்டே வருவதாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

## 21. மயங்கா மரபின் எழுத்துமுறை!

— முனைவர். ப.பாண்டியராஜா

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழ்மொழி எழுதப்பட்ட எழுத்து முறைக்குப் "பிராமி' என்று பெயர். இதைத் தமிழ் பிராமி, தமிழி என்றும் சொல்வர். இந்தப் பிராமி எழுத்து முறையில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை. மேலும் எகர, ஒகர உயிர்/உயிர்மெய் எழுத்துகளுக்கு வேறுபாடு கிடையாது. "கொடி' என்பதை இடத்துக்கேற்றவாறு, "கொடி' என்றோ அல்லது "கோடி' என்றோ படித்துக்கொள்ள வேண்டும். தமிழ் தெரிந்தவர்களுக்கு இது குழப்பமாக இருந்ததில்லை போலும்.

இன்றைக்கும் Raman என்பதை நாம் ராமன் என்று படிக்கிறோம், ஆனால், இந்தப் பெயரைக் கேள்வியுறாத வேறுநாட்டார், இதனை ரமன், ரமான், ராமான் என்று படித்துக் குழப்பமடைவதுண்டு. கடல, மககள, சினம, தநதை, வயல ஆகியவற்றை நாம் கடல், மக்கள், சினம், தந்தை, வயல் என்று சரியாகப் படித்துவிடுவோம். "அந்தத் தெருவில் தெர் சென்றது' என்பதை "அந்தத் தெருவில் தேர் சென்றது' என்று குழப்பமில்லாமல் படித்துவிடலாம். "கொழுநன் மீது கொபம் கொண்டாள்' என்பதனை, "கொழுநன் மீது கோபம் கொண்டாள்' என்றும் படித்துவிடுவதில் சிரமம் இல்லை. எனவேதான், பண்டைய தமிழ் எழுத்துகளில் புள்ளிகளோ, எ/ஏ, ஒ/ஓ வேறுபாடோ இல்லை.



தொல்காப்பியர் காலப் பிராமி எழுத்துக்கள்

ஆனால், தமிழ் தெரியாதவர்கள் இதனைப் படிக்கும்போது மெத்தத் தடுமாறுவர் என்பது உண்மை. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் தமிழ்நாட்டுக்கு வந்த சமண, புத்தத் துறவிகளுக்கு இது பேரிடராக இருந்திருக்கும். எனவே, தமிழில் எழுதப்பட்டதைப் படிக்கும்போது அவர்கள் பெரிதும் குழம்பியிருந்திருப்பர். இந்தக் குழப்பத்தைத் தீர்த்துவைக்க முனைந்தவர் தொல்காப்பியர். அவர்தான்,

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத்து இயற்கையும் அற்றே (எழுத்.நூன்.15,16)

என்று தொல்காப்பியத்தில் எழுதி வைத்துள்ளார். இதற்கு, மெய்யெழுத்துகள், மேலே புள்ளிபெறும், எகர/ஒகர உயிர்/உயிர்மெய் எழுத்துகளும் அவ்வாறே புள்ளிபெறும் என்பது பொருள். எனவே, "செடி', "கொன்' என்பவற்றை நெடிலாகச் "சேடி', "கோன்' என்றும், "செ', "கொ' ஆகிய எழுத்துகளுக்கு மேல் புள்ளி வைத்தால், அவற்றைக் குறிலாகச் "செடி', "கொன்' என்றும் படிக்க வேண்டும் என்பது தொல்காப்பிய(ர்) விதி.

ஆனால், இந்தப் புள்ளிமுறை தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னர் இருந்து, அவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறாரா அல்லது இந்த முறை தொல்காப்பியராலேயே ஏற்படுத்தப்பட்டதா என்பது கேள்வி.

தொல்காப்பியர் தனது இலக்கண நூலில், தமக்கு முன்னர் இருந்த பல மரபுகளைக் குறிப்பிடுகிறார். அவ்வாறு குறிப்பிடும்போது, அவர் அந்த மரபைக் கூறி, "என்ப', "என்மனார் புலவர்', "மொழிப' என்று குறிப்பிடுவார். காட்டாக,

பன்னீர் எழுத்தும் உயிர் என மொழிப (எழுத். நூன்:8/2)
வல்லெழுத்து என்ப க, ச, ட, த, ப (எழுத். நூன்:19/1)
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (எழுத். நூன்:6/2)

என்ற நூற்பாக்களைப் பார்க்கலாம்.

இவ்வாறாக, "என்ப' என்பது 145 இடங்களிலும், "என்மனார்' என்பது 75 இடங்களிலும், "மொழிப' என்பது 87 இடங்களிலும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. ஆனால், புள்ளிகளைப் பற்றிக் கூறுமிடத்து,

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத்து இயற்கையும் அற்றே

என்று இந்நூற்பாக்களைத் தன்கூற்றாகவே கூறியிருப்பதை உற்று நோக்க வேண்டும். புள்ளிமுறை தொல்காப்பியருக்கு முன்னர் இருந்திருந்தால் அவர் இந்நூற்பாக்களை,

மெய்யின் இயற்கை புள்ளிபெறும் என்ப
எகர ஒகரமும் அற்றென மொழிப

என்பது போன்று அமைத்திருந்திருப்பார்.

இதற்குச் சான்றாக இன்னொன்றையும் காட்டலாம். தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரம் என்ற முன்னுரையை அளித்திருப்பவர் பனம்பாரனார் என்ற புலவர். அவர் தொல்காப்பியரைப் பற்றிக் குறிப்பிடும்போது,

மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி,
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி

என்று குறிப்பிடுகிறார்.

"மயங்கா மரபின் எழுத்துமுறை' என்பதற்கு, மெய்ப்புள்ளி, எகர/ஏகார, ஒகர/ஓகார வேறுபாடுகள் இன்றி, மயக்கம் (ambiguity) தருகிற எழுத்து முறையில், புள்ளியை அறிமுகப்படுத்தி, இந்த மயக்கங்களைத் தீர்த்து வைத்தவர் என்று பொருள்கொள்வது சிறப்பாகும். தொல்காப்பியருக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப் பின்னர் தோன்றிய உரையாசிரியர்களின் காலத்தில் இந்த எழுத்துமுறையின் வரலாறு வெளிப்படாத காரணத்தால், இத்தொடருக்கு வேறுவிதமான பொருள் கூறிச் சென்றனர் எனலாம்.

நன்றி: தினமணி தமிழ்மணி

தொடர்பு: முனைவர்.ப.பாண்டியராஜா
pipiraja@gmail.com
http://sangacholai.in
tamilconcordance.in/

## 22. சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே !

— முனைவர் ஔவை. அருள்

நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி இன்று செம்மொழியாக உயர்ந்து சிறந்து பொலிவதற்கு அதன் தொன்மைத் தன்மையும் முதன்மையான காரணமாகும். ஒரு மொழியின் தொன்மையைப் போல அதன் இளமையும், எளிமையும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

இங்கு, இளமை என்பது, இன்றைய சூழலுக்கும் அம்மொழிக்கும் இடையேயான உயிரோட்டம் நிறைந்த உறவையே குறிக்கிறது. இதன் அடிப்படையில், தொன்மை, இனிமை, வளமை, செம்மை, வியன்மை போன்ற எண்ணற்ற சிறப்புகளை ஒருங்கேயுடைய தமிழ் மொழியை என்றும் குன்றாத இளமை மொழியாகவும் மிளிரச் செய்வதற்கு, சொல்லாக்கம் மிகவும் இன்றியமையாததாகிறது.

தமிழில் எழுத்துகளின் வகைகள், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பாகுபாடு யாவுமே திட்டமிட்டு மரபாக்கப்பட்டன. குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பவை தமிழுக்கு உரிய மரபு தான். நாய்க்குட்டி, கோழிக்குஞ்சி என்று இன்றும் கூறுவதற்கு மரபே அடிப்படையாகும்.

ஆண் யானையைக் களிறு என்றும், பெண் யானையைப் பிடி என்றும் கூறினர். மேற்புறத்தில் வலிமை உடைய மூங்கிலைப் புல்லினம் என்றனர். உட்பகுதியில் வைரம் கொண்டதை மரம் என்றனர். தாழை மடல், தென்னை ஓலை, வாழை இலை என்று கூறியதற்கும் மரபே அடிப்படையாகும். கண்ணி, தெரியல், தொங்கல், தொடை, கோதை என்று காரணத்தின் அடிப்படையிலான மாலையைப் பற்றிய சொற்கள் பிறகு மரபாக அமைந்தன.

ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் வளர்ச்சியடைந்துள்ள மொழியை அறிவியல் மொழியாகவும், நாளும் மாறிவரும் புதிய உலகிற்கான வளமொழியாகவும் வன்மை பெறச் செய்வதற்குச் செழுமையான சொற்களஞ்சியம் அம்மொழியில் இருத்தல் வேண்டும். பண்டைய காலத்திலிருந்தே, செழுமையான சொற்களைத் தமிழர்கள் உருவாக்கினர்.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
***சொல்லி னாகும் என்மனார் புலவர் "***
***- (தொல். பெய.2)***

எனச் சொல்லின் பொருட்தன்மையைத் தொல்காப்பியர் விளக்கினார். பொருண்மையும் சொன்மையும் தெரிதலோடு, ஒவ்வொரு சூழலுக்கும், பண்புக்கும், இடத்திற்கும், பயன்படும் முறைக்கும் ஏற்றவாறும் அக்காலத் தமிழர்கள் சொல்லாக்கம் செய்துள்ளனர்.

எடுத்துக்காட்டாகச் சோற்றை "அவிழ் பதம்" எனக் குறித்தனர். அவிழ்தல் என்பதற்கு, மலர்தல், விரிதல் எனப் பல பொருளுண்டு. சோறு, அரிசி எனும் நிலையிலிருந்து மாறி, நீரில் பதமாக வெந்து மலர்வதை அவிழ்பதம் என அழகாகச் சொல்லாக்கம் செய்துள்ளனர். தமிழர்களின் சொல்லாக்கத் திறனுக்கு இதுபோன்ற எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை முன்வைக்கலாம்.

ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சியும் அறிவியல் புனைவுகளும் மிகுந்து காணப்படுகிற இன்றைய சூழலில் அழகிய தமிழ்ச்சொற்களை நாம் மேலும் உருவாக்க இயலுமா ? அவ்வாறு உருவாக்கினாலும், அவற்றைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர ஏலுமா ? ஆங்கிலத்தில் ஒரு புதிய சொல் ஓரிரு வாரங்களில் வழக்கத்தில் வந்துவிடுகிறது. செய்தி ஊடகங்களும், சமூகத் தொடர்பியங்களும் அவற்றைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து விடுகின்றன,

ஆனால் தமிழ்ச்சொற்கள் வழக்கத்திற்கு வர ஆண்டுள் பல காத்திருக்க வேண்டியுள்ளது. சில சொற்கள் "அகராதி" அளவிலேயே நின்று விடுகின்றன. மின்சாரம் என்ற சொல் நடைமுறைக்கு வரவே 24 ஆண்டுக் காலம் கழிந்ததாகக் கூறப்படுகிறது.

'கண்டேன் கற்பினுக்கணியினை' என்று தன் சொல்லால் சீதையின் பெருமையை உணரச் செய்த அனுமனைச் "சொல்லின் செல்வன்" என்று கம்பர் அழைத்தார். மொழியியலின் பிற பிரிவுகளைக் காட்டிலும் இலக்கணத்துடன் நெருங்கிய தொடர்புடையது சொல்லாக்கம்.

பயிருடன் சேர்ந்து வளரும் களையை நீக்கப் பயன்படும் கருவிக்குக் களைக்கொத்தி என்று பெயர். பேசும் வழக்கில் களை என்ற சொல்லில் இருக்கும் 'ஐ' எனும் உயிர் ஒலியும் கொத்தி எனும் சொல்லில் இருக்கும் 'ஒ' எனும் உயிர் ஒலியும் மயங்கிக் களாத்தி என்ற புதிய சொல் உருவாகியது.

புதிதாக உருவாக்கப்படும் சொல்லானது, பொருள் மாறாமலும், சுருக்கமாகவும், இலக்கண மரபு பிறழாமலும் இருக்க வேண்டும். ஆனால், அண்மைக் காலமாகச் சொல்லாக்கம் செய்யப்பட்டுள்ள சில சொற்கள் இலக்கண மரபை மீறியுள்ளதாகவே தெரிகிறது. எடுத்துக்காட்டாக, " Eraser " எனும் ஆங்கிலச் சொல்லுக்கு " அழிப்பான் " எனும் தமிழ்ச்சொல் தற்போது வழக்கத்தில் உள்ளது. ஆனால், அஃறிணைப் பொருளுக்கு 'அன்' விகுதி சூட்டப்படலாமா ? புரிந்துகொள்வதற்கு எளிதாக இருக்கும் காரணத்தால், இச்சொல் விரைவாக வழக்கத்தில் வந்துவிட்டது. 'Bicycle' எனும் சொல்லுக்கு " ஈருருளி " என்று அழகாகச் சொல்லாக்கம் செய்யப்பட்டிருப்பினும், " மிதிவண்டி " என்ற சொல்லே வென்றது.

பிரேசில் நாட்டில் விளைந்த காப்பிக்கொட்டை ஆடு, மாடு, மான் போன்ற விலங்குகளின் குளம்பு போலிருந்த காரணத்தால், பேரறிஞர் தேவநேயப் பாவாணர் காப்பியைக் " குளம்பி " எனும் சொல்லால் குறித்தார். ஆனால், ஆண்டுகள் பல கடந்தும் அச்சொல் இன்றளவும் பலரைச் சென்றடையாதது வருத்தத்திற்குரியதே.

நாளும் புதிய கண்டுபிடிப்புகள் வந்து கொண்டிக்கும் இக்காலத்தில், அவற்றோடு தொடர்புடைய புதிய சொற்களை உருவாக்குவது மொழியின் வளர்ச்சிக்கான இன்றியமையாப் பணியாகும். அதே வேளையில், நம் முன்னோர்கள் உருவாக்கிய

அழகிய தமிழ்ச்சொற்களை இன்றைய தலைமுறையினரிடம் கொண்டு செல்வதும் நம் பெருங்கடமையாகும்.

ஒரு மொழியை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு, அம்மொழியில், தொடர்ந்து புதிய சொற்கள் அவ்வப்போது உருவாக்கப்பட வேண்டும். ஆனால், அத்தகைய சொற்களை உருவாக்கும் பணியில், மூத்த தமிழறிஞர்களோடு இன்றைய தலைமுறையினரும் ஆர்வத்துடன் பங்கேற்று இலக்கண நெறி மாறாமலும், தமிழின் சுவையும் பொருளும் குன்றாமலும் நாளும் புதிய கலைச்சொற்களைச் செம்மொழியாம் தமிழ்மொழிக்குச் சேர்க்க வேண்டும் என்பதே என் விருப்பம்.

மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் சொல்லாக்கப் பணியைத் தொழுது மேற்கொள்வோம். தமிழின் சிறப்பைப் பாரெங்கும் பறைசாற்றுவோம்.

நன்றி:
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடான
2021 திசம்பர்த் திங்கள் மின்னிதழ் - "சொல்வயல்"

முனைவர் ஔவை ந. அருள்
இயக்குநர் (மொழிபெயர்ப்பு)
தலைமைச்செயலகம்

# 23. மொழிபெயர்ப்பாளர் பண்பாடுகளிடையே பாலம் கட்டுபவர்

— முனைவர் ஆனந்த் அமலதாஸ்

நூல் ஒன்றை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு எடுத்துச்செல்வது உலகெங்கும் ஒரு பெரிய பணியாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்திய நாட்டில் பல மொழிகள் பேசுபவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் கூடி வாழும்பொழுது மொழிபெயர்ப்பு அன்றாட வாழ்வின் எதார்த்த நிலையாகிறது. எடுத்துக்காட்டாக, டில்லியில் வாழும் தமிழர் வீட்டில் தமிழ் பேசுவார், தெருவில் இந்தி பேசுவார், அலுவலகத்தில் ஆங்கிலம் பேசுவார். அதேபோல சென்னையில் வாழும் வங்காளர் வீட்டில் பங்களா, தெருவில் தமிழ், அலுவலகத்தில் ஆங்கிலமாக இருக்கும். இங்கே ஏதோ ஒரு வகையில் மொழிபெயர்ப்பு நடந்துகொண்டே இருக்கிறது.

மேலும் நமது நாட்டில் பிற மொழியில் உள்ள நூட்களை ஆங்கில மொழிபெயர்ப்பால் அறிமுகமாக்கிக் கொண்டிருக்கின்றோம். இருபதாம் நூற்றாண்டில் நடந்த பல்வேறு சீர்திருத்தங்களும் நமது நாட்டின் நூட்களை அயல் நாட்டார் ஆங்கிலத்தில் அமைத்துக் கொடுத்ததால் அதன் துணைநாடி நமது தலைவர்கள் நமது பண்பாட்டைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் அவர்கள் உருவாக்கிய "இன்டாலஜி" என்ற துறை முக்கியத்துவம் பெற்றது.

இன்றைய அளவில் புலம்பெயர்ந்த அல்லது அயல் நாட்டோடு தொடர்பு கொண்டுள்ள தமிழர்கள் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஒரு சில எடுத்துக்காட்டுகள் அதற்குச் சான்று. ஜெர்மன் கவிதைத் தொகுப்பைத் தமிழில் மொழியாக்கம் செய்து வத்சலா விஜயகுமார் வெளியிட்டார். (2007). "மகாத்மா காந்தியின் ஐந்து நொடிகள்" என்று வால்டர் எரிக் சேபர் (1948) எழுதிய ஜெர்மன்

வானொலி நாடகத்தை "கூத்துப்பட்டறை" நாடகக்குழு தமிழில் அரங்கேற்றியது. நானே பல தமிழ் நூட்களை – அபிராமி அந்தாதி, கந்தர் அநுபூதி, நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலிருந்து 100 பாடல்கள், சித்தர் பாடல்கள் போன்றவற்றை - ஜெர்மனில் மொழி பெயர்த்துள்ளேன்[1].

**மொழிபெயர்ப்புக்கு எதிர்ப்பு:**
மூல நூலின் சிறப்பை மொழிபெயர்ப்பில் கொண்டுவர முடியாது; அதனால் மொழிபெயர்ப்பெல்லாம் இரண்டாம் தரம் என்ற பழைய கருத்து மாறிக் கொண்டிருக்கிறது. "மொழிபெயர்ப்பு சமுக்காளத்தின் மறுபக்கம்", "மொழிபெயர்ப்பவன் காட்டிக்கொடுக்கும் துரோகி" (இத்தாலிய பழமொழி - Traduttore, traditore). "கவிதையை மொழி பெயர்க்க முடியாது. அதனால் கவிஞர்கள்தான் மொழியின் பாதுகாவலர்கள்" (டாக்டர் ஜான்சன்). "கவிதையை மொழிபெயர்ப்பில் வாசிப்பது ஒரு பெண்ணைத் திரைவழியாய் முத்தமிடுவதற்குச் சமம்" (Chaim Bialik).

மொழிபெயர்ப்பு கோட்பாளர்கள் இத்தகைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் மொழிபெயர்ப்பு புதிதாக ஆக்கும் ஆற்றல் கொண்டது, புதிய விளக்கம் கொடுக்கும் திறனுடையது. அது மாற்றுக்கருவுயிர்ப்புக்கு இடம் அளிக்கிறது. மொழிகளும் இலக்கியமும் தொடர்ந்து ஒன்றோடொன்று இணைந்து செயல்படும் போது மனுக்குலத்தின் வரலாற்று வளர்ச்சியைத் தெளிவுபடுத்துகிறது[2].

**மொழிபெயர்ப்பாளர் பண்பாடுகளிடையே பாலம் கட்டுபவர்:**
மொழிபெயர்ப்புப் பணி வரலாற்றில் தொடர்ந்து செயல்பாட்டில் இருந்தது. ஐரோப்பாவில் ரிச்சர்ட் பர்ட்டனை (Sir Richard Francis Burton 1821-1890) அதிகம் கொண்டாடுகின்றனர்[3]. 23 மொழிகள் கற்றவராகவும், இந்தியா, அரபு நாடுகள் போன்ற இடங்களுக்குச் சென்று முப்பதுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பைக் கொடுத்தவர். அவரது காம சூத்திர நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு கோடிக்கணக்கான பிரதிகள் விற்பனையாயின என்பர்.

இவர் ஐரோப்பாவின் மனநிலைக்கு எடுத்துக்காட்டாக முன் வைக்கின்றனர். ஐரோப்பாவின் அறிவுதேடும் முயற்சிக்கு

முன்னோடி. ஐரோப்பிய சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர். எராஸ்மஸ் சொல்வது போல, “அவர் கட்டிய நூலகத்திற்கு உலகத்தைத் தவிர வேறு எந்த எல்லையும் இல்லை” (“a library which has no other limits than the world itself.”). கான்ஸ்டன்டைன் (Constantine the African (c.1020-1087) பல நாடுகளுக்குச் சென்று 40 ஆண்டுகளாக சேகரித்த இலத்தீன் நூட்களை எல்லாம் “மோந்தே கசினோவில்” (உரோமை நகருக்கு அருகில்) வைத்ததாகச் சொல்வார்கள்[4].

ஐரோப்பாவில் எல்லோருக்கும் இலத்தீன் வாசிக்கத் தெரியாது. அதனால் மொழிபெயர்ப்பு தேவைப்பட்டது. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி மொழிபெயர்ப்பால் நிகழ்ந்தது. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலம் தெரிந்த சாதாரண மனிதன் அரபு, சமஸ்கிருத, பாரசீக மொழிகளில் இருந்த நூட்களை வாசித்து அறிந்து கொள்ள முடிந்தது[5].

**மொழிபெயர்ப்பாளர் பல பண்பாட்டின் பங்காளிகள்:**
மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் மற்ற பண்பாட்டைப் புரிந்து கொள்ள முடியாது, மற்ற பண்பாட்டோடு இணைந்து வாழ முடியாது. தற்சமயம் பன்முகப் பண்பாட்டுப்பார்வை என்ற குரல் ஒலிக்கிறது. சிலர் தமது மொழிபெயர்ப்பால் பல பண்பாட்டை இணைத்துப் பாலம் கட்டியதால் இது சாத்தியமாகிறது. சாதாரண மக்கள் பிற பண்பாட்டில் தோன்றிய நூட்களைத் தங்கள் சொந்த மொழியிலேயே வாசிக்க முடிகிறது. அதனால் அவர்கள் கண்ணோட்டம் விரிவடைகிறது. பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கெடுக்க, உலகளாவிய பொதுநலத் திட்டத்தைப்பற்றிப் பேச வாய்ப்புக் கிடைக்கிறது.

இரண்டாவதாக, மொழி பெயர்ப்பாளர் நூட்களின் மற்றொரு உலகில் நுழையும் பொழுது அவர்களுக்குள்ளும் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. எங்கெல்லாம் ஒருவர் மற்றொருவரைத் திறந்த மனத்தோடு சந்திக்கின்றனரோ அதை ஒரு மாற்றம் நிகழும் நேரம் என்று சொல்லலாம். இந்த உண்மை மனிதர்களைச் சந்திக்கும்பொழுது மட்டும் அல்ல, நூட்கள் போன்ற மற்ற பொருட்களுக்கும் பொருந்தும். ஒரு நூலைச்சந்திக்கும் வழியாக நாம் நம்மையே புதிதாகக் கண்டு கொள்கிறோம். நாம் சந்திக்கும்

தோழர் நமது உண்மையான நிலையை ஒரு கண்ணாடிபோல காட்டுவது போல, ஒரு நூலும் நாம் யாரென்றும், நம்மையே விமர்சனத்திற்குட்படும் தன்னறிவையும் காட்டும்.

நாம் திறந்த மனத்துடன் அணுகும்பொழுது, நாம் வாசிக்கும் நூலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க முடியாது. ஏதோ ஒரு வகையில் நமது கண்ணோட்டம் மாறும். நூட்கள் ஒரு புது தொலை நோக்குப் பார்வையை, புதிய சிந்தனைகளை, சிலசமயம் வியப்பிற்குரியதாகவும், சில சமயம் நமது மரபையும் கூட கேள்வி கேட்கும் அளவிற்குத் தூண்டி விடலாம். நாம் ஒரு நூலிலிருந்து கண்டுணர்ந்த சிந்தனை மற்றொரு சூழ்நிலைக்கு அழைத்துச்செல்லும். சொற்களும், நூட்களும், புதிதான உள்ளர்த்தம் பெறும். இவ்வாறு நூட்களே ஆசிரியர்களாக மாறும். இந்த மாற்றம் ஒரு குறிப்பிட்ட நபரில் மட்டும் நிகழ்வதல்ல, நமது சூழ்நிலையிலும், உள்ளதனைத்திலும் நிகழும். ஒரு நூலை வாசித்த பிறகு நமது உலகமே வேறுபட்டுத் தெரியும். ஏனெனில், நமது முந்திய புரிதலில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**இந்த வழிமுறையில் ஏற்படும் சில இடர்ப்பாடுகள்:**

சமமதிப்புப் பொருள்கொண்ட சொற்களைத்தேடல்?

இது பண்பாட்டை இணைக்கும் முயற்சியில் நாம் கையாளும் முறையைப் பொருத்திருக்கிறது. ஒரு கருத்தை ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப் பின்னணியில் வைத்து வரையறை செய்துவிட்டு, அதற்குச் சமமான கருத்தை மற்றொரு பண்பாட்டில் தேடினால் அங்கே அது கிடைக்காது. இந்த முயற்சி வெற்றி பெறாது. அப்படியே தொடர்ந்து செய்தால் ஒரு பண்பாட்டின் உயர்ந்த நிலையைத் தூக்கிப்பிடித்து மற்றொரு பண்பாட்டோடு போட்டிக்கு இட்டுச்செல்லும்.

இந்தத் தவற்றை தவிர்ப்பதற்கு ரெய்மோன் பணிக்கர் (1918-2010) பரிந்துரைத்த முறை பயனாக இருக்கும். அவர் கூறுவது போல நாம் என்ன தேட வேண்டும் என்பது: homeomorphic equivalents-functional similarity. அதாவது, சம பொருள்தரும் சொற்களைத் தேடாமல், சம பணிசெய்யும் சொற்களைத் தேடலாம். எடுத்தக்காட்டாக, ஐரோப்பாவில்; - 'பிலாசபி' – என்ற சொல் என்ன பணியைச் செய்கிறதோ அதே பணியை இந்திய மரபில் பல்வேறு

சொற்கள் சேர்ந்து செய்கின்றன: தர்சனா, பிரஞ்ஞா, ஞானம், ஆன்வீக்சிகி – இவை சமஸ்கிருதத்தில் உள்ளவை; தமிழில் - மறைஞானம், மெய்ஞானம், காட்சியியல் (தொல்காப்பியம்), மெய்யியல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டலாம்[6].

மற்றுமொரு எடுத்துக்காட்டு: நம்பிக்கை வாதிகளின் சமூகத்தை "எக்ளேசியா" (ecclesia) என்பது மேற்கத்திய நாடுகளில் பயன்படுத்தும் சொல். இது மற்ற பண்பாட்டில் அறியப்படாத ஒன்றல்ல. பௌத்தத்தில் சங்கா (sangha) என்பதும், இஸ்லாமியர் "உம்மா" (Umma) என்பதும் "எக்ளேசியா" வின் "ஹோமியோமோர்பிக் ஈக்குவலன்ட்". ஆனாலும் கூட "எக்ளேசியா"வும் "உம்மா"வும் "சங்கா"வும் சமம் என்று சொல்ல முடியாது. ஒவ்வொன்றுக்கும் உரிய தனித்துவத்தை இங்கு மறுக்க வில்லை. அந்த அந்தச் சமூகத்தில் இச்சொற்கள் சம பணியைச் செய்கின்றன.

இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் உருவான தனித்துவம் பெற்ற ஒரு கருத்தியலை எப்படி மற்றொரு பண்பாட்டிற்கு எடுத்துச்செல்வது? சில சமயங்களில் ஒரு சொல்லைப் பல சொற்களால் பதிவு செய்யவேண்டியிருக்கும். அப்பொழுதுதான் அதன் தனித்துவம் தெளிவாகும். அப்படி ஒரு சொல்லுக்குப் பல சொற்கள் விளக்கம் தருமானால், அது மொழிபெயர்ப்பல்ல, பொழிப்புரையாக மாறும். ஜெர்மானிய சிந்தனையாளர் மத்தியில் (Lüder, Paul Thieme, Jan Gonda) ஒரு விவாதம் எழுந்தது:'ரித' (rta) என்ற சமஸ்கிருத சொல்லை உண்மை (Wahrheit) என்று மொழி பெயர்த்தார்கள். ஆனால், அதன்வழி அச்சொல்லின் முழு பொருளும் தெளிவடையவில்லை. ரித என்பது "உண்மை" மட்டுமல்ல. அதனால் பவுல் ஹாக்கர் சொல்வது கொஞ்சம் தெளிவு கொடுத்தது. பல்வேறு கருத்தியல்களை மொழி பெயர்க்கும்பொழுது அவைகளின் ஒன்றிணைப்பை அல்ல, அவற்றின் உட்பொருளை (Wortinhalt) வெளிக்கொணர வேண்டும் என்பது[7].

இந்தியாவில் நூற்றுக்கணக்கான வகையில் இராமாயணத்தைப் பதிவு செய்துள்ளார்கள். வால்மீகியின் மூல நூலிலிருந்து அப்படியே மொழி பெயர்க்கவில்லை. இத்தகைய

மொழிபெயர்ப்பில் மூல கதை சூழ்நிலைக்கேற்ப, பல்வேறு மரபுகளுக்கு ஏற்ப, புதிய உருப்பெற்று தொடர்ந்து வந்திருக்கின்றது. ஏ. கே. இராமானுஜன் சொல்வது போல, "மூல நூல் என்று ஒன்று இல்லை. இக்கதையை ஒரு நூலில் அடக்கிவைத்திருந்தாலும் கூட, இக்கதைக்கு வேலி ஏதும் இல்லை. இராமாயணத்தையோ, மகாபாரதத்தையோ யாரும் முதல் தடவையாக வாசிப்பதில்லை. கதைகள் எப்போதும் ஏற்கனவே இங்கே இருந்துகொண்டே இருக்கின்றன" [8].

**ஒரு நூலைத் தவறாகப்புரிதல்:**
மொழி பெயர்ப்பாளர்களுக்கு எதிராக இன்னுமொரு குற்றச்சாட்டு இருக்கிறது. தவறாகப் புரிந்து கொள்வது ஒரே மொழி பேசும் அறிஞர்கள் மத்தியிலும் உண்டு. பிற மொழியினர் செய்யும் மொழிபெயர்ப்பில் மட்டும் உண்டு எனச்சொல்ல முடியாது. இந்தக் கேள்விக்கு கடமர் (Gadamer) கொடுக்கும் விளக்கம் கவனத்திற்குரியது. ஒவ்வொரு புரிதலிலும் "முன்கூட்டிய மன நிலை" (prejudice – pre-judgment) என்று ஒன்று உண்டு. நாம் வாசிக்கையில் முன்கூட்டிய மன நிலையோடுதான் தொடங்குகிறோம். அது தன்வளர்ச்சியில் தொடர்ந்து மாறுபட்டுக்கொண்டே இருக்கும். யாரும் வெற்றிடமான அல்லது வெட்டவெளியான மனத்தோடு தொடங்குவதில்லை. ஏதாவது ஒரு முந்திய பின்னணியில்; பதிவான மனநிலையோடுதான் தொடங்குகின்றோம்.

**ஓரியன்டலிசம் (Orientalism) என்ற கண்ணோக்கு:**
பண்பாட்டுப் பரிமாறல் முயற்சியில் பொதுவாகவே ஓர் எதிர்மறையான பார்வை உண்டு. இது எட்வர்ட் சயத் எழுதிய நூலிலிருந்து இது வலுவடைந்தது. மேற்கத்திய சிந்தனையாளர் பார்வை இஸ்லாமிய உலகைக் கட்டுப்படுத்தும் அரசியல் நோக்கம் கொண்டது என்பது[9]. இத்தகைய பார்வை காலனிய ஆதிக்கத்தோடு எங்கும் பரவலாகப் பார்க்கப்பட்டது. முக்கியமான எடுத்துக்காட்டு ஐரோப்பியர் அமெரிக்காவை சூறையாடியதிலிருந்து தொடங்குகிறது.

1492 ஆம் ஆண்டில் கொலம்பஸின்; கடல் பயணத்தோடு இது தொடங்குகிறது. இதைச் சுருக்கமாக அமெரிக்காவின்

ஆக்கிரமிப்பு என்ற நூல் சித்தரிக்கிறது[10]. “ஒரு புதிய மும்மூர்த்திகள் பழங்கால போர்வீரன்-வெற்றியாளர் என்ற சொல்லாடலை மாற்றி அமைக்கின்றனர்: அறிஞர்-மதகுரு-வியாபாரி என்ற மும்மூர்த்திகள். முதலில் அறிஞர் வந்து நாட்டின் விவரங்களைச் சேகரிப்பார்; பிறகு சமயகுரு வந்து ஆன்மீக அளவில் ஒன்றிணைப்பார்; பிறகு, வியாபாரி செல்வம் சேகரிக்க தொடங்குவார்” [11].

ஏன் மற்றவர்களைப் பற்றிப் படிக்க வேண்டும், ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற கேள்விக்குப் பலவிதமாக பதில் சொல்லலாம். சில காலங்களில் மற்றவர்களைத் தோற்கடிப்பதற்காக, அவர்கள் கோட்பாட்டை மறுப்பதற்காக, மனம் மாற்றுவதற்காக ஆராய்ச்சியில் ஈடுபடலாம். ஆனால் எல்லா முயற்சிகளையும் சந்தேகக் கண்ணோடு பார்க்க வேண்டியதில்லை. மற்றவர்களை நன்கு புரிந்து கொள்ள, மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள, மற்றவர்களோடு இணைத்துப் பாலம் கட்ட முயன்ற ஆய்வாளர்கள் அநேகர் உண்டு. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த–வாழ்கின்ற திறந்த மனம்கொண்ட சில ஆய்வாளர்களை இங்குக் குறிப்பிடலாம். Wilfred Cantwell Smith [12], Raimon Panikkar [13], J. L. Mehta [14] , Wilhelm Halbfass [15], A. K. Ramanujan [16], R. Balakrishnan [17] - இவர்கள் உண்மையிலேயே இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே பாலம் கட்டியவர்கள்.

ருட்யார்டு கிப்லிங் (Rudyard Kipling) சொன்னதை இப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியாது: “கிழக்கு கிழக்குதான்; மேற்கு மேற்குதான்; இவை இரண்டும் ஒருநாளும் இணையாது, சந்திக்காது.” சமூக வலைத்தளம் நிறைந்த உலகில் பண்பாடுகளிடையே செய்திகள் மிக விரைவாக பரவுவதைப் பார்க்கிறோம். இன்று உலகச் சந்தையைப் பற்றி, உலகளாவிய நெறிமுறை பற்றிப் பேசுவதைச் சாதாரண அளவில் கணிக்கப்படுகிறது.

இன்றைய அளவில் பண்பாடுகளுக்கிடையே எழுப்பிய சுவர்களும் வேலிகளும் மாற்றி அமைக்கப்படுகின்றன. இருந்தாலும் இதன் பின்னணியில் பண்பாட்டின் தனித்துவத்திற்காகவும் போராடும் போர்க்குரலும் பலமாக ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

அதனால், முன்பு கிப்லிங் சொன்னதைப் புதிய பண்பாட்டு மோதலின் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே ஒவ்வொருவரும் தனக்கே உரித்தான அடையாளத்தைத் தேடி அலைகின்றனர். மேற்கத்திய நாடுகள் தாங்கள் அடைந்த ஆதிக்க நிலையின் செல்வாக்குத் தலையணையில் சாய்ந்து கொண்டு அனுபவிக்கலாம். இருப்பினும் இந்தப்பண்பாட்டு மோதலின் தாக்கம் அவர்கள் அடையாளத்தைப் பற்றியும் கேள்வி கேட்க வைக்கிறது[18].

இந்நிலையில் நம்மிடம் எழும் முக்கிய கேள்வி இது: நம்மைவிட வேறு உலகைச் சார்ந்தவரை, பண்பாட்டால் வேறுபட்டவரைப் புரிந்து கொள்ள முடியுமா? எப்போதும் தவறாகத்தான் புரியமுடியுமா? ஏனெனில் நமது முன்புரிதல் வேறுபட்டிருக்கிதே? அதனால் இந்த முயற்சியை முழுதும் கைவிட்டு விடவேண்டுமா? அப்படி ஒதுங்கிப்போவது இன்றைய சூழ்நிலையில் சாத்தியமில்லை. அதாவது சந்தைகள் உலகமயமானபின், வலைத்தளவழி செய்திபரவும் நிலை எதார்த்தமான அளவில் ஒதுங்கி இருக்க வாய்ப்பில்லை. பண்பாட்டுப் பலாத்காரமின்றி, மற்றவரைப் புரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு, அத்தகைய வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

**இந்தியாவின் மொழிபெயர்ப்பு-அரசியல்:**

ஒரு இந்திய மொழியில் உள்ள நாவலை (புதினத்தை) மற்றொரு மொழிக்குக் கொண்டு சேர்க்கும் முயற்சி குறைந்து கொண்டே போகிறது. பெரும்பாலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு அதிகரித்து உள்ளது. மராத்தியிலிருந்து கன்னடத்திற்கோ, தமிழிலிருந்து மலையாளத்திற்கு எடுத்துச் செல்வது இயற்கையானது, சுலபமானதும் கூட. ஆனால் இந்திய மொழி நாவல் ஆங்கிலம் போன்ற உலக மொழியில் வெளிவரும் பொழுது அதன் ஆதிக்கச் செல்வாக்கும் பொருளாதார வளமும் அதிகரிக்கிறது. மேலும் இன்றைய இன்றைய இந்திய இளைஞரிடம் உள்ள மனப்பான்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலம் தெரிந்திருந்தால் இன்னொரு இந்தியமொழி கற்பது தேவையற்றதாகிறது. உலகளாவிய ஒரு மொழி கற்றால் போதும் என்பது இன்றைய தலைமுறையின் எண்ணமாகத் தெரிகிறது[19].

இரண்டாவதாக, புத்தகங்கள் அழகியல் உலகில் மட்டும் இயங்குவதில்லை. மக்கள் பொதுவாக பத்திரிக்கையில் விளம்பரம் பார்த்து, வலைத்தளங்களில் விமர்சனம் பெற்ற புத்தகங்களை வாசிக்க விரும்புகின்றார்கள். புத்தகங்களும் மற்ற பொருட்களைப்போல விற்பனைக்கு விளம்பரம் பெருகுகின்றன. ஆனால் எந்தப் புத்தகம் மொழி பெயர்க்கப்படவேண்டும், அதிக விளம்பரத்திற்கு உட்படுத்த வேண்டும் என யார் முடிவு செய்வது? மேலும், பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறையில் உள்ளவர்கள் ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய நூல்களையே விரும்புவார்கள். இரபீந்திரநாத் நூட்களை ஆங்கில வடிவில் கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனால் ஆங்கில நூட்கள் அதிகம் இங்கே இறக்குமதியாகுகின்றன.

இந்திய நாட்டு எழுத்தாளர் நூட்களை ஐரோப்பியர் நமது சமூக சூழ்நிலையை அறிந்து கொள்ள வாசிக்கின்றனர். இதைத் தவிர்க்க முடியாது. ஆனால் இத்தகைய உலகமயமான புதிய உலக கட்டமைப்பில் நாம் ஒரே பக்கமாக பார்க்கும் கைதிகளாக இருந்து விடுவோமோ என்ற அச்சமும் ஆபத்தும் உண்டு[20].

**நாட்டார் மரபை மொழிபெயர்க்கும் ஆராய்ச்சியாளர் கடமை:**
எழுத்துருவம் பெற்ற ஒரு நூலை மொழிபெயர்ப்பதற்கும் வாய்மொழி மரபை மொழி பெயர்ப்பதற்கும் வேறுபாடு உண்டு. மூலப்பண்பாட்டின் கனவுகள், கதைகள், புராணங்கள், சின்னங்கள், சடங்குகள் போன்றவை வாய்மொழி மரபின் "நூட்கள்" எனலாம்.

இங்கு எழும் கேள்வி கவனத்திற்குரியது. நாட்டார் மரபை மொழிபெயர்க்க முடியுமா என்பது மட்டுமல்ல, வாய்மொழி மரபில் ஒரு குறிப்பிட்ட நிலையான நூல் வடிவம் இல்லை. அது மாறிக்கொண்டே இருக்கும். அதனால் பல்வேறு ஓலைச்சுவடிகள், வேறுபட்ட விளக்கங்கள் கொண்டுள்ளன. சடங்கு முறைக்குட்பட்ட மரபு இன்னும் அதிகமாக மாறிக்கொண்டே இருக்கும்[21]. மூல நூல் என்பது ஒருவர் மனப்பாடமாக வைத்திருந்ததைத் திரும்பத் திரும்பச் சொல்வதை நாட்டார் மரபு ஆராய்ச்சியாளர் பதிவு

செய்கிறார். அந்த மரபின் ஆசிரியர் தெரியாது. ஆனால் மொழிபெயர்த்தவர் பெயரில் இது வெளியாகும்[22].

**இறுதியாக ஓர் எச்சரிக்கை:**
ஒரு வரலாற்று நூலை வாசிக்க முன்பு அதை எழுதியவரின் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர் பதிவு செய்யும் வரலாற்று நிகழ்வுகள் அவரது சிந்தனைக் கட்டமைப்பைப் பொருத்திருக்கிறது. மீன்பிடிப்பவர் எத்தகைய வலை வைத்திருக்கிறார் என்று தெரிந்தால் அவர் எத்தகைய மீனைப் பிடிப்பார் என்று முன்னதாகவே சொல்லி விடலாம். அவர் கடலின் எந்தப் பகுதியில், எந்த நேரத்தில், வலை வீசுகிறாரோ அதைப் பொருத்துத்தான் அவருக்குக் கிடைக்கும் மீன் வகைகளும் இருக்கும். அதுபோலத்தான் வரலாற்று நிபுணர்கள் நமக்குக் காட்டும் உலகமும் அமைந்திருக்கும். இதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் விதிவிலக்கு அல்ல.

**References:**
1. Anand Amaladass, Abhirami Antati. Die weibliche Dimension der Gottheit. Eine indische Perspektive, Verlag Mueller-Speiser, Anif/Salzburg, 2004; Siva, der Tanzende Gott (2004), Mein Gott ist ein Dieb, Vishnu-Hymnen der tamilischen Alvar-Tradition, (2004); Siva Tanzt in Südindien (2009).

2. Dilip Chitre, “Translating Sensibility”, in Culture and the Making of Identity in Contemporary India. Edited by Kamala Ganesh & Usha Thakkar, Sage Publications New Delhi, 2005, p. 127.

3. Iliya Troyanov’s novel The Collector of Worlds (Weltensammler, 2006).

4. Daniel J. Boorstin, The Discoveries. A History of Man’s Search to Know His World and Himself. Penguin Books, 1982, 492.

5. Daniel J. Boorstin, p. 549 –550.

6. Raimon Panikkar, "Satapathaprajna: Should We Speak of Philosophy in Classical India? A Case of Homeomorphic Equivalents." In: Contemporary Philosophy. A New Survey. 1993. Vo. 7, 11-67.

7. "Zur Methode der philologischen Begriffsforschung", in Paul Hacker. Kleine Schriften. Hrg von Lambert Schmithausen, Franz Steiner Verlag GMBH, Wiesbaden 1978, 18-33.

8. A.K.Ramanujan, "Three Hundred Ramayanas", in The Collected Essays of A.K.Ramanujan, Edited by Vinay Dharwadker, Oxford University Press, 1999, p. 158.

9. Edward W. Said, Orientalism. Western Conception of the Orient, (1978) Penguin Books, 1995.

10. Tzvetan Todorov, The Conquest of America: The Question of the Other, trans. Richard Howard, New York: Harper and Row, 1984.

11. Fred Dallmayr, Beyond Orientalism. Essays on Cross-Cultural Encounter, Rawat Publications, Jaipur & New Delhi 1996, p. 7.

12. C.W Smith, Islam in Modern History, New American Library, New York 1957 and On Understanding Islam, The Hague: Mouton 1981.

13. Raimon Panikkar, Myth Faith and Hermeneutics, Paulist Press, New York 1978 and The Intrareligious Dialogue, Paulist Press, New York, 1978.

14. J. L. Mehta, India and the West: The Problem of Understanding (Chico, Calif.: Scholar Press, 1985 and Philosophy and Religion: Essays in Interpretation, New Delhi: Manoharlal, 1990.

15. W. Halbfass, India and Europe: An Essay in Understanding, Albany: State University of New York Press, 1988; Tradition and Reflection: Explorations in Indian Thought Albany: State University of New York Press, 1991.

16. A. K. Ramanujan, “Is there an Indian Way of Thinking? An Informal Essay”, in McKim Marriot, ed. India through Hindu Categories, Delhi: Sage Publications, 1990; Folk Tales from India: A Selection of Oral Tales from Twenty-Two Languages, New York: Pantheon Books, 1991.

17. R. Balakrishnan, The Journey of a Civilization. Indus to Vaigai, RMRL, Chennai, 2019.

18. Dallmayr, p.134.

19. Meenakshi Mukherjee, “The Novel In India, In English and in English Translation”, in Culture and the Making of Identity in Contemporary India, edited by Kamala Ganesh and Usha Thakkar, Sage Publications, New Delhi, 2005, 112.

20. U. R. Anantamurthy, “What does Translation Mean in India?” in Culture and the Making of Identity in Contemporary India, edited by Kamala Ganesh and Usha Thakkar, Sage Publications, New Delhi, 2005, p. 133.

21. Kailash C. Baral, “Translating the Oral: Transltability and Cultural Dynamics”, in Indian Folklore Research Journal. No. 9, Dec. 2009, p. 30.

22. Ibid. 33.

# 24. தமிழில் கடன் சொற்களுக்கு என விதிமுறைகள் உண்டு

— முனைவர் செ. இராஜேஸ்வரி

அண்மையில் ஒரு வெளிநாட்டு நகைச்சுவைத் துணுக்கு ஒன்று சமூக வலைத் தளத்தில் பரவியது. ஓர் ஆசிரியரிடம் மாணவன் 'ஏன் மேடம் hour, horse போன்றவற்றில் 'h' silent ஆக இருக்கிறது என்பான்?' அதற்கு அந்த ஆங்கில ஆசிரியை, 'ஆமாம் அது அப்படித்தான் என்பார்'. மதிய உணவு இடைவேளையின் போது அந்த ஆசிரியை அதே மாணவனை அழைத்து தன் லஞ்ச் பாக்சை கொடுத்து heat என்பார். அவன் சிறிது நேரம் கழித்து அந்த பாக்சை கொண்டு வந்து அவரிடம் கொடுப்பான். திறந்து பார்த்தால் அதில் ஒன்றும் இருக்காது, அதிர்ச்சி அடைவார் அந்த ஆசிரியை. 'என்னப்பா இது? உன்னை உணவைச் சூடு படுத்திக் கொண்டு வர சொன்னேன். இப்போ பாக்சில் ஒன்னும் இல்லையே. நான் சொன்னது புரியலயா? எங்கே என் சாப்பாடு?' என்பார். அதற்கு அந்தப் புத்திசாலி மாணவன் 'மேடம் 'h' silent தானே அதனால் நான் eat என்று புரிந்துகொண்டேன். உணவைச் சாப்பிட்டு முடித்துவிட்டேன்', என்பான்.

இன்றைக்குப் பல ஆசிரியர்கள் நிலை இதுதான். மாணவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரிவதில்லை. ஆங்கிலத்தின் வரலாற்றைத் தெரிந்துகொள்வோம். ஆங்க்லோ சேக்சன் மொழி என்பது ஆங்கிலத்தின் தாய் மொழி. அந்த ஆங்க்லோ சேக்சனில் அறிவியல், தத்துவ இயல் (religion and philosophy) துறைகளில் சொற்கள் இல்லை. அதனால் ஆங்க்லோ சேக்சன் மொழி, கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளிலிருந்து இந்தச் சொற்களை கடனாகப் பெற்றது. பண்பாடு மற்றும் நிர்வாகத் துறை சார்ந்த சொற்களைப் பிரஞ்சு மொழியிலிருந்து ஏராளமாகக் கடன் வாங்கியது. கடன் வாங்கி, கடன் வாங்கி அதன் மொத்த உருவமும் மாறிவிட்டது. அதனால் அதற்குப் பிறகு மாறிய

அந்த புது மொழி 'ஆங்கிலம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்த மொழிக்கென்று எழுத்து வடிவமும் கிடையாது. எனவே அது இலத்தீன் மொழி எழுதப்பட்டு வந்த உரோமன் எழுத்துக்களையும் (Roman script) கடனாகப் பெற்றது.

மொழியில் கடன் வாங்குவதில் ஒரு வரைமுறை பின்பற்றப்பட வேண்டும். ஆனால் தொடக்கக் காலத்தில் சொற்களைக் கடனாக பெற்ற போது பழைய பிரெஞ்சு மொழியிலிருந்து hour, honest, heir போன்றவற்றை ஆங்கிலம் அப்படியே ஏற்றுக்கொண்டது. இந்தச் சொற்களில் ஹெச் ஒலி ஒலிக்கப்படுவதில்லை. இதை மொழியியலாளர் ஒலிப்பிலா ஒலி (overt phoneme) என்பர். கடன் வாங்கியபோது இந்த சைலென்ட் ஒலிகளை ஆங்கிலம் நீக்கியிருக்க வேண்டும். இடையில் வரும் தேவையற்ற ஒலிப்பிலா ஒலிகளை(சைலென்ட்); (அதாவது, calm என்பதில் உள்ள l, psychology இல் முதலில் உள்ள p, river இல் கடைசியில் வரும் r போன்றவற்றை) நீக்கி ஆங்கிலத்துக்கு ஏற்ப மாற்றியிருக்க வேண்டும். அப்படியே எடுத்துக்கொண்டதால் இப்போது கேள்வியும் மாற்றமும் தவிர்க்க இயலாததாயிற்று.

கிரேக்க மொழியிலும் ஹெச் ஒலி ஒரு எழுத்துக்கு மேல் ஒரு கமா குறியீடு வலது பக்கம் திரும்பி இருந்தால் ஒரு ஒலியும், இடது பக்கம் திரும்பி இருந்தால் ஒரு ஒலியுமாக ஒலிக்கப்பட்டது. இந்தச் சொற்களையும் அப்படியே கடனாகப் பெற்ற ஆங்கிலம் எந்த மாற்றமும் செய்யாமல் வைத்துக்கொண்டது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒலி வரலாற்றை எடுத்துச் சொல்ல வேண்டும். 'ஏன் calm என்ற சொல்லில் l ஒலிக்கப்படவில்லை?' என்று மாணவர் கேட்டால் "அது அப்படித்தான்". என்று சொல்வது பொறுப்பற்ற பதில். ஏன் river, water போன்ற சொற்களில் கடைசியில் வரும் r ஏன் ஒலிக்கப்படுவதில்லை என்று மாணவர் கேட்டால் "அது அப்படித்தான் போய் படி. நூறு கேள்வி கேட்டுக்கிட்டு; ஒழுங்கா படிக்க துப்பில்ல; கேள்வி கேட்க வந்துட்டான்" என்று மாணவர் மீது பழி சுமத்தக் கூடாது. உயிரொலிக்கு அடுத்து வரும் இடங்களில் l , r, போன்றவை ஒலிக்கப்படாமல் சைலென்டாக வரும் என்று கூறி palm, harm, farm, warm போன்றவற்றைச் சான்றுகளாகக் காட்ட வேண்டும். அப்போது ஆசிரியர் மீது மதிப்பு உயரும். சிலவற்றிற்கு விளக்கம் இருக்காது அப்போது அதையும் சொல்லியாக

வேண்டும். ஏனெனில் மொழி என்பது பல நேரங்களில் இடுகுறி வடிவமாக இருக்கின்றது.

ஜப்பானியர் தன் மொழியை, கலாச்சாரத்தை உயிராக மதித்தனர். கலை இலக்கிய பண்பாட்டுக் களங்களில் அவர்கள் பழமையை போற்றினர். மொழி தன் தூய்மையை இழக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அந்த மொழியில் தனித்தனியாக மூன்று வகை எழுத்தினங்கள் உண்டு. 'காஞ்சி' என்பது சீன மொழியிலிருந்து கடனாகப் பெற்ற பெயர் சொற்களையும் வினைச் சொற்களையும் எழுதுவதற்குப் பயன்படுகிறது. 'ஹிராகானா' என்ற எழுத்து வகை, வேற்றுமை உருபுகள், கால இடைநிலை போன்ற இடைச் சொற்களை அல்லது ஒட்டுக்களை (clitics) எழுதப் பயன்படுகிறது. 'கதகனா' என்ற எழுத்து வகைக் கடனாகப் பெற்ற பிறமொழிச் சொற்களை எழுதப் பயன்படுகிறது. இவ்வாறு கடனாகப் பெறும் சொற்களைக் கூட அவர்கள் தமது ஒலிக்கு ஏற்ப மாற்றிவிடுகின்றனர். இதனால் இவை தனது மொழி சொற்கள் போலவே ஒலிக்கும்.

கணினியை ஜப்பானியர் கம்ப்யூத்தோ என்பர். ஏன் தெரியுமா? அவர்கள் மொழியில் 'ட' ஒலி கிடையாது. ஆகவே, கம்ப்யூட்டர் என்பதை 'கம்யூத்தோ' என்கின்றனர். இது ஜப்பானிய மொழி சொல் போலவே ஒலிக்கும். இது போல shirt என்பதை 'ஷாத்சு' என்பர். ஜப்பானியச் சொற்கள் உயிரொலியுடன் அல்லது nasal ending எனப்படும் ன், ம் போன்றவற்றுடன் முடியும். இந்தியாவை அவர்கள் 'இந்தோ' என்பர். இந்தியர் என்றால் இந்தோஜின். இவ்வாறு ஒலியையும் தமக்குரியதாக்கி எழுத்திலும் கதகனா வைப் பயன்படுத்தி கடன் சொற்களை வேறுபடுத்தி வைத்துள்ளனர். ஆங்கிலத்திற்கோ இந்த முறை கிடையாது. முன்பு ஆங்கிலப் பதிப்புகளில் மட்டும் சில குறிப்பிட்ட கிரேக்கம், இலத்தீன் கலைச்சொற்கள் italics எனப்படும் எழுத்துருவில் (font) அச்சிட்டப்பட்டன.

தமிழில் கடன் சொற்களுக்கு என விதிமுறைகள் உண்டு:
நடைமுறை வழக்கில் மொழிக்கலப்பு என்பது இயற்கையும் இயல்புமாகும். மொழித்தூய்மை என்பது தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒரு தொடர் பணி. இதை அன்று தொட்டு இன்று வரை

தமிழ் ஆர்வலர்கள் செய்து வருகின்றனர். இவ்வாறு கடன் சொற்களைத் தன்வயப்படுத்துதல் (adaptation) மொழி நீடித்து நிற்க உதவும் உத்தி ஆகும். அதற்காகத்தான், 'தற்சமம்', 'தற்பவம்' என்ற மொழியாக்க வரைமுறைகளை ஏற்படுத்தினர். இதனால் தான் தமிழ் இன்றும் மூல திராவிட மொழியின் தன்மையை அதிகம் இழக்காமல் மற்ற சொற்களின் வரவால் பெரிய அளவில் மாற்றம் அடையாமல் என்றுமுள தென்றமிழாகவே இருக்கின்றது. எனவே தமிழை உலகின் முதல் மொழி என்றும் ஆதிமனிதனின் மொழி என்றும் அழைக்கின்றனர்.

தமிழ் மொழியில் பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு சோழர் காலத்தில் சமஸ்கிருத மொழி சொற்கள் கலந்தபோது நம் இலக்கண ஆசிரியர்கள் உடனே சில விதிமுறைகளை வகுத்தனர். அவை தற்சமம் தற்பவம் எனப்பட்டன. இரண்டு மொழிகளுக்கும் சமமான ஒலிகளாலான சொல் என்றால் அது 'தற்சமம்' எனப்படும். அதாவது, 'காரணம்', 'கமலம்' போன்றன. 'தற்பவம்' என்பவை வேறுவகை. சில ஒலிகள் தமிழ் ஒளிப்புகளுக்கு ஒவ்வாததாக இருந்தால் அவற்றைத் தமிழ் ஒலிக்கேற்ப மாற்றி அமைப்பதாகும். எடுத்துக்காட்டு: 'வருஷம்' – வருடம் (ஆண்டு); 'பக்ஷி' – பட்சி (பறவை); 'சர்ஸ்வதி' – சரசுவதி (கலைமகள்); கார்யம் – காரியம் (செயல்) ரத்னம் - ரத்தினம் (மணி) போன்றன.

இவற்றிற்கெல்லாம் தமிழ்ச் சொற்கள் இல்லாமலில்லை, இருந்தாலும் சமஸ்கிருத ஆக்கம் என்ற பெயரில் (இப்போது நாம் ஆங்கிலம் கலந்து பேசுவது போல); அன்று, ஆங்கிலேயர் காலத்தில் சிலர் சமஸ்கிருதத்தைத் தமிழில் கலந்து அதற்கு மணிபிரவாள நடை (முத்தும் பவளமும் கலந்தது) என்று பெயரிட்டு மேட்டுக்குடியினரின் மொழியாக பேசி வந்தனர். இதனால் நல்ல தமிழ்ச் சொற்கள் கூட சமஸ்கிருதமுமாயின, 'வேட்டி', வேஷ்டி ஆயிற்று. இதைப் பார்த்த மற்ற மக்களும் தேவையில்லாத இடத்தில் எல்லாம் ஷ, ஸ, ஜ போன்ற ஒலிகளை தமிழில் புகுத்திப் பேசினர். பி. சுசிலா பாடல்களில் ச என்ற ஒலி தொடர்ந்து ஷ என்றே ஒலிக்கப்படுவதைக் கேட்கலாம். இது ஒரு காலத்திய உயர்மொழி வழக்கு. இப்போது ஆங்கிலம் பேசுவதாக நினைத்துக் கொண்டு சிலர் தேவையில்லாத இடங்களில் எல்லாம்

f, b, j போன்ற ஒலிகளை பயன்படுத்துகின்றனர் அல்லவா. அது போன்ற செயல்பாடுதான் அது.

ஒரு மொழியில் தவிர்க்க முடியாத நேரத்தில் மட்டுமே கடன் வாங்க வேண்டும். அவ்வாறு கடன் வாங்கும்போது அதை நம்முடைய ஒலி வடிவத்துக்கும் எழுத்து வடிவத்துக்கும் ஏற்ப தகவமைக்க வேண்டும். இல்லையென்றால் இன்று பிரிட்டிஷ் ஆங்கிலம் தன் கடன் சொற்களை அமெரிக்க ஆங்கிலத்தின் மூலம் ஒலிமாற்றத்துக்கு உள்ளாவது போல (photo > foto, Cheque > chek, programme > program, colour >color) தானே மாற்றம் பெறும். அதற்கு மக்கள் ஆதரவும் முழுமையாகக் கிடைக்கும். சமூக வலைத்தளங்களில் புழங்கும் ஆங்கிலத்தை மொழியியல் அறிஞர் கிரிஸ்டல் டேவிட் நெட்லிஷ் என்கிறார். இந்த 'நெட்லிஷ்' (netlish or netlanguage) என்ற ஆங்கிலம் வலைத்தளங்களில் பயன்படும்போது அதன் மூலத்தன்மையை இழந்துவிடுகிறது. இந்த நெட்லிஷ் ஒலிக்கேற்ப எழுதப்படுகிறதே என்று ஆங்கில மொழிமரபின் மீது பற்றுக் கொண்ட மொழி ஆர்வலர்கள் துடிக்கின்றனர்.

ஆனால் தமிழைப் போல ஜப்பானிய மொழியைப் போல ஆங்கிலேயர் முதலிலேயே கடன் சொற்களை மாற்றாததால் காலம் இப்போது அந்தப்பணியைச் செய்கிறது. அவசரத்துக்கு அள்ளி போட்டது போல அந்தக் காலத்தில் ஆங்க்லோ சேக்சன் மொழி பிற மொழிச் சொற்களை அள்ளி அள்ளி போட்டுக்கொண்டது. இப்போது முதல் பத்திக்கு வருவோம். அந்த மாணவன் தன் ஆசிரியை தன்னிடம் 'ஹீட்' (heat) என்றதை 'ஈட்' (eat) எனப் புரிந்துகொண்டதாக குறும்பு செய்தது ஏன் என்று புரிந்ததா? ஆசிரியர்களுக்கு எதாவது தெரியாவிட்டால் அதைத் தெரிந்துகொண்டு வந்து சொல்கிறேன் என்று மாணவரிடம் சொல்ல வேண்டும். பின்பு அதைப் படித்துத் தெரிந்துகொண்டு வந்து சொல்ல வேண்டும். கேள்விகேட்கும் மாணவர்களே சுய சிந்தனை உள்ளவர்கள். அவர்களை வளர்த்துவிடுவது புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் தத்துவச் சிந்தனைகள் வளர வழி வகுக்கும்.

முனைவர் செ. இராஜேஸ்வரி (https://www.facebook.com/rajeshwari.chellaiah), மொழிபெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். 1987ஆம் ஆண்டு முதல் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

## 25. கட்டுரை எழுதுகையில் பிறமொழிச் சொற்களைக் கையாளலாமா?

— அ. குமரேசன்

கட்டுரை எழுதுகையில் ஏற்படும் ஒரு முக்கியக் குழப்பம் தூய கலப்பற்ற தமிழில் எழுத வேண்டுமா, இல்லை பிறமொழிச் சொற்களைக் கையாளலாமா என்பது. நடைமுறையில் பிறமொழிச் சொற்கள், குறிப்பாக ஆங்கிலச் சொற்கள் நம் வாழ்வில் வெகுவாகக் கலந்துவிட்டன. குழந்தைகளுக்குச் சூட்டப்படும் பெயர்கள் உட்பட பிற மொழிச் சொற்கள் பரவலாகப் புழங்குகின்றன. அவற்றிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு முழுமையாக தூய தமிழில் எழுதுவது எளிதல்ல. மொழி ஈடுபாடு சார்ந்து கலப்பற்ற தமிழில் எழுதுவது ஓர் இனிமையான அனுபவம். ஆயினும் அது கட்டாயம் அல்ல.

மேலும் முழுக்க முழுக்க இலக்கணம் சார்ந்த தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுகிறபோது படிப்பதற்கு அது கடினமாகிவிடும். எழுதியவரின் தமிழ்ப்பற்றைப் பாராட்டுவதற்கு மாறாக அவருக்குப் பழமைவாதி என்ற முத்திரை பதிக்கப்பட்டுவிடக்கூடும்.

கதை போன்ற இலக்கியப் படைப்பு முயற்சிகளில், உரையாடல்களில் ஒரு கதாபாத்திரத்தின் குணம் இவ்வாறு பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதுதான் என்றால் அதைச் செயற்கையாக மாற்றத் தேவையில்லை.

பிற மொழிச் சொற்களிலேயே எழுதிவிட்டு ஆங்காங்கே தமிழ்ச் சொற்களைப் போட்டுக் கொள்கிறவர்கள் உண்டு. அதுவும்கூட சமூக வாழ்வில் சிலரது பழக்கமாகத்தானே இருக்கிறது. வேண்டுமென்றே நமது பிற மொழித் திறமையைக்

காட்டுவதற்காக எழுதுவதாக எண்ணமும் ஏற்பட்டுவிடக் கூடாதல்லவா?

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தில் ஒரு முடிவு எடுத்தோம் “பழகு தமிழில் எழுதுவோம்” என்ற அந்த முடிவை நான் விடாமல் பின்பற்றி வருகிறேன்.

தவிர்க்கவே முடியாத இடத்தில், அதை எழுதினால்தான் பொருள் புரியும் என்கிறபோது, வாக்கியத்தில் அழகு சேர்க்கப்பயன்படும் என்ற நிலையில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம். அது கட்டுரைக்கு ஓர் எதார்த்தத் தன்மையையும் கொடுக்கும். வெற்றிகரமான பல எழுத்தாளர்கள் இந்த வழியைத்தான் தங்களின் இயல்பான வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கையில் எடுத்துப் படிக்கிற புத்தகங்கள், கட்டுரைகளில் இதை நீங்களே கண்டுபிடித்து மகிழலாம்.

ஒரு கொள்கை உறுதியோடு இலக்கணத் தமிழில் எழுதுவது வேறு. அது போற்றத்தக்கது. கட்டுரையோ கதையோ வேறு எழுத்தாக்கமோ பழகு தமிழில், கூடியவரையில் கலப்பற்ற எளிய தமிழில் எழுதிடும் பரவசத்தை அனுபவியுங்கள், வாசகரும் அதை அனுபவிக்கச் செய்திடுங்கள்.

# 26. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் திருவள்ளுவர் திருவுருவம்

— *முனைவர். ப. தேவி அறிவு செல்வம்*

திருக்குறளும், திருவள்ளுவரும் தெரியவந்த காலத்திலிருந்தே அவருக்கு உருவம் கொடுக்கும் முயற்சியானது தொடங்கிவிட்டது. திருக்குறளின் கருத்துக்களைக் கொண்டும் அவர்கள் சார்ந்த மதத்தின் அடிப்படையிலும் உருவங்கள் உருவாக்கப்படலாயின.



**Familiar image of Valluvar**
(Painting by K.R. Venugopal Sarma)



**Saiva depiction of Valluvar**
(Subramuniyaswami, 2000)



**Jaina depiction of Valluvar**
(Depicted in Subramanyam, 1987)

1. கிபி பத்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் திருவள்ளுவமாலை என்பது 55 பாடல்கள் கொண்டு 53 புலவர்களால் திருக்குறளின் பெருமைகளையும் திருவள்ளுவரின் பெருமைகளையும் புகழ்ந்து எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பு நூல் ஆகும். திருவள்ளுவர் பற்றிய பல்வேறு புலவர்கள், அறிஞர்களின் சித்தரிப்புகளைக் கொண்டு அவரை காட்சிப்படுத்த இந்நூல் முயல்கிறது.



2. சென்னை மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோவிலினை அகழ்ந்த போது கிடைத்த சிலையானது கிபி 10-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வாளர் சா. கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார். இச்சிற்பம் பீடம் மீது அரை பத்மாசனத்தில் வலக்கையில் சின்முத்திரையுடன் இடக்கையில் ஓலைச் சுவடி ஏந்தி, உச்சிக் கொண்டை போட்டு தாடியுடன், நீண்ட காது வளர்த்து உடலில் ஒடும் பட்டையான ஆடையுடன் இடை ஆடையும் அணிந்த மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது.

3. கிபி 1792 இல் மெக்கன்சி சுவடிகள் வேதநாயகம் பிள்ளை எழுதின சுவடிகளில் இதற்கான விரிவான சித்தரிப்புகள் காணக்கிடைக்கின்றன. இதில் பூணூல் அணிந்து காணப்படுகிறார் திருவள்ளுவர்.




F.W.எல்லிஸ் 1810ல் வெளியிட்ட தங்க நாணயத்தில் பொறிக்கப்பட்ட திருவள்ளுவர் உருவம்

4. கிபி 1810- 1815 காலத்தில் 4 தங்க நாணயங்களில் திருவள்ளுவர் உருவத்தை அன்றைய சென்னை ஆட்சியராக இருந்த எல்லிஸ்

துரை வெளியிடுகிறார். அவற்றின் ஒரு பக்கத்தில் இருந்த உருவமானது ஒரு பீடத்தின் மீது பத்மாசனமிட்டு வலது கை தொடை மீதும் இடது கையில் ஓலைச்சுவடியும், இடையில் வேட்டியும், இடது தோளில் மடித்துப் போட்டு துண்டும் அணிந்து, மழித்த தலை, தலைக்கு மேலே ஒரு குடை, பீடத்துக்கு முன் ஒரு தீர்த்த பாத்திரத்துடனும், நாணயத்தின் மறுபுறம் நட்சத்திரப் புள்ளிகளால் ஆன வட்டத்துக்குள் பொறிக்கப்பட்டுள்ளது.

5. கிபி 1752 இல் வெளிவந்த ஆனந்த நாயனார் என்ற நூலில் ஒரு புகைப்படம் வெளிவந்து உள்ளது. அதில் தாடி மீசை இல்லாமல் வலது கை சின்முத்திரை இடது கையில் ஓலைச்சுவடியுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

6. 1958ல் பண்டிதர் கிருஷ்ணசாமி அவர்கள் வெளியிட்ட நூல் மற்றும் 1962இல் கே.எம் பாலசுப்பிரமணியன் அவர்கள் வெளியிட்ட நூலிலும் திருவள்ளுவரின் படம் இடம் பெற்றுள்ளது.





கோ. வடிவேலு செட்டியார் வெளியிட்ட நூலில் இருந்த திருவள்ளுவரின் உருவப்படம்.

7. கிபி 1904இல் தமிழ் பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார் திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் என்ற நூலில் திருவள்ளுவநாயனார் என அச்சிடப்பட்ட புகைப்படத்தை

வெளியிட்டுள்ளார். அதில் ஜடா முடி, தாடி, மீசையுடன் மார்புக்குக் குறுக்காக யோக பட்டை, துண்டு அணிந்து, நெற்றியில் பட்டை நடுவில் குங்குமம், வலது கையில் சின்முத்திரையுடன், இடதுகையில் ஓலைச்சுவடியும் ஏந்தியவாறு உள்ளது. நாயனார் சொரூபஸ்துதி என்ற பாடலை அடிப்படையாக வைத்து இந்த உருவம் கொடுக்கப்பட்டதாக விளக்கமும் அந்நூலில் உள்ளது. இதன் ஆங்கிலப் பதிப்பில் திருவள்ளுவர் படம் கோட்டுருவமாகவும் சைவ சமய அடியார் போன்று கரங்களில், நெற்றியில் விபூதி பட்டையுடன் மரத்தடியில் இரண்டு அடியார்கள் தொழுவது போல் உள்ளது.

8. கிபி 1935இல் வினோதன் பத்திரிக்கை, கிபி 1949இல் புலவர் குழந்தை எழுதிய நூலில் திருவள்ளுவர் புகைப்படம் வெளிவந்துள்ளது.

9. 1950க்குப் பின் சேலம் காமாட்சி பட்டியைச் சேர்ந்த ஓவியர் வேணுகோபால் சர்மா ஒரு திருவள்ளுவர் ஓவியம் வரைகிறார்.




தூய்மை நிறைந்த உள்ளம் ,தூய்மை நிறைந்த நோக்கு, தூய்மை நிறைந்த வாக்கு ஆகியவற்றைத் திருவள்ளுவர் கொண்டிருப்பதால் அவருக்கு வெண்ணிற ஆடை உடுத்தியும், சிந்தனை வானில் வாழ்ந்தவர் என்பதால் அவரை சுற்றி மரம், செடி, கொடிகள் வீடுகள் ஏதும் இல்லாமல் அவரை சுற்றி அறிவொளி மட்டும் இருக்கும்படியாகவும் இவ்வுருவம் உருவாக்கப்பட்டதாகும் தன்னுடைய சிந்தனை, செயல், ஆடை ஆகியவற்றை அழுக்கு தீண்டாமல் இருக்க ஒரு சிறிய மரப்பலகை மீது இருப்பது போன்று அமைக்கப்பட்டதாகவும் திருக்குறள் திருவுருவப்பட விளக்கம்


என்ற சிறு வெளியீட்டில் திரு கே ஆர் வேணுகோபால் சர்மா விளக்கியுள்ளார்.

10. 1964 மார்ச் 23 இல் தமிழகச் சட்டமன்றத்தில் திரு. பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்த போது துணை குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் இப்படத்தைத் திறந்துவைத்தார். பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படம் அரசுப் பேருந்தில் இடம் பெற்றது. தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட படமாக அரசாணையும் வெளியிடப்பட்டது.

11. 1968ல் சுவாமி சுத்தானந்த பாரதியார் திருக்குறள் உரைநடையை உலகத் தமிழ் மாநாட்டில் அரங்கேற்றினார். திருவள்ளுவர் படம் இடம் பெற்றுள்ளது.

12. 1955இல் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட திருக்குறள் நூல்நயம் புத்தகத்தின் அட்டையில் திருவள்ளுவர் புகைப்படம் ருத்ராட்சம், விபூதி பட்டை, சின்முத்திரையுடன் காணப்படுகிறது.

13. 1968ல் மெரினா கடற்கரையில் நின்ற நிலையில் எழுத்தாணி, ஓடி தாடி, மீசை என உள்ள உருவத்தை அப்போதைய கல்வி மற்றும் தொழில் துறை அமைச்சராக இருந்த திரு நெடுஞ்செழியன் சென்னையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் திறந்துவைத்தார்.




தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1952ல் வெளியிட்ட திருக்குறள் நூல் நயம் புத்தகத்தின் அட்டையில் திருவள்ளுவர்


Marina Valluvar

14. 1990 செப்டம்பரில் கன்னியா குமரி வள்ளுவர் சிலையானது உருவாக தொடங்கி 2000 ஜனவரி 1 இல் திறக்கப்பட்டது கணபதி ஸ்தபதியால் 133 அடி உயரத்தில் உருவாக்கப்பட்டு கலைஞர் கருணாநிதி அவர்களால் திறக்கப்பட்டது. இதில் நின்ற நிலை வைஷ்ணவ ஸ்தானம் எனப்படும் சாத்வீக பாவத்தை உணர்த்துவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.





Kumari Valluvar SOAS London Valluvar

15. 1996ல் லண்டன் SOAS பல்கலைக்கழகத்தில் அமர்ந்த நிலையில் தாடி, மீசை ,எழுத்தாணி, ஓலைச்சுவடி உடன் திருவள்ளுவர் சிலையானது காணப்படுகிறது.

16. ஆஸ்திரேலியா சிட்னியில் ஸ்தபதி நல்லதாணு அவர்களால் வடிவமைக்கப்பட்ட சிலையானது இன்று நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

17. சிங்கப்பூரில் 4 இடங்களில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், முனீஸ்வரர் ஆலயம், MDIS வளாகம், புக்கிட் பாஞ்சாவ் முருகன் திருக்குன்றம் ஆலய திருமண மண்டபத்திலும் உள்ளன.

18. ஜெர்மனியில் லிண்டன் அருங்காட்சியகத்தில் 2 ஐம்பொன் சிலைகள் தமிழ் மரபு அறக்கட்டளையால் 2019 இல் அமைக்கப்பட்டது.

19. மியான்மார் தட்டோன் நகரில் 5 அடி உயர பளிங்குச் சிலை உள்ளது.




MDIS Valluvar




Germany Valluvar

20. மணிப்பூர் மோரே தமிழ்ச் சங்கத்தில் மூன்றரை அடி உயரச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

21. மொரீசியஸ் மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்தில் திருவள்ளுவர் திருவுருவம் உள்ளது.





22. மேலும் வி.ஜி.பி தமிழ்ச் சங்கம் சார்பில் தென்னாப்பிரிக்கா டர்பன், அமெரிக்க வாஷிங்டன், அந்தமான் போர்ட் பிளேயர், மலாய் கோலாலம்பூர், சீனா தைவான், மகாராஷ்டிரா நவிமும்பை, ஆந்திர விசாகப்பட்டினம், அலகாபாத், சுவிஸ் கல்கத்தா, மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

23. மேலும் இலங்கை புத்தளம் இந்துக் கல்லூரி, மன்னார் சித்திவிநாய இந்துக் கல்லூரி, முள்ளிவளை வித்தியானந்தா கல்லூரி, கிளிநொச்சி தமிழ்ச்சங்கம், தென்மராட்சிக் கலாமன்றம், வவுனியா புத்தளம், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம், மேற்கு மாகாணம், கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரி என இலங்கையின் முக்கிய இடங்களிலும் திருவள்ளுவரின் திருவுருவம் வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் காரைத்தீவு யாழ் உரும்பிராய் இலும் உள்ளன.



Sri Lanka Valluvar



Valluvar Kottam Valluvar

24. வள்ளுவர் கோட்டத்தில் வலது கையில் திரிசூல ஹஸ்தத்தில், இடது கையில் ஓலைச்சுவடி யுடன் இருப்பது மாதிரியான உருவம் வடிக்கப்பட்டுள்ளது.

25. இது தவிர்த்து ஆசிரியை கோ.ப செல்லம்மாள் சென்னை கோட்டூரில் தன் வீட்டு வாசலில் திருவள்ளுவர் சிலை வைத்துள்ளார்.

26. பஞ்சாப்பைச் சேர்ந்த ஜஸ்வந்த் சிங் தனது சென்னை வீட்டில் உள்ள சந்தனம் மற்றும் மாமரத்தில் திருவள்ளுவர் சிலையினை அவரே செதுக்கி வைத்துள்ளார்.

27. திருப்பரங்குன்றம் மேம்பாலத்திற்கு அருகே திருவள்ளுவர் மற்றும் நந்தனார் இருவரும் ஒரே பலகைக் கல்லில் அமர்ந்த மாதிரியான சிற்பமும் உள்ளது.

28. இந்தியாவில் புதுச்சேரி, டெல்லி, பெங்களூர், ஹரித்துவார் போன்ற இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

## 27. “இந்திரனே சாலுங் கரி”

— முனைவர் சிவ. இளங்கோ

“இந்திரனே சாலுங் கரி” என்பதற்கு ‘இந்திரனே தக்க சான்று’ என்று பொருள் கொள்கின்றனர் உரையாசிரியர்கள். அப்படியானால், ‘இந்திரன்’ என்பவன் யார்? என்று கேள்வி எழுகிறது. வேதத்தில் சொல்லப்பட்டு, வைதீக வழி முப்பத்து முக்கோடி தேவர்களின் தலைவனாகச் சுட்டப்படும் இந்திரனைத்தான் வள்ளுவர் கூறுவதாகப் பொருள் கொள்கின்றனர். அதைத்தான் ‘அகல் விசும்புளார் கோமான்’ (அகன்ற வான் உலகத்தார்க்குத் தலைவன்) என்று குறிப்பிட்டுள்ளதாக வேதகால இந்திரனை நிறுவச் சான்றாகக் கொள்கின்றனர். எப்படிப்பட்ட இந்திரனாக, வேதகால இந்திரனை நிறுவ முற்படுகிறார்கள் என்றறிய வள்ளுவரின் அந்தக் குறளைக் காண்போம்.

***“ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்***
***இந்திரனே சாலுங் கரி” (குறள் - 325)***

(இதன் பொருள்: ஐம்பொறிகளையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) அடக்கினவனது வல்லமைக்கு, அகன்ற வானுலகத்தார்க்குத் தலைவனான இந்திரனே தக்க சான்றாகும் – புலவர் குழந்தை உரை).

திருக்குறளில் பாயிரமாகக் கொள்ளப்படும் முதல் நான்கு அதிகாரங்களுள், மூன்றாவதில் நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் ஐந்தாவது பாடலாக இக்குறள் இடம் பெற்றுள்ளது. இதில் சான்றாகக் கொள்ளப்படும் இந்திரன் யாரென்றால் அவன் வேதகால இந்திரன் என்றும், அவனே ஐம்பொறிகளை அடக்கினவன் என்றும் பெரும்பாலானோர் கருத்துரைக்கின்றனர்.

வேதத்தின் வழியும், புராண இதிகாசங்களின் படியும் இந்திரன் இந்தியா முழுமையும், தமிழ் மக்களுக்கும் சேர்த்து நன்கு

அறிமுகமானவன் தான். ஆனால் ஐம்புலன்களையும் அடக்கிய ஒருவனுக்கு இந்திரனே சான்றாவான் என்றால் அனைவருமே நகைப்பை அடக்க நீண்ட நேரமாகும். ஒரு புலனைக் கூட அடக்காத ஒருவனை ஐந்து புலன்களையும் அடக்கிய ஒருவனுக்குச் சான்றாகச் சொல்ல முடியுமா? அதையும் வள்ளுவரே சொல்லுகிறார் என்றால் அவர் எப்படிப் பொய்யில் புலவர் ஆவார்?

வேதகால இந்திரனைப் பற்றிப் புராணங்களும், வேதங்களும் என்ன கூறுகிறதென்றால் அவன் சுராபானம் அருந்துபவன், தன் இந்திர தேசத்தில் அரம்பை, ஊர்வசி, இரதி போன்ற பேரழகிகளை ஆசைநாயகிகளாக மட்டுமல்ல, அவர்களை முனிவர்களின் தவத்தைக் கலைக்க ஏவிவிட்டுக் காரியம் சாதிப்பவன் என்றும் கூறுகின்றன. மேலும் பிற அழகிய பெண்கள், அவர்கள் வேறு உலகத்தில் இருந்தாலும் கூட அவர்களைத் தன் பதவி அதிகாரத்தால் அல்லது தந்திர வித்தையால் எப்படியும் அடைபவன் என்றும் கூறுகின்றன. இன்றைய இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படி பல்வேறு சட்டப்பிரிவுகளில் தண்டனை பெறும் அளவிற்கு அத்துணைக் காரியங்களையும் வேதகால இந்திரன் செய்துள்ளதாகவும் இந்தியாவின் பன்மொழிப் புராணங்களும் பெருமை பொங்கக் கூறுகின்றன.

அவற்றுள் ஒன்றுதான் கௌதம முனிவரின் மனைவி அகல்யா என்னும் பேரழகியை இந்திரன் சுகித்த கதை. தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்டவளே அகல்யா (தமிழில் அகலிகை). இவள் அழகு கண்டு பிரம்மனே பிரமித்து நிற்க, இந்திரனும், கௌதம முனிவரும் அவளை அடையத் தயாராகினர். இதனால் பிரம்மன் ஒரு போட்டியை வைக்க, அதில் வென்ற கௌதமர் அகலிகையை மணந்தார். ஆனாலும் அவளை மறக்க முடியாமல் கௌதமரின் ஆசிரமத்திற்கு நடுநிசியில் சென்ற இந்திரன், சேவலாக மாறிக் கூவவும், விடிந்துவிட்டது என்று நினைத்து கௌதமர் ஆற்றுக்குச் செல்ல, முனிவரின் உருவமாக மாறிய இந்திரன் அகலிகையை அடைந்தான். திரும்பிவந்த கௌதமர் இருவரையும் கண்டுச் சாபமிட அகலிகை கல்லானாள். இந்திரன் உடம்பெல்லாம் அவன் கொண்ட காமத்தின் அடையாளமாகப் பெண்குறிகளாக மாறின.

இந்திரன் சாப விமோசனம் வேண்ட, பிறர் கண்களுக்கு அவை கண்களாகவே தெரியும் என்று கௌதமர் கூற, இந்திரன் ஆயிரங்கண்ணுடையான் என்ற பெயர் பெற்றான்.

இதேபோல இந்திரப் பட்டம் எய்திய நகுடனைப் பாம்பாக மாற்றிய அகத்தியரின் செய்கையையும், சியவனர் என்ற முனிவரோடு பகைகொண்டு இறுதியில் அசுவினி தேவதைகளுக்காக இரங்கித் தோற்றதையும், சம்வர்த்தனின் யாகத்தை எதிர்த்த இந்திரன் பின் அவரின் தவ வலிமைக்கு அடங்கிப் போனதையும், அகத்தியரின் பன்னிரண்டு ஆண்டு வேள்வியை எதிர்த்துப் பின், தலைமைப் பதவியைக் காக்க, அவரிடமே இந்திரன் சரணடைந்த கதையையும் மகாபாரதம் கூறுகிறது.

அதாவது, வேதங்களிலும், புராண, இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும் குறிப்பிடப்படும் வேதகால இந்திரன் ஐம்பொறிகளில் ஒன்றின் ஆசையைக் கூட அடக்காதவனாகவே அறியப்படுகிறான். இப்படிப்பட்ட இந்திரனை ஐம்பொறிகளையும் அடக்கியவனாக அடைமொழியுடன் கூற யாருக்குத் துணியும்? ஆனால் திருக்குறளுக்கு உரை எழுதிய பெரும்பாலான தமிழ்ப் புலவர்கள் அப்படித்தான் எழுதியுள்ளனர். ஆனால் வைதிகத்திற்கு ஆதரவாக நின்று, முழுமையான அறங்கூறும் திருக்குறளை முழுக்க முழுக்க வைதீகப் போர்வை போர்த்தி உரையெழுதிய பரிமேலழகர், இக்குறளில் உண்மையை ஒளிக்காமல் குறிப்பெழுதியுள்ளார். ஐம்புலன் அவியாது சாபம் பெற்றுக் கொண்டு, ஐம்புலன் அவித்தவனின் ஆற்றலை உணர்த்தியவன் இந்திரன் என்று கூறுகிறார். இங்கு, ஐம்புலன் அவித்தவனாக அவர் குறிப்பிடுவது கௌதம முனிவரைத்தான். ஆனால் அவரும் புலன்களை அடக்கியவர் அல்லர் என்பது அவர் அகலிகையை விரும்பி மனைவியாக ஏற்றார் என்பதில் இருந்தே விளங்கும்.

ஆனாலும் அவரை ஐந்தவித்தானாகக் கொள்ளலாம் என்றும், கௌதம முனிவரைப் போன்ற வானப்பிரஸ்தர்கள், மனைவியோடு ஓய்வுக்காலத்தில் கூடுவது காமத்திற்காக இல்லை என்றும் மகாபாரதத்தை (அனுசாசனபர்வம் - துணைப்பிரிவு) மேற்கோள் காட்டித் தமிழ் லெக்சிகன் தொகுத்தவர்களில் ஒருவரான பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரி

என்பவர் (திருக்குறள் - அறத்துப்பால் - பாலருரை, 1939) தன் உரையில் கூறுகிறார். இப்படி எதனையாவது மேற்கோள் காட்டி ஆரிய தர்மத்தை உயர்த்திப் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டு ஆரிய பிராமணர்கள் நிறைய எழுதி வைத்துள்ளனர். நிறைய தமிழ்ப் புலவர்களும் அதை வழிமொழிந்து எழுதியுள்ளனர்.

ஆனால் பரிமேலழகருக்கும் முன்னதாக எழுதப்பட்ட பழைய உரைகளில் வைதிகம் உயர்த்திப் பிடிக்கப்படவில்லை. ஆனாலும் எதிர்ப்பு வன்மையாக இல்லை. வேறு ஒருவர் தவம் செய்தால் தன்னை மிஞ்சிவிடக் கூடும் என்று இந்திரன் அஞ்சினான் என்பதையே திருவள்ளுவர் இந்திரனைச் சான்றாகக் கூறியதன் விளக்கமாக மணக் குடவர் உரைக்கிறார். அப்படித் தவம் செய்பவரைத் திலோத்தமை போன்றோரை அனுப்பித் தவம் அழித்தவன் இந்திரன் என்பதால் அவனைச் சான்றாகக் கூறினார் என்று காலிங்கர் உரை கூறுகிறது. பதினான்காம் நூற்றாண்டின் முன் வரை திருக்குறளுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பருதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய பத்துப் புலவர்கள் உரை எழுதியுள்ளனர். இவை பழைய உரைகள் எனப்படுகின்றன. இவற்றுள் மணக்குடவர், பருதி, பரிப்பெருமாள், காலிங்கர், பரிமேலழகர் ஆகியோர் எழுதிய உரைகளே அச்சில் வெளிவந்துள்ளன. (உ.வே.சா. தன்னுடைய பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தேடுதலில், பதினெட்டு உரைகளைக் கண்டதாகக் கூறுகிறார். மீதிப் பதின்மூன்று உரைகள் என்னவாயின என்பது அவருக்கே வெளிச்சம். ஆனால் அவர் பழிசுமத்துவது வரகுண பாண்டியன் மீது).

1812-ஆம் ஆண்டில் எல்லீஸ் வெளியிட்ட திருக்குறள் நூலில் இந்திரனைப் பற்றிய கதையை அவர் வால்மீகி ராமாயணத்தின் பால காண்டத்தில் இருந்து எடுத்து மேற்கோள் காட்டுகிறார். அக்கதை கம்பராமாயணத்து பாலகாண்டத்தின் அகலிகைப் படலத்தில் சிறிது மாற்றம் பெறுவதையும் (ஆயிரம் மாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாக என்பது சாபம்) எல்லீஸ் சுட்டிக்காட்டுகிறார். இன்னும் இக்குறளுக்குத் தத்துவ போதசுவாமி, கவிராய பண்டிதர் கருத்துகளையெல்லாம்

மேற்கோள் காட்டியபின்னர், சமணர்களின் பார்வை இதிலிருந்து வேறுபட்டதாகக் கூறுகிறார் எல்லீஸ். நீத்தார் என்றும், துறவோர் என்றும் வள்ளுவர் குறிப்பிடுவது கௌதம முனியைப்போல் மனைவியோடு இல்லறம் நடத்துபவரை அல்ல என்பது சமணர் கருத்து. மேலும், அப்படியே கதைக்காக இருந்தாலும் கூட சாபங்கள் எதையும் அவர்கள் அளிக்க மாட்டார்கள். அதுவும் இதுபோன்று வக்கிரமான சாபங்களை நினைத்தும் பார்க்க மாட்டார்கள். இப்படியான ஒரு சாபக்கதையை கூறி ஐந்தவித்தவனுக்குச் சான்றாக வள்ளுவர் கூறியிருக்க வாய்ப்பேயில்லை என்ற சமணர்களின் கருத்தையும் பதிவு செய்கிறார் எல்லீஸ்.



திருவள்ளுவர் குறிப்பிட்ட இந்திரனை, வேதகால இந்திரனாகப் பெரும்பான்மை உரையாசிரியர்கள் கூறுவதால், தொன்மங்கள் எல்லாம் வரலாறாக மாறிவிட்டன. இந்திரன் தமிழ் நிலத்துத் தெய்வம் என்றும், புகார் நகரில் கொண்டாடப்பட்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடும் இந்திர விழாவே அதற்குச் சான்று என்றும் தமிழ்ப் புலவர்கள் குறிப்பிட்டு வருகின்றனர். ஆனால் இந்திரன் என்பது தமிழ்ச் சொல் அல்ல, தமிழில் வேந்தன் என்பதைக் குறிக்க வடமொழியில் (பாலி) உருவாக்கப்பட்ட சொல். வேந்தன் மருதநிலத் தமிழ்த் தெய்வம். "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" என்கிறார் தொல்காப்பியர் (தொல்.951). ஆகவே திருவள்ளுவர் குறிப்பிட்ட இந்திரன், வேதகால இந்திரன் அல்ல. அது வேறொருவர். திருவள்ளுவர் வேறொருவரை அல்லது வேறொரு கதையை மனதில் கொண்டு, இந்திரன் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி இருக்க வேண்டும் என்று தேவநேயப் பாவாணர் தன் திருக்குறள் மரபுரையில் குறிப்பிடுகிறார்.

அப்படி யாராவது 'இந்திரன்' என்ற பெயருக்குப் புதிய விளக்கம் கொடுத்திருக்கிறார்களா என்றொரு வினா இதுவரை தேடலாகவே இருந்துவந்தது. அந்த வினாவிற்கு விடை அளித்தவர் ஒரே ஒரு புலவர்தான். அவர்தான் பண்டிதர் அயோத்திதாசர்.

இந்திரன் என்பது புத்தரைக் குறிக்கும் பெயர் என்கிறார் அயோத்திதாசர். அவர் மேலும் கூறுவதாவது. புத்தரின் ஆயிரம் பெயர்களில் (சகஸ்திர நாமம்) இந்திரனும் ஒன்று. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் ஆசையை அடக்கியவர்களையே ஐந்திரன் என்று குறிப்பிடுவர். வடமொழி அட்சர பேதத்தால் ஐ, இ ஆகத் திரிந்து, ஐந்திரன் என்பது இந்திரன் என வழங்கியது. இத்தேசமெங்கும் புத்தரையே இந்திரனெனப் பூசித்து அரசமரத்தடியிலும், அறப்பள்ளிகளிலும் இந்திர விழா கொண்டாடப்பட்டது. இந்திரனைக் கொண்டாடியவர்கள் இந்தியர். கொண்டாடுந் தேசம் இந்திய தேசம். இந்திரியத்தை வென்றான் என்ற பொருளில் 'இந்தியத்தை வென்றான்' என்று அருங்கலைச் செப்பு கூறுகிறது. 'இந்தியக் குஞ்சரத்தை ஞானப் பெருங்கயிற்றினால் பூட்டியவர்' என்று அறநெறிச் சாரம் கூறுகிறது. "இந்திரன் எனப்படும் இறைவன் நம் இறைவன்' என்று

மணிமேகலை கூறுகிறது. அனைத்து ஆசைகளையும், குறிப்பாகப் பெண்ணாசையை முற்றும் துறந்தவர்களே இந்திரர்களாக அறியப்படுவர் என்று சீவக சிந்தாமணியும் கூறுகிறது. ஆகவே இந்திரன் என்று வள்ளுவர் குறிப்பிடுவது கௌதம புத்தரையே. அவரே ஐந்தவித்தவனின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டானவர் என்று பண்டிதர் கூறுவதை ஏற்றால் காவிப் பிரச்சனை தீரும். இங்கு இன்னொன்றும் கவனிக்கப்பட வேண்டியது. காவி நிறம் வைதிகத்தின் அடையாளம் அல்ல. அது புத்தர் உடுத்திய ஆடை நிறம். சமண, பௌத்தத்தின் கருத்துக்கள் தொடங்கி அனைத்தையும் கபளீகரம் செய்துகொண்ட வைதிகம் இன்று காவி வண்ணத்தில் புகுந்திருக்கலாம். ஆனால், அதற்குரியவர் புத்தர் என்ற முறையில் திருவள்ளுவருக்குக் காவி வண்ணம் அணிவிப்பது, அயோத்திதாசர் கூறுவதுபோல் திருவள்ளுவர் புத்த சமயத்தினர் என்று ஏற்றுக்கொள்வ தாகத்தான் பொருள்.

துணை நின்ற நூல்கள்:


1. G.U. Pope, Thirukkural, 2018, சாரதா பதிப்பகம், சென்னை.
2. க. அயோத்திதாசப் பண்டிதர், திரிக்குறள்., 2015, மெத்தா பதிப்பகம், சென்னை.
3. ஞா. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, 2000, இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.
4. புலவர் குழந்தை, திருக்குறள், 2007, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
5. பி.எஸ். சுப்ரமணிய சாஸ்திரி, திருக்குறள்–அறத்துப்பால், 1939, திருச்சி.
6. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், 1967, கழகம், சென்னை.
7. ப.மருதநாயகம், எல்லீசின் திருக்குறள் விளக்கக் கையெழுத்துப் பிரதி, 2009, சீதைப் பதிப்பகம், சென்னை.
8. திருக்குறள் பன்முக வாசிப்பு, 2009, மாற்று, சென்னை.
9. மருதமுத்து, திருக்குறள் – தமிழ்த் தேசிய அரசியல் நூல், 2013, போர்க்கொடி பதிப்பகம், சென்னை.
10. தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம்.

# 28. தபுதாரத்து ஆழ்ந்த தனிநிலைமை

– முனைவர் தேமொழி

வாழ்க்கைத் துணையை இழந்த நிலை என்பது ஓர் இழிவான நிலை அல்ல.

இணையரில் ஒருவர் இறந்த பின்னர் மற்றவரும் துணையுடன் சேர்ந்து இறந்துவிடுவதும் இயற்கையில் நடவாத ஒன்று. மிக அரிதான நிலையில் துணையின் பிரிவினால் ஏற்படும் மனத்துயர்(depression), அதிர்ச்சி(shock) மற்றவரின் வாழ்வை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து விடுவதும் உண்டு. ஆனால் அது தனிப்பட்ட ஒருவர் தன் இழப்பைக் கையாளும் முறைப்படி அமையும்.

"மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்இதன் பண்பே" (புறநானூறு 245)
'என் மனைவியின் உடல் தீயில் எரிந்ததை நான் கண்ணால் கண்ட பிறகும் இன்னும் உயிரோடு உள்ளேனே' என்று மனைவியை இழந்து வாழ்வதற்கு மனம் வருந்திப் பாடியவர் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையார்.

துயரம் தாங்காது தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணமும் ஒரு சிலருக்குத் தோன்றும். பெண்களுக்கு ஏற்படும் அந்தத் தற்கொலை எண்ணத்தைப் போற்றுதற்கு உரிய செயல் போல பாராட்டி, ஊக்கப்படுத்தி, பிறகு கட்டாயப்படுத்தும் நிலைக்குக் கொண்டு சென்றதுதான் சமூகத்தின் இழிநிலை.

கைம்பெண் என்றால் ஈனநிலை என்ற இழிவான எண்ணத்தில் இந்தியாவின் பிரதமர் இந்திராகாந்தியையே மாட்டுக் கொட்டிலில் அமர்த்தி (தீட்டு போய்விடும் என்ற ஐதீகமாம்) நேர்காணல் கொடுத்த மடத்தலைவர் ஒருவரையும் கண்டது சென்ற நூற்றாண்டு.



CEREMONY OF BURNING A HINDU WIDOW WITH THE BODY OF HER LATE HUSBAND.

ஈவெரா போன்ற சமூக அக்கறை கொண்ட பெரியார் ஒருவர், ஆண்பெண் சமத்துவ நிலை வேண்டுபவர், 'விதவை' என்ற சொல் வழக்கத்தில் இருக்க 'விதவன்' (widower) என்ற சொல் புழக்கத்தில் இல்லாத நிலையைச் சுட்டிக் காட்டியது இந்த ஆண் பெண் சமுதாய ஏற்றத் தாழ்வு நிலையை மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் ஒரு முறை.

மனைவியை இழந்த நிலையை சுட்டிக் காட்ட புதுச்சொல் உருவாக்கும் தேவை இல்லை. துணையை இழந்த கணவனைக் குறிக்கும் 'தபுதாரன்' என்ற சொல் முன்னர் வழக்கத்தில் இருந்திருக்கிறது. அவ்வாறு மனைவியை இழந்த துயருடன் தனித்து வாழும் கணவனின் நிலை "தபு-தார நிலை' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. "தபு' என்றால் "இறத்தல்' என்றும், "தாரம்' என்றால் "மனைவி' என்றும் பொருள். ஆகவே, தபுதாரன் என்பவர் மனைவியை இழந்தவர் என்பது பொருள்.

"பைந்தொடி மேல்உலகம் எய்தப் படர்உழந்த
மைந்தன் குரிசில் மழைவள்ளல் - எந்தை
தபுதாரத்து ஆழ்ந்த தனிநிலைமை கேளாச்

செவிடாய் ஒழிக என் செவி'' (புறப்பொருள் வெண்பா மாலை)

மனைவி இறந்த பின்னர் மறுமணம் செய்துகொள்ளாமல் அவள் நினைவுடன் கைம்மை நோன்பு மேற்கொண்டு கணவனும் வாழ்ந்துள்ளதை இப்பாடல் பதிவு செய்திருப்பதைக் காணலாம்.

மனைவியை இழந்த நிலையைக் குறிக்கும் ஒரு சொல் நம்மிடம் வழக்கத்தில் இல்லாத நிலைக்குப் போனதும், மாறாக, கணவனை இழந்தவர் அமங்கலி என்று ஒதுக்கப்பட்டதும், கைம்பெண்ணைக் குறிக்கும் கைம்பெண்டாட்டி என்ற சொல் 'கம்னாட்டி' என்று மருவி இழிவு படுத்தும் ஒரு சொல்லாக, வசவுச் சொல்லாக மாற்றப்பட்டதில்தான் இருக்கிறது அடிப்படை மனித உரிமை மீறலையே தன் வழக்கமாக்கிக் கொண்ட இந்தியாவின் பண்பாடும் நாகரிகமும்.

## 29. நம் ஊர் நம் பெருமை!

— முனைவர் க.சுபாஷிணி

ஊர் பெருமை பேசுவது என்பது நம் எல்லோருக்குமே இயல்பாக நடப்பது தான். எங்க ஊரில் ஓடுகின்ற ஓடையில் உள்ள தண்ணீரைக் குடித்தால் அமிர்தமாக இருக்கும்.. என்று சொல்வோர் சிலர். எங்க ஊர் அக்கா கடை இட்லி மாதிரி வேறு எந்த ஊரிலாவது கிடைக்குமா.. என்று கூறுவர் சிலர். எங்கள் ஊர் கோயில் கோபுரம் போல வேறு எந்த ஊரில் இருக்கிறது, என்று கட்டிடக்கலையை ரசிப்போர் சிலர். எங்க ஊர் தறியில செய்த சேலை போல வருமா, என்று தங்கள் சேலையைச் சுட்டிக் காட்டி பெருமை பேசும் மங்கையர் பலர். இப்படி மிக இயல்பாகவே நாம் பிறந்து வளர்ந்த ஊர் சார்ந்த சிறப்புகளைப் பிறரிடம் கூறி விவரித்து பெருமை பேசி அதில் மகிழ்ச்சி காணும் இயல்பு நம் எல்லோருக்குமே உண்டு.



`நம்ம ஊர் ஏதாவது ஒரு பெருமையைத் தன்னுள்ளே வைத்துக் கொண்டிருக்கும்`, என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அந்தப் பெருமைகளை நமது நண்பர்களிடமும் சுற்றத்தாரிடமும் அயலாரிடமும் பேசி மகிழும் சுகம் அலாதியானது.

முன்பெல்லாம் ஊர் பெரியவர்களும் வீட்டுப் பெண்களும் திண்ணையில் அமர்ந்து தங்களுக்குத் தெரிந்த தங்கள் ஊர் பெருமையைப் பேசி பெருமை கொள்வார்கள். இளைஞர்கள் ஊர் மத்தியில் அல்லது முச்சந்தியில் உள்ள அரச மரம், ஆல மரம் அடியில் அமர்ந்து தங்கள் ஊர் பெருமையைப் பேசிக்கொள்வார்கள். திருமணம், காதுகுத்தல் போன்ற குடும்ப சடங்குகள் நிகழும் விழாக்களுக்குச் செல்பவர்களும் அங்கு உறவினர்களுடனும் நண்பர்களுடனும் அமர்ந்து தம் ஊர் பெருமைகளைப் பேசி மகிழ்வார்கள்.

இன்று நமக்கு இணையமும், கணினி தொழில்நுட்பமும் கதை பேச ஒரு புதிய வெளியை உருவாக்கித் தந்திருக்கிறது. இந்த இணைய யுகத்தில் இணையம் வழியாக நமக்குத் தெரிந்த செய்திகளை நாம் ஒருவருக்கு மற்றொருவர் எனப் பகிர்ந்து கொள்ள வெவ்வேறு வகைச் சமூக ஊடகங்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஒருவகையில் சொல்லப்போனால் சமூக ஊடகங்கள் இல்லாமல் நாம் இல்லை எனும் அளவிற்கு இணையத் தொழில்நுட்பம் கைபேசி, கணினி போன்ற கருவிகளைத் துணையாகக் கொண்டு நாம் சலிக்காமல் அலுக்காமல் கதை பேசவும் நம் ஊர் பெருமையைக் கூறிக் கொள்ளவும் பெரியதொரு வாய்ப்பை நமக்கு வழங்கியிருக்கின்றது.

இந்த நல்வாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்துகிறோமா?
நம் ஊர் பெருமையை நாமும் அறிந்து மற்றவரும் அறியும் வழி சமூக ஊடகங்களில் செய்திகளைப் பரவலாக்கம் செய்யும் முயற்சியை நாம் சரியாக மேற்கொள்கின்றோமா?
நாம் பிறந்து வளர்ந்த மண்ணின் பெருமையைச் சரியாக உலகுக்கு எடுத்துக் கூறும் பணியை நாம் செய்கின்றோமா?
இப்படி நாம் பெருமை பேசி மகிழும் நமது செயல்களினால் நமது ஊருக்கு நன்மைகள் ஏதேனும் ஏற்பட்டுள்ளதா?

இந்தக் கேள்விகளை நாம் நம்மை நோக்கிக் கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும்.

நமது ஊர் பெருமை பேசும் பேச்சு வெட்டிப் பேச்சாக இல்லாமல் ஆக்ககரமான செயலுக்கு முன்மாதிரியாகவும் உந்துதலாக அமைந்திருக்க வேண்டும். இதனை எப்படிச் செய்வது?

ஓர் ஊர் இருக்கின்றது என்றால் அந்த ஊர் உருவாக்கம் பெற்ற கதை, செவிவழிச் செய்திகள், அதன் வரலாறு, அந்த ஊரில் இருக்கின்ற வழிபாட்டுத்தலங்கள், ஆறுகள், குளங்கள், குட்டைகள், மலைகள், குன்றுகள், குகைகள், கோட்டைகள், சாலைகள், தெருக்கள் மட்டுமன்றி என்றோ ஒரு நாள் நமது மூதாதையர்கள் உருவாக்கிச் சென்ற நடுகல் கல்வெட்டுகள், தொல்லியல் எச்சங்களாக இருக்கின்ற கற்படுக்கைகள், கல் வட்டங்கள், பாறையின் மேல் கீறப்பட்ட குறியீடுகள், பாறையில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், ஊரின் எல்லையில் இருக்கும் எல்லைச்சாமி, ஊரில் மக்கள் இளைப்பாற நெடுநாள் வளர்ந்து நிற்கும் நிழல் கொடுக்கும் மரங்கள் என நம் ஊரின் சிறப்புக்குப் பங்களிக்கும் ஒவ்வொரு விசயத்தையும் நாம் உலகுக்கு எடுத்துச் சொல்லி, அதைப் பற்றிய ஓர் ஆவணப்பதிவை உருவாக்கி வைக்க வேண்டியது அவசியமல்லவா? இதனை எத்தனை பேர் செய்கிறோம்?

`வாய்ச்சொல்லில் வீரரடி` என்ற கூற்றிற்கு ஒப்ப வீண் பெருமை மட்டும் பேசுவதால் நம் ஊரின் பெருமையை நம்மால் பாதுகாத்து விட முடியாது. இதற்கு முறையான திட்டமிடல் என்பது அடிப்படையான ஒரு தேவை அல்லவா?

முதலில் நாம் பிறந்து வளர்ந்த ஊர், அதன் வரலாறு என்ன எனத் தெரிந்து கொள்ள நாம் அனைவரும் முற்பட வேண்டும். இது எப்படிச் சாத்தியமாகும் என்று நாம் யோசிக்கலாம்? நமது பெற்றோரும், அவர்களது பெற்றோர்களும், அதே கிராமத்தில் பிறந்து வளர்ந்து நீண்ட காலம் வாழ்கின்ற நமது உறவுகளும், சுற்றத்தாரும் தான் இதற்கு முதல் நிலை தரவுகளைத் தரக்கூடிய முக்கிய நபர்கள். நம்மைச் சுற்றியுள்ள வயதில் மூத்த நம் உறவுகளையும் சுற்றத்தாரையும் கேட்டுத் தெரிந்து

கொள்ளும்போது நமக்குப் பல புதிய விஷயங்கள் நம் ஊரைப் பற்றியே அறிந்து கொள்ள முடியும்.

எத்தனையோ முறை நாம் ஒரு சாலையில் கடந்து சென்றிருப்போம். தினம் தினம் ஒரே சாலையில் சென்றிருப்போம் ஆனால் அந்தச் சாலையின் மூலையில் மண்ணில் புதையுண்டு தலை மட்டுமே தெரிகின்ற நடுகல்லை நமது கண்கள் கண்டிருக்குமா?

நம் ஊர் வயதான `பெருசுகள்` அவ்வப்போது சில பாடல்களை மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பாடல்கள் ஒரு தலைவனைப் பற்றியோ, ஒரு நிகழ்வைப் பற்றியோ சொல்வதாக இருக்கும். அத்தகைய பாடல்களைப் பற்றி அமர்ந்து, நிதானித்து, யோசித்து அந்தப் பாடல் சொல்லும் செய்தி என்ன என்று அறிய நாம் முற்பட்டிருப்போமா?

நம் ஊரில் பாழடைந்த ஒரு கற்கோயில் இருக்கும். அதில் ஆங்காங்கே சில கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அந்தச் சிதிலமடைந்த கோவிலின் தூண்களில் சிற்பங்கள் சில செதுக்கப்பட்டிருக்கும். இத்தகைய கட்டுமானங்களைக் கண்டும் காணாமல் நாம் எத்தனையோ முறை அதனைக் கடந்து சென்றிருப்போம். அந்தக் கோயில் சொல்லும் வரலாற்றையும் நாம் கடந்தே சென்றிருப்போம்!

உலகின் பண்பாட்டு வளம் மிக்க நிலப்பகுதி என எடுத்துக்கொண்டால் கிரேக்கம், இத்தாலி, துருக்கி, எகிப்து போன்ற நாடுகளின் வரிசையில் தென்னிந்திய நிலப்பகுதியும் முக்கியத்துவம் பெறும் ஒரு பகுதியாகும். மிக நீண்ட காலமாக மனிதக் குலம் வாழ்ந்து, பண்பாட்டில் வளம் பெற்று, கலைகளை வளர்த்து, விவசாயம் செய்து, வணிகம் செய்து பொருட்செல்வமும் கலைச்செல்வமும் வளர்த்த நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட பண்பாடு தமிழ்ப் பண்பாடு. அத்தகைய பண்பாட்டு எச்சங்கள் எப்போதும் பெருநகரங்களில் மட்டும் இருப்பதில்லை. ஒவ்வொரு சிறு கிராமமும், ஒவ்வொரு சிற்றூரும் தமிழர் வரலாற்றின் எச்சங்களைத் தாங்கிய வரலாற்றுத் தரவுகளைக் கொண்டிருக்கும் முக்கிய இடங்களாகத் தான் திகழ்கின்றன.

ஏன் செய்கின்றோம், எனத் தெரியாமல் ஊர் பெருமை பேசிக் கொள்ளும் நாம், நம் ஊரின் உண்மையான பெருமைகளை நேரில் சென்று கண்டறிந்து அவற்றைப் பற்றி சிறிது நேரத்தைச் செலவு செய்து, ஆய்வு செய்து, அவற்றின் வரலாற்றை ஊர் மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, சமூக ஊடகங்களின் வழியாக இணையத்தில் செய்திகளைப் பகிர்ந்து நம் ஊர் பெருமையை உலகுக்கு வெளிக் காட்டலாமே? ஒவ்வொரு நபரும் தங்கள் ஊர் பெருமையை வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் முயற்சி செய்தால் தென்னிந்திய நிலப்பகுதியில் தமிழர் வரலாற்றைப் பறைசாற்றும் எண்ணற்ற புதிய கண்டுபிடிப்புகளை நாம் வெளி உலகுக்குக் கொண்டு வரலாம். தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர்களின் கவனத்திற்கு அதனை நாம் கொண்டு செல்லலாம். இதன்படி விடுபட்ட கோடுகளை இணைக்கும் புள்ளிகளைக் கண்டுபிடித்து வரலாற்றில் விடுபட்ட செய்திகளை இணைத்து தமிழர் வரலாற்றிற்கு வளமும் பலமும் சேர்க்கலாம்.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு `நம் ஊர் நம் பெருமை` எனும் இயக்கத்தின் வழியாக இணையம் வழியாக வலைப்பக்கத்தில் நம் ஊர் பெருமைகளைப் பதிந்து வைக்க தகவல் களஞ்சியத்தை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளது. இத்தகைய அமைப்புகளுடன் இணைந்த வகையிலும் உங்கள் ஊர் பெருமைகளை ஆவணப்படுத்தி நாம் நம் ஊருக்குப் பெருமை சேர்க்கலாம் நாமும் பெருமை அடையலாம்.

**நம் ஊர் நம் பெருமை!**

குறிப்பு: இக்கட்டுரை, டிசம்பர் 11-12, 2021 இல் நடைபெற்ற 'அமெரிக்கத் தமிழ்க்கல்விக்கழகத்தின் ஆண்டு விழா' மலருக்காக நான் அனுப்பியது; முனைவர்.க.சுபாஷிணி, தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

## 30. மாட்டுப் பொங்கலும், கரகாட்டப் பாடல்களும்...

— ச.சுப்பாராவ்

நிற்காது ஓடும் வாழ்க்கைச் சக்கரத்தின் சுழற்சியில் நாம் ஓடிக் கொண்டே இருக்கிறோம். பண்டிகைகள், நாள், கிழமைகள் வரும் போதுதான் சற்றே நின்று, இளைப்பாறி, அந்தக் காலத்தில் இந்தப் பண்டிகையை நாம் எப்படிக் கொண்டாடினோம் என்று நாம் எல்லோருமே பார்ப்போம். அடுத்த தலைமுறையிடம், இந்தப் பண்டிகைக்கு என் அப்பா இப்படிச் செய்வார், அம்மா இப்படிச் செய்வாள், தாத்தா, பாட்டி இப்படியிப்படிச் செய்வார்கள் என்றெல்லாம் சொல்வோம். யோசித்துப் பார்த்தால் ஒவ்வொரு பண்டிகையும் அன்றைய கொண்டாட்டத்திற்காக மட்டுமன்றி, மலரும் நினைவுகளுக்காகவும் சேர்ந்தே வருவதாகத் தோன்றுகிறது.

பெரு நகரமும் இல்லாத, சிறு கிராமமும் இல்லாத இரண்டுங் கெட்டான் ஊரான மதுரையில் என் சிறுவயது பொங்கல் கொண்டாட்டம் பற்றி ஒவ்வொரு பொங்கலுக்கும் நினைத்துக் கொள்வேன். நகரத்துப் பொங்கல் என்பதால் பொங்கல் ஒரு பொது நிகழ்ச்சியாக என்றும் இருந்ததில்லை. அழகழகான பொங்கல் வாழ்த்து அட்டைகள் வாங்கி நண்பர்களுக்கு அனுப்புவதோடு பொங்கல் ஆரம்பிக்கும். அத்தனை நுணுக்கமாக, ஓவியம் தீட்டும் அந்தக் கலைஞர்கள் எல்லாம் என்ன ஆனார்களோ? என்று இப்போது நினைக்க வேதனையாக இருக்கிறது. அஞ்சலகங்களில் மலையளவு வாழ்த்து அட்டைகள் குவிந்தன... தபால் ஊழியர்கள் திண்டாட்டம் என்று தினத்தந்தியில் செய்தி படித்த நினைவும் இருக்கிறது.

ஆனாலும் எங்கள் தெருவில் சிங்காரம் ஞாபகார்த்த ஏழு ரோஜா எவர்ஜாலி கபாடிக் குழு என்ற பழம்பெரும் கபாடிக் குழுவின் ஆண்டு விழா பொங்கல் நாளில் வருவதால், போகி முதல் மாட்டுப் பொங்கல் வரை மூன்று நாட்கள் குழாய்களில் பாடல்கள் அலற

பொங்கல் பொது நிகழ்ச்சியாக மாறியது. இந்தக் கபாடிக் குழு மிகப் பழமையானது. இப்போது எழுபத்தாறு வயதான என் சித்தப்பா, அறுபத்தேழு வயதான என் அண்ணன் ஆகியோர் விளையாடிய குழு அது. அதன் விளையாட்டு வீரர்கள் பலரும் பல பள்ளி, கல்லூரிகளில் கபாடி கோச்சாக இருந்தவர்கள். கபடியை வைத்துப் பல பெரிய நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றவர்கள்.

மாறுவேடப் போட்டி, பானை உடைக்கும் போட்டி, பெண்களுக்குக் கோலப் போட்டி, சாக்கு ரேஸ், ஸ்பூன் ரேஸ் என்று வழக்கமான எல்லா போட்டிகளும் உண்டு. போகியன்று புதுப் பாடல்களாகப் போடும் மைக் செட் காரரர் மீனா எலக்ட்ரிகல்ஸ் கருப்பையா , இரண்டாம் நாள் சற்று நடுத்தர பழைய பாடல்கள், மூன்றாம் நாள் மிக மிகப் பழைய பாடல்கள் என்று பின்னோக்கிச் செல்வார். பதினாறு வயதினிலே படம் வந்த ஆண்டு அதன் வசன ஒலிச்சித்திரத்தை மூன்று நாட்களுக்கும் மும்மூன்று முறை போட்டார்கள். விதி படம் பிரபலமாக ஓடிய ஆண்டும் இதே கதைதான். படம் பார்க்காமலேயே படம் பார்த்த உணர்வைத் தரும் படியான ஒலிச்சித்திரம். இன்றைய தலைமுறை இழந்தவற்றில் இது மிக முக்கியமானது என்ற கூடத் தோன்றுகிறது !

ஆனால், என் பதின்பருவத்தில் பொங்கல் நாளை விட மாட்டுப் பொங்கல் நாள் தான் எனக்குப் பிடித்தமானதாக இருந்தது. அதற்குக் காரணம் எங்கள் தெருப் பகுதிகளில் கோனார் சமூகத்தினர் அதிகம் இருந்ததும், அதன் விளைவாக பொங்கலை விட மாட்டுப் பொங்கல் வெகு சிறப்பாக நடந்ததும் தான். என் உயிர் நண்பன் கண்ணனின் அடுத்த வீடு எங்கள் பகுதியில் மிகவும் வசதிபடைத்த, செல்வாக்கான பாலுக் கோனாரின் வீடு. அவரது குடும்பத்தினரும், அவர்கள் வீட்டோடு இருந்து வேலை பார்த்த அவர்களது உறவினர்கள் சிலரும் எங்கள் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வீட்டில் வளர்க்கப்படும் மாடுகளை மாதக் கூலிக்குப் பராமரித்து வந்தார்கள். மாட்டுப் பொங்கலன்று அவர்களது பராமரிப்பில் இருக்கும் மாடுகள், அவர்களது சொந்தத் தொழுவத்தில் இருக்கும் மாடுகள் அனைத்தையும் அலங்கரித்து பூஜை செய்து, நையாண்டி மேளம், கரகம் எல்லாம் வைத்து எல்லா

மாடுகளையும் ஊர்வலமாக நடத்திச் சென்று அந்தந்த உரிமையாளர் வீட்டில் விட்டு விட்டு வருவது வழக்கம். அதற்கு அந்தந்த உரிமையாளர்கள் பாலுக் கோனாருக்கு மரியாதை செய்வார்கள். மாட்டுப் பொங்கலுக்கு ஒரு வாரம் முன்பாகவே அவர்கள் வீடு பரபரப்பாகி விடும்.

தெருவில் என்னையும், கண்ணனையும், என் மற்ற இரு நண்பர்களான ரவி, பாலனையும் பார்க்கும் போதெல்லாம் பாலுக் கோனார் 'சாமி, மாட்டுப் பொங்கலுக்கு நம்ப வீட்டுக்கு வந்துருங்க... ஐயர விட்டு தா பொங்கல் போடச் சொல்லியிருக்கேன்,' என்று அழைத்துக் கொண்டே இருப்பார். தெருக்காரர்கள் பெரும்பாலானோர் கபாடிக் குழுவின் போட்டிகளில் இருக்க, நானும், எனது நண்பர்கள் மூவரும் மட்டும் மாட்டுப் பொங்கல் கொண்டாடப் போய் விடுவோம். மாட்டுப் பொங்கலன்று எல்லா வீட்டு மாடுகளையும் வைகையாற்றில் வைத்துக் குளிப்பாட்டுவார்கள். இப்போது போலன்றி, அக்காலத்தில் ஆற்றில், ஏதோ ஓரளவுக்குத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. பிறகு கொம்பிற்கு பெயிண்டிங். பெயிண்டிங் என்றால் ஏதோ பிரஷ் வைத்துக் கொண்டு அடிப்பதல்ல. குளிப்பாட்டப் பட்ட மாடு கரை ஏறும் இடத்தில் ஒரு வாளியில் சிவப்புப் பெயிண்டோடு ஒருவரும், பச்சைப் பெயிண்டோடு ஒருவரும் நிற்பார்கள். மாடு அவர்கள் எதிரில் வந்து நிற்கும். சிவப்புப் பெயிண்ட் கோனார் வாளியில் கையை முக்கி, அப்படியே கொம்பின் அடிப்பாகத்திலிருந்து கையை மேல்நோக்கி இழுக்க அந்த கொம்பு சிவப்பு நிறமாகிவிடும். அதே சமயம் பச்சைப் பெயிண்ட் கோனாரின் கை வண்ணத்தில் அடுத்த கொம்புக்குப் பச்சை நிறம் தீட்டப்பட்டுவிடும். அடுத்தவர் மஞ்சளைக் கரைத்து வைத்துக் கொண்டு, உடல் முழுக்க மஞ்சள் பொட்டை வேகவேகமாக வைப்பார். நெற்றியில் பொட்டு, கழுத்தில் மாலை. மாடு அலங்காரம் முடிந்தது ! அந்த பெயிண்ட் டப்பாவைப் பிடித்துக் கொண்டு நின்றவன் யார் என்று உங்களுக்கே தெரியும் ! எல்லா மாடுகளும் வரிசையாக நிற்க, பாலுக் கோனார் பட்டு வேட்டி சட்டையில், பூஜை செய்து, எல்லா மாடுகளுக்கும் தீபாராதனை காட்டுவார். தீபாராதனை காட்டும் போது, அருள் வந்து பயங்கரமாக ஓர் ஆட்டம் போடுவார். பின்

நையாண்டி மேளத்தோடு எல்லா மாடுகளும் தத்தம் வீடு திரும்பும். ஐயர் சமைத்த பொங்கலை எல்லோரும் சாப்பிடுவோம்.

மதியம் மூன்று மணிக்குக் கரகாட்டக் கோஷ்டி வந்துவிடும். பாலுக் கோனார் வீட்டு மாடியில்தான் மேக்கப். மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள், ஒரு பபூன். அந்த மூன்று பெண்களில் யாரோ ஒருவர் மூன்றாம் பாலினத்தவர் என்பார்கள். யார் என்று எங்களுக்குக் கண்டுபிடிக்கத் தெரியாது. கரகம் ஆடும் பெண்கள் ஏன் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள் என்பது இன்றுவரை எனக்குப் புரியாத ஒரு புதிர். நல்ல உயரம். தொட்டு இட்டுக் கொள்ளலாம் போன்ற ஒரு மைநிறம். பெரிய தொப்பை. சிறிய மார்பு. உள்ளே சின்ன கறுப்பு டிராயர் போட்டு மேலே சின்னதாக ஒரு குட்டைப் பாவாடை. குட்டைக் கை வைத்த, சமிக்கி வைத்துத் தைத்த குட்டை ரவிக்கை. ஒரு கற்பனைக் கோட்டிற்கு மேலே பிரவுன் நிறத்திலும், அந்தக் கோட்டுக்குக் கீழே மைக் கறுப்பிலும் தெரியும் திண்மையான கை... பெரிய கொண்டை. அதைச் சுற்றி வெள்ளை நிறத்தில் ஏதோ இறகுகளை வட்டமாகச் சுற்றியிருப்பார்கள். பின்னாலிருந்து பார்க்க அந்தக் கொண்டை பிளாக் அண்ட் ஒயிட் சூரிய காந்திப் பூ போல இருக்கும். சரோஜா தேவி போல் குருவி வால் மையிட்ட கண்கள். ரத்தச் சிவப்பு லிப்ஸ்டிக்கில் உதடுகள்.

கரகம் , நையாண்டி மேளத்துடன் பாலுக் கோனார் வீட்டுச் சொந்த மாடுகளை அழைத்துக் கொண்டு இரவு ஒன்பது மணியளவில் ஊர்வலமாகக் கிளம்புவோம். கோனாரின் வாடிக்கையாளர்கள் வீடுகளுக்கு வரிசையாகச் சென்று மரியாதை பெற்றுக் கொண்டு அதிகாலை மூன்று மணியளவில் அவரது வீடு வந்து சேர்வோம். அலங்கரிக்கப்பட்ட அவர் வீட்டு மாடுகளை ஊர்வலமாக அழைத்துச் செல்வோம். எல்லா வீடுகளிலும், பாலுக் கோனாருக்கு வேஷ்டி, துண்டு, பணம், வெற்றிலை, பாக்கு தந்து மரியாதை செய்வார்கள். முதல் முறையாக இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் போது, என் சக்திக்கு, என் வீரத்திற்கு ஏற்றபடி, ஒரு சிறு கன்றை அழைத்துச் செல்லும் பொறுப்பைத் தருமாறு பாலுக் கோனாரைக் கேட்டேன். அவர், ' கண்டுக் குட்டிண்டா, கொட்டுச் சத்தத்துக்கு வெறிக்கும், குதிக்கும், உங்களுக்குப் பிடிக்க முடியாது. பெரிய மாடுண்டா, வெறிக்காம எனக்கென்னா...ண்டு

வரும். அதுனால பெரிய மாட்ட பிடிச்சுட்டு வாங்க சாமி,' என்று ஒரு பெரிய மாட்டின் வடத்தை என் கையில் தந்தார். நான் வீரமாக அதை அழைத்துச் சென்றேன். அது நான் ஒரு ஜீவராசி அதன் கயிற்றைப் பிடித்திருப்பது பற்றிய உணர்வே இன்றி, என்னை கொஞ்சம் கூட கண்டு கொள்ளாமல் சாவகாசமாக நடந்து வந்தது. ஆனால், அதைப் பார்த்த எங்கள் தெருவாசிகளோ நான் ஏதோ அலங்காநல்லூர் ஜல்லிக் கட்டில் ஒரு பெரிய காளையை அடக்கி அதை சாதுவாக்கி நடத்திச் செல்வது போல் அதிசயமாகப் பார்த்தார்கள். மாட்டுடன் நடப்பதற்குப் பழக வேண்டும். அதன் குளம்பு நம் காலைப் பதம் பார்த்து விட்டால் அவ்வளவுதான்.. கால் கூழாகிவிடும். அதன் குளம்பால் மிதிபடாமல் கவனமாக நடக்க வேண்டும்.

ஒவ்வொரு தெரு முக்கிலும், கரகாட்டக் காரர்கள் நின்று ஆடுவார்கள். அப்போது, அந்தந்தத் தெரு பெரிசுகள் யாராவது வந்து இந்தப் பாட்டப் பாடு, அந்தப் பாட்டப் பாடு என்று உத்தரவு போடுவார்கள். அந்தப் பாட்டைப் பாடும் போது கரகாட்டக் காரிகளின் ரவிக்கையில் ரூபாய் நோட்டை குத்திவிடுவார்கள். அவர்களும் பாடிக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, ரூபாய் நோட்டை குத்தியவரை வாழ்த்தி இரண்டு வரி பாடிவிட்டு பிறகு தங்கள் கதைப் பாட்டைத் தொடர்வார்கள்.



எங்கள் ஊர்வலம் மணிநகரம் ரயில்வே லைனுக்கு அடியில் உள்ள பாலம் பகுதிக்குப் போனதும் (அதை கர்டர் பாலம் என்பார்கள்) அந்தப் பகுதி பெரியவர்கள் நிறுத்தி சரஸ்வதி பள்ளிக் கூடம் பாட்ட படிங்க என்று உத்தரவிடுவார்கள். பாடுங்க என்பதை படிங்க என்று சொல்வது மதுரையில் தொன்று தொட்டு வரும் பழக்கம். அந்தப் பக்கத்தில் அந்தக் காலத்தில் (1964ல்) சரஸ்வதி பள்ளிக்கூடம் என்று ஒன்று இருந்திருக்கிறது. மோசமாகக் கட்டப்பட்ட கட்டிடம். பாலத்தில் ரயில் போன அதிர்ச்சியில் கட்டிடம் இடிந்து விழ முப்பத்தாறு சிறு குழந்தைகள் பரிதாபமாக இறந்து போனார்கள். கும்பகோணம் பள்ளி தீவிபத்தைப் போன்ற ஒரு கோரமான விபத்து. மதுரை தத்தனேரி மயானத்தில் இந்தக் குழந்தைகளின் கல்லறைகள் வரிசையாக இருப்பதை இப்போது பார்த்தாலும் துக்கம் பொங்கும். இந்தப் பாடலை கரகம் ஆடும் ஆண்களும் பெண்களும் அப்படியொரு சோகமான குரலில் பாட, நையாண்டி மேளத்தில் அதை வாங்கி வாசிப்பார்கள்.

'பாண்டி நகரமாம் மதுரையில் நடந்த
பள்ளிக் கூட விபத்து
மனமுருகும் பயங்கறமான விபத்து
இந்த பறிதாப வறலாற விறிவாக சொல்லி வாறேன்
பாடலாகப் படித்து.... இங்கே
பாடலாகத் தொடுத்து....'

என்று உருமி எஃபெக்ட்டுக்காக 'ர' வரும் இடத்தில் எல்லாம் 'ற' போட்டு பெண்கள் பாட, தவில், உருமி எல்லாம் மிருதங்கம் போல் சர்வலகுவாக அனுசரணையாக மெதுவாக வரும். அவர்கள் பாடலாகத் தொடுத்து... என்று முடித்ததும் நாயனக்காரர் அதே வரிகளை எடுக்க இப்போது தவிலும், பம்பையும், உருமியும் வெறி கொண்டு உறுமும்...

சினிமாவில் நடிக்கிற சிவாஜி கணேசன்
பாலும், பழமும் கொடுக்க,
பிள்ளைகளுக்கு பாலும், பழமும் கொடுக்க,
எம்.ஜியாரு பத்தாயிரம் கொடுக்க...

என்று பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு திரை நட்சத்திரங்கள் செய்த உதவி பாடலில் வரும். கல்விக் கண் திறந்த காமராசர்

சம்பவத்தைக் கேள்விப்பட்டுக் கண்கலங்கியது வரும். இந்தப் பாடலின் ஹைலைட், கடைசியில், ஆண் .....

'இம்புட்டு நடந்திருக்கே...
இந்த ஊர்ல ஒரு மகாராணி இருக்குதே....
அது என்ன செஞ்சுச்சு?'

என்று கேட்பதுதான்.

பெண்ணுக்கு முதலில் புரியாது. பிறகு புரிந்து கொண்டு,

'அது என்னத்த செஞ்சுச்சு?
அது பாட்டுக்கு பட்டாபிசேகம் செஞ்சுக்குறும்...
திக்குவிஜயம் போகும்....
கல்யாணம் கட்டிக்கும்,'

என்று நிந்திப்பாள். 36 சின்னஞ்சிறு குழந்தைகள் பள்ளிக்கட்டிடம் இடிந்து விழுந்து இறந்ததற்காக, அதைத் தடுக்காது வேடிக்கை பார்த்ததற்காக, அரசி மீனாட்சியை மதுரை மக்கள் இன்று வரை மன்னிக்கவில்லை.

எங்கள் ஊர்வலம் அப்படியே புட்டுத்தோப்பு திருக்கண் மண்டபம் வரை போகும். மண்டபத்திற்கு வாசலில் கரகாட்டக் கோஷ்டி சின்னதாக ஒரு டான்ஸை போடும். அப்போது ஒரு சண்டியர், 'டேய்.... மணிக்குறவெ பாட்டப் படிக்காம என்ன டான்ஸ் ஆடிட்டு இருக்கீங்க?' என்று சவுண்டைக் கொடுப்பார். நையாண்டி மேளம் சட்டென்று நிற்கும். ஆண் ஆட்டக்காரர், கணீரென்ற குரலில்,

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
அன்புடன் கல்வி கற்றுத் தந்ததோர்
குரு அடுத்ததொரு தெய்வம்
பின்னே நம் குடும்பத்தின் வாழ்க்கையை
பெருமைப் படுத்த வந்த பெண்சாதி தெய்வம்
இந்த பேரான உலகமது நேராக நின்றுமே
நம் பேரைச் சொல்ல வந்த பிள்ளையும் தெய்வம்
இது அன்னாளின் முன்னோர்கள் அறிவித்த பழமொழி
அது போலத் தானய்யா இந்த மண்ணான பூமியில் மாது சிரோண்மணி
அரிஜன வம்சம் அன்புள்ள பெண்மணி
பூரணக் குறத்தி புண்ணிய தவத்தால்
சீராகப் பெற்று செல்லமாய் வளர்த்திட்ட

வீரனாம் மணிக்குறவன் வெட்டுப்பட்டு மாண்ட கதை கேளய்யா....'
என்று தொகையறா பாடி,

'மணிக்குறவன் கதயக் கேட்டு மருகுதுல்ல சனங்களெல்லாம் ' என்று ஆரம்பிக்கும் போது தவிலும், பம்பையும், உருமியும் மெல்ல சேர்ந்து கொள்ளும். மணிக்குறவனின் வீர சாகசம், வஞ்சனையால் அவன் கொல்லப்பட்டது என்று ஒவ்வொரு கட்டத்திற்கும் கூட்டம் ஆஹாகாரம் செய்யும். பொதுவாக உலகில் ஆண் ஊர் சுற்றுபவன். உலக விவகாரங்கள் அறிந்தவன். பெண் வீட்டில் அடுப்பூதிக் கொண்டிருப்பவள். ஆண் மூலம் உலக விஷயங்களை அறிந்து கொள்பவள். ஆனால் மதுரையில் எளிய குடும்பங்களில் ஆண் வேலைக்குப் போவான். வேலை இல்லாத நேரங்களில் வீட்டு வாசலில் உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டு, தூ.. தூ... என்று துப்பிக் கொண்டிருப்பான். அவனுக்கு உலக விவகாரம் எதுவும் தெரியாது. எல்லாம் வீட்டின் 'பொம்பளயாளுகளுக்குத்' தான் தெரியும். மீனாட்சி பட்டணத்தின் இந்த விதிக்கு ஏற்றாற் போல், கரகாட்டக் கதைப் பாடல்களில் எல்லாம் ஆண் ஒன்றும் அறியாத அப்புராணியாக, என்ன நடந்தது? எப்படி? ஏன்? என்று கேள்விகளாகக் கேட்க, பெண்தான் நாலு விஷயம் அறிந்த அறிவாளியாக, பதில் சொல்வாள்.

மணிக்குறவன் மாண்டதோடு கதை முடிந்து விடாது. ஆண்....
'சுந்தரியே! இந்த சேதி சொல்லி உனக்கு தந்தது யாரு?
சந்தேகத்த சொல்ல வேணும் அங்கம்மா
சபையோருக்குத் தெரியும் படி ரங்கம்மா'
என்று கேட்பான்.
உடனே பெண்,......
'பேர மாத்தி படிப்பவர பிடிச்சு வெச்சு புத்தி சொல்லும்
கருணையுள்ள என் குரு அங்கப்பா
கவிராயர் எஸ்.பெருமாள் ரங்கப்பா'
என்பாள்.

பொதுவாக பாடல் வரிகள் பாடப்படும் போது தவில், பம்பை, உருமி எல்லாம் மிருதங்கம் போல் மென்மையாக வரும் என்று

முன்பே சொன்னேன் அல்லவா? இந்த கவிராயர் எஸ். பெருமாள் என்ற வரிகளை அந்தப் பெண் பாடும் போது மட்டும் எல்லாம் பயங்கரமாக உருமும். அடி பின்னி எடுத்துவிடுவார்கள். கேட்கும் பெருசுகளும் 'அப்படிப் போட்றா' என்று உற்சாகமாகக் கூவுவார்கள்.

தியாகராஜரும், தீட்சிதரும், சுவாதித் திருநாளும் தான் தாம் எழுதிய பாடல்களில் தம் பெயர் வருமாறு எழுதி முத்திரை பதிக்க வேண்டுமா என்ன? மதுரையின் வீதிகள் தோறும் கரகாட்டம் நடக்கும் இடங்களில் எல்லாம் பாடப்படும் பாடல்களை எழுதிய பெருமாள் கோனார் தன் முத்திரையைப் பதித்திருப்பது சரிதானே?

இப்படித் தெருத் தெருவாகச் சுற்றிவிட்டு, பாலுக் கோனார் வீடு திரும்புவோம். மாடுகள் நேராக தொழுவம் செல்லும் வகையில் கொல்லைப் புறக் கதவைத் திறந்து வைத்திருப்பார்கள். தொழுவத்தின் கதவின் நிலைப்படியில் உலக்கையைப் போட்டு அதன் மேல் வைக்கோலைப் போட்டு வைக்கோலில் கங்கைப் போட்டு புகைய விட்டிருப்பார்கள். மாட்டைப் பிடித்துக் கொண்டு நாம் நிற்க கோனார் வீட்டின் பெண்கள் ஆரத்தி எடுத்து நெற்றியில் வீரத் திலகம் இடுவார்கள். கோனாரின் மனைவி, மருமகள்கள், கல்யாணமாகாத மகள்கள் என்று ஒவ்வொருவராக எடுப்பார்கள்.

இன்று அதை நினைக்கும் போது, இது போன்ற மாட்டுப் பொங்கல் ஒன்றின் போது ஒரு நையாண்டி மேளக் கலைஞன் வாசித்த 'நெஞ்சினிலே.... நினைவு முகம்... ' பாடல்தான் மனதில் முட்டுகிறது. 'ஒருயிர் நின்று தவிக்கையிலே நீ ஓடி மறைந்தது நீதியில்லை....' என்று உச்சியில் கொண்டு போய் நிறுத்திவிட்டு, ஒரு மிகச் சின்ன இடைவெளி விட்டு, மிகவும் கீழிருந்து, 'நெஞ்சினிலே....ஏ... நினைவு முகம்...' என்று எடுத்து என்னைக் கண்கலங்க வைத்த அந்த முகம் தெரியாத நாயனக்காரரும் சேர்ந்து நினைவிற்கு வருகிறார்.

பாடல்களை எல்லாம் நினைவிலிருந்து எழுதியிருக்கிறேன்... தமிழ் இலக்கியம், இசை பற்றிய புரிதல்கள் ஏதுமற்ற அந்த இளம்

வயதில் மாட்டுப் பொங்கல்தான் எனக்கு இசையில் மேட்டுக்குடி இசை, எளிய மக்களின் இசை எல்லாம் ஒன்றுதான். எல்லாம் பொதுவான இசைதான் என்ற புரிதலையும், மேட்டுக்குடி இலக்கியத்திற்கு எந்தவகையிலும் வாய்மொழி இலக்கியம் குறைந்ததல்ல என்பதையும் புரிந்து கொள்ள வைத்தது.

நாற்பதாண்டுகளுக்கு முன் மதுரை மக்கள் எத்தனை எளிமையானவர்களாக, ஜாதி பெருமிதங்கள் அற்ற சாதாரண மனிதர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை இப்போது நினைத்துப் பார்க்க வியப்பாக இருக்கிறது. கலைகளையும் நல்ல நோக்கங்களுக்காகவே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது மற்றொரு வியப்பு. காலம் எல்லாவற்றையும் திருப்பிப் போட்டுவிடுகிறது.

இன்று இணையத்தில் கரகாட்டப் பாடல்கள் என்று தேடினால் ஆபாச நடனங்கள் தான் வருகின்றன. பெருமாள் கோனார் பாடல்கள் என்று போட்டால் வீரன் அழகு முத்துக் கோன் பற்றி... சாதிச் சங்கம் , அதன் பெருமை பேசும் பாடல்கள்... என்று தேடல் தரும் விடைகளைப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. அரிசன இளைஞனின் வீரத்தைப் பாடிய பெருமாள் கோனார், அதை விரும்பி விரும்பி நேயர் விருப்பமாகக் கேட்ட மதுரை மக்கள் இருந்த அந்தப் பொற்காலம்.... இப்போது மாட்டுப் பொங்கலன்று மணிக்குறவன் பாடல் பாடுகிறார்களா? இல்லை அழகுமுத்துக் கோன் பாடல்களா? மாட்டுப் பொங்கலன்று சோபாவில் உட்கார்ந்து தொலைக்காட்சியில் ஜல்லிக்கட்டு நேரலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, இந்தக் கேள்விகள் தான் மனதைக் குடைந்து கொண்டே இருக்கின்றன.

நன்றி : இந்து தமிழ் திசை 2022 - பொங்கல் மலர் இதழ்

# 31. ஆநிரைகள் ஆரோக்கியம் காக்கும் திருவிழா

— இரா. முத்துநாகு

பண்டிகைகள்தான் தனித்தனித் தீவுகளாய் இருக்கும் மனிதர்களை இணைக்கும் பாலங்கள். மனிதர்களுடன் கால்நடைகளையும் இணைக்கும் பண்டிகை என்றால் அது, பொங்கல் திருநாள் மட்டுமே. இதனால்தான், தங்களைக் காக்கும் கடவுளுக்கு விழா எடுத்துக் கொண்டாடுவதைப் போல தங்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் ஆடு, மாடுகளையும் கொண்டாடுகின்றனர்.

வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடித்து செம்மண் செஞ்சாந்து வண்ணமிடும் வழக்கம் சிமென்ட் பெயின்ட் வருகையால் நிறம் மாறிவிட்டாலும், கால்நடைகளை கொண்டாடுவதில் சமரசம் செய்துகொள்வதில்லை கிராமத்து எளிய மக்கள். இவர்களின் அந்தக் கொண்டாட்டத்தில் பல சுவாரஸ்யங்கள் இருக்கின்றன.

மலைகளில் தொழு அமைத்து மேய்ந்திடும் மாடுகளை தை மாதம் முதல் நாள் தங்கள் ஊரில் உள்ள தம்பிரான் கோயிலுக்கு ஓட்டி வருவதுடன் தொடங்குகிறது அந்தக் கொண்டாட்டம். அடுத்து, மாடுகள் அனைத்துக்கும் மூங்கில் இலை, வெள்ளைப் பூண்டு, சுக்கு நெருஞ்சி இலை, வெற்றிலை, மிளகு, கோழிமுட்டை தலைசுருளிவேர், உயிருடன் உள்ள கோழிக்குஞ்சு, யானை நெருஞ்சி, வேலமரத்துப்பட்டை மஞ்சள், பெருங்காயம் இவைகளை வேப்பெண்ணெய் ஊற்றி அரவை செய்து அதை உருண்டையாக திரட்டுகிறார்கள். இது கால்நடைகளுக்கான மருந்து உருண்டை மருந்து அரைப்பதை ஆணும் பெண்ணும் பாகுபாடின்றி செய்கின்றனர்.

உருண்டை திரட்டுதல் முடிந்ததும், அந்த மருந்து உருண்டைகளைத் தட்டில் வைத்து, தலையில் சுமந்தபடி

செங்கரும்பால் பந்தலிட்ட தம்பிரான் கோயில் வாசலுக்குச் சுமந்து வருகின்றனர் பெண்கள்,



பூசாரி மருந்து தட்டுகளை இறக்கி வைக்கவும், அனைவரும் மருந்து உருண்டைகளையும், தம்பிரான் கோயிலுக்குள் அடைத்து வைத்துள்ள மாடுகளையும் வணங்குகின்றனர்.

ஊர் பெரியவர்கள் சாமி கும்பிட்டு முடிக்கவும், சாமியை மீண்டும் வணங்கி மருந்து உருண்டைகளை எடுத்துக் கொடுக்கிறார் பூசாரி. காளைகளை வளர்ப்பவர்கள், அதை வாங்கி 'தம்பிரான் காளை' என்ற கோயில் காளையின் வாயில் திணிக்கிறார்கள். பின்னர் அனைத்து மாடுகளுக்கும் கொடுக்கிறார்கள். கன்றுகளுக்கு மருந்தினை தண்ணீர் ஊற்றிக் கலக்கி, கொட்டம் என்ற மூங்கில் தூம்பான பாத்திரத்தின் உதவியுடன் கடைவாயில் திணித்து ஊற்றுகின்றனர். மருந்து கொடுப்பதை யாரும் பார்க்கக்கூடாது என்பதால் திரைச்சீலையின் பின்தான் இது நடக்கும்.

இந்த நிகழ்வின்போது கோயில் முன்பாக வரிசையாக அமர்ந்துள்ள பெரியவர்கள் புல்லாங்குழல் இசைக்கின்றனர். இசைக்கு மாடுகளும் இசையும்தானே. மருந்து கொடுக்கும் போது திமிறும் மாடுகள், குழலிசை கேட்டதும் உருகி

அமைதியாகின்றன. இதன் பின்னர் தொழுமாடுகளுக்குச் சாம்பிராணி புகை காட்டும் பூசாரி, விபூதியை மாடுகள் மீது திணித்து, 'பிணி நீக்கட்டும்' என்று அருள்வாக்கு சொல்வதோடு நிறைவடைகிறது இந்தத் திருவிழா.



"விவசாய வேலைக்கான மாடுகளை மலை மாடுகளிலிருந்தே தை மாதப் பிறப்பன்று தேர்ந்தெடுக்கிறோம். அன்றைய தினம் ஈன்ற காளை கன்றுகளை தம்பிரான் காளைக்காக நேர்ந்து விடுவோம். ஆண்டுக்கு ஒருமுறை இந்த மருந்தைக் கொடுப்பது பாரம்பரியமாக தொடர்ந்து வருகிறது. இந்த மருந்தைக் கொடுப்பதால் மாடுகளுக்கு எந்த நோய்த் தாக்குதலும் வருவதில்லை. அதேபோல் மனிதர்களுக்கும் தம்பிரான் கோயில் முன்பாக கிண்டப்படும் மருந்துக்கழியை சாப்பிட்டால் நோய் வராது என்பது எங்களது நம்பிக்கை" என்கிறார் தேனி மாவட்டத்தில் இருக்கும் வீரச் சின்னம்மாள்புரம் ஊர்ப்பெரியவரான சீனிவாசன்.

உண்மைதான் என்பதுபோல் மணிகள் குலுங்கத் தலையசைக்கின்றன அருகில் நிற்கும் மாடுகள்.

# 32. ரேக்ளா: தொடரும் தமிழர் பாரம்பரியம்

— முனைவர் த.ஜான்சி பால்ராஜ்

தமிழர்களின் பண்பாட்டு விழாவான பொங்கல் பண்டிகையில் மகிழ்ச்சியை அதிகரித்துக் குதூகலமாக்குவதில் விளையாட்டுகளின் பங்களிப்பு மிக அதிகம். அதிலும் நம் பழந்தமிழரின் வீர விளையாட்டுகளுள் ஒன்றான மாட்டுவண்டிப் பந்தயம் (ரேக்ளா ரேஸ்) இன்றுவரை மக்களைப் பெரிதும் கவர்ந்துவருகிறது. பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன்பே இந்த மாட்டுவண்டிப் போட்டிகள் தமிழ்நாடு முழுவதிலும் ஆங்காங்கே நடத்தப்படுகின்றன. குறிப்பாக, மதுரையில் அவனியாபுரம், தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், திருநெல்வேலி மாவட்டத்தில் பணகுடியைச் சுற்றியுள்ள பகுதிகள், நாகர்கோவில் போன்ற இடங்களிலும் தொடர்ந்து நடைபெறுகிறது.

தஞ்சாவூர், திண்டுக்கல், தேனி, திருச்சி, கோயம்புத்தூர், சிவகங்கை, ராமநாதபுரம், ஈரோடு, கரூர் போன்ற இடங்களிலிருந்து மாட்டுவண்டிப் போட்டியாளர்கள் போட்டிகளில் கலந்துகொண்டு, தமிழ்ச் சமூகத்தின் தொன்றுதொட்டு வரும் கலாச்சாரத்தை இன்றும் வளர்த்துவருகின்றனர். இப்போட்டிகள் மிக அதிக அளவில் மாட்டுப் பொங்கலன்று நடைபெறுகின்றன.

மனித நாகரிக வளர்ச்சிக்கு அடிகோலிய எதேச்சையான, மிக முக்கியக் கண்டுபிடிப்புகளுள் மாட்டுவண்டியும் ஒன்று. பாரம் சுமப்பதற்கும் தூரம் கடப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட மாட்டுவண்டிகள், மக்களின் வேலைகளை எளிமையாக்கி நேரத்தை மிச்சப்படுத்தின. இதன் மூலம் மக்களின் வாழ்க்கை முறையில் சிறப்பான மாற்றங்கள் நிகழ்ந்தன.

நாட்கணக்கில் நடந்தே கடந்த பெருந்தொலைவுகளையும் எளிதில் கடக்க முடிந்ததோடு வணிகமும் தழைத்துச் சமூகப்

பொருளாதார நிலையும் மேம்பட்டது. இதனால், சமூகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்வுகளை மக்கள் அதிக அளவில் மேற்கொள்ளத் தொடங்கினார்கள். மக்களின் இந்நிலைக்குக் காரணமான மாட்டுவண்டியும் அதனை இயக்கப் பயன்படுத்திய மாடுகளும் சமூகத்தின் மிக முக்கிய அங்கமாகின.

செய்யும் தொழிலையே தெய்வமாகக் கருதும் தமிழர்கள், ஆண்டு முழுவதும் உழைக்கும் மாடுகளை அன்றாடப் பணிகளிலிருந்து விடுவித்துப் பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஈடுபடுத்தி மகிழ்ந்தனர். ஆரம்பத்தில் தங்கள் பயன்பாட்டுக்கு வைத்திருந்த மாட்டுவண்டிகளை விவசாய நிலப் பகுதிகளில் ஓடவிட்டு, முந்தி இலக்கை அடையும் வண்டிக்கு வெற்றிவாகை சூடி ஆரவாரித்தனர். மக்களுக்கு இதன்மீது ஏற்பட்ட அலாதிப் பிரியத்தால் தொடர்ந்து அடிக்கடி இப்போட்டியை நடத்தத் தொடங்கினர். குறிப்பாக, மக்கள் ஒன்றுகூடும் திருவிழாக்களில் போட்டிகள் நடத்தித் தங்கள் விழாக் கால மகிழ்ச்சியை அதிகப்படுத்திக்கொண்டனர். நாளடைவில் பொங்கல் மற்றும் கிராமப்புறப் பெண் தெய்வ வழிபாட்டு விழாக்களில் மாட்டுவண்டிப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட ஆரம்பித்தன. காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களோடு சிறப்பான முறைகளில் இப்போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. பொழுதுபோக்கு நிகழ்வுகள் அதிகம் இல்லாத அக்காலகட்டத்தில், இப்போட்டிகள் பெரும் எதிர்பார்ப்பையும் மகிழ்ச்சியையும் சமூகத்தில் ஏற்படுத்தின. இதனால், போட்டிகளுக்கென்றே வண்டிகள் வடிவமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட காளைகள் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன.

மாடுகளால் இலகுவாக இழுக்கத்தக்க விதத்தில் இரண்டு பேர் மட்டுமே அமரும்படியான வண்டிகள் உருவாக்கப்பட்டன. இரண்டு முதல் மூன்று வயது வரையிலான மாடுகளுக்கான சிறிய அளவிலான ஒற்றைப் போல் வண்டிகளும் நான்கு வயதுக்கு மேலான மாடுகள் இழுக்கத்தக்க பெரிய அளவிலான இரட்டைப் போல் வண்டிகளும் தயாரிக்கப்பட்டன. இத்தோடு பயணத்துக்குப் பயன்படுத்தப்படும் வில்வண்டிகளும் போட்டிகளில் பங்கேற்கின்றன. பந்தயங்கள் பெரும்பாலும் புறவழிச் சாலைப்

பகுதிகளில் வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினரின் அனுமதியுடனும் உதவியுடனும் நடைபெறுகின்றன.





பந்தய வண்டிகளை இழுத்துச் செல்லும் காளைகளாக நல்ல உடல் வலிமையும் கம்பீர தோற்றமும் உடைய காங்கேயம், ஒட்டங்காளை போன்ற நாட்டுமாடுகள் இளங்கன்றிலிருந்தே வளர்க்கப்படுகின்றன. இதற்கென்றே ஒன்றரை வயது முதல் இரண்டு வயதுக்குள் மாடுகளை வண்டியிழுக்கப் பழக்குவிக்கின்றனர். முதலில் குறைந்த எடையுடைய சிறிய வண்டிகளில் இளங்கன்றுகளை இணைத்துப் பழக்குகின்றனர். பின்னர், குறிப்பிட்ட தொலைவை அவற்றின் இயல்பான வேகத்தில் இழுத்துச்செல்லப் பயிற்றுவிக்கப்படுகின்றன. தொடர்ச்சியான பயிற்சிகளால் காளைகள் போட்டிகளுக்குத் தயாராகிவிடுகின்றன. காளைகள் பந்தய வண்டிகளை வேகமாக இழுத்துச் செல்லக் கட்டுக்கோப்பான உடலமைப்பும் ஆரோக்கியமும் இருப்பதற்காக போட்டி தொடங்குவதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே அவற்றின் உணவு முறைகளிலும் பயிற்சிகளிலும் அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.

பந்தயத்தில் ஈடுபடும் காளைகள் வயது மற்றும் அவற்றின் உயரத்தின் அடிப்படையில் பெரியவை, நடுத்தரம், கரிச்சான், பூஞ்சிட்டு மாடுகள் எனத் தரம்பிரிக்கப்பட்டுப் போட்டிக்கான தூரம் தீர்மானிக்கப்படுகிறது. பெரிய மாடுகளுக்கான தூர அளவு 15 அல்லது 16 கிமீ, நடுத்தர மாடுகளுக்கு 12 கிமீ, கரிச்சான் மாடுகளுக்கு 10 கிமீ, பூஞ்சிட்டு மாடுகளுக்கு 7 கிமீ என்று தூரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு பந்தய வண்டியிலும் இரண்டு பேர் பொறுப்பாளர்களாக அனுமதிக்கப்படுவார்கள். ஒருவர் வண்டியின் உரிமையாளர், மற்றொருவர் உதவியாளர். வண்டியை இலக்கை நோக்கி ஓட்டுபவராக வண்டியின் உரிமையாளர் அமர்ந்திருக்க, உதவியாளர் காளைகளைத் துரத்தியபடி ஓடுவார். இவ்விருவரது சாமர்த்தியமான உந்துதலே காளைகளின் வேகத்தை அதிகரிக்கச் செய்யும். ஏற்கெனவே பயிற்சியால் பழக்கப்பட்ட காளைகள் இவர்களின் மன ஓட்டத்தை உணர்ந்து, வேகமெடுத்து இலக்கை அடைவதில் தீவிரம் காட்டும்.

குறைந்த நேரத்தில் இலக்கை அடையும் வண்டிகள், வெற்றிபெற்ற வண்டி உரிமையாளர்கள், மாடுகளுக்குச் சிறப்புகளும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. மாட்டின் கொம்புகளில் வெற்றி சால்வைகள் சுற்றப்பட்டும் மாலைகள் அணிவிக்கப்பட்டும் அக்காளைகள் கௌரவிக்கப்படுகின்றன. வெற்றியை வண்டி உரிமையாளரின் ஊரார் அனைவருமே தங்களது வெற்றியாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்றான மாட்டு வண்டியின் பயன்பாடு குறைந்துவிட்டபோதிலும் தென்மாவட்டங்களில் ரேக்ளா ரேஸ் என்று அழைக்கப்படும் மாட்டுவண்டிப் பந்தயம் மக்களின் வரவேற்பை அதிகமாகவே பெற்றுவருகிறது.

நன்றி: இந்து நாளிதழ்

## 33. காணும் பொங்கலும், சிறு வீட்டுப் பொங்கலும் தமிழர் பண்பாட்டின் அடையாளமா ?

— முனைவர் வேகட்டலை கைலாசம்

”காணும்பொங்கல் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும், சிறுபெண்கள் கூடி மகிழ்ச்சியாக கொண்டாடும் விழாவாக சிறுவீட்டுப் பொங்கலும் உள்ளது”

"தமிழர்கள் கொண்டாடும் திருவிழாக்களில் தலை சிறந்ததாகவும், தனிச் சிறப்புடையதாகவும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா தை மாதம் முதல் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது" இயற்கை வளங்கள் நிறைந்த தமிழகப் பகுதிகளில் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்த தமிழர்கள் இயற்கையை வழிபடுவதையும், இயற்கைக்கு நன்றி செலுத்துவதையும் தம்முடைய பழக்க வழக்கமாகக் கொண்டிருந்தனர். அப்படியாக தமிழர்கள் இயற்கை தெய்வமான சூரியனுக்கும் மற்ற உயிர்களுக்கும் நன்றி தெரிவித்து "உழவுக்கு வந்தனை செய்வோம்" என்பதற்கிணங்க இயற்கையில் விளைந்த நெல், கரும்பு, வாழைக்காய், கனி, தானியங்களை இயற்கை தெய்வமான சூரியனுக்குப் படைத்து உழவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் பசு, கன்று காளைமாடு போன்ற உயிரினங்களையும் சிறப்பிக்கும் வகையில் அவற்றிற்கும் விழா எடுப்பதே இன்றுவரை தமிழர்களின் பண்பாடாக இருந்து வருகிறது.

இந்தப் பண்டிகையை மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல், சிறு வீட்டுப் பொங்கல், என தை மாதத்தில் அடுத்தடுத்து ஒவ்வொரு வகையில் தமிழர்களால் கொண்டாடப்படுவது ஏன்? இப்பொங்கல் ஆரம்பக் காலத்தில் எப்படிக் கொண்டாடப்பட்டது?

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்று பொங்கல் விழா, "பொங்கல்" என்பது கஞ்சி வடிக்காது சமைத்த அன்னம் என்பதாகும், பொங்குதல், செழிப்பின் வெளிப்பாடு, மிகுதியினால் வெளிவருவது, செந்நெற் பச்சரிசியைப் பெரும்பாலும் தவிடு போகாமல் சரியளவு நீர் வைத்துச் சமைத்து, பருப்புக் குழம்புடன் உண்பது பொங்கல் மரபு, "பருப்புக் கேட்கும் பச்சரிசிச் சோறு, செருப்புக் கேட்கும் சித்திரை மாத வெயிலில் " என்பது பழமொழி..

தை மாதம் முதல்நாள் தமிழர்களால் பொங்கல் விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது, சூரியன் தன் வான்வழிப் பயணத்தில் மகர ராசிக்கு மாறும் நாள் மகரசங்கராந்தி எனப்படுகிறது, பிற மாநிலத்தவர் சூரிய வழிபாட்டு நாளை மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடுகின்றனர், தமிழர்கள் பொங்கல் விழாவாக கொண்டாடி வருகின்றனர், சிலப்பதிகாரம் திங்களையும், ஞாயிறையும், மாமழையையும் போற்றி வணங்கித் தொடங்குகின்றது.

தமிழர் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டு வரும் மரபினர், தை மாதத்தைச் சிறப்பாக கொண்டாடி வந்த தமிழரின் இலக்கியங்கள் 'தைஇத் திங்கள் தண் கயம் படியும் பெருந் தோட் குறுமகள்' (நற்றிணை - 80) என்று நற்றிணையிலும், 'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' (குறுந்தொகை-196) என்று குறுந்தொகையிலும், 'தைஇத் திங்கள் தண்கயம் போல' (புறநானூறு -70, ஐங்குறுநூறு-84)' என்று புறநானூற்றிலும், ஐங்குறுநூற்றிலும் பதிவு செய்துள்ளன, 'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' (கலித்தொகை-59) எனக் கலித் தொகையும் கூறுகிறது.

தமிழர் கொண்டாடும் பொங்கல் விழாவினை ஐந்து நிலைகளில் காண முடிகிறது, மார்கழி இறுதிநாள் போகி என்று கூறி பழையன கழிந்து புதியன புகுத்துகின்றனர், தை மாதம் முதல் நாளன்று தைப் பொங்கல் விழா, இதனையடுத்து உழவுக்குத் துணைநின்ற மாடுகளுக்கு நன்றி செலுத்த மாட்டுப்பொங்கல் என்றும், அதற்கு அடுத்த நாள் பெரியவர்களைக் கண்டு ஆசிபெற்று வருவதைக் காணும் பொங்கல் என்றும் கூறுகின்றனர். சிறு பெண்கள் சிறிய வீடு அமைத்துப் பொங்கலிடும் சிறு வீட்டுப் பொங்கல்

பெரும்பாலும் பூச நட்சத்தரத்தன்று கொண்டாடுவது வழக்கம், தை மாதத்தின் வேறு நாட்களிலும் தென்மாவட்டத்தில் குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறுவீட்டுப் பொங்கல் கொண்டாடி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

**காணும் பொங்கல்:**
உற்றார், உறவினர்கள் நண்பர்கள் எனப் பலரையும் கண்டு மகிழ்வது "காணும் பொங்கல்". இந்தநாளில் வயதில் முதியவர்களை வணங்கி அருள் பெறுவது வழக்கம், உழைப்பாளிகள் கலைஞர்கள் எனப் பலரும் நன்றி தெரிவிக்கும் நோக்கில் தமக்கு உதவியவர்களைக் கண்டு வருவர், அவர்களும் அன்பையும் பரிசையும் வழங்கி வாழ்த்துவர், குறிப்பாக இது பொங்கல் படி கொடுத்தல் என்றே கூறப்படுகிறது,

கிராமங்களில் நாதசுர வித்துவான் போன்ற பல கலைஞர்களும், ஊரின் பொது வேலைகளைச் செய்வோர்களான லாந்தர் விளக்கு (மின்சாரம் வரும் முன் இருந்த கல்தூண் விளக்கு) ஏற்றுவோர், தெருக்களைச் சுத்தம் செய்வோர், மந்தை மேய்ப்போர் (ஊரின் மாடுகளை மேய்ப்போர்), நாட்டார் தெய்வப் பூசாரிகள், ஊர்களில் துணி வெளுப்போர், முடி திருத்துவோர் எனப் பல தொழிலாளர்கள் ஊராரிடம் பொங்கப்படி பெறுவது வழக்கமாக இருந்தது. காணும் பொங்கல் என்பது தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக இருந்துள்ளது, ஊரின் அருகில் உள்ள நீர்நிலைகள், மலைப்பகுதிகளுக்குப் பொங்கல் சோற்றினை எடுத்துக்கொண்டு குடும்பத்தோடும், நண்பர்களோடும் உண்டு மகிழ்வர் என்று கூறினார்.

**சிறுவீட்டுப் பொங்கல்:**
சங்க இலக்கியத்தில் சிறுவயதுப் பெண்கள் சிற்றில் கட்டி விளையாடுவதை 'பொய்தல்' 'வண்டல்' 'சிறுமனை' என்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இன்றும் சிறு வயது உடைய அனைவரும் ஆற்றங்கரையில், கடற்கரையில் சிற்றில் கட்டி விளையாடுவதைக் காணலாம், சிறுமிகள் சிறுவீடு கட்டுவது என்பது சிறப்பான நிகழ்வு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் இதனைக் காணலாம், "சிறுமனைப் புணர்ந்த

நட்பே தோழி" என்று குறுந்தொகை கூறும் பாடலில் கடற்கரையில் சிறு வீடுகட்டி விளையாடிய போது தலைவனோடு ஏற்பட்ட நட்பு என்பாள் தலைவி, ஆண்டாள் நாச்சியார் சிற்றிலைக் கண்ணன் "கண்ணன் உடைக்கும் படர் ஓசையை வெள்ளை நுண் மணல் கண்டு சிற்றில் விசித்திருப்ப வீதிவாய் ......" என்பர்.

பெரியாழ்வார் பாடலில் "சிற்றில் சிதைத்து எங்கும் தீமை செய்து திரியாமே" என திவ்யபிரபந்தத்தில் கண்ணனின் விளையாட்டினைப் புனைந்துள்ளார். தமிழில் பிள்ளைத் தமிழ் இலக்கியம் தோன்றிய போது பெண்பால் பிள்ளைத்தமிழில் "சிற்றில்" என்ற தலைப்பில் பத்துப் பாடல்கள் பாடப்பட்டுள்ளது. அதாவது தமிழ் மரபில் பெண்கள் சிறுவீடு கட்டி விளையாடுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றும் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சிறுவீடு கட்டி சிறுவீட்டுப் பொங்கல் விடுவதைக் காண முடிகிறது, மார்கழி மாதத் தொடக்கத்தில் இருந்தே பெண் பிள்ளைகள் வீட்டின் முன்னர் கோலமிட்டு சாணிப் பிள்ளையார் வைப்பர். அப்பிள்ளையாருக்கு பூசணி பூ வைப்பது வழக்கம். தை மாதப் பொங்கலுக்குப் பின்னர் வரும் பூச நட்சத்திரத்தில் பொதுவாக சிறு வீட்டுப் பொங்கல் விடுவர். தங்களுக்கு உகந்த நாட்களையும் தேர்ந்தெடுப்பர்.



வீட்டின் முற்றத்தில் குறுமணலால் சுவர் போல் கட்டி சிறு வீடு அமைப்பர். சிலர் காவியைக் கொண்டு சிறு வீட்டினை வரைவர். சிறுவீட்டுப் பொங்கல் அன்று பெண் பிள்ளைகள் பட்டாடை அணிந்து பொங்கல் விழா போலவே பொங்கலிட்டு மகிழ்வர். வீட்டின் முன்னர் தொடர்ந்து வைத்து வந்த சாணிப் பிள்ளையாரை எருவாகத் தட்டி வைத்திருப்பர். சிறு வீட்டுப் பொங்கலன்று அவற்றை எடுத்துச் சென்று ஆற்றில் கரைத்து விடுவ. சிறு பெண்கள் கூடி மகிழ்ச்சியாக கொண்டாடும் ஒரு விழாவாக சிறு வீட்டுப் பொங்கல் உள்ளது எனத் தமிழர்களின் பண்பாட்டில் பொங்கல் விழா இவ்வாறாகவே கொண்டாடப்பட்டு வந்ததாக தெரிவித்தார்.

இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், இயற்கை நமக்களித்த செழிப்பினை கொண்டாடும் வகையிலும், அமைந்திருக்க வேண்டிய பொங்கல் கொண்டாட்டங்களை எரிவளி அடுப்பிலும், மின்சார அடுப்பிலும் புகையில்லா பொங்கல் என்று அடுப்பங்கரையிலேயே நவீன பொங்கலிட்டு தமிழர் திருநாளைக் கொண்டாடும் மக்களும் நம் மத்தியில் இன்றும் இருக்கிறார்கள். காலத்திற்கு ஏற்ப கலாச்சாரத்தை மக்கள் மாற்றினாலும், எந்தக் காலத்திலும் கலாச்சாரமும், அதன் அடிப்படையும் மாறாத ஒன்று.. அதற்கு அடையாளம் நம்முடைய தமிழ் இலக்கியங்களும், சுவடுகளுமே, மேலும் அவற்றைத் தம்முடைய தலையில் வைத்துத் தாங்கி நிற்கும் தமிழ்ச் சான்றோர்களுமே. இவ்வாறு தமிழர் பண்பாட்டின் அடையாளமாக நம் மத்தியில் நம்முடைய பல்வேறு செயல்பாடுகள் இருந்துகொண்டே இருக்கிறது நம்மையும் அறியாமலே!!!!!!!

முனைவர் வே. கட்டளை கைலாசம்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
ம.தி.தா.இந்துக் கல்லூரி

# 34. தமிழ் முஸ்லிம்களின் பொங்கல் கொண்டாட்டம்

— கோம்பை அன்வர்

நீங்களும் - அதாவது முஸ்லிம்களும் - பொங்கல் கொண்டாடுவீர்களா? என்று சந்தேகமும் ஆச்சர்யமும் கலந்த பல நண்பர்களின் கேள்விகள், எனக்கோ அல்லது என் குடும்பத்தினருக்கோ புதிதல்ல. ஒன்றல்ல, இரண்டல்ல; 16 வகைக் காய்கறிகளுடன் காலகாலமாகப் பொங்கலைக் கொண்டாடிவரும் எங்களுக்கு இது போன்ற கேள்வி வேடிக்கையாக இருக்கும் என்றால் மிகையாகாது. இருப்பினும் இந்தக் கேள்விக்குப் பல காரணங்கள் உள்ளதை மறுக்க முடியாது. அவற்றில் மிக முக்கியமானது இஸ்லாம் மற்றும் தமிழக இஸ்லாமியர் குறித்த தட்டையான புரிதல் ஆகும். இஸ்லாம் குறித்த தட்டையான புரிதலுக்கு பல இஸ்லாமியர்களும் விலக்கல்ல. அதுபோலவே இந்து - முஸ்லிம் வரையறைகளைக் கடந்த தமிழ்ப் பண்பு ஒன்று பொங்கலுக்கு உண்டு என்பதை இந்துக்களிலும் பலர் அறிந்திருப்பதில்லை.

**தமிழ் முஸ்லிம்கள் வரலாறு:**

டெல்லி சுல்தான்களையும் முகலாயரையும் வைத்துப் பெரும்பாலும் கட்டமைக்கப்பட்ட இந்திய வரலாற்றில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் இஸ்லாமியச் சமூகம் தமிழகம், இலங்கை மற்றும் தென் கிழக்கு ஆசியா வரை பரவிக் கிடப்பதும், அது தனக்கென்று பல தனித்துவக் கூறுகளைக் கொண்டிருப்பதும் பலருக்கும் தெரியாது. சங்க காலம் தொட்டே தமிழகத்திற்கும் அரேபியா உட்பட்ட மேற்கு ஆசியாவிற்கும் இடையே கடல்வழி வணிகத் தொடர்புகள் இருந்ததைப் பல சங்கப் பாடல்களும், சமீபத்திய அகழ்வாராய்ச்சிகளும் நமக்கு உறுதிப்படுத்துகின்றன. அரேபியப் பாலைவனத்தில் 7ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் பரவத் தொடங்கிய சமகாலத்திலேயே அது வணிகர்கள் மூலமாக தமிழகத்தை வந்தடைந்தது. இங்கு நிலவிய சமூகச் சூழல், இறைநேசர்கள் எனப்படும் சூபிக்களின்

பரப்புரை மற்றும் தமிழக அரசர்களின் ஆதரவுடன் இஸ்லாம் தமிழகத்தில் வேரூன்றியது. இதற்குக் கிட்டத்தட்ட 500 வருஷங்களுக்குப் பிறகே வட இந்தியாவில் இஸ்லாம் ஒரு வலுவான மதமாகப் பரவியது என்ற தகவல் இங்கே முக்கியமானது. அதிலும், அங்கே போர்கள், படையெடுப்புகள் இதில் முக்கியப் பங்கு ஆற்றின. இங்கே வாணிப ரீதியிலான உறவு மிக இணக்கமான ஓர் உறவை உருவாக்கியிருந்தது. திராவிடக் கட்டிடக் கலையில் கட்டப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழமையான பள்ளிவாசல்கள், பிற சமயங்களுக்கு இணையாக தமிழ் இலக்கியத்திற்கு இஸ்லாமியரின் பங்களிப்பு, சிலம்பம் என்று தமிழ் மண்ணோடு இஸ்லாம் ஐக்கியமானது. பன்மைத்துவம் இறைவாக்காக திருக்குரானில் (சூரத்துல் ஹுஜுராத் 49.13) அமைந்திருக்கையில், இது இயல்பானதுதான். ஆகவே, தமிழர் திருநாளான பொங்கலையும் தமிழ் முஸ்லிம்கள் இஸ்லாமிய நெறிகளுக்கு உட்பட்டு கொண்டாடிவருகின்றனர்.

**ஊருக்கேற்பக் கொண்டாட்டம்:**

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். தமிழகம் முழுக்கப் பிராந்தியத்திற்கும், சாதிக்கும் ஏற்ப சின்னச் சின்ன வேறுபாடுகளுடனேயே பொங்கல் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மற்றும் சைவ பிள்ளைமார் சமூகத்தினர் சங்கு ஊதி பொங்கலைக் கொண்டாடுவார்கள். இதுபோலவே விவசாயத்தைச் சார்ந்து வாழும் தமிழ் இஸ்லாமியரிடையே பொங்கல் கொண்டாட்டங்கள் பிராந்தியத்திற்கு ஏற்றவாறு மாறும். தேனி மாவட்டத்தில் உள்ள எங்கள் வீட்டில் சர்க்கரைப் பொங்கலுடன் ஆரம்பிக்கும் திருநாள் மதிய விருந்தில் 16 வகைக் காய்கறிகளுடன் களை கட்டும். அன்று மட்டும் கவிச்சி கிடையாது. பரிமாறப்படும் பெரும்பாலான காய்கறிகள் வயலிலிருந்து வந்தவையாக இருக்கும். மாட்டுப் பொங்கல் அன்று பண்ணை மாடுகள் குளிப்பாட்டி அலங்கரித்து, கொம்புக்கு வர்ணம் பூசி ஊரை வலம் வரும். மதுரை மேலூர் அருகே உள்ள நாவினிப்பட்டி கிராமத்தில் பொங்கல் கொண்டாட்டத்தில் பரம்பரை பரம்பரையாக, பங்காளிகளாக, மஞ்சு விரட்டு இன்றும்

பங்கேற்கும் முஸ்லிம் குடும்பங்களும் (நாலு வீட்டுக்காரங்க குடும்பம்) உண்டு.



ஆழ்வார்த்திருநகரியில் தமிழ் முஸ்லிம்கள் பொங்கல் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியான சிலம்பாட்டம்

சுமார் 50/60 ஆண்டுகளுக்கு முன் மேலத்தஞ்சை - கீழத்தஞ்சை என அழைக்கப்பட்ட ஒன்றிணைந்த தஞ்சை மாவட்டத்தின் கீழ்ப்பகுதியின் பெரும்பாலான கிராமங்கள் முஸ்லிம் மிராசுதாரர்களைக் கொண்டது. மிராசுதாரர்கள் என்பவர்கள் நிலச்சுவான்தார்கள், இவர்களின் வாழ்வாதாரமே விவசாயம். “பொங்கல் வருவதற்கு முன்பே, வயலிலிருந்து ஒரு மூட்டை நெல் மட்டும் அறுவடைசெய்து மிராசுதார் வீட்டுக்கு வரும். மூட்டையுடன் ஒரு பெரிய கட்டு அடிக்கப்படாத நெற்கதிர்கள் வரும். சிட்டுக்குருவிகள் சாப்பிடுவதற்காக நெற்கதிர்களை முற்றத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுவார்கள். நெல்லை அவித்துக் காயவைத்து தை முதல் நாள் சமைப்பதற்கு ஏதுவாக கைக்குத்தல் அரிசியாக மாற்றி, தை முதல் நாள் அதாவது பொங்கலன்று அதை சமைத்து விருந்துண்டு

கொண்டாடுவார்கள். இந்தக் கொண்டாட்டத்துக்கு ‘புது அரிசிச் சோறு விருந்து’ என்று பெயர். அக்கம் பக்கம் வீட்டார்களையும் உறவினர்களையும் அழைத்து இந்த விருந்தோம்பல் நடக்கும். கிட்டத்தட்ட கூட்டாஞ்சோறுபோலத்தான் இதுவும். இதுதான் தஞ்சை ராவுத்தர் வீட்டுப் பொங்கல்” என்று நினைவுகூர்கிறார் கூத்தாநல்லூரைச் சார்ந்தவரும், ‘முஸ்லிம் முரசு’ இதழின் முன்னாள் ஆசிரியருமான சடையன் அமானுல்லா.

“ராவுத்தர் வீட்டுப் பொங்கல் என்றால், கவிச்சி இல்லாமலா? ஆகையால், புது அரிசிச் சோறு விருந்துக்கு இறைச்சி ஆணமோ அல்லது தால்ச்சாவோ சமைத்துப் பரிமாறுவார்கள். அனைத்து மிராசுதாரர்களின் வீட்டிலும் புது அரிசிச் சோறு விருந்து ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தாலும், ஒரே நாளில் விருந்து வைத்தால் யாரும் சாப்பிட வர மாட்டார்கள் என்பதால், முதல் மூன்று நாட்களோ அல்லது ஏழு நாட்களோ தங்களுக்குள் கிழமையைப் பிரித்துக்கொண்டு விருந்துபசாரம் நடக்கும். வீட்டில் விருந்து நடப்பதற்கு முன்னால் அந்த முஹல்லாவில் இருக்கும் பள்ளிவாசல் இமாமிற்கும் மோதியாருக்கும் மற்ற பள்ளிவாசல்களின் ஊழியர்களுக்கும் மறக்காமல் தூக்குச் சட்டியில் சாப்பாடு அனுப்பிவைப்பார்கள். இதுதான் தஞ்சை முஸ்லிம்கள் கொண்டாடும் பொங்கல்” என்று அடுக்குகிறார் சடையன் அமானுல்லா.

**மாட்டுப் பொங்கலும் உண்டு:**

“அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் நாளன்று, மிராசுதார் வீட்டு உழவு மாடு, கறவை மாடு வில் வண்டி இழுக்கும் மாடுகள் அனைத்தும் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, மதுரை - தேனி மாவட்ட முஸ்லிம்களைப் போல் மாடுகளைக் குளிப்பாட்டி வண்ணச் சாயங்கள் பூசி, நெட்டியால் (pith) செய்யப்பட்ட மாலைகளைக் கழுத்து, கால், நெற்றி என அணிவித்து, மாட்டுக்குப் பொங்கல், வாழைப்பழம், கரும்பு கொடுத்து சுதந்திரமாக விட்டுவிடுவார்கள். சிறுவர்கள் மாடுகளை ஊர்வலமாக அழைத்துச் சென்று, வீட்டுக்கு வீடு மாட்டுக்காகக் கொடுக்கப்படும் வாழைப்பழம், கரும்பு, அகத்திக் கீரைகளை வாங்கி மாடுகளுக்குக் கொடுப்போம். அது ஒரு காலம்” என்கிறார் சடையன் அமானுல்லா. மிராசுதாரர்களோ

இல்லையோ, குமரி மாவட்ட முஸ்லிம்களிடம் 'புது அரிசிச் சோறு விருந்து' போன்றவை புழக்கத்தில் இருந்துள்ளன.



நாவினிப்பட்டி முஸ்லிம்கள் கொண்டாட்டம்

கிழக்கு ராமநாதபுரம் வட்டார முஸ்லிம்களின் பொங்கல் கொண்டாட்டங்கள் சற்றே மாறுபடுகின்றன. "விளைந்தது வீட்டிற்கு வருவதை வரவேற்க போகி நாளில் வீட்டைக் கழுவிச் சுத்தம்செய்து வைப்பார்கள். தை முதல் நாளன்று புது நெல்லை குத்தி அரிசியாக்கி அதைப் பொங்கல் வைப்பர். இதன் பெயர் பாச்சோறு. புத்தரிசியை உரலில் இடித்து, துள்ளும் பக்குவம் வந்தவுடன் அத்தோடு கருப்பட்டி அல்லது வெல்லம் கலந்து அதைக் கொழுக்கட்டைபோல் பிடித்து வைப்பர். இதன் பெயர் துள்ளுமாவு. பாச்சோற்றுடன் துள்ளுமாவு வைத்து ஏழு அல்லது பதினோரு கண்ணி வைத்துக் கட்டப்பட்ட மரிக்கொழுந்தையும் வைத்து இறைவனுக்கு நன்றி சொல்லி பிரார்த்தித்துவிட்டு அதனை அனைவருக்கும் பகிர்ந்துண்ணக் கொடுப்பர்.

வீட்டில் நெல்லைச் சேமித்து வைக்கும் மரசலின் நான்கு மூலைகளிலும் சிறிது பாலை ஊற்றி ஊதுபத்தி கொளுத்தி வைத்து இறைவனிடம் வேண்டியபின் புது நெல்லைக் கொட்டி சேமித்து வைப்பர். வீட்டில் மாடு கன்று வைத்திருப்போர் அவற்றைக் குளிப்பாட்டி செந்துருக்கப் பொட்டு வைத்து கொம்பிற்கு வர்ணம் பூசி, படைத்த பாச்சோற்றில் அதற்கான

பங்கையும் வாழை இலையில் வைத்துக் கொடுத்து மகிழ்வர்" என்கிறார் முதுகுளத்தூரைப் பூர்விகமாக கொண்ட வரலாற்று ஆய்வாளர் ஜாகிர் ஹுசைன். இது போன்று ஊர் ஊருக்கு, சிறு மாற்றங்களுடன் விவசாயத்தோடு ஒன்றிப்போன தமிழ் முஸ்லிம் சமுதாயம் பொங்கலை இஸ்லாமிய நெறிக்குள் கொண்டாடிவருகின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கடல் கடந்து தென் கிழக்கு ஆசியாவில் வணிகம் செய்தவர்கள் தமிழ் முஸ்லிம்கள். இப்படி வெளிநாடு சென்ற இடத்திலும் கொண்டாட்டம் தொடரும். மலேசியாவின் ஈப்போ நகரில் உள்ள தமிழ் முஸ்லிம் சமுதாயம் பொங்கலைக் கொண்டாடிவருகின்றனர்.

**மலேசியத் தமிழ் முஸ்லிம்கள் கொண்டாட்டம்:**




இவ்வாறு பரவலாக தமிழ் முஸ்லிம்கள் பொங்கல் கொண்டாடினாலும் இதிலிருந்து மாறுபட்டவர்களும் உண்டு. கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, தட்டையான புரிதலுடன், அரபுக் கலாச்சாரத்தை இஸ்லாமிய வழிமுறைகளாக குழப்பிக்கொள்ளும் இயக்கவாதிகளின் பிரச்சாரத்தால் இத்தகு கொண்டாட்டங்கள் அந்தந்த வீட்டோடு முடங்கியதும் உண்டு. ஆனால், காலம் மாறுகிறது. திராவிட இயக்கமும், தமிழக அரசும் அதனை மதம் கடந்த தமிழர்த் திருவிழாவாக முன்னிறுத்துவதும் இந்த மாற்றத்திற்கான முக்கியமான காரணம் ஆகும்.

வரலாற்று ஆய்வாளர் ஜாஹிர் ஹுசைன் கூற்றுப்படி, “மார்க்கத்தை ஏற்ற பின்னே எங்களுக்குக் கிடைத்தவைதான் நோன்புப் பெருநாளும் தியாகத் திருநாளும். அதற்கும் மூத்த எங்களின் பண்பாட்டுத் திருநாள் பொங்கல் என்பதை நாம் மறந்துவிட முடியாது. பொங்கல் தமிழர்கள் நம் அனைவருக்குமான திருநாள். எங்களின் பண்பாட்டு வேர்களை எதன் பெயராலும் பட்டுப்போகச்செய்ய முடியாது.” அரசியல் சூழலில் ஏற்படும் மாற்றங்களும் பண்பாட்டுத் தளத்தில் மாற்றங்களைக் கோருகின்றன. முன்னெப்போதையும்விட பொதுச் சமூகத்துடன் பிணைந்து நிற்பதை விரும்பும் முஸ்லிம் சமூகம் தனக்கான பண்பாட்டு வேர்களை மீண்டும் தேடிப் பிடிக்கிறது. மதரீதியிலான பிளவுகளைப் பரப்பப்படும் அரசியலுக்கு மொழிரீதியிலான ஒற்றுமை மூலம் அது பதில் கொடுக்கிறது. தமிழ்ப் பொங்கல் இனி கூடுதலாகத் தித்திக்கும்!

படங்கள் :
முகம்மது காசிம், ஜாஹிர் ஹுசைன் திவான், புர்ஹான் முகம்மது, கோம்பை அன்வர்

## 35. பொங்கலோ பொங்கல்!!!

— முனைவர் செங்கை. பொதுவன்

பொங்கல் தமிழர் வீடுகளில் கொண்டாடப்படும் ஒரு திருநாள். தை மாதம் முதல் நாளில் வீடுகளில் இது கொண்டாடப்படுகிறது. இதற்கு முதல்நாள் போகி. இந்த நாளில் பொங்கல் கொண்டாட்டத்திற்குக் காப்பு கட்டுவர். வீட்டு வாயிலிலும், வயல்களின் சனி மூலையிலும் (வடகிழக்கு) காப்பு கட்டுவர். பூலாப்பூ, ஆவாரம்பூ, பாலைத்தழை மூன்றையும் சேர்த்துச் செருகுவது காப்பு கட்டுதல் எனப்படும்.



சென்னை பழவந்தாங்கலில் குடியேறியபோது இங்குள்ள சிறுவர்கள் போகிநாள் அதிகாலையில் சிறுபறை முழக்கிக்கொண்டு தெருத்தெருவாகச் செல்வதையும், பழைய பொருள்களைத் தீயிலிட்டுக் கொளுத்துவதையும் 1970-களில் பார்த்தேன்.

உழவர் கொண்டாட்டத்தில் தை முதல்நாள் கொண்டாடப்படுவது வாசல்-பொங்கல். வட இந்தியாவில் இதனைச் சங்கராந்தி என்று கூறுவர். சங்கரன் என்பவன் சிவன். உழவர் வாசல் பொங்கலைச் சூரியனுக்குப் படைப்பர். இரண்டாம் நாள் மாட்டுப்பொங்கல். ஆடு மாடு வைத்திருப்போர் அன்று வைக்கும் பொங்கலைத் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு ஊட்டி மகிழ்வர்.

பொங்கல் வீட்டில் புதிய பானையில் புத்தரிசி போட்டுச் சமைக்கப்படும் பால்சோறு. சருக்கரைப் பொங்கலும் வைக்கப்படும், பொங்கலை முதலில் சாமிக்குப் படைப்பர். சாமியை அவரவர், அவரவர் வீடுகளில் செய்துகொள்வர். மாட்டுச் சாணத்தையும், குழைத்த மஞ்சளையும் லிங்கம் போலப் பிடித்து அதன் தலையில் அருகம்புல்லைச் செருகிப் பிள்ளையார் சாமி என்று வைத்துக்கொள்வர். அவரவர் வீட்டில் அவரவர் செய்த சாமிக்குப் படைப்பதே பொங்கல் திருநாள் படையல். இதனை ஊரே கொண்டாடும்.

வாசல் பொங்கல் காலையில் கொண்டாடப்படும். மாட்டுப்பொங்கல் மாலையில் கொண்டாடப்படும். கார்த்திகை விளக்குத் திருநாளைச் சங்கப்பாடல் குறிப்பிடுகிறது. பொங்கல் பற்றி அடியேன் அறிந்த வரையில் பிற இலக்கியங்களிலும் குறிப்பு இல்லை. திருமுருகாற்றுப்படை குறிப்பிடும் ஆறு படைவீடுகளில் ஒன்று குன்றதோறாடல். ஊர் மக்களோடு கை கோத்துக்கொண்டு முருகன் குரவை ஆடுவது குன்றதோறாடல். இதனைக் குன்றக் குரவை என்று சிலப்பதிகாரம் பாடுகிறது. முருகாற்றுப்படுத்தல் என்னும் வெறி விழா ஏதாவது ஒரு வீட்டில் நிகழும். இவற்றைப் பொங்கல் விழாவோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வது நல்லது.

மாட்டுப்பொங்கலன்று மாடுகளுக்குக் கொண்டாட்டம். மாடுகளைக் குளிப்பாட்டிப் பொட்டு வைத்துக் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, மணி கட்டி, சல்லி என்னும் மாலை கட்டி, அழகுபடுத்தி, பொங்கலைப் படைப்பர். பூலாப்பூ, ஆவாரம்பூ, பாலைத்தழை, மஞ்சள் கொத்து, மூங்கில் தழை ஆகியவை அடுத்தடுத்து வருமாறு கட்டிய மாலையைச் சல்லி என்பர். இது மாடுகளின் கழுத்தில் கட்டப்படும்.



சமைக்கும்போது சோறு பொங்கி வரும்போதும், மாடுகளுக்கு ஊட்டும்போதும் "பொங்கலோ பொங்கல்" என்று பலரும் சேர்ந்து முழங்குவர். இந்த ஒலி மாட்டுப்பொங்கல் நாளில் மாலை 5 மணி முதல் 7 மணி வரையில் இடையறாமல் கேட்டுக்கொண்டே இருக்கும். இவை 1950-களில் என் ஊர் செங்காட்டுப்பட்டியில் நான் கொண்டாடி மகிழ்ந்த பேறு. மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளை உழவர் கரிநாள் என்பர். இது வேடிக்கை பார்க்கும் திருநாள். தமிழ்நாடு அரசு இதற்குத் திருவள்ளுவர் நாள் என்று பெயர் சூட்டியுள்ளது.

**பொங்கலோ பொங்கல்!!!!**

முனைவர். செங்கை பொதுவன் M.A., M.Ed., Ph.D.
தமிழ்த்துளி:  https://vaiyan.blogspot.com/

## 36. பொங்கலுக்கு சிறப்பான தனித்துவம் உண்டு

— தொ. பரமசிவன்

தமிழகத்தில் கொண்டாடப்படும் வேறு எந்தப் பண்டிகையையும் விட பொங்கலுக்கு சிறப்பான தனித்துவம் உண்டு. இரண்டு அம்சங்களில் பொங்கல் மற்ற பண்டிகைகளில் இருந்து வேறுபடுகிறது. முதலாவதாக இது ஒரு தேசிய இன திருவிழா. சாதி, சமயங்களுக்குள் மற்ற பண்டிகைகள் சிறைப்பட்டுக் கிடக்க பொங்கல் மட்டும் ஓர் இன திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இரண்டாவதாக பொங்கல் என்பது தீட்டு அணுகாத திருவிழா. பொங்கலுக்கு பிறப்பு இறப்பு தீட்டுக்கள் கிடையாது. ஒரு வேளை பொங்கலன்று காலையில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்தாலும் மிக விரைவாகச் சடங்குகளை முடித்துவிட்டு வீட்டைப் பூசி மெழுகிப் பொங்கல் கொண்டாடும் பழக்கம் இன்றும் நெல்லை மாவட்டத்தில் உள்ளது.


சேனை, சேம்பு, கருணை, சிறுகிழங்கு, பனங்கிழங்கு ஆகிய மண்ணுக்கு அடியில் விளையக்கூடிய கிழங்கு வகைகள் பொங்கலுக்கு படைக்கப்படுபவை. இவை உயர் சாதியினர் என சொல்லப்படுபவர்கள் விலக்கப்பட்டவை. இன்றும் இவை பெரும் கோயில்களில் பயன்படுத்தப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதுவே பொங்கல் எளிய மக்களின் இனிய கொண்டாட்டம் என்பதற்குச் சாட்சி.

தைப்பொங்கலை அடுத்து தென்மாவட்டங்களில் கொண்டாடப்படும் திருவிழா "சிறுவீட்டுப் பொங்கல்". மார்கழி மாதம் 30 நாட்களும் அதிகாலையில் வாசல் தெளித்துக் கோலமிட்டு சாணத்தில் பூ சொருகி வைக்கும் பழக்கம் உண்டு. பீர்க்கு, பூசணி, செம்பருத்தி ஆகிய பூக்களே சாணத்தில் செருகப்படும். மாலையில் வாடிவிடும் இந்த பூக்களைச் சாணத்துடன் சேர்த்துக் காய வைத்து விடுவார்கள். பொங்கல் முடிந்து 8 - 15 நாட்கள் கழித்து சிறு வீட்டுப் பொங்கல்

கொண்டாடப்படும். பெண் பிள்ளைகளுக்காகவே வீட்டுக்குள் களி மண்ணால் ஆன சிறு வீடு கட்டப்படும். பொங்கல் அன்று சிறுவீட்டு வாசலில் பொங்கலிடப்படும். பிறகு பொங்கலையும் பூக்களால் ஆன எழுத்துகளையும் பெண்கள் ஆற்றில் விடுவர்.




From: Castes and Tribes of Southern India. Vol. 6 of 7: Author: Edgar Thurston. 1909. Pongal ceremonies




நன்றி: Ramu Ramanathan Lkn (https://www.facebook.com/photo.php?fbid=4958414407738353&id=100001035477719)

"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்" எனும் திருப்பாவை பாடல் பலரும் அறிந்ததாகும். ஆனால் சங்க இலக்கியங்களில் தை நீராடல் குறித்தும் குறிப்பிடப்படுகிறது. "தாயருகே நின்று தவத் தைந்நீராடுதல் நீயறிதி வையை நதி" என்கிறது பரிபாடல். இங்கே நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியது, ஆண்டாள் தன் திருப்பாவையில் மார்கழி முதல் நாளை குறிப்பிடவில்லை. மதிநிறைந்த நன்னாள் என்றுதான் குறிப்பிடுகிறார். மதி நிறைந்த நன்னாள் என்பது பௌர்ணமி. எனவே திருப்பாவை நோன்பு மார்கழிப் பௌர்ணமியில் தொடங்கி தை மாதம் பௌர்ணமியில் முடிகிறது. தைப்பூசம் என்பது தைப்பௌர்ணமி. தமிழ் மாதங்கள் அனைத்தும் பௌர்ணமியிலிருந்தே தொடங்குகின்றன. எனவே தைப்பூசம் என்பதுதான் தமிழ்ப் புத்தாண்டு. மார்கழி நீராடலில் தொடங்கும் திருப்பாவை நோன்பு தை நீராடலில் முடிகிறது. இந்த காலகட்டம்தான் சிறுவீட்டுப் பொங்கல் கொண்டாடப்படும் காலகட்டம்.

தமிழ்ப் புத்தாண்டு பற்றி பேசுகிற இரு தரப்பாரும் இந்த விஷயத்தில் விஷயத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. நமது பண்பாடு குறித்த தெளிவுடன் தான் நாம் தமிழ்ப் புத்தாண்டு குறித்த விஷயத்தை அணுக வேண்டும்.



JALLIKATTU BULL.
Castes and Tribes of Southern India, by Edgar Thurston Vol.1, 1909

உழைக்கும் மக்கள், வீட்டுப் பெண்களின் நம்பிக்கைகள் சார்ந்து கொண்டாடப்படும் இந்திய திருவிழாக்கள் தமிழர்களின் நன்றி உணர்வை வலியுறுத்துபவை. வெப்ப மண்டல நாடுகளில் அறுவடைத் திருநாட்கள் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகின்றன. மற்ற பண்டிகைகளில் நாம் பிரார்த்தனைகளை முன்வைக்கிறோம். வேண்டுதல்களையும் கோரிக்கைகளையும் முன் வைக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக பொங்கலில் நமது வாழ்க்கைக்கு அடிப்படையான உழவர்களுக்கும் சூரியனுக்கும் மாடுகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். இப்படி பல்வேறு அம்சங்களில் மாறுபட்டு விளங்குகிற பொங்கலைக் கொண்டாட வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமை.

[குறிப்பு: தொ.ப. அவர்கள் நூலிலிருந்து...]

## 37. மகிழ்வின் நாட்கள்

— முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய்



தென்னகத்து சீமையிலே
இலந்தைக்குளம்
கிராமத்திலே
வாழையடி வாழையென
ஏழுதலைமுறை கண்ட
முப்பாட்டன் பரம்பரையில்
ஆறாம் தலைமுறையாய்
வந்துதித்தோம் அனைவரும்
அன்பான வாரிசுகளாய்!

ஒரு மரத்துக் கிளைகளாய்
அடுத்தடுத்து வீடு இருக்க
ஒரு கூட்டுப் பறவைகளாய்
ஒன்றிணைந்து வாழ்ந்திட்ட
உறவுக் கூட்டமே எம்
குடும்பம்!
மேலவீட்டுத் தாத்தா
வாரிசுகளும்

நடுத்தாத்தா
வகையறாக்களும்
சின்னத்தாத்தா வீட்டுச்
சிறுசுகளுடன்
மொட்டைமாடி
நிலவொளியில்
சோறு உண்ட நாட்கள்தான்
நிறைவான நாட்களாய்
நெஞ்சினிலே நிழலிடுதே! !

வகைவகையாய்
அப்பாக்கள்
வாங்கிவந்த
பண்டங்களையும்
வக்கனையாய் அம்மாக்கள்
ஆக்கி வைத்த
வெஞ்சனங்களையும்
ஆவலாய் கடைபரத்த
ஆளாளுக்கு அள்ளி
எடுத்துண்ட
மகிழ்ச்சிதான் என்னே
என்னே!

விடியற்காலை நேரத்தில
வெள்ளத்தாயம்மா
டீக்கடையில
டீ ஒன்றைக் குடித்துவிட்டு
வெந்த மொச்சையையும்
சுடசுட தோசையும்
எஜமாந்தொர பெரியப்பா
எட்டு ரூபாய்க்கு
வாங்கிவந்தா
எட்டூருக்கும்
மணக்குமன்றோ!

கயத்தாரு காரச்சேவும்
கழுகுமலை தேன்குழலும்
ஓலைப்பெட்டி
சில்லுமிட்டாயும்
கோவில்பட்டி
கடலைமிட்டாயுமென
ஜமாந்திக்குப் போய்வரும்
ஜட்சப்பா வாங்கி வந்தா
சட்டென காலிபண்ண
ஈப்போல
மொய்ப்போமன்றோ!

மாட்டுத் தொழுவத்தில
கறந்து வைச்ச பசும்பால
காய்ச்சி இறக்கும்முன்னே
தூக்கி குடிச்சதுவும்
கன்னுக்குட்டி ஈனியதும்
கறந்து வரும் சீம்பால
கருப்பட்டி போட்டுக் கிளறி
கிண்டி கீழே இறக்கியதும்
வழிச்சு வழிச்சு தின்னதுவும்
வருடங்கள் சென்றாலும்
நெஞ்சவிட்டு மறக்கலையே!

மாலையிலே ஓடிஆடி
விளையாடி முடிச்சதுவும்
தெற்கு வீட்டுத்
திண்ணையிலே
தினம் இரவு கூட்டம் கூடி
வறுத்த கடலை தீரும் வரை
உடைச்சு உரிச்சு
தின்றவாறே
கதைகதையாய்ப் பேசி
மகிழ்ந்த
காலமும்தான் இனித்திடுதே!

தடதடனு  மோட்டார் சத்தம்
தெரு முனையில்
கேட்டதுவும்
'கிராம்ஸ் அப்பா
வர்றாங்க'னு
கையில் புத்தகத்தை
எடுத்ததுவும்
வீட்டுக்குள்ளே போனதுவும்
விட்ட கதையைத்
தொடர்ந்ததுவும்
கனவாத்தானே
கண்ணுமுன்னே
வந்து வந்து போகுது இப்போ!

வடக்கு வீட்டு மாடியிலே
வானத்து விண்மீனாய்
வரிசையா படுக்கை போட்டு
விடியும் வரை விடுகதையை
மாற்றி மாற்றிக் கேட்டுவிட்டு
முகத்தில சூரியன் வந்து
சுரீர்னு உரைக்கும் வரை
உடல்முழுசும்
போர்வைக்குள்ளே
சுருண்டவாறு
புதைத்துக்கொண்டு
புரண்டு புரண்டு
உறங்கியதுவும்
காலங்கள் கடந்த பின்னும்
கண்முன்னே
விரியுது இப்போ!
அடுத்தடுத்த வீடுகளாய்
அருகருகே இருந்ததனால்
ஒரு மாடியில் ஏறி விட்டு
ஒற்றைச் சுவரு தாண்டி
தாண்டி
தெருக்கோடிக்குச்
சென்றுவரும்
சாகசமும் இனிவருமோ?!

பிள்ளைகளா வளர்ந்த நாங்க
பருவ நிலை அடைந்ததுவும்
ஆளாளுக்கு ஒரு பக்கம்
வாழ்க்கைப்பட்டுப்
போனாலும்
கள்ளங் கபடமற்ற
வெள்ளை உள்ளத்தோடும்
சொந்த பந்தங்களோடும்
அன்போடு வாழ்ந்துவந்த

பிள்ளைப் பருவ
நிகழ்வுகளை
பசுமையான
நினைவுகளாய்
பதியம்போட்டு
நான் வைச்சேன்!

மறக்க மனம் முடியாமல்
பொக்கிஷமா மனசுக்குள்ள
பொத்திவச்ச அத்தனையும்
மற்றவரும் காணும்படி -
இன்று
மின் தமிழ் இதழிலே
கவிதையாய்க்
கொட்டிவச்சேன்!

படம் உதவி: கடையநல்லூர் பென்சி

## 38. வாழ்க்கைக் கணக்கு

— *கவிஞர் அமீர்*

ஒரு முற்றிய ரோஜா
மேனி கருத்து
கூனி நடந்து
அந்திவானின் ஒளியில்
லாபக்கணக்கு பார்க்கிறது

லாபமென்று
எதைச் சொல்ல?
நட்டமென்று
எதைச் சொல்ல?

பள்ளிக்குப் போகாமல்
பஞ்ச பிழைப்புக்கு ஓடிய
பிஞ்சு பருவத்தில்
உழைப்புக்கு
லாபமென்று தொடங்கிய
நட்ட  கணக்கு எண்ணிக்கை
செழித்து வளர்ந்தது

கட்டிக்கொண்ட கணவன்
வெட்டிக்கொண்டு
போனதில்
கண்டபடி நட்டம்

கொட்டிவளர்த்த
பிள்ளைகளும்
கைகழுவிக்
கொண்டதில்
நட்டமோ நட்டம்

பிறந்தது முதல்
இடைவிடா பயணத்தில்
பருவமெல்லாம் நட்டம்

நிலவறை நோக்கிய
பயணத்தில்
நடக்காமல் போவது மட்டுமே
இவளுக்கு லாபம்....

"இப்படி
இயங்கியவளை யான்
காணவே
என்ன தவம்
செய்துவிட்டேன்" என்று
பழைய கவியின் பாடல்
நினைவுக்கு வந்ததால்...

அதிசயிக்கிறேன் காதல்
கொள்கிறேன்
உழைப்பைத்
துணையாக்கிய
இந்த அறுபதைக் கடந்த
அழகியைப் பார்த்து !!!

## 39. மாதங்களில் நான் மார்கழி!

— ருத்ரா இ.பரமசிவன்

மாதங்களில் நான் மார்கழி!
அந்த நாற்றமெடுத்த
பாம்புப்படுக்கையை விட
சூரியனின் இந்த
ஏழுவர்ணப் பளிங்கு
உயிர்த்துளி எனும்
பனித்துளிக்குள்
படுக்கை
விரித்துக்கொண்டே
படைப்புக்கு ரிமோட்
தட்டுவேன்
என் தொப்புள் கொடியில்.
வடிவ கணிதம் எனும்
ஜியாமெட்ரியில்
குறுக்குக்கோடும்
நெடுக்குக்கோடுமே
இறைவர்கள்.
வாழ்க்கையின் வடிவ
கணிதமும்
நின்றவண்ணமும்
கிடந்த வண்ணமுமாகவே
நிகழ்வுகளை
நகர்த்துகின்றன.
படுக்க இடம் கிடைக்காமல்
சிவனின்
திருநீற்றுக்கோட்டில் கூட
நான் கிடந்திருக்கிறேன்.
அவன் சூலத்திலும்
நின்று விறைத்திருக்கிறேன்.
இந்த
ரெண்டும் ரெண்டும் நாலு
என்ற உண்மையைக்கூட
நான்கு மறைக்குள்
நீங்கள் பதுக்கிக்கொள்ள
வேண்டுமா?
மார்கழியின்
மரகதப் புல்நுனியில்
ஊரும் சிறு பூச்சி
அதையும் விட சிறு பூச்சியை
தீனியாக்க விரைகிறது.

இயற்கையில்
ஒரு மரணத்தின் வாயில்
இன்னொரு மரணம்
அமர்ந்திருக்கிறது
ஜனனமாக.
இதை நீள நீளமாய்க்
கட்டியிருந்த
மூங்கில் வேலிக்குள் முடங்கி
மரவட்டையாய்
நகர்ந்து நகர்ந்து
என்னைத் தரிசிப்பவர்களே!
உங்கள் மூளைக்குள் பாலம்
தன்

நுண்ணிய நியூரோன்
முடிச்சுகளின்
அந்த
"பர்கிஞ்சே செல்களின்"
வாசல்களை
திறக்கச்செய்யுங்கள்.
நீங்கள் தரிசித்ததை
எனக்கும் சொல்லுங்கள்.
எனவே
மார்கழி என் பள்ளிக்கூடம்.
பாடம் நடத்துங்கள்.
என் ஞானக்குளியல்
உங்கள் கேள்விகளிடம் தான்.
பாடங்கள்
சந்தியாவந்தனத்துடன்
மனப்பாடம்
செய்யப்படுவதற்கானவை
அல்ல.
பாடங்கள்
படிக்கப்பட வேண்டியவை.
அறியப்பட வேண்டியவை..
"மறை"கப்பட வேண்டியவை
அல்ல.
அறியப்படுவதற்காக
அப்புத்தகங்கள்
திறக்கப்படுவதே
உங்கள் சொர்க்க வாசல்.

# 40. மாறாத விடியலின் அழகும் வீசும் காற்றும்...

— வித்யாசாகர்

விளக்குகள்
அணைந்தாலென்ன
விடியல் இயல்புதானே
காத்திரு;

நட்சத்திரங்கள்
தோன்றாவிட்டாலென்ன
விட்டில் பூச்சு ஒன்று வரும்
காத்திரு;

கற்றது வேறானாலென்ன
அறிவு உன்னுடையது தானே
காத்திரு;

யார்விட்டுப் போனாலென்ன
உயிர் உண்டுதானே
காத்திரு;

உலகம் எப்படி
இருந்தாலென்ன
நீ உன்னை மாற்ற ஒரு காலம்
வரும்
காத்திரு;

யாரால் எது செய்யமுடியா
விட்டாலும்
உன்னால் எல்லாம் முடியும்
காத்திரு;

நம்பிக்கைதான் வாழ்க்கை
நம்பு, நம்பிக்கையோடு
எழுந்து
இந்த உலகம் பார்

யாரோபோனாலும்
யாரோ வருகிறார்கள்
ஏதோ போனாலும் ஏதோ
வருகிறது
போனது கிடைப்பதுமில்லை
வருவது நிற்பதுமில்லை;
பிறகேன் வருத்தம் ?

எல்லாம் மாறும், நம்பியிரு
பூக்கள் நிறைந்த காடுகளில்
ஒரு மலர் உதிர்வதும்
ஒரு மலர் பூப்பதும் இயல்பு
எனில் எல்லாம் மாறுவதும்
கூட
இயற்கையின்
இயல்புதானே?

பிறகு நீயென்ன?
நானென்ன?
போவதை விடு
வாழ்வதை எண்ணிக்
காத்திரு;

இருக்கும் காலம்
அத்தனையும்
உயிர் மிக்கவை,
இந்த உலகம் உயிர்கள்
வானம் பூமி மழை கடல்
காற்று சூரியன் நிலா காடு
அத்தனையும்
உயிர்மிக்கவைஅவையெல்
லாம் உனக்காகக்
காத்திருக்கிறது

நீ தான்
ஏதோ ஒன்றிற்காக மட்டுமே
மயங்கி
காத்திருந்து பிரிந்து ஒடுங்கி
ஒன்றிற்காக மட்டுமே அழுது
ஒன்றிற்காக மட்டுமே
சாகிறாய்
ஒன்று போனால், எல்லாம்
போனதாய் முடிகிறாய்;

சற்று யோசி;
சாதல் பிழையன்று
தனித்து வலித்து சாதல்
சரியுமன்று;

வாழ்ந்து காட்டப்
பிறந்தவர்கள் நாம்
வாழ்தலே விதி, வாழ்தலே
வரம்;

சரி சரி; விடு
நிறைய யோசிக்காதே
நீ உயிர்த்திருக்க
உள்ளிழுக்கும் காற்று இந்தப்
பிரபஞ்சம் வரை
நிறைந்தேயிருக்கிறது; போ

மிச்சமிருக்கும்
நாட்களையேனும்
மகிழ்வோடு வாழ்ந்துவிடு!

## 41. வடலூர் வள்ளலார் !

— தமிழறிஞர் ஒளவை நடராசன்

பழமையில் படிந்து வாழ்ந்த துறவியர் பலர்
புதுமையில் பூத்துப் புரட்சித் துறவியாய்ப் பொலிந்தவர் எவர் !
செங்கல் காவியில் துறந்தவர் பலர் !
எங்கள் நிறம் என்றும் வெண்மைச்சீருடை என்றவர் எவர் !
பிறவாவரம் கேட்டுப் பேசியவர் பலர்
இறவாவரம் எனக்கு வேண்டும் என்றவர் எவர் !
சாதிகள் - மதங்கள் சனாதனம் என்று சரிந்தவர் பலர்
நீதியில் நேர்மையில் சன்மார்க்கம் என்றவர் எவர் !
பசிக்கு உணவைப் பலரிடம் கேட்டுப் பாடினோர் பலர்
பசிக்கு நான் உணவு உலகுக்குப் படைக்கிறேன் என்றார் எவர் !
கண்மூடித்தவம் செய்யும் கருத்தினர் பலர்
மண்மூடிப் போகட்டும் மக்களில் பேதமா என்று மறுத்தவர் எவர் !
சத்திரம் கட்டிய நாட்டில் சாலை நிறுவினார் !
எத்திறத் தோறும் கற்றுணர்ந்திடவே சங்கம் அமைத்தார்
வடிவம் ஏதும் இல்லை வணங்கலாம் சோதியை என்றார்
வனப்பு மிகுந்த எண்கோண வடிவில் சபையொன்று கண்டார்
வல்லாரும் மாட்டாரும் விழிப்புணர்வு கொண்டு
கல்லாரும் கற்றாரும் ஓரினம் என்றே உணர்ந்து
எல்லார்க்கும் பொதுவாய் இருப்பதே நெறி என்றார்
வடலூர்ப் பெருவெளி வணங்கிட வருகவே என்றார்
இவர்தான் வடலூர் வள்ளலார் !
இவர் வழி தான் பொதுமை நெறி என்றே புவியோர் புகல்வர் !

— தமிழறிஞர் ஒளவை நடராசன்

(வள்ளலார் 198 ஆவது ஆண்டு பிறந்தநாள் பெருமங்கலம்)

## 42. அறம் காத்த அண்ணல்!

— முனைவர் சிவ. இளங்கோ

பிறப்பினால் இந்துவாகப்
  பிறப்பவர் யாருமில்லை;
வெறுப்பினைக் கக்கும் வேதம்
  வேள்வியில் புனிதம் காக்கும்;
சிறப்பிலாச் சிறுமைச் சாதி
  சிறிதுமே ஏற்க வேண்டாம்;
இறப்பிலும் இழிவு தீரா!
  இறக்குமுன் துறத்தல் நன்றே!

நன்றதைச் சொன்னவர் அம்பேத்கர்!
  நாளுமே அறிவினைப் போற்றிநின்றார்!
வென்றதைத் தீர்த்திடும் வேகத்தில்
  விட்டொழித்தார் மதம் வீறுகொண்டே!
நன்றவர் புத்தரின் நடையேற்றார்!
  நானில மக்களும் விழிப்புற்றார்!
அன்னவர் வழிதனில் நாடுசென்றால்
  அவலமே தீர்ந்திடும்! வாழிஅண்ணல்!

## 43. புத்தகம்

— கி.ரமேஷ்

சாய்வு நாற்காலியில்
தலைசாய்த்து
சுகமான தூக்கம்
நாஞ்சில் மணம் பரப்பி
மார்பில் கிடக்கிறார்
நாஞ்சில் நாடன்
லேசாய்ச் சாய்ந்த முகத்தில்
சரிந்து கிடக்கிறது
மூக்குக் கண்ணாடி.
படித்த புத்தகம்
மனதில் பேசியதில்
மெல்லிய புன்னகை
என் முறை எப்போது
என்று தவம் கிடக்கும்
அலமாரி புத்தகங்கள்
கிடக்கும் நிலைகண்டு
மெலிதாய் சிரிக்கிறார்
பொக்கைவாய் கி.ரா

சிறு வயதில்
சின்னதாய் தொடங்கி
நிறுத்த முடியாது போனது
மேசையிலும் கட்டிலிலும்
எங்கெங்கு நோக்கினும்
விரிந்து கிடக்கும்
புத்தகங்கள்
மேலதிகமாய் வாங்கி
விட்டோமென
திருப்தி கொள்கிறதா
மனசு???

புத்தகக்கடையைக்
கடந்து செல்ல முடிகிறதா
கால்கள்?
பார்த்துத்தான்
வைப்போமென
இழுத்துச் சென்றன கண்கள்

வாங்கித்தான்
வைப்போமென
கைகள் நீண்டபோது
தடுக்கத்தான் ஆளில்லை
வைக்க இடமில்லையென
மனைவி புலம்புவாள்
ஏமாற்றத்தான் வேண்டும்.

எத்தனை எத்தனை கோடி
இன்பமாய் வைத்தாய்
இறைவா
புத்தகமாய்!
எத்தனை ஜென்மம்
கடந்தாலும்
முடிக்க முடியாத முடிச்சுடன்!
சாய்ந்தால்
தலை சாய வேண்டும்
மடியில் புத்தகத்தோடு

வேண்டேன் ஒருபோதும்
இனி ஒரு வரம்
போதும் இந்தப்
புத்தகம்.

## 44. சிந்துபூந்துறை

— ருத்ரா இ.பரமசிவன்

ஒரு
திருநெல்வேலிக்காரனின்
நினைவுக்குள்
பளிங்குப்படித்துறையாய்
நீண்டுகிடப்பது
சிந்து பூந்துறை.
கரைத் திட்டில் அந்த
பனங்குட்டி நிழல்களில்
இன்னும் சொட்டு சொட்டாய்
உதிர்ந்து கொண்டிருப்பது
புதுமைப்பித்தனின்
"கயிற்றரவு"
சிந்தனைகளின்
எழுத்துச்சிதிலங்கள் தான்.
அந்த சிறுகதை
பிளந்த உதடுகளில் வழியும்
சொல் ஒலிப்புகளில்
நியாய வைசேஷிக
தத்துவங்கள்
கடவுளை
பனைமரத்துச்
சில்லாட்டைகளில்
வடிகட்டித்தரும்
அந்த அரைகுறைப் புளிப்பு
இனிப்பு
பதனீரை உறிஞ்சுவது போல
எழுதிக்காட்டியிருக்கிறார்
புதுமைப்பித்தன்.
சிந்துபூந்துறைக்கும்
வண்ணாரப்பேட்டைக்கும்
நடுவே படுத்துக்கொண்டு
ஊர்ந்து கொண்டிருக்கும்
தாமிரபரணியைக்கூடத்
தன் எழுத்தின் தீக்குச்சி
கொண்டு
உரசி உரசி நெருப்பு
பற்றவைத்து
அதில் அவர்சமுதாயத்தின்
இனிப்பையும் கசப்பையும்
பரிமாறியிருக்கும் நுட்பமே
சிந்துபூந்துறையின் கருப்பை
கிழிந்த
பனிக்குட உடைப்புகள் தான்.
அவர் எழுத்துக்களின்
பிரசவம்
ஓர் ஏழைக்குமாஸ்தா வீட்டு
கிழிந்த பாயில்
அரங்கேறும் வெப்பத்தில்
ஓர் உயர்வான இலக்கியம்
குவா குவா என்ற
ஒலிப்புகளோடு ஒரு
புதிய யுகத்தின் முகத்தைப்
பதிவு செய்யும்.
ஒவ்வொரு தடவையும் அந்த
சிந்துபூந்துறை ஆற்றில்

நான் முக்குளி
போடும்போதெல்லாம்
ஏதோ ஒரு புதிய
முலாம் பூசி எழும்
ஓர்மையை
தைத்துக்கொண்டு
வருவதையும்
உணர்கின்றேன்.
அந்த ஆற்றுக்குள்ளும் ஒரு
ஆற்றுப்படை
ஊர்வலம் போவதை
நான் படித்துப் படித்து
அந்த பனங்காட்டுச்
சலசலப்புகளின்
பனைச்சுவடிகளில்
பதிந்து கிடப்பதை
பிய்த்துக்கொண்டு
வெளியேற முடியவில்லை.

## 45. புலம்பெயர் மலேசியத் தமிழர்களின் நிலை !?

— *மணிக்கவிஞர் பாதாசன்*

**தமிழ் வாழ்த்து**
ஞாலமெலாம் பாலமின்றி நாளெல்லாம் ஓடுகிற
வானூர்தி வண்டமிழ்க்கு வாழ்த்து !

**தமிழக முதல் அமைச்சருக்கு வாழ்த்து**
முயலென ஓடி வேக
முயற்சிகள் பலவெ டுத்தே
அயலகத் தமிழர்க் காக
அன்புடன் பரிவு கொண்டு
நயத்துடன் தமிழர் திருநாள்
நடத்திடும் தமிழ கத்தின்
அயர்விலா முதல மைச்சர்
அதிசய ஸ்டாலின் வாழ்க !

**அரங்கத் தலைவருக்கு வாழ்த்து**
கைரம்பம் போலறுக்கும் காண் ; தமிழ்க் கூற்றை
வைரமுத்து பாட்டின் வரி

**பாடுபொருள்**
சென்றுதேய்ந்திறுதல்எனும் நன்னூல் கூறும்
தேறாத இலக்கியத்தின் குற்றம் போல
அன்றுபாய்ந் திந்நாட்டில் சம்பா தித்தே
அரசனைப்போல் வாழ்ந்திடவே கனவு கண்டோர்
இன்றுதேய்ந் திருக்கின்றார் ஆண்டி யாக !
என்றவர்க்கு விடிவுவரும்; யாரோ சொல்வார் ?
கன்றுபாய்ந் தேபசுவின் பால்கு டிக்கக்
களித்தவர்க்கோ பால்குடிக்க வசதி இல்லை

ஆயிரத்து நாற்பத்தொன் றாம்ஆண் டில்தான்
அரசன்இரா ராசேந்தி ரன்வந் தாராம் !
பாயிரமாய் மட்டுமஃ தின்றும் உண்டாம் !
பாவிஅந்த மன்னனிங்கு வந்தான்; சென்றான் ;
கோயில்செய்தான்; சொல்கின்றார்! ஆனால்,இங்கே
தன்னின் புலிக்கொடியை நாட்டி டாமல்
பாய்மரத்துக் கப்பலிலே பறந்த தாலே
பாவத்தைச் சுமந்திங்கே வாழ்கின் றோமே !

அன்றுமட்டும் கடாரத்தில் ஆழ மாக
அவன்தன்றன் புலிக்கொடியை நாட்டிச் செல்லின்
இன்றுள்ள தமிழருக்கே உரிமை யான
இடமாகக் கடாரம்தான் இருக்கும்! இங்கே
ஒன்றுமட்டும் உரைக்கின்றேன்! புலம்பெ யர்ந்தோர்க்(கு)
ஒருருவம் ஒருநாமம் ஒன்றுமி லார்க்கே
உண்டுருவம் திருநாமம் பலவென் றாப்போல்
ஒருநாடில் லை,எனினும்; பலநா டுண்டே !

"யாரங்கே வாருங்கள் பூங்குன் றன்வாய்க்(கு)
இரண்டுகிலோ சீனிதனைக் கொட்டிப் போங்கள்!"
போரங்கே என்றறியின் குகைகி டந்த
புலிபோலப் புறப்பட்ட புறநா னூற்றின்
வீரனெங்கே? அவன்வித்தும் அழிந்தா போச்சு?
வீடுநிலம் வருமானம் செழிப்புக் காகச்
சூரனைப்போல் புலம்பெயர்ந்த தமிழர் இன்று
சோகத்தின் கல்வெட்டாய் வாழ்கின் றோமே !

ஒருகாலம் பினாங்குநகர் வந்தே அங்கே
ஓகோவென்(று) உயர்ந்திருந்தார் தமிழர், உண்மை !
பெருங் 'காராம் மெர் செடிசும்'வைத்தி ருந்த
பெருமையதும் அவர்களுக்கே உண்டாம்; நானும்
அரும்படமாய்க் கண்டேன் ; அச் செழிப்பெல் லாமும்
அருகியதேன்; சந்ததியார் என்ன ஆனார்?
பெருகிவரும் கண்ணீரைத் தவிர வேறு
பேச்சின்றிச் சிந்தனையில் உழல்கின் றோமே !

வணிகத்தைக் குலத்தொழிலாய்க் கொண்ட செட்டி
  மக்களுள்ளே, மலாக்காவில் தமிழ்ம றந்தே
தனித்துள்ளார்; இன்றுவரை மலாயில் பேசி,
  தமிழ்முருகன் தனைவேண்டிக் கிடக்கின் றார்கள் !
குனிந்தவர்கள் பால்மரத்தைச் சீவு தற்காய்
  நிமிரவில்லை என்பதுதான் தோட்டமக்கள்
பனித்திருக்கும் கண்கள் இன்றும் சொல்லும் சேதி !
  பால்மரத்தார் கதையிலுண்டே இன்னும் மீதி !

புலம்பெயர்ந்தோர் அன்றோடு தங்கள் வாழ்வின்
  நலமிழந்தார்; வளமிழந்தார் ; பொருளைச் சேர்க்கும்
களமிழந்தார்; கண்டார்வாய் இகழ்ந்து பேசக்
  காரணமாய் ஆகியுள்ளார்; ஒற்று மையின்
பலமிழந்தார்; தமிழ் குறைத்தார்! ஏதோ கொஞ்சம்
  பக்குவமாய் நாணல்போல் வாழு கின்றார் !
பலவகையில் புலம்பெயர்ந்தோர் படும்துன் பத்தைப்
  பல்குத்தி முகர்வதுவா ? சீச்சீ ! போங்க !

**குறிப்பு:**
12.1.2022 புதன்கிழமை காலை 10.00 மணி (தமிழக நேரம்) முதல் நாள் முழுதும் நடைபெற்ற அயலகத் தமிழர்களின் தமிழர் திருநாளில் நடந்த பல்வேறு நிகழ்வுகளில் ஒன்றான - கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில் நடந்தேறிய கவியரங்கில் மலேசியாவின் சார்பில் பங்கு பெற்று மணிக்கவிஞர் பாதாசன், மலேசியா அரங்கேற்றிய கவிதை.

**தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் இணையத்தளம்**
https://www.facebook.com/TamilHeritageFoundation

**தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்வுகள் வெளியீடுகள் மற்றும் செய்திகள்**
http://thf-news.tamilheritage.org/

**தமிழ் மரபு அறக்கட்டளையின் யூடியூப் காணொளி அலைவரிசை**
https://www.youtube.com/Thfi-Channel

**தமிழ் மரபு அறக்கட்டளையின் வரலாற்றுக் காணொளி வெளியீடுகள்:**
Oct 24, 2021
தௌலி (ஒரிசா மாநிலம்) அசோகர் கல்வெட்டு
— திரு.கௌதம சன்னா
https://youtu.be/L2ZBmI1Vwpo

Dec 2, 2021
ஜெர்மனியைப் பிரிக்கும் பெர்லின் சுவர்
— முனைவர் க. சுபாஷிணி, முனைவர் நா. கண்ணன்
https://youtu.be/9fUiJbzRbco

Dec 23, 2021
திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில், புதுக்கோட்டை: விளக்கம் — கல்வெட்டு ஆய்வாளர் திரு. கரு ராஜேந்திரன்
https://youtu.be/8_jCcGjOoho

Dec 24, 2021
கல்திட்டைகளுடன் கூடிய ஈமச்சின்னங்கள் கொண்ட புதுக்கோட்டை - கலசமங்களம்
— கல்வெட்டு ஆய்வாளர் திரு. கரு ராஜேந்திரன்
https://youtu.be/hRkZ2p7P7Iw

---

**தமிழ் மரபு அறக்கட்டளையின் உலக மரபு வார விழா சிறப்புக் காணொளி வெளியீடுகள்:**
திசைக் கூடல் - 241 — நவம்பர் 19, 2021
இந்தியப் பெருங்கடற் பகுதியில் மரபுச் சின்னங்கள்:
https://youtu.be/I_iKcwwr3h0
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -1

திசைக் கூடல் - 242 — நவம்பர் 20, 2021
பல்லவர் காலக் கட்டிடக்கலை: https://youtu.be/A1fMnq-8CjA
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -2

திசைக் கூடல் - 244 — நவம்பர் 21, 2021
பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள் - பாதுகாப்பு:
https://youtu.be/wJJ_Bx2ZsyU
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -3

திசைக் கூடல் - 245 — நவம்பர் 22, 2021
உலகப் பாரம்பரியச் சிற்பங்கள் - பாதுகாப்பும் ஆய்வும்:
https://youtu.be/AWEk2uuM9-8
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -4

திசைக் கூடல் - 246 — நவம்பர் 23, 2021
தமிழக சமணப் பண்பாட்டு எச்சங்கள்: https://youtu.be/79GIc765iV8
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -5

திசைக் கூடல் - 247 — நவம்பர் 24, 2021
உலக வரலாற்றில் திருப்புமுனை ஏற்படுத்திய அகழாய்வுகள்: https://youtu.be/joanSXKDz_s
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -6

திசைக் கூடல் - 248 — நவம்பர் 25, 2021
இராஜேந்தர சோழர் படையெடுப்பும் வாணிபமும்: https://youtu.be/VcVh3o_C_rM
உலக மரபு வார விழா(நவம்பர் 19 -25, 2021) சிறப்பு ஆய்வுரை வரிசை -7

---

**மூதறிஞர் எஸ்.பொ.வின் நினைவுப் பேருரை சிறப்பு நிகழ்ச்சி காணொளிகள்:**
'அக்கினிக்குஞ்சு' அவுஸ்திரேலியா இணைய இதழும்
தமிழ் மரபு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய திசைக் கூடல் நிகழ்ச்சி (252, 253)

முதல் நாள் நிகழ்ச்சி (17.12.2021): https://youtu.be/jhdCoGC3qoA
இரண்டாம் நாள் நிகழ்ச்சி (18.12.2021): https://youtu.be/Xm4426tMVis

---

**தமிழ் மரபு அறக்கட்டளையின் திசைக் கூடல் காணொளி வெளியீடுகள்:**
திசைக் கூடல் - 235 — அக்டோபர் 17, 2021
"திரள்" - தமிழ்ச் செய்தித் திரட்டி: https://youtu.be/ZYONLzkNjR4

திசைக் கூடல் - 236 — அக்டோபர் 24, 2021
பெண்ணுடல் - பதின்மப் பருவப் புரிதல்கள்:
https://youtu.be/wg7ubQxIXEk

திசைக் கூடல் - 237 — அக்டோபர் 31, 2021
கீழடிக்கு மாணவர்களுடன் ஒரு தொல்லியல் பயணம்-:
https://youtu.be/zMn2IBKPr-8

திசைக் கூடல் - 238 — நவம்பர் 6, 2021
'ஜெய்பீம்' திரைப்படம் எழுப்பும் கேள்விகளும் சிந்தனைகளும்:
https://youtu.be/ABvdd1zniTY

திசைக் கூடல் - 239 — நவம்பர் 13, 2021
சங்கக் கவிதைகளில் கவிதை உத்திகள்:
https://youtu.be/My8t8oEA_YI

திசைக் கூடல் - 240 — நவம்பர் 14, 2021
சயாம் பர்மா மரண ரயில் பாதை: https://youtu.be/PkjhVTIuqPI

திசைக் கூடல் - 243 — நவம்பர் 20, 2021
குழந்தைகள் உலகம்: https://youtu.be/5i6fWQGAy78

திசைக் கூடல் - 249 — நவம்பர் 27, 2021
மரபு என்பது பண்பாடு மட்டுமா, வாழும் சூழலுமா:
https://youtu.be/Mnf-BHIrrvU

திசைக் கூடல் - 250 — டிசம்பர் 4, 2021
திருவள்ளுவர் சிலைகள் நிறுவிய ஐரோப்பிய தமிழர் நாள் 2ம் ஆண்டு விழா: https://youtu.be/JXLkVQg1BjU

திசைக் கூடல் - 251 — டிசம்பர் 11, 2021
புதுக்கோட்டை மாவட்ட குடைவரைக் கோயில்கள்:
https://youtu.be/XDSob-c3_k0

திசைக் கூடல் - 254 — டிசம்பர் 25, 2021
அறியப்படாத கிறிஸ்தவம்: https://youtu.be/96ohTwmBq10

திசைக் கூடல் - 255 — ஜனவரி 1, 2022
புத்தாண்டு கொண்டாட்டம்: https://youtu.be/ScnOZeqI6xw

திசைக் கூடல் - 256 — ஜனவரி 8, 2022
தமிழ் இலக்கியங்களில் புத்தாண்டும் வானியலும்:
https://youtu.be/MQK_AGy7MEE

திசைக் கூடல் - 257 — ஜனவரி 9, 2022
வீரமாமுனிவர் நூல்கள் திறனாய்வு நிகழ்ச்சி:
https://youtu.be/xEj4swPc2XU

திசைக் கூடல் - 258 — ஜனவரி 15,  2022
உலகத் தமிழர்களின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்:
https://youtu.be/FhS7NDmr4pA

---

**தமிழ் மரபு அறக்கட்டளையின் "சுவலி" - ஒலி நூல்கள் வெளியீடுகள்:**
நா.பார்த்தசாரதி சிறுகதைகள்: (27-11-2021)
புதிய நிர்மாணம் — https://youtu.be/sG6lbf7w1fM
சிலந்தி சிரித்தது — https://youtu.be/UvsEJ-z7Oi0
தெய்வம் எங்கே? — https://youtu.be/N8WwHH_qR2U
தூக்கம் — https://youtu.be/GueDQnzSvrk

---

**தமிழ் மரபு அறக்கட்டளையின் திங்கள்  “திணை” – செய்திமடல்கள்:**
“திணை” – செய்திமடல்-17: அக்டோபர்  2021
“திணை” – செய்திமடல்-18: நவம்பர் 2021
“திணை” – செய்திமடல்-19: டிசம்பர்  2021

---

**தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பக நூல் வெளியீடுகள்:**
தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி (November 8, 2021), அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் "வீரமாமுனிவர்" மற்றும் வீரமாமுனிவரின் கையெழுத்து பிரதி ஆவணத்தின் அச்சுப் பிரதியான "சித்திரக் கதைகள்" ஆகிய புத்தகங்களை மாண்புமிகு முதலமைச்சர் M. K. Stalin அவர்கள் வெளியிட்டார்.
Chief Minister of Tamil Nadu Facebook Page:
https://www.facebook.com/139540139978985/posts/939212200011771/
Chief Minister of Tamil Nadu Twitter Page:
https://twitter.com/CMOTamilnadu/status/1457629943139954689

வரலாற்றில் பொய்கள்-தேமொழி
தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகத்தின் வரலாற்று நூல்களைப் பெற:
Knight Shoppers: https://knightshopper.com/product/varalaatril-poigal/
Common Folks: https://www.commonfolks.in/books/d/varalaatril-poigal

---

**தமிழ் மரபு அறக்கட்டளைக்கு விருது வழங்கப் பட்டது:**
தமிழ்நாட்டில் இயங்கிவரும் சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம் வழங்கும் 2021 ஆண்டிற்கான அருமொழி விருதுப் பட்டியலில் சிறந்த வலைப்பக்கத்திற்கான விருது நமது தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பிற்கு 26.12.2021 அன்று தஞ்சையில் நடந்த விருது வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது (https://youtu.be/sIMPIKCbSKs)
- சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கத்தின் காணொளிச் செய்தி: https://www.facebook.com/watch/?v=212753584394846

---

**தமிழ் மரபு அறக்கட்டளை சமூகச் செயல்பாடு:**
தமிழ் மரபு அறக்கட்டளை மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை நன்கொடை வழங்கல் (22/10/2021): https://youtu.be/uPSP0B9_L3g

---

# நூல் வெளியீடுகள் ...


தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்களும், டாக்டர் ஆனந்த் அமலதாஸ் அவர்களும் எழுதி, எழிலினி பதிப்பகத்தின் வெளியீடாக **'சித்திரக்கதைகள்', 'வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாறு' என்ற** தலைப்புகளில் இரு நூல்கள் வெளியாகியுள்ளன.

வீரமாமுனிவரின் பிறந்த நாள் நவம்பர் 8ஆம் தேதி சிறப்பு நிகழ்வை முன்னிட்டு, வீரமாமுனிவர் பற்றிய இந்த இரண்டு ஆய்வு நூல்களும் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் வெளியிடப்பட்டது.



.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (8.11.2021) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின்
ர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் "வீரமாமுனிவர்" மற்றும் வீரமாமுனிவரின் கையெழுத்து பிரதி ஆவணத்தின் அச்சுப் பிரதியான
ா வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, புத்தகங்களின் ஆசிரியர்கள் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர்
ர் ஆனந்த் அமல்தாஸ், எழிலினி பதிப்பக உரிமையாளர்கள் திரு. ஒளிவண்ணன் மற்றும் திருமதி நல்லினி, பேராசிரியர் முனைவர் பாப்பா,

இந்த இரண்டு நூல்களை வாங்க கீழ்க்காணும் எண்ணை தொடர்பு கொள்க:
எழிலினி பதிப்பகம் (Emarald Publishers) - GPAY +919840696574








---

**தமிழ் மரபு அறக்கட்டளையின் புதிய நூல் வெளியீடு..**

**`வரலாற்றில் பொய்கள்`**
நூலாசிரியர் : முனைவர் தேமொழி




விலை இந்திய ரூபாய் 100/-
நூலைப் பெற கீழ்க்காணும் இணைய விற்பனையாளரைத் தொடர்புகொள்க!
https://knightshopper.com/product/varalaatril-poigal/
தொலைபேசி: 9884912020

# தமிழ் மரபு அறக்கட்டளைக்கு விருது வழங்கப் பட்டது

தமிழ்நாட்டில் இயங்கிவரும் சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம் வழங்கும் 2021 ஆண்டிற்கான அருமொழி விருதுப் பட்டியலில் சிறந்த வலைப்பக்கத்திற்கான விருது நமது தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பிற்கு 26.12.2021 அன்று தஞ்சையில் நடந்த விருது வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது (https://youtu.be/sIMPIKCbSKs)

2021ஆம் ஆண்டின் "சிறந்த வரலாற்று இணையப்பக்க"திற்கான **"அருமொழி விருது 2021"** விருதினைத் சோழர் வரலாற்று ஆய்வு சங்கம் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்புக்கு வழங்கியது. டிசம்பர் மாதம் தஞ்சாவூரில் நடைபெற்ற விழாவில் இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விழாவில் தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்கள் குழு நேரில் கலந்துகொண்டு தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் விருதினை பெற்றனர்.











விழா மேடையில் தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்கள் திரு. மணிவண்ணன், திரு. விவேகானந்தன், முனைவர். பாப்பா, முனைவர். சாந்தினிபீ, முனைவர். ராஜவேலு












- சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கத்தின் காணொளிச் செய்தி:
https://www.facebook.com/watch/?v=212753584394846

# மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை நன்கொடை வழங்கல்

வறுமையான சூழலில் உள்ள திறமை வாய்ந்த மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை நன்கொடை வழங்கல் - https://youtu.be/uPSP0B9_L3g



22/10/2021
மதுரை மாவட்டம்
குறுத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி - 10 சீருடைகள்
சங்கரலிங்காபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி
- 3 சீருடைகள்
எழும்பூர் அரசு உயர்நிலைப்பள்ளி - 4 சீருடைகள்
நன்கொடை விபரம்:
தமிழ் மரபு அறக்கட்டளை ஐரோப்பா கிளையிலிருந்து ஃபிரான்சின் திரு.தம்பி ஜோசப் வழங்கிய 8700 ரூபாய், முனைவர்.க.சுபாஷிணி வழங்கிய 1300 ரூபாய் மற்றும் மதுரை சங்கரலிங்காபுரம் ஆசிரியர் திரு.பாலச்சந்தர் வழங்கிய 1050 ரூபாய்.
மொத்தம் 11050 ரூபாய்

# திரு.இன்னம்பூரான் அவர்களுக்கு அஞ்சலி



தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் நீண்ட கால உறுப்பினர்களுள் ஒருவரான திரு.இன்னம்பூரான் அவர்கள் ஜனவரி 15, 2022 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வருந்துகிறேன்.

2007ஆம் ஆண்டு முதல் என்னுடன் தொடர்பில் இருந்தவர் திரு.இன்னம்பூரான். இணையவழி தமிழ் மரபு அறக்கட்டளை பணிகளைப் பற்றி அறிந்து கொண்டு லண்டனில் தனது மகனில் இல்லத்திலிருந்து என்னைத் தொடர்பு கொண்டார். தமிழ்நாடு,

அமெரிக்கா, இங்கிலாந்து எனப் பயணம் செய்து கொண்டிருந்தார் அப்போது. திரு.வி.க பற்றி அதிகமாக நாங்கள் உரையாடுவோம். மிகுந்த ஆர்வத்துடன் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் நிகழ்ச்சிகளிலும் மின்னாக்கப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தமிழகத்தில் உறுப்பினர்களை ஒருங்கிணைத்து மின்னாக்கச் செயல்பாடுகளைக் கவனித்துக் கொண்டார்.


கொரோனா பெருந்தொற்று காலம் வரை அதாவது 2015 முதல் 2019 வரை மிகுந்த ஈடுபாட்டுடன் சென்னையில் பெரம்பூரில் ஒரு தனியார் அமைப்பின் ஏற்பாட்டில் பெரம்பூர், ராயபுரம் , தண்டையார்பேட்டை, மாதவரம், கொடுங்கையூர் ஆகிய வட சென்னை பகுதியில் வசிக்கும் இளம் பெண்களுக்கு கல்வி விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை, கல்வி மேம்பாட்டு வளப்பயிற்சிகளை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வழங்கி வந்தார். என்னை அழைத்து அங்கு வந்து அம்மாணவியருடன் பேசச்சொல்வார்.

அவரின் மறைவு குறித்து அவர் மகனைத் தொடர்பு கொண்டபொழுது, அவர் தனது உடலை தமிழ்நாட்டில் மருத்துவக் கல்விக்காக மருத்துவமனைக்கு வழங்கிவிடும்படி அவர் ஏற்பாடு செய்திருக்கின்றார் என்பது தெரிந்தது. சாத்திர சம்பிரதாயங்கள் அற்று, சாதியை ஒதுக்கி, அறிவியல் பூர்வமான ஒரு வாழ்க்கையாக, அறிவியலுக்கும் மானுடத்துக்கும் உதவும் ஒரு வாழ்க்கையாக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட பெருந்தகை. தன் ஊரின் பெயரை ஒட்டி 'இன்னம்பூரான்' என தனக்குப் பெயர் சூட்டிக் கொண்டவர் திரு. சௌந்தரராஜன் அவர்கள்.

அவர் இறுதிக் காலத்திலும் எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். தன் அம்மாவின் வாழ்க்கைக் குறிப்பை நூலாகக் கொண்டு வரவேண்டும் என விரும்பினார். முன்னர் அதனை எனக்குத் தெரிவித்திருந்தார். இதனை அவர் மகன் ஜெகதீஷ் தெரிவித்தார்.



2009ஆம் ஆண்டு சென்னையில்



சென்னையில் 2018ஆம் ஆண்டு. தமிழிசை விழாவில். இராமகி அவர்களும் உடன் இருக்கின்றார்





அதனை நூலாகக் கொண்டு வந்து வெளியிட உதவுவதாகக் கூறியிருக்கின்றேன்.திரு.இன்னம்பூரான் அவர்கள் தமிழ் மரபு அறக்கட்டளை வரலாற்றில் இடம் வகிப்பவர். அவரது நினைவுகள் எங்கள் மனதில் என்றென்றும் நிறைந்திருக்கும். அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

**திரு.இன்னம்பூரான் அவர்களுக்கு என் அஞ்சலி.**

**முனைவர்.க.சுபாஷிணி**
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

தமிழ் மரபு அறக்கட்டளை


BY NC SA

THF
தமிழ் மரபு அறக்கட்டளை

*Attribution-NonCommercial-ShareAlike*

*4.0 International (CC BY-NC-SA 4.0)*

BY-SA

THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

தமிழ் மரபு அறக்கட்டளை
Tamil Heritage Foundation
THF
தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

# மின்தமிழ்மேடை

தமிழாலே இணைவோம்... தமிழ் வளம் காப்போம்...

28




## தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

வெளியிடும் காலாண்டிதழ் காட்சி: 28 ஜனவரி -2022

https://www.tamilheritage.org/